# மோகினியின் சபதம்

## கோட்டயம் புஷ்பநாத்



தமிழில்: சிவன்

# 1

**ந**கரின் வடமேற்குப் புறத்தில் அமைந்துள்ள பகவதி கோயிலின் கிழக்குப்புறமாக, தரிசாகக் கிடந்த இரண்டு ஏக்கர் நிலத்தில் ஒரு நாள் திடுமென்று லாரி லாரியாகக் கருங்கற்களும், செங்கற்களும் வந்து இறங்கின!

யாருக்கும் ஒன்றும் புரியவில்லை.

வேடிக்கை பார்த்தவர்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டனர்.

''இதெல்லாம் எதற்காக?''

கோயில் மற்றும் அதைச் சார்ந்த மூன்று ஏக்கர் நிலமும் மேலேக்கர வீட்டாருடையது.

வாசுதேவன் நம்பூதிரிதான் அந்த இடத்தின் தற்போதைய வாரிசு. அவரும் ஊரில் இல்லை. அமெரிக்காவில் தங்கி ஏதோ பயிற்சியில் ஈடுபட்டிருந்தார்.

மேலேக்கர வீட்டாரின் ஏனைய வீடு மற்றும் நிலப்பகுதிகள் ஏற்கெனவே கைமாறியிருந்தன. இந்தக் கோயிலும், இதைச் சுற்றியுள்ள இடமும் மட்டுமே இப்போது அவர்களுக்குச் சொந்தம்.

கோயிலையும், அதைச் சுற்றியுள்ள ஒரு ஏக்கர் நிலத்தையும் ஏறத்தாழ ஊராருக்கு விட்டுக்கொடுத்தது மாதிரித்தான்.

மீதமுள்ள இடத்தை யார் விலைக்கு வாங்கியுள்ளனர் என்று தெரியவில்லை. அதைப் பற்றி யாரும் விசாரித்தறியவும் முற்படவில்லை.

ஒரே நேரத்தில் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் சுறுசுறுப்பாக காம்பவுண்டுச் சுவரை எழுப்பத் தொடங்கியவுடன் ஊரார் ஒவ்வொருவரும் தமக்குத் தோன்றியபடி அபிப்பிராயங் களைத் தெரிவிக்கத் தொடங்கினர்.

இந்தச் சூழ்நிலையில்தான் புகழ் பெற்ற பில்டிங் காண்ட் ராக்டரான அச்சுதன்பிள்ளையை ஒரு நாள் அந்த இடத்தில் பார்த்தனர்.

ஃபியட் காரிலிருந்து அச்சுதன் பிள்ளை இறங்கினார். அவரிடம் பணிபுரியும் இன்ஜினியர்கள் மற்றும் டிராஃப்ட் மென்களும் அவரைத் தொடர்ந்து இறங்கினர்.

காம்பவுண்டுச் சுவரின் வேலைகள் முற்றுப் பெற்றிருந்தன. எல்லாரும் கேட்டைக் கடந்து உள்ளே போன பிறகு யாரும் அந்தத் திசையையே கவனித்ததாகத் தெரியவில்லை. அவர்கள் நுழைந்த மறுவிநாடியே கேட் உட்புறமாக இழுத்துச் சாத்தப் பட்டது.

லாரிலாரியாகப் பொருள்கள் வந்தபடியே இருந்தன. லாரிகளின் மேற்புறம் தார்ப்பாய்களால் இழுத்துக் கட்டப்பட் டிருந்ததால், அதற்குள் என்ன வருகிறது என்பதும் தெரிய வில்லை.

இருந்தாலும் தெரிந்து கொள்ளும் ஆர்வத்தில் சிலர் பத்தடி உயரமுள்ள காம்பவுண்டுச் சுவரின் மீது ஏறி கவனித்தனர். அப்படியும் ஒன்றும் தெரியவில்லை.

ஏறத்தாழ அரை ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தில் கடைக்கால் தோண்டுவதையும், அதில் கருங்கற்களால் அடித்தளம் எழுப்பு வதையும் ஒரு சிலர் கவனித்தனர்.

அச்சுதன்பிள்ளையின் நண்பரான போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் அவரிடம் கேட்டார்.

''அங்கு என்ன வேலை நடக்கிறது?''

பதிலாக ஒரு நமுட்டுச் சிரிப்பு சிரித்தாரே தவிர, அவர் வேறு எதையும் சொல்லவில்லை.

''சினிமா தியேட்டர் ஏதாவது கட்டுகிறார்களா என்ன?'' இன்ஸ்பெக்டர் மீண்டும் கேட்டார்.

அதற்கும் பதில் ஒரு சிரிப்புதான்.

''பார்த்தால் கோடி ரூபாய்க்கு மேல் செலவாகுமென்று தோன்றுகிறதே!'' இன்ஸ்பெக்டர் ஆர்வத்தை அடக்க முடியாமல் கேட்டார்.

தாங்க முடியாத அச்சுதன் பிள்ளை கடைசியில் கூறினார்.

''உண்மையைச் சொன்னால், இதன் உரிமையாளர் யாரென்றே எனக்குத் தெரியாது. வாசுதேவன் நம்பூதிரிக்கும், இதில் பங்கு இருக்கலாம் என்று தோன்றுகிறது.''

''அவர்தான் ஊரிலேயே இல்லையே?''

''இடத்தை விற்றுவிட்டதாகச் சொல்கிறார்கள். ஆனால், வாங்கியிருப்பது யாரென்று தெரியவில்லை.''

''ஆமாம் இதையெல்லாம் தெரிந்து கொண்டு நாம் என்ன செய்யப் போகிறோம்.''

''நீங்கள் இதில் ஈடுபட்டிருப்பதால், கேட்டு வைத்தேன் அவ்வளவுதான்.''

இதற்குப் பிறகு அதைப்பற்றி விசாரிக்க எத்தனையோ பேர் முயன்றபோதும், அச்சுதன் பிள்ளை புத்திசாலித்தனமாக நழுவினார்.

இரண்டு வாரத்திற்குப் பிறகு ஒருவர் கேட்டின் இடைவெளி வழியாக உள்புறம் பார்த்தபோது, பிரமாண்டமான ஒரு பங்களா விற்கான கருங்கல்லாலான அடித்தளம் மூன்றடி உயரத்தில் எழும்பியிருந்தது.

இடைவிடாமல் வேலை மிகவும் மும்முரமாக நடைபெற்றது. ஒரு தொழிற்சாலைக்குள் நுழைவது போல் ஆள்கள் வேலைக்குச்

செல்வதும், மாலையில் வேலை முடிந்து வெளியேறுவதும் அன்றாடக் காட்சியானது.

அதற்குள் கோயிலை ஒட்டிய மைதானத்தில் ஹோட்டல் களும், பெட்டிக்கடைகளும் உயர்ந்து எழுந்தன.

உள்ளே கட்டட வேலை செய்யும் தொழிலாளர்கள் டீ சாப்பிட வரும்போது, வெளியார் யாராவது கட்டடம் சம்பந்தமாக ஏதாவது கேட்டால், அவர்கள் கூட வாயைத் திறப்பதே இல்லை!

அந்தக் கட்டடத்தைப் பற்றித் தொழிலாளர்களுக்கே ஒன்றும் தெரியாமல் இருந்ததுதான் காரணம். அதனால் வாய் திறந்தாலும் மௌனமே பதிலாக வெளிப்பட்டது.

விரைவிலேயே கட்டடம் காம்பவுண்டுச் சுவரின் மேல் புறமாகத் தெரியத் தொடங்கியது.

பழங்காலப் பாணியிலமைந்த ஒரு பெரிய அரண்மனையின் வடிவத்தில் தோற்றமளித்தது அது. பார்த்தவர்கள் வியப்பால் வாயைப் பிளந்தனர்.

அந்தக் கட்டடத்திற்குத் தேவையான வாசற்கால்கள், ஜன்னல்கள் போன்ற எதையும் அந்த காம்பவுண்டிற்குள் செய்து பொருத்தவில்லை. அவையெல்லாம் வேறு ஏதோ ஓரிடத்தி லிருந்து, அப்படியப்படியே எடுத்து வரப்பட்டன.

அவையனைத்தும் பழைமையின் கலைச்சிறப்போடு விளங்கின.

ஊரில் எங்கு பார்த்தாலும் அந்தக் கட்டடமே ஒரு பேச்சுப் பொருளாக இருந்தது. முச்சந்திகள், டீக்கடைகள், முடிதிருத்தும் நிலையங்கள் எல்லாவற்றிலும் ஆட்கள் கூட்டங்கூட்டமாக நின்று பழைமைத் தோற்றத்துடன் எழும்பும் புதிய கட்டடத்தைப் பற்றியே பேசினர்.

மூன்று மாதங்களுக்குப் பிறகு கட்டடத்தின் மேல்தளம் முழுமையடைந்தது. பித்தளைத் தகடுகளால் வேயப்பட்ட மேற்கூரையால், அதன் கீழ்ப் பதிக்கப்பட்ட ஓடுகள் சுத்தமாகப் பார்வையிலிருந்து மறைந்தன.

மேற்கூரையில் கோயில்களில் இருப்பதைப் போன்ற கலசங்கள், புறாக்கூடுகள் போன்ற சிறுசிறு மாடங்கள், நான்கு புறமும் பால்கனி, ஆங்காங்கே சிற்ப வேலைப்பாடமைந்த உத்தரங்கள், தூண்கள்...

தேக்கு மரத்தலான தூண்களில் பதுமைகள் உயிருள்ளவை போல் விழித்தன.

வாசல், ஜன்னல் தவிர எங்கெல்லாம் மரம் பயன்படுத்தப் பட்டுள்ளதோ, அங்கெல்லாம் சிற்பங்கள் பேசின. பிரமாண்ட மான பல்லிகள், வியாளிமுகங்கள். பித்தளையாலான குமிழ்கள், கைப்பிடிகள்...

இரண்டு மாடிக் கட்டடமான அதன் உள்புறத்தை, பொது மக்கள் யாரும் பார்த்ததில்லை. கட்டடத்தின் முன்னால் ஒரு நாள், பழைய கேட் அகற்றப்பட்டு, புதிய கேட் பொருத்தப்பட்டது. கலைத் தன்மையுடன் விளங்கிய அந்த கேட் கூட, மிகவும் பழங்காலத்தைச் சேர்ந்ததாகவே தோன்றியது.

மினுமினுப்பான தங்கநிற பெயின்ட் கேட்டின் பழைமையை உயர்வாக எடுத்துக்காட்டியது.

இதெல்லாம் சேர்ந்த பிறகு அந்தக் கட்டடத்தைப் பார்த்தால் கனவுக் காட்சிகளில் இடம் பெறும் கற்பனை அரங்கு போலவே தோற்றமளித்தது.

பிரமாண்டமான அந்தக் கட்டடம் நாளுக்குநாள் நகரவாசி களுக்கு இடையே பலவிதமான கேள்விகளை எழுப்பியது. திடுமென்று ஒரு நாள் நகரின் முக்கியப் பிரமுகர்கள், அரசாங்க அதிகாரிகள், கலைஞர்கள், டாக்டர்கள், நிருபர்கள் போன்ற எல்லாருக்கும் ஒரே மாதிரியான அழைப்பிதழ்கள் கிடைத்தன.

'வருகிற பதினெட்டாம் தேதி வெள்ளிக் கிழமையன்று, புதியதாகக் கட்டியுள்ள எனது வீட்டின் 'புதுமனை புகுவிழா'வை நடத்துகிறேன். இந்த அழைப்பை எனது நேரடியான அழைப்பாக ஏற்று, விழாவிற்கு வந்து வாழ்த்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.'

*அன்புடன்*
*உங்கள் அனைவரின் அன்புக்குரிய*
*சகோதரி இந்திராபாய்*

இதைத் தவிர இடத்தின் பெயரோ, வீட்டின் பெயரோ எதுவும் குறிப்பிடப்படவில்லை.

அழைப்பிதழ் பெற்ற அனைவரும் அதையே புரியாததைப் போல மீண்டும் மீண்டும் வாசித்தனர்.

இந்திராபாயின் புதுமனை புகுவிழாவிற்குச் சென்று அங்கு நடைபெறும் விருந்தில் கலந்து கொள்ள வேண்டுமென்று ஒவ்வொருவரும் மனமார விரும்பினர்.

அழைப்பிதழ் பெற்றவர்களில் பெரும்பாலானவர்கள் கிளப்புகள் மற்றும் நட்சத்திர ஹோட்டல்களிலும் சந்தித்துக் கொண்டபோது பரஸ்பரம் கேட்டுக் கொண்டனர்.

''யார் இந்த இந்திராபாய்?''

''இதுவரை இப்படிப்பட்ட ஒருவரைக் குறித்துக் கேள்விப் பட்டதில்லையே?''

''யாராவது அரச குடும்பத்தைச் சேர்ந்தவரா இருக்க லாமோ?''

''ஒரு வேளை டாக்டர், இன்ஜினியர் மாதிரி யாராவது ஒருவராக இருப்பாரோ?''

''அப்படி ஏதாவது இருந்தால் 'டாக்டர் மிஸ். இந்திராபாய்' என்று குறிப்பிட்டிருப்பார்களே!''

பரபரப்பும், எதிர்பார்ப்பும் நிறைந்த அந்தப் புதுமனை புகுவிழா நாளும் வந்தது.

நாடும் நகரமும் தண்ணீருக்காகத் தவிக்கும் சரியான கோடை வெயிலில், சூரியன் உதித்தவுடனே வெப்பம் தகிக்கத் தொடங்கியது.

காலை பத்து மணிக்கு அந்த வீட்டின் கேட் திறந்து வைக்கப் பட்டது. கேட்டின் ஒரு புறத்தில் பதிக்கப்பட்டிருந்த மார்பிள் கல்லில் செதுக்கப்பட்டிருந்த 'இந்திரா பாய்' என்கிற பெயர் வெயிலில் பளபளத்தது.

கார்கள் வரத் தொடங்கின. காவல்துறை அதிகாரிகள், வியாபாரப் பிரமுகர்கள், அரசியல்வாதிகள் போன்றோரது கார்கள் அந்த காம்பவுண்டின் சுற்றுப்புறங்களில் வரிசையாக நின்றன.

அன்றுதான் அரண்மனை போன்ற அந்த வீட்டின் வரவேற்பறையை எல்லாரும் கவனித்தனர்.

ஒரு பிரமாண்டப் படத்திற்காகப் போடப்பட்ட விலையுயர்ந்த ஒரு 'செட்' போல இருந்தது அந்த அறை.

வருபவர்களை வரவேற்க அச்சுதன்பிள்ளை வரவேற்பறை வாசலிலேயே நின்றிருந்தார். ஒவ்வொருவரையும் வரவேற்று அவர்களுக்கான இருக்கைகளைச் சுட்டிக் காட்டியபடி இருந்தார்.

ருசிமிக்க உயர்தர உணவுப் பொருள்களைப் பரிமாறியிருந்த தட்டுகளை, வெல்வெட் துணி போன்ற காகிதங்கள் மூடிப் பாதுகாத்தன.

அழைக்கப்பட்டிருந்தவர்கள் குறைந்தது ஆயிரம் பேராவது இருக்கக்கூடும்.

''விருந்தை ஆரம்பிக்கலாம்!'' என்று அச்சுதன் பிள்ளை 'மைக்' மூலம் அறிவித்தார்.

விசாலமான ஹாலில் கண்களுக்குத் தெரியாத விதமாக ஸ்பீக்கர்கள் மறைவாகப் பொருத்தப்பட்டிருந்தன.

''இந்திராபாய் எங்கே?'' அமைதியாக இருந்த விருந்து மண்டபத்தில் ஒரு குரல் எழுந்தது.

ஒவ்வொருவரும் அங்கும் இங்குமாகப் பார்வையை அலையவிட்டனர்.

விருந்தினர்களுக்கு எதிர்த் திசையில் இரு புறமாகப் பிரிந்து மேல் நோக்கிச் சென்ற படிக்கட்டுகளின் உச்சியில், பால்கனியின் மத்தியப் பகுதியில் அதுவரை கண்களுக்குத் தெரியாமலிருந்த மெல்லிய நீலவண்ணத்திரை மெதுவாக மேற்புறமாக உயரத் தொடங்கியது.

தேவதை போல் அங்கு ஓர் உருவம்!

இந்திராபாய்!

திருவட்டாறு சரிகைச் சேலை, புத்தம்புது ஜாக்கெட், நாகபணம் கோத்த காசுமாலை ஆகியவற்றுடன் இந்திராபாய். நெற்றியில் வைடூரியம் பதித்த சுட்டி, கழுத்தில் தங்க மாலை களும், கைவிரல்களில் பச்சைக்கல் பதித்த மோதிரங் களையும் அணிந்தபடி இரண்டு கைகளையும் கூப்பிய ஓர் உருவமாக இந்திராபாய் அனைவரையும் வணங்கி வரவேற்றாள்.

வானவில் புருவங்கள்...

கெண்டை மீன் கண்கள்...

எள்ளின் பூ போன்ற மூக்கு...

பூவிதழ் அதரங்கள்...

மாலை நேரச் சிவப்பு படர்ந்திருக்கும் கன்னக் கதுப்புகள்.

கோயிலில் கல்விளக்கை ஏந்தி நிற்கும் தேவலோகக் கன்னிகை போன்ற இந்திராபாய்.

பொன்னிறமான மணிவீணை ஒன்றும் அதன் முன்பாக ஏழு திரியிட்டு ஏற்றிய நிலவிளக்கு ஒன்றும், தரையில் விரிந்திருந்த பட்டுக்கம்பளத்தின் மீது இருந்தன.

மென்மையான கைவிரல்கள் வீணைக்கம்பிகளின் மீது அசைந்தன. அவள் உதடுகள் மெதுவாகப் பிரிந்தன. சுற்றுப்புறம் முழுவதிலும் சங்கீதம் முழங்கியது.

ஸ...ரி...க...ம...ப...நி...ஸ...

ஆரோகணத்தில் ஸ்வர ராக தாரை ஒழுகியது. சட்டென்று அது அவரோகணமாக மாறியது.

ஸ...நி...ப...ம...க...ஸ...

''அமிர்தவர்ஷினி!'' புகழ் பெற்ற சங்கீத வித்துவான் திருவல்லிக்கேணி சிதம்பரம்பிள்ளை முணுமுணுத்தார்.

*"ஆனந்தாமிருதவர்ஷினி...*
*அமிருத வர்ஷினி...*
*ஹராதி... பூஜினே...*
*சிவே.... பவானி...*
*ஸ்ரீநந்தனாபி... ஸம்வர்த்தனி...*

*அமிருதேஸ்வரி*
*ஸலிலம்*
*வர்ஷய-வர்ஷய-வர்ஷய..."*

வெளியே சடசடவென்று ஏதோ சத்தம் கேட்டது. எல்லாரும் வெளிப்புறமாகத் திரும்பிப் பார்த்தனர்.

ஆகாயத்தில் கருமையான மேகங்கள் திரண்டு வந்தன. ஆயிரமாயிரம் தங்கப் பாம்புகளைப் போல் மின்னல்கள் கண்ணைப் பறித்தபடி நெளிந்து பாய்ந்தன.

மேகங்களின் ஹுங்கார கர்ஜனையாக இடியோசை.

மழைத்துளிகள்! பூமியை நோக்கி அவை பாய்ந்து வந்தன. வறண்டிருந்த பூமியைக் குளிர்விக்கும் வேட்கையுடன் துளிகள் உருண்டை உருண்டையாக மண்ணை முத்தமிட்டன.

அமிர்தவர்ஷினி ராகம் பாடி மழை பெய்ய வைக்கலாம் என்று கேள்விப்பட்டதுண்டு. ஆனால், இதோ இப்போது கண் முன்பாகவே அந்த அதிசயம் உண்மையாகிறது!

வந்த விருந்தினர்கள் வியப்பால் வாயைப் பிளந்தபடி மழையை வேடிக்கை பார்த்தனர்.

மழை வலுவாகப் பெய்து கொண்டிருந்தது.

இயற்கையை மீறி நிகழ்ந்துவிட்ட இந்த அதிசயக் காட்சியைக் கண்டு மெய்ம்மறந்து போன விருந்தினர்கள், ருசியான உணவு தங்களுக்கு முன்னால் காத்திருப்பதைக்கூட மறந்தனர்.

அமிர்தவர்ஷினி ராகத்தில் பாடும் இந்திரா பாயின் முகத்தையே எல்லாரின் கண்களும் மொய்த்தபடி இருந்தன.

பாட்டு நின்றவுடன், கனமழையாகப் பெய்து கொண்டிருந்த மழையும் நின்று போனது.

இருப்பினும் சற்று நேரம் ஆகாயத்திலிருந்து வெள்ளி நூல் கம்பிகளைத் தொங்கவிட்டது போல் மழைத்துளிகள் பூமியைத் தொட்டன.

வீணையை முன்புறத்தில் வைத்த இந்திராபாய் எழுந்தாள். விருந்தினர்கள் அமர்ந்திருந்த மேஜைகளின் இடைவெளிகளில் மெதுவாக நடக்கத் தொடங்கினாள். சொர்க்கீயமான நறுமண நதியொன்று மெதுவாக ஓடுவது போல் அவள் ஒவ்வொருவரின் அருகிலும் நடந்தாள். அநதக் கண்களில் என்ன ஓர் ஒளி!

சரிகைச் சேலையின் வண்ணமும் பொன் போன்ற மேனி வண்ணமும் ஒன்றிக் கலந்தது போல் இருந்ததால் உடலெது, உடையெது என்று பிரித்தறிய முடியாதபடி இருந்தது.

இளைஞனான போலீஸ் அதிகாரியின் அருகில் சென்று குசலம் விசாரிக்கத் தொடங்கினாள் இந்திரா.

''மிஸ்டர் ஜகதீஷ்! வேலையெல்லாம் நல்லபடியாக உள்ளதா?''

ஸ்போர்ட்ஸ் கோட்டாவில் உத்தியோகம் பெற்ற இருபத்தி யேழு வயது இளைஞன் ஜகதீஷ், தனது பெயரைக் குறிப்பிட்டு அழைத்த இந்திராபாயை வியப்புடன் பார்த்தான்.

'இவருக்கு எப்படித் தன்னுடைய பெயர் தெரிந்திருக்கும்?'

''ஏதோ நல்லபடியாகவே ஓடுகிறது. நன்றி!'' புன்னகைத்த வாறு தன்னருகே நிற்கும் இந்திராவைப் பார்த்தபடி பதிலளித்தார். அவரது கணிப்பில் அவளுக்கு இருபத்தைந்து வயதிருக்கலாம்.

அடுத்ததாக இந்திரா குசலம் விசாரித்தது நடுத்தர வயதான ஒரு மனிதரிடம். அவளைப் பார்த்தவுடன் எழுந்திருக்க முயன்ற அவரிடம் அமருமாறு சைகை காட்டிய இந்திரா கேட்டாள்:

''உட்காருங்கள் டாக்டர் வில்லியம் டிக்ரூஸ்! நீங்கள் மட்டும் அன்று அவ்வளவு பிடிவாதமில்லாமல் நடந்து கொண்டிருந்தால்,

பாவம் அந்தக் கர்ப்பவதி காப்பாற்றப் பட்டிருப்பாள் இல்லையா?''

டாக்டர் வில்லியம் டிக்ரூஸ் உண்மையில் திடுக்கிட்டே போனார்.

'நிலைமை மிகவும் ஆபத்தானதாக இருந்தும், எதிர்பார்த்த 'அன்பளிப்பு' கிடைக்காததால் அன்று செய்திருக்க வேண்டிய ஆபரேஷனை நடத்தாமல் பின்வாங்கினார். ஆனால், அது எப்படி இவளுக்குத் தெரிந்தது?'

நடுங்கும் கைகளுடன் வில்லியம் டிக்ரூஸ் இந்திராபாயின் முகத்தை உற்றுப் பார்த்தார்.

அவள் கண்கள் இரண்டும் நெருப்புக்கோளங்கள் போலவும், அவளது நீண்டு அடர்ந்த தலைமுடி நெருப்பு ஜுவாலைகள் போலவும் அவருக்குத் தோன்றியது.

அவரது கணிப்பில் அவளுக்கு நாற்பத்தைந்து வயதிருக்கக் கூடும் என்று தோன்றியது.

அவள் நடக்கத் தொடங்கியபோது அந்த பங்களாவின் இருள் மொத்தத்தையும் ஏற்று ஒளித்து வைத்திருப்பது போல் காட்சியளித்த தலைமுடி அவளது பின்புறத்தில் அலைகள் போல் மோதின.

அடுத்ததாக இந்திரா நின்ற இடம் செஷன்ஸ் நீதிபதி ராகவ மேனோனின் முன்னால்.

''ஹலோ மிஸ்டர் ராகவ மேனோன், உங்கள் தாய் மாமனை கோயில் யானையான நீலகண்டன் மிதித்துக் கொன்றது இல்லையா, அப்படித்தானே?'' அவளது குரலில் ஏளனம் தொனித்தது.

ஜட்ஜ் திடுக்கிட்டார். அவரது இதயத் துடிப்பின் வேகம் அதிகரித்தது.

''நிரபராதியான சைமன் பாவம் அநியாயமாகத் தூக்கில் தொங்கியது உங்களால்தான். நியாயமாக தண்டனை அனுபவித்

திருக்க வேண்டியது, உங்கள் வீட்டு வேலைக்காரன் சங்குண்ணியல்லவா?''

ராகவ மேனோனுக்கு உடல் வியர்த்தது. அவர் பரிதாபமாக முகத்தை உயர்த்தி அவளை உற்றுப் பார்த்தார்.

ஒரு கையில் நீதித் தராசைப் பிடித்தவாறு காந்தாரி மாதிரிக் கண்ணைக் கட்டி நிற்கும் நீதிதேவதை போல் இந்திராபாய் அவருக்குத் தோன்றினாள். அவளது வயது என்னவாக இருக்கும் என்று அந்த நீதிபதியால் நிர்ணயிக்க முடியவில்லை.

இந்திராபாய் முன்புறமாக நடந்தாள்.

ஒவ்வொரு மேஜைக்கு முன்னால் சென்றபோதும் அவள் கூப்பிய கைகளுடன் விருந்தினர்களுக்கு வணக்கம் தெரிவிக்கத் தவறவில்லை.

இறுதியாகப் புகழ்பெற்ற அரசியல்வாதியான வாசுதேவப் பணிக்கரின் முன்னால் வந்து நின்றாள்.

''ஹலோ மிஸ்டர் பணிக்கர்! இப்போது நீங்கள் ஆளுங் கட்சிக்கு மாறிவிட்டதாகக் கேள்விப்பட்டேன். வேலை வாங்கித் தருவதாக உறுதிமொழி கூறி பாவம் அந்த ஏழை நாராயணன் குட்டியிடமிருந்து இருபத்துஐயாயிரம் ரூபாய் வாங்கினீர்களே... நினைவிருக்கிறதா? அந்த ஆள் விஷம் குடித்துத் தற்கொலை செய்துகொண்டான்.''

வாசுதேவப் பணிக்கர் மலைத்துப் போய் உட்கார்ந்திருந்தார்.

'கடவுளே இதெல்லாம் இந்தப் பெண்ணுக்கு எப்படித் தெரிந்தது? உண்மையில் இவள் யார்?' - அவர் மனம் பரபரத்தது.

எல்லாரையும் சந்தித்த பிறகு இந்திராபாய் தனது பழைய இடத்திற்கு வந்தாள்.

விருந்து முடிவடைந்தது.

பங்களா வாசலிலிருந்து கார்கள் ஒவ்வொன்றாக கேட்டைக் கடந்து வெளியேறின.

ஹாலில் இந்திராபாயும் அச்சுதன்பிள்ளையும் மட்டுமே இருந்தனர்.

''இன்னும் விருந்து நடந்த இடத்தைச் சுத்தம் செய்ய வில்லையா?''

''ஆட்கள் தயாராக உள்ளனர்... இதோ உடனே செய்யச் சொல்கிறேன்.''

நாலைந்து பேர் விருந்து நடந்த மண்டபத்தைச் சுத்தம் செய்தனர்.

''வேலைக்காரர்கள் எத்தனை பேர் உங்களுக்குத் தேவை என்று சொல்லவில்லையே நீங்கள்?'' -அச்சுதன் பிள்ளை கேட்டார்.

''வேலைக்காரர்கள் யாரும் வேண்டியதில்லை!'' இந்திரா கூறினாள்.

''அப்படியானால் நான் புறப்படட்டுமா?''

''அச்சுதன்பிள்ளை, உங்களுக்குச் சேர வேண்டிய பணத்தை உங்களது பாங்குக் கணக்கில் சேர்த்தாகிவிட்டது. நீங்களும் கிளம்பலாம்.''

அச்சுதன் பிள்ளையின் ஃபியட் கார் அந்த பங்களாவில் இருந்து வெளியேறியது.

மறுநாள் பத்திரிகைச் செய்திகளில் முக்கியமான விஷயம் இந்திராபாய்தான். அவளது பிரமாண்டமான வீடு, உபசரிப்பு, அமிர்தவர்ஷினி ராகத்தில் பாடி மழை பெய்ய வைத்ததைப் பற்றி விரிவாக எழுதியிருந்தன. மழை பெய்ய வைத்த நிகழ்ச்சிக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்திருந்தனர்.

விருந்தில் கலந்து கொண்டவர்களது வீடுகளில் அன்றைய பேச்சு முழுவதுமே இதைப் பற்றித்தான்.

நகரம் முழுவதும் அன்று இந்திராபாயைப் பற்றியே பேசியது!

## 2

நகரின் மற்றொரு மூலையில் குடிசைப் பகுதியில் வசிக்கும் ஏழைப்பெண் ஒருத்தி, தன் மகனைப் பள்ளிக்கூடத்தில் சேர்ப்பதற்காகப் போய்க் கொண்டிருந்தாள்.

இந்திராபாயின் வீட்டு வழியாகச் சென்றபோது, அந்தத் தாய் மகனிடம் கூறினாள்:

''இதுதான் பாட்டுப்பாடி மழை பெய்யவைத்த அந்த அம்மா இருக்கும் வீடு!''

''அம்மா, எவ்வளவு பெரிய வீடும்மா!'' பையன் வியப்புடன் கேட்டான்.

இருவரும் பள்ளிக்கூடத்தை நெருங்கினர்.

புகழ்பெற்ற பெரிய பள்ளிக்கூடமாக இருந்ததால் பெரும்பாலான மாணவர்களும், பெற்றோரும் கார்களில் வந்து இறங்கினர்.

பள்ளிக்கூட மைதானத்தில் குழந்தைகளும், பெற்றோருமாக ஒரே கூட்டமாக இருந்தது.

ஏற்கெனவே பெயரைப் பதிவு செய்திருந்ததால், தாய் மகனுடன் ஹெட்மாஸ்டரின் அறையை நோக்கி நடந்தாள்.

அந்த அறையில் ஹெட் மாஸ்டருடன் வேறொருவரும் அமர்ந்திருந்தார்.

உயரமான உடலமைப்புடன், தடித்த மீசை, வழுக்கைத்தலை, இரட்டை நாடி உடம்பு. கழுத்தில் தங்கத்தில் கட்டிய ருத்திராக்ஷ மாலையை இரண்டு சுற்றாகப் போட்டிருந்தார்.

ஹெட்மாஸ்டரின் அருகே வந்தவள் அவரிடம் ஒரு காகிதத்தை நீட்டினாள்.

''அதோ மேனேஜர் இருக்கிறாரே அவரிடம் கொடுங்கள்...'' ஹெட்மாஸ்டர் கூறினார்.

மேனேஜர் சீட்டை வாங்கிப் பார்த்தார்.

''உங்களது பேர் என்னம்மா?''

''கல்யாணிங்க!''

''பணம் கொண்டு வந்திருக்கிறீர்களா?''

''எவ்வளவுங்க?''

''டொனேஷன் ஐயாயிரம், பிறகு ஸ்கூல் ஃபீஸ்!''

''ஐயாயிரமா! கடவுளே!'' அந்தப் பெண்மணிக்குத் தலை சுற்றுவது போலிருந்தது. ''என்னிடம் ஃபீஸ் கட்டுவதற்கான பணம் மட்டும்தான் உள்ளது!''

''என்ன சார் இதையெல்லாம் விளக்கமாகச் சொல்லாமல் சீட்டு கொடுத்தீங்களா?'' மானேஜர், ஹெட்மாஸ்டரைப் பிடித்துக் கொண்டார்.

''ஏம்பா, இந்தம்மாவையும் பையனையும் வெளியே அனுப்பு!'' ஹெட்மாஸ்டர், பியூனைப் பார்த்து உத்தரவிட்டார்.

''ஏன், என்ன விஷயம்?'' -அருகில் நின்றிருந்த சிலர் கேட்டனர்.

''டொனேஷன் இல்லாமல் பள்ளிக்கூடத்தில் சேர்க்க வந்திருக்கிறார்கள்!'' பியூன் சலிப்புடன் பதிலளித்தான்.

''வேறு எங்காவது கவர்ன்மெண்ட் பள்ளிக்கூடத்தில் கொண்டு போய்ச் சேர்க்கச் சொல்லுங்கள்.''

கல்யாணியும் அவள் மகனும் அந்தப் பள்ளிக்கூடத்தில் படிக்க வந்துள்ள பையன்களைப் பார்த்தபடி ஏமாற்றத்துடன் நடக்கத் தொடங்கினர்.

''அம்மா நான் அந்தப் பள்ளிக்கூடத்தில் படிக்க முடியாதாம்மா?'' பையன் கேட்டான்.

''இல்லைப்பா. இனிமேல் நாம் வேறு பள்ளிக்கூடத்தைத் தான் பார்க்கவேண்டும்.''

அவர்கள் இருவரும் திரும்பி வரும்போது இந்திராபாயின் வீட்டை அடைந்தனர்.

பளபளக்கும் சரிகைப் புடவையில் புன்னகைத்தபடி இந்திராபாய் 'கேட்'டிற்கு அருகில் நின்றிருந்தாள்.

''என்னம்மா கல்யாணி, பையனைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தாகிவிட்டதா?''

வியப்புத் தாங்காதவளாகத் தடுமாற்றத்துடன் அவள் ஏதோ பதிலளித்திருக்க வேண்டும்.

''ஓகோ... உங்கள் பையனைச் சேர்த்துக் கொள்ளவில்லையா, சரி என்னுடன் வாருங்கள்!'' என்றபடி இந்திரா கேட்டைத் திறந்து பின்புறமாகத் திரும்பிப் பார்த்தாள்.

வெள்ளைக் குதிரை பூட்டிய சாரட் ஒன்று கேட்டைக் கடந்து வெளியே வந்தது. இந்திரா அதில் ஏறிக் கொள்ள... மற்ற இருவரும் பின்புறம் ஏறினர்.

சாரட் பள்ளிக்கூட மைதானத்துக்குள் நுழைந்து, கார்கள் 'பார்க்' செய்யப்பட்டிருந்த இடத்தை அடைந்தது.

அங்கு நின்றிருந்தவர்கள் இந்த மூவரையும் வியப்புடன் பார்த்தனர். கார்களில் வந்தவர்களுக்கு, இந்தக் குதிரை வண்டியும் குதிரைவண்டியில் வந்தவளும் புதுமையாகத் தென்பட்டனர்.

இந்திராவுடன் வேறு இருவரும் இறங்குவதைப் பார்த்த மற்றவர்கள் வாயை மூடிக் கொண்டனர். நெருப்பு அம்பு போல் துளைத்த இந்திராவின் பார்வை, மற்றவர்களை அசைவற்று நிற்கச் செய்தது.

இந்திரா, அவர்களுடன் ஹெட்மாஸ்டரது அறைக்குள் நுழைந்தாள்.

''உங்களிடம்தானே இடம் கிடையாது என்று சொன்னேன். எதற்காகத் திரும்பவும் வந்திருக்கிறீர்கள்?'' மேனேஜர் கோபத்துடன் தலையை உயர்த்திக் கேட்டபோதுதான் அவர்களுக்குப் பின்புறத்தில் மற்றொரு பெண்மணியும் நிற்பது தெரிந்தது.

''இந்தப் பையனை உங்கள் பள்ளிக்கூடத்தில் சேர்த்துக் கொள்ள முடியாதா?'' இந்திராபாய் கேட்டாள்.

''ஐயாயிரம் ரூபாய் நன்கொடை தருவதாக இருந்தால் யாரை வேண்டுமானாலும் சேர்த்துக் கொள்வோம்!'' மேனேஜர் பதிலளித்தார்.

''பிறகு எப்படி அனுமதிச் சீட்டு கொடுத்தீர்கள்?'' இந்திரா வின் குரலில் கோபம் தெரிந்தது.

''அதெல்லாம் ஒரு சடங்கு! அவ்வளவுதான். ஆமாம்! இதையெல்லாம் கேட்க நீங்கள் யார்?''

''என்னைத் தெரியவில்லையா? என் முகத்தை ஒரு தடவை நன்றாகப் பாருங்கள்!''

மேனேஜர் வியப்பால் பின்புறமாகச் சரிந்தார். தனக்கு முன்னால் நிற்கும் உருவத்திடம் ஏதோ ஒரு மாற்றம். கண்ணி மைக்கும் நேரத்திற்குள் அது பழைய வடிவத்திற்குத் திரும்பிய தாகவும் தோன்றியது.

''மிஸ்டர் சங்கரன் நாயர், உங்கள் வீட்டு வேலைக்காரி பார்வதியின் பிணம் ஓர் எலும்புக்கூடாக இன்னும் உங்கள் வீட்டு செப்டிக் டாங்கிற்குள் கிடப்பதை மறந்துவிட வேண்டாம்!''

மந்திரம் உச்சரிப்பது போல் இந்திரா அந்த வார்த்தைகளைப் பேசினாள். இருப்பினும் இடி முழக்கம் போன்ற குரலில் அந்த வார்த்தைகள் மேனேஜர் சங்கரன் நாயரின் காதுகளில் ரீங்கார மிட்டன.

பள்ளிக்கூட மேனேஜர் சங்கரன் நாயரின் மூளைக்குள் ஹை வோல்டேஜ் மின்சாரம் பாய்ந்து தாக்கியதைப் போல் இருந்தது.

தன் எதிரில் நிற்பவள் சாதாரணமானவளல்ல. எந்த ஜீவராசிக்குமே தெரியாமல் செய்த ஒன்றை நேரடியாகப் பார்த்த மாதிரி இவள் எப்படிச் சொல்கிறாள்!

''என்ன, நான் சொன்னதில் தவறு ஏதாவது உள்ளதா?'' -இந்திராபாய் கேட்டாள்.

சங்கரன் நாயர், இந்திரா பாயால் கிளறி விடப்பட்ட காட்சியை மனக் கண்ணால் காணத் தொடங்கினார்.

**க**ள்ள நோட்டுகளுடன் தொடர்பு கொண்ட ஒரு சம்பவம் அது. சங்கரன் நாயரின் மைத்துனன் சினிமா கம்பெனி ஒன்றில் ரெப்ரசென்டேட்டிவாக இருப்பவன். ஒரு நாள் ராத்திரி நேரம் திடுமென்று டாக்ஸியில் வந்து இறங்கினான்.

கதவைத் தட்டி சங்கரன் நாயரை எழுப்பி ஒரு பெரிய ஃபிலிம் பெட்டியை அவரது படுக்கையறைக்குள் கொண்டு வந்து வைத்தான். அவருக்க முதலில் ஒன்றும் புரியவில்லை.

சற்று நேரத்திற்குள் பெட்டியை பத்திரமான இடத்தில் வைத்து மூடியபோது அவருக்குள் சந்தேகம் பொறி தட்டியது.

''இந்தப் பெட்டி இங்கேயே பத்திரமாக இருக்கட்டும். நான் பிறகு வந்து எடுத்துக் கொள்கிறேன்!'' என்று கூறிவிட்டு மைத்துனன் வந்த டாக்ஸியிலேயே பயணம் புறப்பட்டான்.

சந்தேகம் சஸ்பென்ஸாக இருக்கவே, மைத்துனன் போன வுடன் சங்கரன் நாயர் அந்தப் பெட்டியின் பூட்டைத் திறந்தார்.

பெட்டி நிறைய நோட்டுக் கற்றைகள்!

நூறு ரூபாய் நோட்டுக்கற்றைகள்!

புத்திசாலியான சங்கரன் நாயருக்குச் சட்டென்று விஷயம் புரிந்தது. கள்ளநோட்டுகள் அவை என்பது புரிந்ததால், அதை எப்படி மறைத்து வைப்பது என்பது குறித்துத் தீவிரமாக யோசித் தார்.

வீட்டின் பின்புறம் கழிவறைக்காக புதிதாக செப்டிக் டாங்க் ஒன்றைக் கட்டியிருந்தார். இன்னும் அதைப் பயன்படுத்தத் தொடங்காததால், கனமான ஒரு ஸ்லாப் போட்டு மூடி வைத்திருந் தார். தற்சமயம் இந்தப் பெட்டியை அதற்குள் போட்டு வைப்பது நல்லதென்று தீர்மானித்தார். அதை நள்ளிரவில் பார்த்துக் கொள்ள லாம் என்று, ஊர் உறங்கிய பிறகு மனைவியை அழைத்தார்.

இவ்வளவு நோட்டுக் கற்றைகளை மொத்தமாகப் பார்த்தவுடன் அவர் மனைவிக்கு அதை எண்ணிப் பார்த்து மதிப்பைத் தெரிந்து கொள்ள ஆர்வம் பிறந்தது. எண்ணத் தொடங்கினார்கள். ஏறத்தாழ ஐம்பது லட்சம் ரூபாய் இருந்தது.

நோட்டுகளை எண்ணும்போது எதிர்பாராமல் அங்கு வந்த வேலைக்காரி அதைப் பார்த்துவிட்டாள். கணவன், மனைவி இருவருக்கும் உடல் வியர்க்கத் தொடங்கியது. அவள் யாரிடமாவது சொல்லிவிட்டால் என்ன செய்வது? அவர்களால் அதை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை!

கடைசியாக அவர் மனைவியே அதற்கும் ஓர் உபாயம் கண்டுபிடித்தாள். வேலைக்காரியை வாய் பேசாமல் செய்துவிட வேண்டியதுதான்!

நல்ல தூக்கத்தில் ஆழ்ந்திருந்த வேலைக்காரியைத் கடப்பாரையால் சத்தமில்லாமல் அடித்துக் கதையை முடித்தனர். பணத்தைப் பதுக்கி வைக்க நினைத்த இடத்தில் இந்தப் பிணத்தைப் பதுக்கிவைப்பதென்று முடிவு செய்தனர். ஈ காக்கைக்குத் தெரியாமல் ரகசியமாகவே அதைச் செய்து முடித்தனர்.

இப்போது எத்தனையோ வருடங்கள் கழித்து, எதிரில் நிற்கும் இந்தப் பெண்மணி அதையெல்லாம் கிளறி எடுத்துக் கொண்டு வந்திருக்கிறாள்!

''உட்காருங்கள்!'' - சங்கரன் நாயர் இயந்திர கதியில் கூறினார்.

இந்திராபாய் இருக்கையில் அமர்ந்தாள்.

''யாரென்று புரியவில்லையே?'' -சங்கரன் நாயர் பணிவுடன் கேட்டார்.

''என் பெயர் இந்திராபாய்!''

பெயரைக் கேட்டவுடன் சங்கரன் நாயர் துள்ளிக் குதித்து எழுந்தார்.

''தயவு செய்து என்னை மன்னிக்க வேண்டும். உங்களை இன்னும் எனக்குப் புரியவில்லை... சார்!'' சங்கரன் நாயர் ஹெட்மாஸ்டரை நோக்கிக் குரல் கொடுத்தார்.

''என்ன சார்?'' ஹெட்மாஸ்டர் எழுந்து வந்தார்.

''இந்தக் குழந்தையைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்க வேண்டும். ஃபீஸ் எதுவும் வாங்க வேண்டாம்.'' மேனேஜர் ஒரே மூச்சில் பேசித் தீர்த்தார்.

ஹெட்மாஸ்டருக்கு எதுவும் புரியவில்லை.

''என்ன விழித்துக்கொண்டு நிற்கிறீர்கள்... சொன்னது உங்களுக்குக் கேட்கவில்லையா என்ன?'' மேனேஜர் கோபத்துடன் கேட்டார்.

''வந்து... எல்லா வகுப்பிலும் மாணவர்களைச் சேர்த்தாகி விட்டது... இடமில்லையே...'' ஹெட்மாஸ்டர் தயக்கத்திலும் குழப்பத்திலும் தத்தளித்தார்.

''கடைசியாகச் சேர்த்திருக்கிற பேரை எடுத்து விடுங்கள்.''

ஹெட்மாஸ்டர் லிஸ்ட்டை எடுத்துப் பார்த்தார்.

''அது கஸ்டம்ஸ் ஆபீசரது பேரன் சார்!'' ஹெட்மாஸ்டர் கூறினார்.

''யார் உண்ணி மேனோனது பேரன்தானே?'' இந்திராபாய் கேட்டாள்.

''ஆமாம்!'' ஹெட்மாஸ்டரும், மேனேஜரும் ஏக காலத்தில் பதிலளித்தனர்.

கஸ்டம்ஸ் ஆபீசர் உண்ணி மேனோனைக் கூட இந்தப் பெண்மணிக்குத் தெரிந்திருக்கிறது! வியப்பு அவர்கள் விழிகளில் தெரிந்தது.

மேனேஜருக்கு அருகே இருந்த டெலிபோனை இந்திரா பாய் தன் பக்கம் நகர்த்தி அவரது நம்பரைச் சுழற்றினாள்.

''மிஸ்டர் உண்ணி மேனோனது வீடுதானே? இருக்கிறாரா? அவரைக் கொஞ்சம் கூப்பிடுங்கள்.''

''என் பெயர் இந்திராபாய். என்னைப் பற்றி உங்களுக்குத் தெரியாது இல்லையா? ஆனால், எனக்கு உங்களை நன்றாகத் தெரியும்.''

மறுமுனையில் யாரோ பேசுவது தெரிந்தது.

''நீங்கள் மிகவும் பிஸியாக இருக்கிறீர்களா? நான் உங்களுக்குச் சொல்ல வேண்டிய செய்தி இதுதான். உங்களது பேரனை வேறு ஏதாவது ஒரு பள்ளிக்கூடத்தில் சேர்க்க வேண்டும். இங்கு வேறொரு குழந்தையைச் சேர்க்க வேண்டி உள்ளது.''

''நீங்கள் யாராக இருந்தாலும் எனக்கு அதில் ஆட்சேபனை கிடையாது. என்னுடைய பேரன் அந்தப் பள்ளிக்கூடத்தில்தான் படிப்பான். என் பெயர் உண்ணி மேனோன், கஸ்டம்ஸ் ஆபீசர். நீங்கள் அன்று பாட்டுப் பாடிய பாடகிதானே? இப்போதுதான் ஞாபகம் வருகிறது. இயற்கையாகவே பெய்த மழைக்கு அன்று நீங்கள் அவ்வளவு கஷ்டப்பட்டிருக்க வேண்டியதில்லை!''

''மிஸ்டர் உண்ணி மேனோன்...'' அவளது குரலில் கடுமை அதிகமாயிருந்தது.

அவளையே பார்த்துக் கொண்டிருந்த ஹெட்மாஸ்டரும், மேனேஜரும் ஒரு கணம் நடுங்கினார்கள்.

''நான் ஒரு பாடகி மட்டுமல்ல... சொல்வதை கவனமாகக் கேளுங்கள். உங்களது வரவேற்பறையிலுள்ள கண்ணாடி அலமாரியில் வைத்திருக்கிறீர்களே ஒரு பொம்மை... கண்கவரும் பொம்மை... பிளாஸ்டிக்கால் செய்தது போல் அழகாகவே உள்ளது. அதன் எடை ஐந்து கிலோ நூற்றி எழுபத்தைந்து கிராம். என்ன நான் சொல்வது சரிதானா?''

எதிர்முனையிலிருந்து பதில் எதுவும் வரவில்லை. ஒரு பெருமூச்சு மட்டும் கேட்டது.

''சரியாகச் சொன்னால் ஐந்து கிலோ எடையுள்ள தங்கத்துடன் எழுபத்தைந்து கிராம் பிளாஸ்டிக் கலந்திருப்பது...'' வார்த்தைகளை முடிக்காமல் இந்திராபாய் ரிசீவரை அதன் இடத்தில் டக்கென்று வைத்தாள்.

அடுத்த விநாடியே வந்த டெலிபோன் அலறியது. மேனேஜர் ரிசீவரை எடுத்தார்.

கஸ்டம்ஸ் ஆபீசர் உண்ணி மேனோனது வீட்டிலிருந்து வந்த போன். தன் பேரனை பள்ளிக்கூடத்திலிருந்து நீக்கி விடுமாறும், இந்திராபாய் கொண்டு வந்துள்ள பையனைச் சேர்த்துக் கொள்ளுமாறும் அவரே பேசினார்.

''சரி நான் வரட்டுமா?'' இந்திராபாய் எழுந்தாள்.

மேனேஜரும் ஹெட்மாஸ்டரும் அவளைத் தொடர்ந்து சாரட் வண்டிவரை சென்றனர். இந்திராபாய் சாரட்டின் பின்புறவழியாக ஏறினாள். யாரும் குதிரையை இயக்காமல், சாட்டையைப் பிடிக்கா மலே குதிரை பாய்ந்தோடத் தொடங்கியதைச் சுற்றிலுமிருந்த வர்கள் வியப்புடன் வேடிக்கை பார்த்தனர்.

## 3

''அந்தப் பெண்மணி ஓர் அதிசயப் பிறவிதான்!'' சங்கரன் நாயர் கூறினார்.

வீட்டை அடைந்த பின்னரும் கூட சங்கரன் நாயரின் மனம் அமைதியடையவில்லை. இன்றுவரை யாருக்குமே தெரியாது என்று நினைத்திருக்கிற அந்த பயங்கர ரகசியத்தை இந்தப் பெண்மணி எப்படியோ தெரிந்து கொண்டிருக்கிறாள்!

அவள் இந்த ரகசியத்தை யாரிடமெல்லாம் சொல்லப் போகிறாளோ? அப்படிச் சொல்லி விட்டால் அதன் பிறகு என்னவெல்லாம் நடக்குமோ?

முதலில் செப்டிக் டாங்கின் ஸ்லாப்பை நகர்த்தி அதற்குள் ளிருந்து வேலைக்காரியின் எலும்புக்கூட்டை எடுத்து இடம் மாற்ற வேண்டும். இல்லாவிட்டால் தன்னுடைய மானம், மரியாதை, புகழ் எல்லாம் மண்ணாய்ப் போவதுடன், சிறைக்குப் போக வேண்டியதுதான்.

இதிலிருந்து எப்படித் தப்பிப்பது?

சங்கரன் நாயர் பாதிச் சாப்பாட்டிலேயே எழுந்து கை கழுவியபோது, அவர் மனைவி சௌதாமினிக்குச் சந்தேகம் தோன்றியது.

சாதாரணமாக சங்கரன் நாயர் சாப்பாட்டு விஷயத்தில் அவ்வளவு மோசமானவரல்லர். அவர் முகமே வாட்டமுற்றிருக்கிறது.

''ஏங்க... என்ன ஆகிவிட்டதென்று இப்படி ஒரு மாதிரி இருக்கிறீர்கள்?''

''அந்த ரகசியத்தை அவள் தெரிந்து கொண்டிருக்கிறாள்.'' முணுமுணுத்தார்.

''எந்த ரகசியத்தை, எவள் தெரிந்து கொண்டாள்?''

''அந்தப் பாடகி... பேப்பரில்கூட செய்தி. போட்டிருந்தார்களே... பாட்டுப்பாடி மழை பெய்ய வைத்ததாக ஆகா ஓகோவென்று புகழ்ந்தார்களே அந்தப் பெண்தான்...''

''அது எப்படி அவளுக்குத் தெரிந்தது? அவள் இப்போதுதானே இந்த ஊருக்கே வந்திருக்கிறாள்?''

''நீ சொல்வதெல்லாம் சரிதான். அவள் சாதாரணப் பெண்ணே அல்ல'''

''சாதாரணப் பெண்ணில்லாமல்...?''

''அதிசயமான சக்தி உள்ளவள்.''

''உங்களுக்கு அப்படியெல்லாம் தோன்றுகிறது. ஒருவேளை அது உங்களுடைய யூகமாகக்கூட இருக்கலாம்.''

''அப்படியெல்லாமில்லை... கஸ்டம்ஸ் ஆபீசர் உண்ணி மேனோனே அவளது மிரட்டலில் ஆடிப் போய் விட்டார் என்றால் பார்த்துக் கொள்!''

''அப்படியா?''

பள்ளிக்கூடத்தில் நடந்ததை சங்கரன் நாயர் அப்படியே ஒப்பித்தார்.

''அப்படியா சேதி? எனக்கென்னவோ பயமாக இருக்கிறது. போலீஸ்காரர்கள் யாராவது திடுமென்று வந்து தொலைத்தால் என்ன செய்வது?'' சௌதாமினி பதற்றத்துடன் கேட்டாள்.

''இப்படியெல்லாம் பயந்தால் எப்படி?''

''தெரியாமல்தான் கேட்கிறேன். உங்களிடம் சொன்னதையே அவள் போலீஸ்காரரிடம் போய்ச் சொன்னால் நிலைமை என்ன ஆவது?''

''நீ சொல்வதும் சரிதான். அவள் அப்படிச் செய்தால் என்ன செய்வது?'' சொல்லியபடியே சங்கரன் நாயர் சாய்வு நாற்காலி யிலிருந்து எழுந்தார். வாசற்படியை நோக்கி நடந்தவர் தெருவை இரு புறமும் பார்த்துவிட்டு வீட்டின் பின்புறத்தை நோக்கி நடந்தார்.

செப்டிக் டாங்கின் அருகில் சென்றார். டாங்கின் மீது ஏராளமாகப் புல் வளர்ந்திருந்தது. அதன் மீது ஏறி நின்றார்.

அதே நேரத்தில் வீட்டு வாசலில் ஒரு ஜீப் வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

சங்கரன் நாயர், தன் மனைவி சௌதாமினியைப் பரபரப் புடன் பார்த்தார்.

சௌதாமினி, கணவனை நெருங்கியபடி கூறினாள்: ''நீங்கள் இங்கேயே இருங்கள். வந்திருப்பது யாரென்று பார்த்துவிட்டு வருகிறேன். போலீஸ்காரர்கள் என்றால் நான் சிக்னல் தருகிறேன். மற்றதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்.''

வீட்டைச் சுற்றிக்கொண்டு முன்புறமாக வந்த சௌதாமினி திடுக்கிட்டாள். நம்பர் பிளேட்டில் அசோகச் சக்கரம் வரையப் பட்ட மாருதி ஜீப்.

'இவர் உயர்ந்த போலீஸ் அதிகாரியாக இருக்க வேண்டும்.' மனத்திற்குள் நினைத்தாள் சௌதாமினி. கணவனை நோக்கி ஓடியவள் கூறினாள்: ''நிலைமை கைமீறி விட்டதென்று தோன்று கிறது. வந்திருப்பது போலீஸ்காரரை விடப்பெரிய அதிகாரி என்று நினைக்கிறேன்.''

சங்கரன் நாயர் சுவரோடு சுவராக ஒட்டி நின்றபடி பார்த்தார். கஸ்டம்ஸ் ஜீப்! ''அப்பா!'' என்று நிம்மதிப் பெருமூச்சுவிட்டார். டிரைவர் ஸீட்டில் உட்கார்ந்திருப்பவர் உண்ணி மேனோன். சட்டென்று உற்சாகம் பெற்றவராக சங்கரன் நாயர் வீட்டின் முன்புறத்திற்கு வந்து வரவேற்றார். ''வாருங்கள், வாருங்கள் மிஸ்டர் உண்ணி மேனோன்!''

ஆனால், கஸ்டம்ஸ் ஆபீசர் உண்ணி மேனோன் முகத்தில் களையே இல்லை. பரபரப்புடன் இருப்பதாகத் தெரிந்தது. ஜீப்பிலிருந்து இறங்கினார்.

''சௌதாமினி... குடிக்க இதமாக ஏதாவது கொண்டு வாயேன்!'' சங்கரன் நாயர் குரல் கொடுத்தார்.

தயாராக எடுத்து வைத்திருந்தது போல், சௌதாமினி கையில் ஒரு ட்ரேயுடன் வந்தாள்.

வெளிநாட்டு விஸ்கி... சீல் உடைக்காத பாட்டில், பளபளப்பான கண்ணாடித் தம்ளர்கள். ஐஸ் பேக், ஒரு தட்டில் நெய்யில் வறுத்த முந்திரிப்பருப்பு.

''முதலில் நமது பரபரப்பெல்லாம் கொஞ்சம் தணியட்டுமே.'' கூறியபடி சங்கரன் நாயர் பிரெஞ்சு நாட்டுச் சரக்கான பாட்டிலின் கழுத்தை இரக்கமில்லாமல் திருகித் திறந்தார். கிளாஸுகளில் திரவமட்டம் உயர்ந்தது. ஐஸ், திரவத்தில் கரைவதற்கு முன்பாகவே எடுத்துக் கொஞ்சமாக 'ஸிப்'பினார்கள்.

''அவள் யார்?'' உண்ணி மேனோன் நிதானமாகக் கேட்டார்.

''இந்தக் கேள்வியை நான் உங்களிடம் கேட்க நினைத்திருந்தேன். அவள் போனில் பேசியபோது நீங்கள் எதற்காக பயந்து போனீர்கள் என்று எனக்குப் புரியவில்லை!''

''நீங்கள் மட்டும் என்னவாம்? எப்படி இருந்தாலும் அவள் ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடித்துவிட்டாள்!''

உண்ணி மேனோனது ரகசியம் தனக்குத் தெரிந்த போதிலும், தனது பலவீன ரகசியத்தை அவர் தெரிந்திருக்க முடியாது என்றே சங்கரன் நாயர் நினைத்தார். மூன்றாவது நபராக இப்போது

இந்திராபாய்க்கும் தெரிந்திருக்கிறது. இருப்பினும் அதைப் பற்றி உண்ணி மேனோனிடம் அவர் பேச விரும்பவில்லை.

''அவளது பெயர் என்ன?'' சட்டென்று ஞாபகம் வரவில்லை. உண்ணி மேனோன் நினைவுக்குக் கொண்டு வரமுயன்றார்.

''இந்திராபாய்!'' உச்சரிக்கும்போது சங்கரன் நாயரின் நாக்கே நடுங்கியது.

''ஆள் எப்படி இருக்கிறாள்?'' தனது கனமான மீசையை நீவியபடி கேட்டார்.

கஸ்டம்ஸ் ஆபீசர் உண்ணி மேனோன் ஆஜானுபாகுவான வர். ஆறடி இரண்டங்குல உயரம். திடகாத்திரமான உடம்பு. சதுர முகம். துடுதுடுப்பான, திரண்ட தசைப்பிடிப்புள்ள அங்கங்கள்.

இரு புறமும் துருத்திக் கொண்டிருக்கும் கன்னத்தின் பக்க எலும்புகள். அதை மறைத்தபடி கம்பீரமாக நிற்கும் கனமான முரட்டு மீசை. கண்களின் கீழே இதுவரை அருந்திய மொத்த சீமைச் சரக்கும் தசையாக மடிந்து தொங்கியது. கைத்தண்டுகளில் நரம்புகள் விறைத்துப் புடைத்துத் தெரிந்தன. ஒட்டுமொத்தத்தில் பயமேற்படுத்தும் ஓர் உருவம்!

''ஒரு இளவரசி மாதிரி இருக்கிறாள்!'' சங்கரன் நாயர் பதிலளித்தார்.

''அவளுக்கு இந்த ரகசியங்கள் எல்லாம் எப்படித் தெரிந்தது? ஒற்றர்களை வைத்திருக்கிறாளா?'' மேனோன் விசாரித்தார்.

''அப்படி எதுவுமில்லை. அவள் ஒரு சாதாரணப் பெண்மணி. என்னுடைய சந்தேகம் என்னவென்றால், அவள் மந்திர வித்தை கள் தெரிந்தவளாக இருக்கலாமோ என்பதுதான்!''

''சேச்சே! கண்டபடி உளறாதீர்கள். 'மந்திரமாவது மண்ணாங் கட்டியாவது!''

''நான் சொல்வதை கவனியுங்கள். அவள் கண்கள் சக்தி வாய்ந்தவை. அவற்றை நாம் நேருக்கு நேராகப் பார்க்க முடிவதில்லை.''

''அதெல்லாம் போகட்டும். அவள் எங்கே குடியிருக் கிறாள்!''

''கோயிலின் கிழக்குப் புறமாக உள்ள இடத்தை வாங்கி, அரண்மனை மாதிரி ஒரு பங்களா கட்டியிருக்கிறாள்.''

''அந்த பங்களாவைப் பார்த்திருக்கிறீர்களா?''

''அவள் பள்ளிக்கூடத்திற்கு வந்து போன பிறகு, மற்றவர் களிடமிருந்து தெரிந்து கொண்டேன்.''

கிளாஸுகளில் விஸ்கி நிறைவதும் காலியாவதுமாக இருந்தது. இருவரின் கன்னப் பகுதிகளும் வியர்த்துச் சிவந்தன. சௌதாமினி அவர்களுக்கு அருகே வந்தாள்.

''முட்டை பொரிக்கட்டுமா?''

''சீக்கிரமாகக் கொண்டுவா!'' சங்கரன் நாயர் பதிலளித்தார்.

அவள் உள்ளே போனாள்.

இருவரும் யோசனையில் ஆழ்ந்தனர். சௌதாமினி முட்டைப் பொரியலைக் கொண்டு வந்து வைத்தபோது கூட இருவரும் ஒரு தீர்மானத்திற்கு வரவில்லை. பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பார்த்தபடி உட்கார்ந்திருந்தனர்.

''என்னங்க, ஏதாவது தட்டுப்படுகிறதா?'' சௌதாமினி கணவனிடம் கேட்டாள்.

''ஒன்றும் பிடிபடவில்லை. உனக்கு ஏதாவது தோன்று கிறதா?'' மனைவியிடம் கேட்டார்.

''நீங்கள் பேசிக்கொண்டிருந்தபோது நான், வைஸ்மென்ஸ் செக்ரெட்டரி எல்சம்மா சாக்கோவிடம் டெலிபோனில் விசாரித் தேன்.''

''என்ன சொன்னார்கள்?'' உண்ணி மேனோன் எதிர்பார்ப் புடன் கேட்டார்.

''அந்த பங்களாவைக் கட்டியவர் காண்டிராக்டர் அச்சுதன் பிள்ளையாம்.''

''யார் அச்சுதன் பிள்ளையா?'' உண்ணி மேனோன் நம்ப முடியாதவராகக் கேட்டார்.

''எல்சம்மா சொன்னதை வைத்துப் பார்த்தால், அச்சுதன் பிள்ளைக்கு அவளைப் பற்றிய ரகசியங்கள் எல்லாம் தெரியு மென்று தோன்றுகிறது.''

''காண்டிராக்டர் அச்சுதன் பிள்ளை!'' சங்கரன் நாயர் அந்தப் பெயரை மந்திரம் மாதிரி முணுமுணுத்தார்.

''உங்களுக்கு அவருடன் பழக்கமுண்டா?'' உண்ணி மேனோன் கேட்டார்.

''தெரியும். அவர்தான் நமது பள்ளிக்கூடத்தின் புதிய கட்ட டத்தைக் கட்டியவர். அந்தப் புதிய இரண்டு மாடிக் கட்டடத்தை!''

''அப்படியானால் அவரிடம் பேசிப் பாருங்களேன்...''

''சரி, கேட்டுப் பார்க்கலாம்.'' சங்கரன் நாயர் டைரியைத் தேடத் தொடங்கினார்.

''அவரது டெலிபோன் நம்பர் எனக்குத் தெரியும். நான் அவரிடம் பேசிப் பார்க்கிறேன். நீங்கள் பேசிக் கொண்டிருங்கள்.'' சௌதாமினி உள்ளே போனாள்.

சௌதாமினிக்கு அச்சுதன் பிள்ளையை நன்றாகத் தெரியும். பள்ளிக்கூடக் கட்டடம் கட்டத் தொடங்கியதிலிருந்து அவர்களுக் கிடையே நட்பும் எழும்பத் தொடங்கியிருந்தது.

சங்கரன் நாயர் ஊரிலில்லாதபோது சௌதாமினி அச்சுதன் பிள்ளைக்கு போன் செய்து வீட்டிற்கு வரவழைப்பாள். அவரும் தட்டாமல் வந்து விடுவார்.

சௌதாமினி, அச்சுதன் பிள்ளையின் டெலிபோன் எண் களைச் சுழற்றினாள்.

மறுபுறத்தில் அச்சுதன் பிள்ளை ரிசீவரை எடுத்தார். இருவரும் பேசிக் கொண்டனர். சற்று நேரத்தில் வந்து விடுவதாக அச்சுதன் பிள்ளை உறுதியளித்தார். சொன்னபடியே ஃபியட்

காரில் வந்து இறங்கவும் செய்தார். அவரும் வந்து சேர்ந்து கொண்ட பிறகு அரங்கம் மேலும் களை கட்டியது.

அவரும் மதுவால் வேண்டுமட்டும் தொண்டையை நனைத்துக் கொண்டார்.

சங்கரன் நாயர், உண்ணி மேனோனை அவரிடம் அறிமுகப் படுத்திய பிறகு கூறினார்: ''உங்களை இங்கு வரவழைத்தது ஒரு ரகசியத்தைத் தெரிந்து கொள்ளத்தான்...''

''என்னிடமிருந்தா, என்ன ரகசியத்தை?'' வறுத்த முந்திரிப் பருப்பைக் கையில் எடுத்து விரலால் நிமிண்டியபடி கேட்டார்.

''அந்த பங்களாக்காரியைப் பற்றித்தான். இந்திராபாய் தானே அவள் பெயர்?'' -உண்ணி மேனோன் பேச்சைத் தொடங்கி னார்.

அந்தப் பெயரைக் கேட்டதும் அச்சுதன் பிள்ளை முன்னால் அமர்ந்திருக்கும் இருவரையும் மாறி மாறிப் பார்த்தார்.

''ஏன், என்ன விஷயம்?''

''அந்தப் பெண்மணி பயங்கரமானவள் என்று தோன்று கிறது. எதையெல்லாமோ தெரிந்து வைத்திருக்கிறாள். அவளிடம் உள்ளூர்க்கார ஆசாமி யாரோ ரகசியங்களைப் புட்டுப் புட்டு வைத்திருக்கிறான். அச்சுதன் பிள்ளை, அவளைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'' சங்கரன் நாயர் கேட்டார்.

''அந்தப் பெண்மணியைக் குறித்து எனக்கு அதிகமாக எதுவும் தெரியாது!'' அச்சுதன் பிள்ளை ஒப்புக்கொண்டார்.

''அவளுக்கு எந்த ஊர்?''

''வடதிசையில் ஏதோ ஒரு கோவிலகம் என்று தோன்று கிறது.''

''அவளது வீட்டுப் பெயர் என்ன?''

''ஸ்ரீ வேலி கோவிலகம்!''

''நீங்கள் அங்கே போயிருக்கிறீர்களா?''

''போயிருக்கிறேன்!''

''அவளுக்கு சொந்தக்காரர்கள் யாராவது இருக்கிறார்களா?''

''யாருமில்லை!''

''உங்களுக்கு இந்த காண்டிராக்ட் எப்படிக் கிடைத்தது?''

''பத்திரிகையில் வந்த விளம்பரம் மூலமாக!''

''அந்த பங்களாவில் ரகசிய அறை ஏதாவது உள்ளதா?''

''எனக்குத் தெரியாது!''

உண்ணி மேனோன், அச்சுதன் பிள்ளையின் கிளாஸில் விஸ்கியை ஊற்றியபடி கூறினார்: ''மிஸ்டர் அச்சுதன் பிள்ளை, அந்தப் பெண் எங்களையெல்லாம் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி வைத்திருக்கிறாள். நிலைமை இப்படியே தொடர்ந்தால் அது மிகவும் ஆபத்தாகிவிடும்.''

''அதற்கு நான் என்ன செய்ய முடியும்?'' அச்சுதன் பிள்ளை கேட்டார்.

''நீங்கள் மனம் வைத்தால் அவளைத் தீர்த்துக் கட்ட முடியும்.''

''ஐயோ... அது முடிகிற காரியமா?''

''சௌதாமினி... அச்சுதன் பிள்ளைக்கு சாப்பிட ஏதாவது கொடுப்பதுதானே?'' - என்றபடி மனைவியை நோக்கிக் கண்ணைச் சிமிட்டினரார் சங்கரன் நாயர்.

''அப்படியானால் உள்ளே வாருங்கள்.'' சௌதாமினி, பிள்ளையை அழைத்தாள்.

அந்த அழைப்பிற்காகவே காத்திருந்தவர் மாதிரி பிள்ளை துள்ளியெழுந்து உள்ளே போனார்.

சௌதாமினி அவரைப் படுக்கையறைக்கு அழைத்துச் சென்றாள்.

சங்கரன் நாயரும், உண்ணி மேனோனும் புதிய விஸ்கி பாட்டிலைத் திறக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

'என்ன சொன்னாலும் செய்து முடிக்கிறேன்' என்ற மனநிலை யுடன்தான் பிள்ளை அந்தப் படுக்கையறையிலிருந்து வெளியே வந்தார்.

''அச்சுதன் பிள்ளை, நீங்கள் மட்டும் மனசு வைத்தால் அவளை எது வேண்டுமானாலும் செய்யலாம். நான் சொல்வது வெறும் மனக் கணக்கு அல்ல. நீங்கள் எப்படிப்பட்ட அசகாய சூரர் என்பது எனக்குத் தெரிந்து விட்டது. நீங்கள் அவளைக் கொல்ல வேண்டும், இந்தாருங்கள்...'' உண்ணி மேனோன் தனது சூட்கேஸைத் திறந்து பளபளப்பான ரிவால்வரை எடுத்து அவரிடம் நீட்டினார்.

## 4

**நே**ரம் மாலையாகி இருந்தது.

அச்சுதன் பிள்ளையின் ஃபியட் கார் இந்திராபாயின் வீட்டு கேட்டைக் கடந்து உள்புறமாக நுழைந்தது.

காரை போர்டிகோ வாசலில் நிறுத்தினார்.

சாரட் வண்டி அங்கேயே நின்றிருந்தது. வெள்ளைக் குதிரை காம்பவுண்டிற்குள் வளர்ந்திருந்த புல்லை சுதந்திரமாக மேய்ந்து கொண்டிருந்தது. இந்திராபாய் வீட்டிற்குள் இருக்கிறாள் என்பது புரிந்தது.

சிற்ப வேலைப்பாடுகளால் அலங்கரிக்கப்பட்டுள்ள வாசற் படியின் இடதுபுறமுள்ள பித்தளை மொட்டை அழுத்தினால் உள்புறம் மணியொலிக்கும். சட்டென்று பார்த்தால் கண்ணுக்குத் தெரியாத மாதிரி அது அமைக்கப்பட்டிருந்தது. இருப்பினும் அதன் கீழ் 'பெல்' என்று பொறித்திருந்தது.

கதவு திறக்கப்பட்டது. வாசலுக்கு வராமலேயே உள்ளிருந்து கதவைத் திறக்கும் உத்தி பயன்படுத்தப்பட்டிருந்தது. சுவரை ஒட்டிய மறைவுப் பகுதியில் கதவைத் திறந்து மூடுவதற்கான மோட்டார் பொருத்தப்பட்டிருக்கிறது.

அச்சுதன் பிள்ளை வீட்டிற்குள் காலை வைத்தவுடன் விளக்கு எரிந்தது. இருபுறமாகப் பிரிந்து தரையைத் தொட்ட படிக்கட்டின் மையத்திலிருந்த பால்கனிப் பகுதியில் இந்திராபாய் நின்று கொண்டிருந்தாள்.

அச்சுதன் பிள்ளை துப்பாக்கி இல்லாமலே குறி பார்த்தார். சரியான இடத்தில், சரியான கோணத்தில் சுடுவதற்கு ஏதுவாக நிற்கிறாள்.

''மிஸ்டர் அச்சுதன் பிள்ளை, என்ன இந்த நேரத்தில் திடீரென்று?'' இந்திராபாய் கேட்டாள். அவள் காஞ்சிபுரம் சரிகைச் சேலை உடுத்தியிருந்தாள். தங்கத்தால் சுற்றப்பட்டிருந்ததைப் போல் ஜொலித்தாள். அவள் உடல் எது? புடவை எது என்பதைப் பிரித்தறிவது கடினமாக இருந்தது.

''நான் கூப்பிடாதபோது எதற்காக வந்திருக்கிறீர்கள்?''

பிள்ளையால் பதில் சொல்ல முடியவில்லை.

என்னத்தைச் சொல்வது?

வந்திருக்கிற நோக்கம் சொல்லக்கூடியதா என்ன?

''அவர்கள் சொல்லியனுப்பி வந்திருக்கிறீர்களா?'' என்ற இந்திராபாயின் கேள்வி அவரைத் திணறடித்தது. 'கடவுளே, இந்தப் பெண்மணி இதையும் தெரிந்து கொண்டிருக்கிறாளே!' அவர் உதடுகள் முணுமுணுத்தன.

''மிஸ்டர் அச்சுதன் பிள்ளை எனக்கு எல்லாம் தெரியும். நீங்கள் இங்கிருந்து போகலாம்!'' இந்திரா கட்டளையிடுவது போல் கூறினாள்.

வேறு வழியே இல்லை. எல்லா ரகசியங்களையும் இவள் எப்படியோ உடனுக்குடன் தெரிந்து கொள்கிறாள். இந்த நிலையில் இங்கிருந்து வெளியேறினாலும் அவள் பழி வாங்கவே செய்வாள் என்று நினைத்தவராக இடுப்பில் மறைவாக வைத்திருந்த கைத் துப்பாக்கியைச் சட்டென்று உருவி எடுத்தார்.

இந்திராபாயின் நெஞ்சைக் குறிபார்த்துக் குதிரையை இழுத்தார். குண்டுகள் சீறிப் பாய்ந்தன. வெடியோசை அந்தப் பங்களாவையே கிடுகிடுக்க வைத்தது.

துப்பாக்கியிலிருந்த ஆறு தோட்டாக்களும் காலியாகி விட்டது. துப்பாக்கியிலிருந்து எழுந்த புகைப்படலம் காற்றில் கரைந்து மறைந்தபோது, அச்சுதன் பிள்ளை மனத்தின் சம நிலையை இழந்தவர் போல் - பைத்தியம் பிடித்த நிலையை அடைந்தார்.

ஆனால், எந்தவித சேதாரமும் இல்லாமல் இந்திராபாய் பழையபடி அதே இடத்திலேயே நின்றிருந்தாள். அச்சுதன் பிள்ளை திடுக்கிட்டார்.

ஒருகணம் என்ன செய்வதென்று புரியாமல் தத்தளித்த அச்சுதன் பிள்ளை சட்டென்று, பின் திரும்பி வாசற்படியைக் கடந்தார். அவசர அவசரமாகக் காரில் ஏறி கேட்டைக் கடந்தார்.

அன்று அமாவாசை நாள்.

தெருவிளக்குகள் என்ன காரணத்தாலோ எரியாமலிருந்தன. இருள் பரவியிருந்த சாலை வழியாக அச்சுதன் பிள்ளையின் கார் வேகமாகச் சென்றது.

சட்டென்று ஒரு காட்சி தென்பட்டது.

எதிர்ப்புற வளைவில் பெரியதாக வளர்ந்து நிற்கும் ஆல மரத்தடியில் இந்திராபாய் நின்றிருந்தாள். அப்போது எல்லாவித அலங்காரங்களுடன் காட்சியளித்தாள்.

அன்று வீணை வாசித்தபடி பாட்டுப் பாடியபோது உடுத்தி யிருந்த அதே உடை. நகர்வலம் புறப்படத் தயாராக இருக்கும் ஓர் இளவரசி போல் அவளிடம் கம்பீரம் துலங்கியது. ஆலமரத்தின் வேர்கள் மீது கால் வைத்து, நடுத்தண்டின் மீது சாய்ந்திருந்தாள். ஆலமரத்தின் அடிப் பரப்பில் கட்டியிருந்த வட்டமான திண்ணை அங்கங்கே இடிந்திருந்தது.

அச்சுதன் பிள்ளையின் மூளையில் எதிர்பாராமல் ஒரு யோசனை பிறந்தது.

இந்த சந்தர்ப்பம் பிறகு கிடைக்காது!

புதிய ஃபியட் கார் நொறுங்கினாலும் பரவாயில்லை. நினைத்த காரியத்தை முடிக்க வேண்டியதுதான்.

காரின் ஸ்டீயரிங்கை அச்சுதன் பிள்ளை ஆலமரத்தை நோக்கிச் சுழற்றினார். அவரது கவனம் முழுவதும் இந்திரா பாயைச் சுற்றிச்சுற்றி வந்தது. கால் ஆக்ஸிலேட்டரை அழுத்தியது. கார் முன்புறமாகச் சீறிப் பாய்ந்தது.

"டமால்..."

சத்தத்தைத் தொடர்ந்து நீண்ட நேர அமைதி.

அணைந்திருந்த தெருவிளக்குகள் சட்டென்று எரியத் தொடங்கின. கார் ஆலமரத்தில் மோதி நொறுங்கிவிட்டிருந்தது. ஸ்டீரியங் வீல், அச்சுதன் பிள்ளையின் நெஞ்சை இருக்கையுடன் சேர்த்து அழுத்தியிருந்தது.

மறுநாள் பத்திரிகைகள் செய்தியை வெளியிட்டன. ‘காண்டிராக்டர் அச்சுதன் பிள்ளை கார் விபத்தில் பலி!’

அவர் ஏராளமாகக் குடித்திருந்ததை எந்தப் பத்திரிகையும் குறிப்பிடவில்லை.

கஸ்டம்ஸ் ஆபீசர் உண்ணி மேனோனும் ஸ்கூல் மேனேஜர் சங்கரன் நாயரும் செய்தியைக் கேள்விப்பட்டுத் திடுக்கிட்டனர்.

இருப்பினும் அந்த இருவரும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரிக்கத் தவறவில்லை. இந்திராபாயும் இறந்து போயிருப்பாள் என்பதுதான் அந்தச் சிரிப்புக்குக் காரணம். இந்திராபாயைச் சுட்டுக் கொன்றுவிட்டு அச்சுதன் பிள்ளை தற்கொலை செய்திருக்கலாம் என்பது அவர்களது யூகம்.

‘இந்திராபாய் இறந்து விட்டாளா, இல்லையா என்பதை எப்படித் தெரிந்து கொள்வது? யாரிடம் அதைப் பற்றி விசாரிப்பது?’ இந்த நினைவையே கொண்டாட வேண்டுமென்று அவர்களுக்குத் தோன்றியது. பாட்டிலையும் கிளாஸுகளையும் முன்புறமாக எடுத்து வைத்தனர்.

உண்ணி மேனோனின் வீட்டில்தான் அன்றைய பார்ட்டி.

அச்சுதன் பிள்ளையின் உடம்பை எரித்தவுடன் இரண்டு பேரும் வீட்டிற்கு வந்து விட்டார்கள்!

## 5

**மா**லை நேரம் கடந்திருந்தது.

கஸ்டம்ஸ் ஆபீசர் உண்ணி மேனோனின் வீடு நகரத்தின் தென்கோடியிலிருந்தது. ஆள் நடமாட்டம் அதிகமில்லாத

இடமாகப் பார்த்து அவர் கட்டிய அந்த பங்களாவில் தரை மட்டத்திற்குக் கீழும் ஒரு பகுதி இருந்தது. அப்படியொரு பகுதி அந்த வீட்டில் இருப்பதே யாருக்கும் தெரியாது. வீட்டைக் கட்டிய கொத்தனார்கள் சிலர் மூலமாகத்தான் செய்தி வெளியே பரவியது.

விஸ்கியை உள்ளே இறக்கியபடி சங்கரன் நாயர் கேட்டார்: ''அன்று அவள் போனில் குறிப்பிட்ட பொம்மை எது?''

''ஓகோ... நீங்கள் இன்னுமா அதை மறக்கவில்லை?'' உண்ணி மேனோன் கேட்டார்.

''சுலபத்தில் மறக்க முடியுமா என்ன? தங்கம், பொம்மை, பணம், எடை என்றெல்லாம் கேட்டால் சட்டென்று மறந்துவிட முடியுமா என்ன!''

''அதுவும் சரிதான். உடனே நான் அந்த பொம்மையை மாற்றி விட்டேன்.''

''எப்படி?''

''அது ஒரு வித்தை. நான் வெகுநாளாகப் பாடுபட்டு காப்பாற்றி வரும் ரகசியத்தை அவள் எப்படியோ கண்டுபிடித்து விட்டாள். அதன் பிறகும் அதை அப்படியே வைத்திருந்தால் என்ன ஆவது?''

''மாற்றியது வேறு யாருக்காவது தெரியுமா?''

''தெரியாது!''

''இந்த பங்களாவைக் கட்டியதும் அச்சுதன் பிள்ளை தானே?''

''ஆமாம்.''

''ஒரு வேளை பேச்சு வாக்கில் அவரிடம் இதைப் பற்றிப் பேசியிருப்பீர்கள்... அவர் அவளிடம் சொல்லியிருக்கலாம்.''

''அப்படிச் சொல்வதால் அவருக்கென்ன லாபம்?''

''இருக்கிறது. இந்திராபாயின் வீட்டிலும் இதே மாதிரி பொம்மை இருக்கலாம். அதைப் பார்த்தபோது அச்சுதன் பிள்ளை இந்தப் பொம்மையைப் பற்றிப் பேசியிருக்கலாம்.''

''ஒரு வேளை அப்படியும் இருக்கலாம்.''

''அச்சுதன் பிள்ளை எத்தனையோ தடவை தன்னுடன் அமர்ந்து மது அருந்தியிருக்கிறார். அப்படி எப்போதாவது ஒருமுறை நான் அவரிடம் போதையில் உளறியிருக்கலாம்; அவர் அதை அவளிடம் கூறியிருக்கலாம்.''

''இல்லாவிட்டால் அவள் எப்படி இதையெல்லாம் தெரிந்து கொள்ள முடியும்? நீங்கள் சொன்னபடிதான் நடந்திருக்கும்!'' உண்ணி மேனோன் ஒப்புக் கொண்டார்.

''அப்படியானால், இப்போது அதை பத்திரப்படுத்தி விட்டீர்கள் இல்லையா?''

உண்ணி மேனோன் நமுட்டுத்தனமாகச் சிரித்தபடி பாட்டிலி லிருந்து விஸ்கியை கிளாஸிற்குள் ஊற்றினார்.

''இனிமேல் நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.'' சங்கரன் நாயர் கூறினார்.

''சங்கரன் நாயரே, நீங்கள் ஒரு விஷயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். என்னுடைய அனுமதி இல்லாமல் இந்த பங்களா விற்குள் ஓர் ஈ எறும்புகூட நுழைய முடியாது. நம் வீட்டு கேட்டை எவனாவது தொட்டால் அப்போதே உடம்பு நடுங்கத் தொடங்கும். அதையும் மீறி நுழைந்தால் ஆளைத் தூக்கி எறியும் அவ்வளவு தான்!''

''நவீன காலக் கொள்ளைக்காரர்கள் அதையெல்லாம் சுலபமாகக் கடந்து விடுவார்கள். போல்வால்ட் வித்தையெல்லாம் செய்வார்கள்!''

''அதற்கும் வழி செய்யாமலா இருப்பேன். தரைப் பரப்பில் அங்கங்கே சுவிட்சுகளைப் புதைத்து வைத்திருக்கிறேன். ஏதாவது ஓர் இடத்தில் கால் பட்டாலும் உடனே பங்களாவிலுள்ள விளக்குகள் எல்லாம் எரியத் தொடங்கும்!''

''அதெல்லாம் போகட்டும். இப்போது அந்த பொம்மையை எங்கே வைத்திருக்கிறீர்கள்?'' சங்கரன் நாயர் அதிலேயே பிடிவாதமாக இருந்தார்.

உண்ணி மேனோன் என்ன செய்வது என்று யோசித்தபடி சுவரில் பதிக்கப்பட்டிருந்த கடிகாரத்தை எதேச்சையாகப் பார்த்தார்.

''என்ன இது!'' உண்ணி மேனோன் கண்கள் நிலைகுத்தி நின்றன.

''என்னய்யா அதிசயம் இது!'' என்றபடி சங்கரன் நாயரும் இருக்கையிலிருந்து துள்ளி எழுந்தார்.

உண்ணி மேனோனும் சங்கரன் நாயரும் கண்களை அகல விரித்து உற்றுப் பார்த்தனர். கையிலிருந்த கிளாஸுகளை மேஜை மீது வைத்துவிட்டுச் சுவர்க்கடிகாரத்தின் அருகே சென்று பார்த்தனர்.

''நம் கண்களுக்குத் தெரிவது நிஜந்தானா?'' மேனோன் கேட்டார்.

''அப்படித்தான் தெரிகிறது எனக்கும்!'' சங்கரன் நாயரால் மறுத்துப் பேச முடியவில்லை.

பழங்காலத்துச் சுவர்க்கடிகாரத்தின் விநாடி முள் எதிர்த் திசையில் விரைவாகச் சுழன்றது.

''டிக்...டிக்...டிக்...''

சத்தம் வந்தது.

கடிகார முள் பின்னோக்கிச் சுற்றுமா என்ன? பார்த்துக் கொண்டிருந்த இருவருக்கும் மூச்சுத்திணறியது. இப்படியொரு அனுபவம் இதுவரை அவர்களது வாழ்க்கையில் ஏற்பட்டதில்லை. ஒரு வேளை மதுவின் போதையால் இப்படித் தெரிகிறதோ?

''சுபத்ரா!'' உண்ணி மேனோன் தன் மனைவியை அழைத்தார்.

''என்னங்க?'' என்ற குரல் உள்ளிருந்து கேட்டது. சற்றுத் தடித்த உடல்வாகு கொண்ட சுபத்ரா வெளியே வந்தாள்.

அவள் உடம்பின் தசைப் பகுதிகள் உடையிலிருந்து திமிறி வெளிப்பட முயன்றன. ரவிக்கையின் இறுக்கிப் பிடித்த கைப் பகுதித் தசைகள் துடிப்புடன் விளங்கின. இருளில் ஒளிந்திருக்கும்

தொப்பூழ்க் கொடியைச் சுற்றித் தசை, மடிப்பு மடிப்பாக விழுந்திருந்தன.

வட்டமான முகம்.

பெரிய கண்கள். உருண்டையான மூக்கு. பருத்த இதழ்கள். அவயவங்கள் எல்லாம் அந்த உடலுக்குப் பொருத்தமானதாகவே தோன்றியது. யானைக் குட்டியின் அழகு. வசீகரம்.

''நமது வீட்டுச் சுவர்க்கடிகாரத்தைப் பார். உனக்கு ஏதாவது வித்தியாசம் தெரிகிறதா?'' மேனோன் கேட்டார்.

ஒன்றும் புரியாதவளாக சுபத்ரா கடிகாரத்தைப் பார்த்தாள். அவள் கண்களும் வியப்பால் விரிந்தன.

''கடவுளே... என்ன இது!'' கடிகாரத்திலிருந்து கண்ணை எடுக்காமலே பார்த்தாள்.

''இதைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?''

''சந்தேகமே இல்லை! கடிகார முள் பின் பக்கமாகச் சுற்றுகிறது.''

''எனது சந்தேகத்தை உறுதிப்படுத்தத்தான் உன்னை வரச் சொன்னேன்.''

''எனக்கு பயமாக இருக்கிறது!'' என்றபடியே சுபத்ரா பூஜையறையை நோக்கி ஓடினாள்.

கடிகாரத்திலிருந்து 'டக்' என்றொரு சத்தம் கேட்டது. அத்துடன் கடிகாரம் நின்று விட்டது!

''உள்ளேயிருக்கும் ஸ்பிரிங் உடைந்து விட்டது.'' -சங்கரன் நாயர் கூறினார்.

இருவரும் தங்களது பழைய இடத்திற்கு வந்து அமர்ந்தனர். அவர்கள் முகத்திலிருந்த கிலி குறைவதற்கு பதிலாக அதிகரித்தது.

''இதற்கு என்ன அர்த்தம்?'' சங்கரன் நாயர் கேட்டார்.

வியப்புக்குரிய இந்த காட்சியைக் கண்ட உண்ணி மேனோன். அந்தச் சுவர்க்கடிகாரத்தின் பின்புறமுள்ள ரகசிய அறையைப்

பற்றியோ, அதற்குள் ஒளித்து வைத்திருக்கும் பொம்மையைப் பற்றியோ எதுவும் கூறவில்லை.

''எனக்குத் தெரிந்து இதன் பின்னணியில் எதுவெல்லாமோ இருப்பதாகத் தோன்றுகிறது!'' சங்கரன் நாயர் முணுமுணுப்புடன் கூறினார்.

''உண்மைதான். அந்தப் பெண் சாதாரணமானவளாகத் தெரியவில்லை. அச்சுதன் பிள்ளையின் மரணத்திற்கும் அவள் தான் காரணம் என்று தோன்றுகிறது.'' உண்ணி மேனோன் கூறினார்.

அதே நேரம் வாசற்படியிலிருந்த காலிங் பெல் ஒலியெழுப் பியது.

இருவரும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''யார் வந்திருக்கிறார்கள்?''

உண்ணி மேனோன் அவசர அவசரமாக விஸ்கி பாட்டி லையும், கிளாஸுகளையும் மற்றோர் அறைக்குள் மறைத்து வைத்தார். டேபிள் கிளாத்தை சரி செய்தார்.

''யாரென்று நானே போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்.'' என்றபடி மேனோன் வெளியே போனார்.

ஒலியும் அசைவும் நின்று போயிருந்த சுவர்க் கடிகாரத்தை சங்கரன் நாயர் தன்னையும் மீறி ஒரு முறை பார்த்தார்.

ஆணி மீது தொங்கிய கடிகாரம் இருபுறமு மாக அசைவது போல் தோன்றியது.

சட்டென்று முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

உண்ணி மேனோன் யாரோ ஒருவரை அழைத்து வந்தார். கையில் ஒரு பெட்டியுடன் அவர்களைத் தொடர்ந்து மற்றொரு வரும் வந்தார். பெட்டியை வீட்டிற்குள் வைத்த பிறகு சுமந்து வந்தவர் மட்டும் விடை பெற்றார்.

''ஒரு பெட்டி பிரெஞ்சுச் சரக்கு வந்திருக்கிறது!'' உண்ணி மேனோன், சங்கரன் நாயரிடம் கூறினார்.

வந்திருப்பவர் ஒரு பெரிய வியாபாரி. எக்ஸ்போர்ட் கம்பெனி முதலாளி. மேனோனை சந்திப்பதற்காக, சரக்குடன் வந்திருக்கிறார்.

சற்றுக் கருமையான உடல். நெற்றியில் சந்தனப் பொட்டு. பெயர் ராமசாமி.

''ராமசாமி, இவர் என் நண்பர்!'' சங்கரன் நாயரிடம் மேனோன் அறிமுகப்படுத்தினார்.

''இவர் பெரிய எக்ஸ்போர்ட் கம்பெனி முதலாளி. அரபு நாடுகளுக்குப் பொம்மை ஏற்றுமதி செய்வது தொழில். கப்ப லேறும் சரக்குகளில் பெரும்பாலானவை 'தரமாக' இல்லையென்று திரும்பி வரும். அப்படித் திரும்பி வருவதில்தான் இவரது லாபமே இருக்கிறது!'' மேனோன் சிரித்தபடி கூறினார்.

பலவகையான விளையாட்டுப் பொருள்களைத் தயாரித்து ஏற்றுமதி செய்வது தொழிலின் முதல் கட்டம். திரும்பி வருவது இரண்டாவது கட்டம். 'தரமில்லை' என்ற முத்திரையில் திரும்பி வரும் பொம்மைகளுக்குள் தங்கக் கட்டிகள் உள்ளன என்பது மேனோனுக்கும் தெரிந்த ஒரு பரமரகசியம்.

உண்மையைச் சொல்வதானால், மேனோனது பங்களாவின் முக்கால் பங்கு ராமசாமியினுடையதுதான்.

''எங்கே... கோயிலுக்குப் போய்விட்டு வருகிறீர்களா?'' ராமசாமியின் நெற்றியைப் பார்த்தபடியே உண்ணி மேனோன் கேட்டார்.

''இல்லை சார் ஒரு முக்கியமான இடத்திலிருந்து வருகிறேன்.''

''அப்படியும் ஓர் இடமா?''

''ராசி பார்க்கப் போயிருந்தேன்.''

''பரவாயில்லையே. நீங்கள் கூடவா அதையெல்லாம் பார்க்கிறீர்கள். போகட்டும் பார்க்க வேண்டிய காரணம் என்னவோ?'' உண்ணி மேனோன் விசாரித்தார்.

''வரவர பிஸினஸ் டல்லாகிறது.'' ராமசாமி சுவராஸ்யம் இல்லாமல் பதிலளித்தார்.

''ம்... அப்புறம்.''

''ஜோசியரைப் பார்த்து அதற்காகச் சில மந்திர கர்மங்களை யெல்லாம் செய்ய வேண்டி இருந்தது...'' என்றபடி முழுக்கைச் சட்டையின் மடிப்பை மேல் புறமாக உயர்த்தி தோள்பட்டையை ஒட்டியபடி கையில் கட்டியிருந்த தங்கத் தாயத்தைக் காட்டினார்.

''செய்து கொடுத்தவர் பெரிய மந்திரவாதியோ?'' உண்ணி மேனோன் ஆவலுடன் கேட்டார். கேட்டபடியே சங்கரன் நாயரையும் கவனித்தார். தேடிப் போன மூலிகை காலில் சுற்றியது போலிருந்தது உண்ணி மேனோனுக்கு.

''அப்படியானால், நாங்களும் அவரைப் பார்த்தால் நல்லதென்று தோன்றுகிறது. ஏற்பாடு செய்கிறீர்களா ராமசாமி?''

''அதற்கென்ன சார். போனால் போகிறது. இன்று அவர் இனிமேல் யாரையும் பார்க்க மாட்டார். ஒரு நாளைக்கு ஒருவரை மட்டுமே சந்திப்பார். அவருக்கு வேண்டியதைச் செய்து முடித்த பிறகுதான் அடுத்தவரைப் பார்ப்பார்.'' ராமசாமி ஒரே மூச்சில் பேசினார்.

''அதுதான் அவரது வழக்கமென்றால்... அப்படியே செய் வோம். நாளைக்கே போகலாம்.'' சொல்லியபடி எழுந்த மேனோன் உள்ளே போய் பாட்டில் மற்றும் கிளாஸ்கள் சகிதம் திரும்பி வந்தார்.

## 6

**ம**றுநாள் இரவு எட்டு மணிக்கு ராமசாமியின் காரில் மூன்று பேரும் மாந்திரீகனது வீட்டை நோக்கிப் பயணமாயினர்.

நகரத்திலிருந்து நாற்பது கிலோ மீட்டர் தொலைவிலிருந்தது மாந்திரீகன் குடியிருந்த கிராமம்.

மிகவும் பழைமை வாய்ந்த ஒரு பெரிய ஓட்டு வீட்டின் முன்புறம் பிரமாண்டமான எட்டி மரத்தடியில் கார் நின்றது.

சன்னமான நிலவொளியில் எட்டி மரத்தின் அடியிலிருந்த நிலப்பரப்பு குளுமையாகத் தெரிந்தது. அங்கு ஏராளமான கற்சிலைகள்.

''பெரிய மாந்திரீகன். இந்த எட்டி மரம் முழுவதும் ஒரே ஆணிமயம்தான். அவ்வளவும் ஆவி, பேய் - பிசாசுகளைப் பிடித்து அறைந்து வைத்திருப்பதுதான்!'' -ராமசாமி டார்ச் லைட் ஒளியை மரத்தின் மீது பாய்ச்சினார்.

அவர் கூறியது உண்மைதான். எட்டி மரம் பூராவும் நூற்றுக்கணக்கான ஆணிகள். சிலவற்றில் தாயத்துகளும் மற்றும் சிலவற்றில் சங்கிலிகளும் தொங்கின.

வெளி வாசல் வழியாக உள்ளே பார்த்தபோது ஒரு கல் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அதன் முன்னால் யாரோ ஒருவர் உட்கார்ந்திருந்தார்.

வெளிவாசலைக் கடந்தனர்.

''வணக்கம் சாமி!'' ராமசாமி குனிந்து வணங்கினார்.

அந்த உருவத்தைப் பார்த்தவுடன் மற்ற இருவரும் திடுக் கிட்டனர்.

எப்படிப்பட்டவரையும் பயப்படுத்தக்கூடிய ஓர் உருவம் அங்கு அமர்ந்திருந்தது.

கறுப்பான உடல். பருத்த வடிவம். நீண்ட தலைமுடி, நீண்டு வளர்ந்த தாடி - மீசை. கழுத்தில் பாம்பு ஒன்று அசைந்து கொண் டிருந்தது.

மற்றொரு பாம்பு கல்விளக்குத் தூணில் உடம்பைச் சுற்றிய படி எண்ணெய் இருந்த பகுதியில் தலையை உயர்த்தியும் தாழ்த்தியும் ஏதோ பயிற்சியில் ஈடுபட்டிருந்தது.

மந்திரவாதியின் கண்கள் வைரக்கற்கள் போல் ஜொலித்தன.

''உட்காருங்கள்!'' -மந்திரவாதி உபசரித்தார்.

மூவரும் வராந்தாவில் உட்கார்ந்தார்கள்.

''யாரெல்லாம் வந்திருக்கிறீர்கள் என்று பார்க்கட்டுமா?'' என்றவர் அந்தப் பெரிய கல்விளக்கை இடது கையால் அனாயாச மாக நகர்த்தியபடி ஒவ்வொருவர் முகத்தையும் ஊன்றி கவனித்தார்.

இதைப் பார்த்ததும் சங்கரன் நாயரது உடம்பு வியர்வை யால் நனைந்தது.

'இந்த மனிதனுக்கு எந்தவிதமான மந்திரமும் வேண்டியது இல்லை. கையால் ஓங்கி அடித்தாலே பெரும்பாலான பேய் - பிசாசுகள் அழிந்துவிடும்!' உண்ணி மேனோன் நினைத்துக் கொண்டார்.

''யாராருக்கு என்னென்ன காரியங்கள் நடக்கவேண்டும்...ம் சொல்லுங்கள்!'' மந்திரவாதி விசாரித்தார்.

''இரண்டு பேரும் ஒரே விஷயத்திற்காகத்தான் வந்திருக் கிறார்கள்.'' ராமசாமி பேச்சைத் துவக்கினார்.

''அப்படியா? அப்படியானால் அது எப்படிப்பட்ட சங்கதி என்பதைப் பார்த்துவிடலாமே!'' மந்திரவாதி எழுந்து ஓர் அறை வாசலைத் திறந்தார். ராசிப்பலகையையும், சோழிப் பையையும் வெளியே எடுத்தார்.

''சூரியன் அஸ்மித்துவிட்டால் நான் பொதுவாகப் பிரஸ்னம் பார்ப்பதில்லை...'' என்றவர் தன் கழுத்தில் கிடந்த பாம்பை எடுத்து கல்விளக்கின் மீது விட்டார். கல் விளக்கில் ஏற்கெனவே இழைந்து கொண்டிருந்த பாம்புடன் அது சேர்ந்து கொண்டது.

மாந்திரீகன் ராசிப் பலகையில் குரு ஸ்தானங்களில் கணக்குப் படி சோழிகளை வைத்தார். அதன் பிறகு கொஞ்சம் சோழிகளைக் கையில் குலுக்கியபடி சப்தம் எழுப்பாமல் மந்திரம் ஜபித்தார்.

*''மூர்த்திதே பரிகல்பத*

*பர்த்தாமர ஜோதிஷம்...*

*த்னரலோக்ய தீபோ ரலி'*

மூன்று தடவை மந்திரம் ஜபித்து நூற்றியெட்டு சோழிகளை மூன்றாகப் பங்கிட்டார். பிறகு எட்டெட்டு சோழிகளை மாற்றி வைத்தார்.

மறுபடியும் மந்திரம் ஜபித்தார்.

நிமிடங்கள் கடந்தன.

மாந்திரீகன் முகத்தில் எந்தவிதமான உணர்வும் தென்பட வில்லை.

மந்திரவாதத்தில் கைதேர்ந்தவர் ராமன் நம்பீசன். ஐம்பத் தைந்து வயதிற்குள் ஏழு திருமணம் செய்தவர். அந்த மனைவி யரில் ஒருவர்கூட இப்போது உயிருடன் இல்லை. எல்லாரும் அற்ப ஆயுளில் இறந்து போனார்கள்.

ராமன் நம்பீசனது மந்திரங்கள் பலிதமாவதற்காக, அவர்களை துர்தேவதைகளுக்கு பலியிட்டு விட்டதாகவும் ஊரில் ரகசியமாகப் பேசிக் கொள்கிறார்கள். ஆனால், அவர் முன்பாக இதைப் பேசுமளவு யாருக்கும் தைரியம் ஏற்படவில்லை. அதையும் மீறி யாராவது வாய் திறந்து பேசினால், அப்படிப் பேசுபவர்கள் ஊமை யாகி விடுவார்கள் என்று மாந்திரீகனின் ஆட்கள் கூறுகின்றனர்.

இப்படியெல்லாம் இருப்பினும் இப்போதும் அந்த மந்திர வாதியைத் தேடிப் பெண்கள் வருகின்றனர். அதுவும் அழகான பெண்கள்!

நம்பீசன் ஏதாவது ஒரு பெண்ணை விரும்பினால் அன்றிரவு அவள் படுத்துறங்குவது அவரது கம்பளி விரித்த கட்டிலில்தான்.

நம்பீசன் சட்டென்று சோழிகளின் மேற்புறம் வலது கையைக் கவிழ்த்தபடியே நீக்கினார்.

சோழிகள் சில நெட்டுக்குத்தாக நின்றன. சில அங்கும் இங்குமாக ஆடி அசைந்தன. மூவரும் இந்தக் காட்சியை மூச்சை அடக்கிக் கொண்டு வியப்புடன் பார்த்தனர்.

''இதெல்லாம் அபாரமான மந்திர ஸித்தி உள்ளவர்களால் மட்டுமே முடியும்!'' எத்தனையோ மாந்திரீகர்களைப் பார்த் திருக்கிற ராமசாமி மந்திரிப்பது போல் முணுமுணுத்தார்.

ராமன் நம்பீசன் முகத்தில் சந்தேகத்தின் சுழிகள். இன்றுவரை நடக்காத ஒரு சம்பவம். சட்டென்று அவர் எதிரே அமர்ந்திருந்த மூவரையும் மாறி மாறிப் பார்த்தார்.

''கண்டுபிடித்து விட்டீர்களா?'' உண்ணி மேனோன் கேட்டார்.

''தெளிவடையவில்லையே!'' என்றபடி மீண்டும் சோழிகளை வாரி எடுத்தார்.

''தெளிவடையவில்லையா?'' சங்கரன் நாயர் மலைத்துப் போய்க் கேட்டடர்.

பிரஸ்னத்தை மறுபடி தொடர்ந்தார்.

இப்போதும் முந்தைய பலன்தான்.

''சற்றுப் பொறுங்கள்... நான் இதோ வந்து விடுகிறேன்.'' நம்பீசன் விருட்டென்று எழுந்தார்.

கல்லாலான விளக்கை அனாயாசமாக இடது கையில் பிடித்தபடி நம்பீசன் வீட்டின் தென்புறத்திற்கு விரைந்தார்.

அங்கு அந்தக் குடும்பத்தின் மூதாதையரும், பரதேவதை களும் குடியிருந்தனர்.

எல்லாரும் உக்கிரமூர்த்திகள்.

வனதுர்கா முதல் சுடலை பகவதி வரை அங்கு இருந்தனர்.

சாமுண்டி முதல் தூமாவதியும் கூட இருந்தனர்.

அதுமட்டுமா... பெரிய பெரிய அதிகாரிகள்கூட ராமன் நம்பீசனுக்கு பயந்தனர். ஏழு பெண்கள் ராமன் நம்பீசனின் மனைவியான பின் மரணம் அடைந்தும் கூட எந்த ஒரு போலீஸ் அதிகாரியும் அவரைத் தேடி வந்து விசாரித்ததில்லை.

பரபரப்பான செய்திகளை வெளியிடும் பத்திரிகைகளோ, சமூக விமர்சகர்களோ கூட அவரைப் பற்றிக் குறிப்பிட்டதில்லை.

நம்பீசனுக்கு விரோதமாகச் செயல்பட்டால், அவர் பழிக்குப் பழி வாங்குவார்.

வீட்டின் தென்புறத்தை அடைந்த நம்பீசன் கல்விளக்கைத் தரையில் வைத்துப் பரதேவைகளை வணங்கினார். அங்கு சாத்தி வைக்கப்பட்டிருந்த நீண்டவாளை எடுத்து இடது கைப் பெரு விரலைக் கீறிச் சொட்டுச் சொட்டாக ரத்தம் வடியச் செய்தார்.

''இது போதாதா, தலையையும் வெட்டித் தரட்டுமா?''

பதில் எதுவும் கிடைக்காமற் போகவே வாளை எடுத்துப் பின்புறமாகச் சுழற்றித் தலையை நோக்கி ஓங்கினார்.

சட்டென்று வலுவான ஒரு சக்தி அந்த வாளைப் பிடித்துத் தடுத்தது. மேற்புறமாக உயர்ந்த வாள் கீழ்ப்புறமாக விசையாக இறங்கித் தரையில் குத்திட்டு நின்றது.

தனது முறையீட்டுக்குப் பலன் கிடைத்துவிட்டது என்பதை அறிந்த நம்பீசன் அங்கேயே தரையில் அமர்ந்தார்.

'அக்னி நிமித்தம்' பார்ப்பது என்று தீர்மானித்தார்.

கையைத் தட்டியபோது வேலைக்காரனைப் போல் தோற்ற மளித்த ஒருவன் ஓடி வந்தான். வந்தவன் வெற்று வெளியிலிருந்து பிறப்பெடுத்தவன் மாதிரி குதித்து வந்தான்.

''சுள்ளிகளை எடுத்துவா!'' நம்பீசன் கட்டளையிட்டார்.

வந்தவன் மறைந்தான்.

முற்றத்தில் ஹோமகுண்டம் உயர்ந்தது. சுள்ளிகள் எரிந்து, தீ ஜுவாலைகள் உயர்ந்தன.

நம்பீசன் அக்னி மந்திரம் ஜபித்தபடி கொழுந்துவிட்டு எரியும் நெருப்பைப் பார்த்தார்.

பிரஸ்னத்தில் தெளிவடையாத விஷயத்தை நிமித்தத்தில் கண்டுபிடிக்க முடியும்!

எல்லாரும் நெருப்பு ஜுவாலையை ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

''இன்னும் சுள்ளிகள் வேண்டும்.''

சுள்ளிகள் வந்தன. நெருப்பு முன்னைவிட அதிக உயரத்தில் கொழுந்துவிட்டு எரிந்தது.

வந்த மூவரும் மூச்சை அடக்கியபடி அக்னி குண்டத்து நெருப்பையே வைத்தகண் வாங்காமல் பார்த்தனர்.

நம்பீசன் முகத்தில் உணர்ச்சிகள் கொந்தளித்தன. முதலில் ஏற்பட்ட ஏமாற்றம் படிப்படியாகக் குறைந்து கொண்டே வந்தது.

அக்னி ஜுவாலையில் ஏதேதோ உருவங்கள் சில தெளி வடையத் தொடங்கின.

முதலில் நெருப்பிற்குள் அரண்மனை போன்ற ஒரு பெரிய பங்களா தெரிந்தது.

நம்பீசன் முகத்தில் திருப்தி தெரிந்தது.

உண்ணி மேனோனின் நண்பர்கள் முகத்திலும் ஆசையின் தீவிரம் பளபளத்தது.

அந்த பங்களா இந்திராபாயினுடையது.

அடுத்ததாக இந்திராபாய் வருவாள்.

அப்படியானால் இந்த முயற்சியில் வெற்றிதான்!

பங்களா மறைந்து அதற்கு பதிலாக வெள்ளைக் குதிரை பூட்டிய சாரட் ஒன்று தெரிந்தது. வண்டியிலிருந்து அதோ இறங்கு கிறாள்.... அது இந்திராபாயேதான்! சந்தேகமில்லை. சர்வாபரண பூஷிதையான இந்திராபாய்!

அக்னிக்குள் இந்திராபாயின் உருவம் நன்றாகத் தெளிவடைந்தது. படிப்படியாக அந்த முகம் நெருங்கி நெருங்கி வந்தது.

வானவில் புருவங்களின் கீழே, வெள்ளிமீன் கண்கள்.

கண்களில் கடுமையான பளபளப்பு.

இந்திராபாயின் உதடுகள் சற்று விரிந்து... அவள் ஒரு தடவை வலுவாக வாயால் எதையோ ஊதியது போல் இருந்தது. 'பும்' என்ற சத்தத்துடன் தீஜுவாலை வெளியே பாய்ந்தது. மணலை வாரி இறைத்தது போல் தீப்பொறிகள் நாற்புறமும் விசையுடன் தெறித்து விழுந்தன.

மகா மாந்திரீகனான ராமன் நம்பீசனின் முகப்பகுதி ரோமங்கள் கருகின. சட்டென்று இந்திராபாயின் உருவம் மறையவும் செய்தது.

ராமன் நம்பீசன் அருகிலிருந்த பித்தளைக் குடத்தை எடுத்து அதிலிருந்த தண்ணீர் முழுவதையும் ஹோமகுண்டத்தில் கவிழ்த்தார்.

''என்னிடமா விளையாடுகிறாய். இரு... உனக்குப் பாடம் புகட்டுகிறேன்!'' கோபாவேசத்துடன் எழுந்தவர் மீண்டும் தென் புறத்திற்கு விரைந்தார்.

தாங்கள் பார்த்துக் கொண்டிருந்தது ஒரு மோசமான கனவாக இருக்குமோ என்றுகூட மூவரும் சந்தேகப்பட்டனர்.

இதன் அர்த்தம் என்ன? எதுவாக இருந்தாலும் ஒன்று மட்டும் உறுதி. ராமன் நம்பீசனும் சாதாரணமானவரல்ல. அக்னி நிமித்தத்தில் இந்திராபாயை வரவழைக்க அவரால் முடிந்திருக்கிறதே. ஆனால், இந்திராபாயும் சாதாரணமானவள் என்று ஒதுக்க முடியாது. அக்னி ஜுவாலைக்குள் இருந்தபடியே நெருப்பை, நம்பீசன் மீது ஊதிவிட அவளால் முடிந்திருக்கிறது. அந்த நெருப்பு அவர் முகப்பகுதி ரோமங்களை கருகவும் வைத்திருக்கிறது.

ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் இல்லை என்பதுதான் உண்மை.

தென்புறத்திற்கு வந்த ராமன் நம்பீசன் தன் குலகுருவும் பூர்வ பிதாமகனுமான ருத்ரன் நம்பீசனது சமாதியை அடைந்தார்.

ஆறு தலைமுறைகளுக்கு முன்பு வாழ்ந்திருந்த ருத்ரன் நம்பீசன், ஆனமருதையை வரவழைத்துப் பெரிய பெரிய பனை மரங்களை வேருடன் பிடுங்கி எறியச் செய்தவர்!

மேகங்களின் ஊடாகப் பறந்து செல்லும் பருந்துகளை, தரையிலிருந்தபடியே மந்திரம் ஜபித்து எரித்துச் சாம்பலாக்கியவர்.

கொடிய வியாதிகளால் பாதிக்கப்பட்டு இறந்து போனவர் களைக் கூட, மந்திரப்பிரம்பால் தொட்டு நடக்க வைத்து அவர்களை சவக்குழியில் தானாகவே விழும்படி செய்தவர்.

''தாத்தா!'' ராமன் நம்பீசன் தன் தலையில் சடைபிடித்து வேர்களைப் போல் மண்டியிருந்த கைப்பிடியளவு முடியை இழுத்துப் பிடுங்கித் தரையில் எறிந்தவராக கர்ஜித்தார்.

ருத்ரன் நம்பீசனது எரிந்து போன எலும்புகளை ஒரு சொம்பிற்குள் போட்டு மூடி, அதன் மேல் சமாதி கட்டி வைத்திருந் தனர். இன்று வரை அதன் முன்னால் விளக்கேற்றுவது தடைப் பட்டது இல்லை. வாரத்திற்கு ஒரு தடவை முழுச்சேவல் ஒன்றும், ஒரு பாட்டில் சாராயத்தையும் அவருக்குப் படைப்பதும் வழக்கம்.

நூற்றாண்டுகளாக இது இடைவிடாமல் நடந்து வருகிறது. ஒரு தடவை எதிர்பாராத விதமாகத் தடை ஏற்பட்ட போது ஒரு சம்பவம் நடைபெற்றது.

எழுபத்தைந்து அடி ஆழமுள்ள கிணற்றுத் தண்ணீர் மேலெழும்பி வந்து முற்றப்பகுதியில் அடிவரை உயர்ந்து வீட்டைச் சுற்றித் தளம் அமைத்தது.

ஒரு பெரிய ஆட்டுக் கிடாவைப் பலி கொடுத்த பிறகே அந்தத் தண்ணீர் வடிந்தது.

''ம்...'' சமாதிக்குள்ளிருந்து ஒரு குரல் கேட்டது.

''உங்களுக்குத் தெரிந்திருக்குமோ!'' ராமன் நம்பீசன் கேட்டார்.

''எது?''

''அக்னி நிமித்தம் பார்த்தபோது அதில் தெரிந்த உருவம் என்மீது தீயை உமிழ்ந்து விட்டது! பாருங்கள் தாத்தா என் தாடி மீசையெல்லாம் கருகிவிட்டது!''

''ம்...''

''இதற்கு என்ன மாற்றுவழி?''

''இன்றிலிருந்து ஏழாவது நாள் பெரும் திருக்கோயிலில் திருவிழா. அருகிலேயே இருக்கிறது ஆனமருது. விடு... நான் பார்த்துக் கொள்கிறேன்.''

தாத்தா சொல்லியதன் பொருள் என்னவென்று ராமன் நம்பீசனுக்குப் புரியவில்லை. இருந்தாலும் தன்னை அவமானப் படுத்தியவளைத் தாத்தா பழிவாங்காமல் விட மாட்டார் என்று விளங்கியது.

''அருகில்தான் இருக்கிறது ஆனமருது.'' என்ற வார்த்தையில் தான் ஒளிந்திருந்தது ரகசியம்.

''ஆனமருதையின் கதையை மறுபடி நடத்தப் போகிறீர் என்பது பொருளா?''

''சொல்லிவிட்டேனல்லவா. நம்பிப் புறப்படு.''

ராமன் நம்பீசன் பதில் சொல்லாமல் புறப்பட்டார்.

வந்தவர்கள் இவருக்காகக் காத்திருந்தனர். அவர்களை நெருங்கியவுடன் ராமன் நம்பீசன் கேட்டார்: ''அவளது பங்களா விற்குப் பக்கத்தில் கோயில் உள்ளதா?''

''இருக்கிறது!'' மூவரும் ஏக காலத்தில் பதிலளித்தனர்.

''அந்தக் கோயிலில் இன்றிலிருந்து ஏழாவது நாள் திருவிழா நடக்கப் போகிறதா?''

''ஆமாம். நடுவில் சில வருடங்களாகத் திருவிழா நின்று போயிருந்தது. இந்த வருடம், திருவிழா நடத்தப் போவதாகக் கேள்விப்பட்டோம்.''

''திருவிழா வரை நீங்கள் காத்திருக்க வேண்டும்.''

மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''அப்படியானால், நாங்கள் புறப்படட்டுமா?'' உண்ணி மேனோன் கேட்டார்.

''தைரியமாகப் புறப்படலாம்.''

ராமசாமி மூன்று நூறுரூபாய் நோட்டுகளுடன் ஒரு வெள்ளி ரூபாய் நாணயத்தையும் வைத்து நம்பீசனிடம் கொடுத்தார்.

மூவரும் மாந்திரீகனை வணங்கி விடைபெற்றனர்.

திரும்பாமல் பின்னோக்கி நடந்து கதவைத் தாண்டியதும் திரும்பி நடக்கத் தொடங்கினர்.

''அவர் சொன்னால் சொன்னதுதான்!'' ராமசாமி உறுதி யளித்தார்.

மாந்திரீகன் உறுதியளித்தாலும் ஒரு விஷயம் மறுக்க முடி யாதது. அதாவது அவளும் சாமானியமானவளல்ல. நம்பீசனைப் போல் மந்திர தந்திரங்களில் தேர்ந்தவள் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை.

''இருவரும் மோதி, தங்களது பலாபலத்தைப் பார்க் கட்டுமே!'' ராமசாமி கூறினார்.

## 7

**கோ**யிலில் திருவிழாவிற்கான ஏற்பாடுகள் தொடங்கி விட்டன. ஊர்க்காரர்கள் சேர்ந்து திருவிழா நடத்துகிறார்கள். திருவிழா நடத்தும் பொறுப்பை ஏற்றிருப்பவர் கோயிலின் தற்போதைய வாரிசான வாசுதேவன் நம்பூதிரி. அவர் அமெரிக்கா விலிருந்து வந்திருக்கிறார். கோயிலை ஒட்டியுள்ள தனது

நிலப்பகுதிகளை இந்திராபாய்க்கு விற்று விட்டதற்கு ஈடுசெய்யும் முகமாகவே நம்பூதிரி இந்தத் திருவிழாவை ஈடுபாட்டுடன் நடத்த முன் வந்திருக்கிறார்.

திருவிழாவிற்கு நம்பூதிரி பதினைந்தாயிரம் ரூபாய் நன் கொடை வழங்கியிருந்தார். ஏறத்தாழ இருபதாயிரம் ரூபாய்வரை வசூலாகியிருந்தது.

திருவிழாவில் ஆறு நாட்களிலும் விதிவிதமான நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

திருவிழாவின்போது குறைந்தது இரவு பத்துமணி வரையில் கூட்டம் இருந்து கொண்டே இருக்கும். கோயில், நகரத்தின் ஒரு மூலையிலிருப்பதால், எவ்வளவு ஜனக்கூட்டத்தையும் கோயில் தாங்கும். கதகளி மற்றும் புராதன கலைகள் தொடர்பான பல நிகழ்ச்சிகள் இடம் பெறுவதால், பல்வேறு வயதினரும் சதா இருந்து கொண்டே இருப்பார்கள்.

ஏழாவது நாளன்று உற்சவருக்கு நீராட்டு விழா நடைபெறும்.

அன்று ஏழு யானைகள் விழாவில் கலந்து கொள்ளும். பழங்காலத்தில் அதாவது ஐம்பத்தியெட்டு வருடங்களுக்கு முன்பு வரையில் இந்தக் கோயிலைச் சேர்ந்த பிரமாண்டமான கோயில் யானைதான் உற்சவரைச் சுமந்து செல்லும். பெரிசுகளுக்கு இதெல்லாம் நன்றாகத் தெரியும்.

நீராட்டு நிகழ்ச்சிக்கு முன்பாகத் திருவல்லிக்கேணி சிதம்பரம் பிள்ளையின் சங்கீதக் கச்சேரியும் ஏற்பாடாகியிருந்தது. சங்கீதக் கலைஞர்களில் சிதம்பரம் பிள்ளை மிகவும் பிரபலமானவர்.

அந்த ஏழாவது நாள் திருவிழா சீக்கிரம் வராதா என்று உண்ணி மேனோனும் அவர் நண்பர்களும் காத்திருந்தனர்.

நம்பீசனின் வேலையாள் ஒருத்தன் சங்கரன் நாயரது வீட்டைத் தேடி வந்தான். மிக முக்கியமான ஒரு விஷயத்தைச் சொல்லிவிட்டுப் போக வந்திருந்தான்.

சங்கரன் நாயர் உடனடியாக மற்ற இரு நண்பர்களையும் வரவழைத்தார்.

வந்தவன் மூவரிடமும் விவரம் கூறினான்.

''நாளைய நீராட்டு விழாவில் கேசவன் என்கிற யானை உற்சவரைத் தாங்கி நிற்கப் போகிறது. அது ஏழு பேரை மிதித்துக் கொன்ற முரட்டுயானை. அதன்மீது உற்சவமூர்த்தியை ஏற்றக் கூடாது என்று நீங்கள் வற்புறுத்த வேண்டும். அது மட்டும் சாத்திய மானால் நமது திட்டம் நிறைவேறிவிடும். அதுமட்டுமல்ல... கேசவன் என்கிற யானையை ஏதாவது ஓர் ஓரமாக நிற்க வைக்கும்படிச் சொல்லுங்கள்.''

வந்தவன் சொன்னதன் பொருள் அவர்களுக்கு விளங்க வில்லை. இருந்தாலும் ராமன் நம்பீசன் காரணம் இல்லாமல் சொல்லியனுப்பியிருக்க மாட்டார் என்கிற நம்பிக்கை அவர் களிடம் இருந்தது.

உடனே மூவரும் கோயிலுக்குச் சென்றனர். நகரின் முக்கியப் பிரமுகரான ஸ்ரீகண்டன் பிள்ளைதான் திருவிழா கமிட்டியின் காரியதரிசி.

அவரை சந்தித்து அபாயகரமான கேசவன் என்கிற யானையைப் பற்றிக் கூறினர்.

செய்தியைக் கேட்டதும் ஸ்ரீகண்டன் பிள்ளை தக்க சமயத்தில் வந்து ஆலோசனை கூறியதற்காக அவர்களைப் பாராட்டி, நன்றி தெரிவித்தார். கடைசியில் மூவரும் திருவிழா விற்கு நன்கொடை யாக ஆயிரத்து ஒரு ரூபாயை வழங்கினர்.

ஏழாவது நாளன்று இரவு.

ஏழு யானைகளையும் ஒருசேர நிறுத்தி வைத்திருந்தனர். மாற்று ஏற்பாடாக மற்றொரு யானை மீது உற்சவரைப் பீடத்தில் ஏற்றியிருந்தனர். அந்த யானை விறைப்புடன் கம்பீரமாக நின்றிருந்தது. எல்லா யானைகளின் நெற்றியிலும் பளபளப் பான பித்தளைக்குமிழ் பதித்த முகபடாம் அணிவிக்கப்பட்டிருந்தது. ஓர் ஓரமாக நிறுத்தப்பட்டிருந்த கேசவன் யானையும் தலையை உயர்த்திக் கம்பீரமாக வாலையும், தும்பிக்கையையும் ஆட்டிக் கொண்டிருந்தது.

எதனால் கேசவன் என்கிற உயரமான யானை மீது உற்சவரை ஏற்றாமல், வேறொரு யானையின் மீது எழுந்தருளச் செய்திருக்கிறார்கள் என்பது பார்வையாளர்கள் சிலருக்குப் புரியவில்லை. காரணத்தை அருகிலிருந்தவர்களிடம் விசாரித்தனர்.

கேசவனது இரு கால்களையும் கனமான சங்கிலியால் சற்றுத் தளர்வாகக் காலெடுத்து நடக்கும் விதமாகப் பிணைத்து இருந்தனர்.

அந்த யானை எப்படிப்பட்ட முரட்டுத்தனம் கொண்டிருந்தாலும் இதுவரை எந்தத் திருவிழாவிலும் பிரச்சினை ஏற்படுத்தியதே இல்லை என்பதைப் பலரும் எடுத்துக் கூறினர். ஆனால், அதை யாரும் காதில் வாங்கியதாகவே காட்டிக் கொள்ளவில்லை.

மேடையில் சிதம்பரம் பிள்ளையின் சங்கீதக் கச்சேரி நடைபெற்றுக் கொண்டிருந்தது.

திருவிழாவில் கூட்டமான கூட்டம்.

இரவு மணி பதினொன்றைத் தாண்டி விட்டது.

இது திருவிழாவின் இறுதிக் கட்டம்.

யானைகள் தங்கள் இயல்புப்படி மெதுவாக உடலை அசைத்தபடி நின்றிருந்தன.

சிறு சிறு தீக்கங்குகளை யாரோ வீசி எறிந்தது போல் தோன்றியது. அதே நேரத்தில் காற்று பலமாக வீசியது. சற்றுக் கனமான தீக்கங்கு ஒன்று கேசவனது தும்பிக்கையின் மீதும் விழுந்தது. அவ்வளவுதான் கேசவனுக்கு மதம் பிடித்தது போல் ஆகிவிட்டது.

கேசவன் முன்னங்கால்களை ஒரு தடவை உதறியது. சங்கிலிகள் கலகலத்தன. கையில் அங்குசத்துடன் நின்றிருந்த யானைப்பாகன் இடது புறமாகத் திரும்பி சங்கிலிகளை ஒரு தடவை பார்த்தான்.

யானை வெறுமனே காலை அசைத்திருக்கும் என்றுதான் பாகன் நினைத்தான். முதல்பாகன் யானைமீது அமர்ந்திருந்தான்.

பையன் ஒருவன் கோயில் குடையைப் பிடித்தபடி யானையின் மீது நின்றிருந்தான்.

யானை மீண்டும் ஒரு தடவை கால்களை உதறியது. யானைமேல் உட்கார்ந்திருந்தவர்கள் ஒரு முறை குலுங்கினர். இம்முறை யானை மீதிருந்த முதல் பாகனுக்கு ஏதோ சந்தேகம் தோன்றியது. பையனிடம் கீழே குதிக்குமாறு சொல்லிவிட்டு சட்டென்று அவரும் குதித்தார். வார்த்தை அரையும் குறையுமாகக் காதில் விழுந்ததும் குடை வைத்திருந்தவன் குடையுடன் தரையில் குதித்தான்.

யானை ஒரு முறை வலுவுடன் தனது உடலைச் சிலிர்த்தது. இரண்டாம் பாகன் அங்குசத்தைப் பதித்து யானையின் மர்ம ஸ்தானத்தை அழுத்தினார். யானை மீண்டும் வலுவுடன் தன் உடம்பைச்சிலிர்த்தது. இம்முறை, இரண்டாம் பாகனால் யானையைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்ள முடிய வில்லை. தும்பிக் கையை மேற்புறமாக உயர்த்தி யானை உரத்த குரலில் பிளிறியது.

அந்தப் பிளிறல் எட்டுத் திசைகளையும் அதிரச் செய்தது. மற்ற யானைப்பாகன்கள் தயாராக நின்றனர். யானையிடமிருந்து பிரிந்து விழுந்த இரண்டாம்பாகன் அங்குசத்துடன் யானையின் அருகே சென்றான். ஆனால், யானை மிகவும் சுலபமாக அந்த அங்குசத்தைப் பிடுங்கிக் காலில் போட்டு மிதித்து உடைத்தது.

அத்துடன் காட்சி விபரீதமானது.

ஆட்கள் நாலாபுறங்களிலும் சிதறி ஓடத் தொடங்கினர்.

கேசவன் முன்புறமாக நடக்கத் தொடங்கியது. உறுதியான அதன் நடையை கவனித்தவர்களது பயம் அதிகரித்தது. சிலர் யானையைப் பின்தொடர்ந்து போதிய இடைவெளியுடன் நடந்தனர்.,

யானை சென்று நின்ற இடம் இந்திராபாயின் பங்களா வாசல்தான்!

யானை தும்பிக்கையால் கேட்டைப் பிடித்துக் கண்டபடி குலுக்கியது. பிறகு ஓங்கி ஒரு மிதி. இரும்புக் கதவு உடைந்து தரையில் விழுந்தது.

யானை தனது கால்களை முன்புறமாக வைத்து பங்களாவை நோக்கி முன்னேறியது.

கோயில் திருவிழாவிற்கு வந்தவர்கள் அனைவரும் அந்த பங்களாவின் முன்னால் கூடினர். கேசவன் அந்த பங்களாவின் நிலைவாசலை நெருங்கியதும், வேடிக்கை பார்த்தவர்களுக்கும் தைரியம் தோன்றியது.

யானை அந்த பங்களாவை இடித்துத் தரைமட்டமாக்கப் போகிறது. அப்படியொன்று நடப்பதாக இருந்தால் அதையும் வேடிக்கை பார்க்கலாமே என்பது ஜனங்களின் எண்ணம்.

கோயிலின் தர்மகர்த்தாவான வாசுதேவன் நம்பூதிரி உடனடி யாக போலீஸ் கண்ட்ரோல் அறைக்குச் செய்தி தெரிவித்தார்.

சற்று நேரத்திற்குள் ஒரு வண்டி நிறைய துப்பாக்கி ஏந்திய போலீஸ்காரர்கள் வந்தனர்.

யானை பங்களாவை நெருங்க... துப்பாக்கியைக் குறி பார்த்த படி போலீஸ்காரர்கள் யானையைப் பின்புறமாக நெருங்கினர்.

அந்த பங்களாவின் சுற்றுப் பகுதி முழுவதும் ஒளியால் நிறைந்திருந்தது. குறிப்பிட்ட இடைவெளிகளுடன் பொருத்தப் பட்டிருந்த நியான் பல்புகளின் வெளிச்சம் அந்தப் பகுதியையே ஒரு கனவுலகமாக மாற்றியிருந்தது.

வாசலை நெருங்கிய யானை பிரமாண்டமாகப் பிளிறியபடி தும்பிக்கையை உயர்த்தியது.

இந்திராபாய் பங்களாவின் மேற்புற பால்கனியில் வந்து நின்றாள். கீழே யானையைப் பார்த்தாள்.

யானை தும்பிக்கையை உயர்த்தியபடி நின்றிருந்தது.

யானையின் நோக்கத்தைப் புரிந்து கொண்டவளைப் போல் ஓரிரு விநாடிகள் யோசித்த இந்திராபாய் மாடிப்படி இறங்கி வாசற் கதவைத் திறந்தாள்.

இப்போது யானைக்கும் இந்திராபாய்க்கும் நடுவிலிருந்த தூரம் ஏறத்தாழ முப்பது மீட்டர்.

''தயவு செய்து வீட்டுக்குள் போங்கள். யானை உங்களை மிதித்துவிடப் போகிறது!'' போலீஸ் அதிகாரி ஒருவர் குரல் கொடுத்தார்.

யானையும் அவரது வார்த்தைகளைப் புரிந்து கொண்டது போல் அருகிலிருந்த ஒரு விளக்குக் கம்பத்தைப் பிடுங்கியது. விளக்கின் மின்சாரம் துண்டிக்கப்பட்டு அது வெறும் விளக்குக் கம்பமானது. அந்தக் கம்பத்துடன் யானை இந்திராபாயின் பக்கம் திரும்பியது.

இன்ஸ்பெக்டர் ஜகதீஷ் யானையைச் சுட்டுத் தள்ள உத்தரவு கொடுத்தார்.

''சுடாதீர்கள்!'' இந்திராபாய் குரல் கொடுத்தாள்.

நூற்றுக்கணக்கான மனிதர்கள் பரபரப்புடன் வேடிக்கை பார்த்தனர். கண்ணிமைக்காமல் தும்பிக்கையில் இருந்த விளக்குக் கம்பத்தை யானை இந்திராபாயின் மீது வீசி எறிந்தது.

ஆனால், என்ன காரணத்தாலோ அந்த விளக்குக் கம்பம் முன்புறமாகப் பாயாமல் மேற்புறமாக உயர்ந்து யானையின் முதுகிலேயே விழுந்தது.

வேதனையால் துடித்த யானை உடனே மற்றொரு விளக்குக் கம்பத்தைப் பிடுங்கியது.

''ஷூட் இட்!'' இன்ஸ்பெக்டர் ஜகதீஷ் குரல் கொடுத்தார்.

''யானையைச் சுடக்கூடாது!'' இந்திராபாய் அவரைவிட உரத்த குரலில் கூறினாள்.

யானை அவளை நெருங்கியது.

தன் தலையில் சூடியிருந்த மல்லிகைச் சரத்திலிருந்து ஒரு பூவைப் பிய்த்து எடுத்த இந்திரா அதை யானையின் முன்னால் போட்டாள்.

யானையின் நெற்றியைச் சரியாகத் தாக்கியது அந்தப் பூ.

யானை ஓர் அலறலுடன் முன்னங்கால்களை மடக்கிக் குனிந்து விளக்குக் கம்பத்தை மெதுவாகத் தரையில் வைத்தது.

யானையை நெருங்கிய இந்திராபாய் அதன் தும்பிக்கையை மெதுவாகத் தட்டினாள். பிறகு எழுந்திருக்குமாறு சைகை செய்தாள். நல்லபிள்ளையாக யானை எழுந்து நிமிர்ந்தது.

''யானைப் பாகன் எங்கே?'' இந்திராபாய் கேட்டாள்.

''இதோ இங்கே இருக்கிறேன்.!'' என்றவாறு கூட்டத்தை விலக்கிக்கொண்டு பரமு முன்னே வந்தான்.

''உங்கள் யானையை நீங்கள் கொண்டு செல்லலாம். இனி மேல் பயப்பட எதுவுமில்லை.'' தன் நெற்றியில் இருந்து சந்தனப் பொட்டின் ஒரு பகுதியை எடுத்து யானையின் மீது வீசினாள்.

உடனே யானை தலையைத் தாழ்த்தி, குனிந்தது. இந்திராபாய் அதன் நெற்றியில் சந்தனம் தேய்த்தாள்.

''ம்... கொண்டு செல்லுங்கள்.''

அத்தனை ஜனங்களும் திறந்த வாய் மூடாமல் பார்த்துக் கொண்டிருக்க, யானை தாயின் பின்னால் நடக்கும் ஒரு கைக்குழந்தை மாதிரி அவளைப் பின்தொடர்ந்தது.

கேட் வரை வந்த யானையிடம், வெளியே போகுமாறு சைகை காட்டினாள்.

திருவிழாவின்போது நிற்க வைத்த இடத்தை அடைந்த யானை எதுவும் நடக்காதது போல் பழையபடி நின்று கொண்டது.

சப் இன்ஸ்பெக்டர் ஜகதீஷ், இந்திராபாயின் அருகில் சென்றார்.

''மிஸ்டர் ஜகதீஷ் சௌக்கியமாக இருக்கிறீர்களா?'' இந்திரா பாய் விசாரித்தாள்.

''சௌக்கியம்தான்'' பணிவுடன் பதிலளித்தார்.

''அந்த யானையின் முதுகில் உற்சவமூர்த்தியை ஏற்றாத கோபமாக இருக்கலாம். அந்தக் கோபத்தை இப்படித் தீர்த்துக் கொண்டிருக்கலாம்...'' இந்திராபாய் கூறினாள்.

ஜகதீஷுக்கு அதன் பொருள் விளங்கவில்லை.

''அப்படியானால், நாங்கள் விடை பெற்றுக் கொள்கிறோம்.''

''இரவு நெடு நேரமாகிவிட்டது. பரவாயில்லை... சூடாக ஏதாவது சாப்பிடுகிறீர்களா?''

''வேண்டாம். தாங்க்ஸ்!''

''அப்படியானால் நீங்கள் கிளம்பலாம்.''

''ஏதாவது உதவி தேவைப்பட்டால்... நீங்கள் என்னை அணுகலாம்.''

''கண்டிப்பாக! ஏன்! நாளைக்கே நீங்கள் ஒரு காண்டிராக்டரை அனுப்புங்களேன். இதையெல்லாம் சரி செய்வதற்கு.''

''அப்படியே செய்கிறேன். வரட்டுமா?''

எல்லாரும் புறப்பட்டனர்.

இந்திராபாய் வீட்டிற்குள் போனாள்.

உண்ணி மேனோனும், சங்கரன் நாயரும், ராமசாமியும் ஒரு அம்பாசிடர் காருக்குள் அமர்ந்து சாலையின் எதிர்ப்புறத்தில் காத்திருந்தனர்.

யானை பவ்யமாகக் 'கேட்'டைத் தாண்டி வெளியேறியதைப் பார்த்ததும் திகைப்பும், ஏமாற்றமும் அவர்களை ஒரு சேரத் தாக்கியது.

''இங்கு நடந்திருப்பது ஒரு போராட்டம்!'' உண்ணி மேனோன் கூறினார்.

''உண்மைதான். உண்மையில் போராடியவர்கள் ராமன் நம்பீசனும், இந்திராபாயும்!'' சங்கரன் நாயர் விளக்கினார்.

''இருவரும் தேர்ந்தவர்கள்தான்!'' ராமசாமி சிலாகிப்பது போல் பேசினார்.

''நம்பீசன் இன்னும் சற்று முயற்சி செய்தால் விஷயம் சுலபம் என்று தோன்றுகிறது.''

மறுநாள் ஊர் முழுவதும் இதைப் பற்றியே பேசியது. ஒவ் வொருவரும் அந்த சம்பவத்திற்குக் கண், காது, மூக்கு என்று

ஒவ்வொன்றாக ஒட்ட வைத்தனர். ஆனால், இதற்கெல்லாம் அடிப்படை என்ன என்பது அவர்கள் யாருக்கும் புரியவில்லை.

இன்ஸ்பெக்டர் ஜகதீஷ் சொல்லி அனுப்பிய புதிய காண்ட்ராக்டர் காலையில் சுமார் பத்துமணியளவில் பங்களாவிற்கு வந்தார். எளிமையான அவர் ஒரு சைக்கிளில் வந்து இறங்கினார். சற்றுக் குள்ளமான, பருமனான மனிதர்.

காலிங்பெல் ஒலித்தபோது இந்திராபாய் கதவைத் திறந்தாள்.

''சப் இன்ஸ்பெக்டர் சொல்லியனுப்பினார்.'' வந்தவர் தெரிவித்தார்.

''வாருங்கள். உள்ளே வந்து உட்காருங்கள்.'' இந்திரா வரவேற்றாள்.

''உங்கள் பெயர்?''

''சந்திரசேகரன். ஒரு சிறிய காண்டிராக்டர். அச்சுதன் பிள்ளை மாதிரிப் பெரிய ஆளில்லை.''

''அதற்கென்ன? பெரிய ஆள், சின்ன ஆள் என்பதை எல்லாம் கெட்டிக்காரத்தனத்தை வைத்துத்தானே எடை போட வேண்டும்!''

சிறிய சிறிய கட்டட வேலைகளை காண்டிராக்ட் எடுத்து நடத்துபவர் இந்தச் சந்திரசேகரன் பிள்ளை. உழைத்து முன்னுக்கு வருகிறார். ஆரம்பத்தில் கொத்தனாராக வாழ்க் கையைத் தொடங்கிப் படிப்படியாக முன்னேறி வந்திருப்பவர்.

''முதலில் அந்த இரும்பு 'கேட்'டைச் சீர்ப்படுத்த வேண்டும். பிறகு விழுந்து கிடக்கும் விளக்குக் க்ம்பங்களைப் பழையபடி பொருத்த வேண்டும். அது முடிந்த பிறகு வேறு சில வேலை களும் உண்டு. உட்காருங்கள் வந்து விடுகிறேன்.'' இந்திராபாய் பேசியபடி மாடிப்படியேறினாள்.

அறையில் உட்கார்ந்த சந்திரசேகரன் அந்த அறையின் அலங்காரத்தை வியப்புடன் பார்த்தார்.

இந்திராபாய் திரும்பி வந்தாள்.

நூறு ரூபாய் நோட்டுக்கட்டு ஒன்றை சந்திரசேகரிடம் கொடுத்தபடி கூறினாள்:

"இந்தாருங்கள், இதை வைத்துக் கொள்ளுங்கள். இதில் பத்தாயிரம் ரூபாய் இருக்கிறது. நாளைக்கே வேலையைத் தொடங்குங்கள்."

சந்திரசேகரன் பணத்தைப் பெற்றுக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டார்.

## 8

**உ**ண்ணி மேனோனும் நண்பர்களும் ராமன் நம்பீசனை காணச் சென்றனர்.

"நினைத்த காரியம் நினைத்தபடி நடக்கவில்லை... இல்லையா?" நம்பீசன் வந்தவர்களைப் பார்த்துக் கேட்டார்.

"ஆமாம்."

"நான் அப்போதே விஷயத்தை அறிந்து கொண்டேன். கோபத்தைத் தீர்த்துக் கொள்ள, நான் அனுப்பிய ஆள் வந்தது நேராக என்னிடம்தான். அங்கே பாருங்கள்..." என்ற நம்பீசன் கையால் சுட்டிக்காட்டினார்.

அங்கே-

ராமன் நம்பீசன் சுட்டிக் காட்டிய திசையில் பார்த்தனர். மிகவும் பயங்கரமான காட்சியொன்று அவர்கள் கண்களுக்குத் தெரிந்தன.

அந்த நிலத்தின் கன்னி மூலையில் நின்றிருந்த குலை ஒன்றுக்கு தொண்ணூறு காய்களுக்குக் குறையாமல் இரண்டு குலைகளைத் தாங்கியிருந்த மிகப் பெரிய தென்னை மரம் ஒன்று வேரோடு பெயர்ந்து சாய்ந்து கிடந்தது. அது மட்டுமின்றி, ஆலையில் போட்டு நசுக்குகிறது போல் தென்னை மரம் சிதைந்தும் கிடந்தது.

''என்ன இது? இது எப்படி நடந்தது?'' உண்ணி மேனோன் கேட்டார்.

''நான் இங்கிருந்து ஏவிவிட்ட ஆனைமருதை, செம்பன் கொச்சு கேசவனது உடம்பில் புகுந்து கொண்டது. அதன் காலில் கட்டியிருந்த சங்கிலிகள் உடைபட்டன. அதன் பிறகு நேராக யானை போனது அந்த பங்களாவிற்குத்தான். என்ன நான் சொல்வது சரிதானே?'' ராமன் நம்பீசன் கேட்டார்.

''ஆமாம் நீங்கள் சொன்னதெல்லாம் உண்மைதான்!'' சங்கரன் நாயர் பதிலளித்தார்.

''ஆனால், அங்குதான் ஒரு சிக்கல். ஆனைமருதையைத் திருப்பிவிட ஒரு சக்தியை இந்திராபாய் ஏவியிருக்கிறாள். எனவே, கொச்சு கேசவனது உடம்பிலிருந்து பிரிந்து வந்த ஆனைமருது, அங்கு செய்யவேண்டிய காரியத்தை இங்கே வந்து செய்திருக்கிறது, அவ்வளவுதான்.''

''அப்படியானால், நீங்கள் ஏவிவிட்ட ஆனைமருதையை எதிர்த்துத் திருப்பி அனுப்பும் சக்தி இந்திராபாய்க்கு இருக்கிறது என்கிறீர்கள், இல்லையா?'' உண்ணி மேனோன் வியப்புடன் கேட்டார்.

''அப்படித்தான் நினைக்க வேண்டி உள்ளது. ஆனால்?'' ராமன் நம்பீசன் சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்தார். பிறகு எழுந்து தென்புறத்திற்கு விரைந்தார்.

திரும்பி வரும்போது அவரது கையில் உருண்டையான கல் ஒன்று இருந்தது.

''பார்த்தீர்களா இந்தக் கல்லில் நான் ஒரு ரக்ஷஸை ஆவாகித்து வைத்திருக்கிறேன். அதாவது ஒரு ரத்த ரக்ஷஸை!'' சொல்லிய படியே இடது கையால் அந்தக் கல்லை ஒரு எலுமிச்சம் பழத்தைப் பிழிவது போல் பிழிந்தார்!

வேடிக்கை பார்த்த மூவரும் வியப்பால் விழிகளை அகல விரித்தனர். கல்லிலிருந்து கெட்டியான ரத்தம் வடிந்தது.

அதன்பிறகு அவர் அந்தப் பாறைத் துண்டை ஒரு கரும்புச் சக்கையைப் போல் தூக்கி எறிந்தார். முற்றத்தில் விழுந்த கல் உருளாமல் போட்ட இடத்தில் போட்டபடியே கிடந்தது.

இந்தக் காட்சியைக் கண்ட பிறகு தாங்கள் அணுகியிருக்கும் மாந்திரீகர் அப்படியொன்றும் சாதாரண மனிதரல்ல என்று மூவருக்குமே உறுதியானது.

'கெட்டிக்காரர்தான்!' அவர்கள் மனம் மந்திரித்தது.

''எப்படி இருந்தாலும் அந்தப் பெண்மணி சாமானிய மானவள் அல்ல என்பது தெரிகிறது. மகத்தான மந்திரங்களைத் தெரிந்து வைத்திருப்பவள். அதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். ஆனால், எனது மந்திர சக்திக்கு முன்பாக அவளால் எவ்வளவு நாள் தாக்குப் பிடிக்க முடியும் என்பதைப் பொறுத் திருந்துதான் பார்க்க வேண்டும்.'' ராமன் நம்பீசன் தன்னம்பிக் கையுடன் பேசினார்.

''ஒரு நல்ல சந்தர்ப்பம் வீணாகி விட்டதே!'' சங்கரன் நாயர் ஆதங்கப்பட்டார்.

''உண்மைதான். அதை நானும் ஒப்புக் கொள்கிறேன்.'' நம்பீசன் பதிலளித்தார்.

''சரி, மேற்கொண்டு நாங்கள் என்ன செய்யவேண்டும் என்று சொல்லுங்கள்'' உண்ணி மேனோன் கேட்டார்.

''சொல்கிறேன். முதலில் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது அவளது பிறப்பைப் பற்றித்தான்...'' -நம்பீசன் கூறினார்.

''அதைத் தெரிந்துகொள்ள ஒருவழி சொல்லித் தந்தால் நல்லது.'' -சங்கரன் நாயர் விண்ணப்பித்தார்.

''அது ஒரு சாதாரண காரியம்தான். அந்த பங்களாவை எங்கிருந்து பிரித்து எடுத்துவந்து அங்கே மறுபடி கட்டி இருக் கிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்டு வந்து சொல்லுங்கள்.''

''அப்படியே செய்கிறோம்!'' என்று கூறி மூவரும் விடை பெற்றனர்.

போகும் வழியில் அவர்கள் யோசித்தனர். ‘இதுவரை நமக்குத் தோன்றாத ஒரு புது யோசனை அது. அந்த பங்களா அங்கு எழும்பியபோது யாருக்கும் இப்படியொரு சந்தேகமே தோன்றவில்லையே! எப்படி இருந்தாலும் அது புதியதாகக் கட்டப்பட்ட பங்களா அல்ல. அதில் பயன்படுத்தப்பட்டுள்ள பொருள்கள் வேறு எங்கிருந்தோதான் வந்திருக்க வேண்டும்.’

‘‘அதைத் தெரிந்துகொள்ள நமக்கு இருந்த ஒரே வழி அச்சுதன் பிள்ளைதான். அவர்தான் போய்விட்டாரே. இனி என்ன செய்வது?’’ -மேனோன் சந்தேகம் எழுப்பினார்.

‘‘அச்சுதன் பிள்ளையைத் தவிர வேறு யாருக்கும் அந்தக் கட்டடத்தைப் பற்றிய உண்மை தெரியாதென்று இந்திராபாய்க்கும் தெரியும்.’’

‘‘அந்த பங்களாவைக் கட்டும்போது அதில் வேலை செய்த யாரையாவது பிடித்தால் கூடப் போதும். அதற்கு என்ன வழி?’’ -ராமசாமி கேட்டார்.

கடைசியில் அவர்கள் ஒரு வழி கண்டுபிடித்தனர்.

அந்த பங்களாவில் தச்சுவேலை செய்த ஒரு தச்சரைக் கண்டுபிடிக்க வேண்டும். அவ்வளவு பெரிய பங்களாவிற்காக எத்தனையோ தச்சர்கள் இரவு-பகலாக வேலை செய்திருப் பார்கள். பழைய நிலைவாசல், ஜன்னல், கதவு போன்றவற்றை எங்கிருந்து பெயர்த்தெடுத்து வந்திருந்தாலும் அதையும் அவர்கள்தான் செய்திருக்க வேண்டும்.

அண்டை அயல் பகுதிகளிலுள்ள தச்சர்களை விசாரித்தால் காரியம் சுலபம். உடனே அதை விசாரித்து வர ஆளனுப்பவும் செய்தார்கள்.

தச்சுவேலைக்குப் பொறுப்பேற்றுச் செய்த மேஸ்திரியை ஒரு வழியாகக் கண்டுபிடித்தனர். அவர் பெயர் பரமேஸ்வரன்.

உண்ணி மேனோன் அவரை சங்கரன் நாயரது வீட்டிற்கு அழைத்து வந்தார்.

பரமேஸ்வரன், அறுபதை நெருங்கியவர். கெட்டிக்காரத் தொழிலாளி. நரைத்த தலை. சற்றுக் குள்ள உருவம். இடுப்பில் வேட்டி, தோளில் ஒரு துண்டு. இதுதான் அவரது மொத்த உடை.

''உட்காருங்கள்!'' - சங்கரன் நாயர் தச்சு மேஸ்திரியை வரவேற்று உபசரித்தார்.

''பரவாயில்லை. நான் இங்கேயே நின்று கொள்கிறேன்.'' பெரியவர் ஓரமாக ஒதுங்கி நின்றார்.

''நின்றபடியே எல்லாவற்றையும் பேசமுடியாது. பெரிய வரே, உங்களிடம் நிறையப் பேச வேண்டி உள்ளது. முதலில் உட்காருங்கள்.'' நாயர் வற்புறுத்தினார்.

பரமேஸ்வரன் சோபாவின் ஒரு விளிம்பில் உட்கார்ந்தார்.

''என்ன சாப்பிடுகிறீர்கள்?'' நாயர் கேட்டார்.

''என்னவானாலும் சரி...'' பரமேஸ்வரன் கூறினார்.

''கொஞ்சம் வலுவானதாக இருக்கலாம் இல்லையா?''

பரமேஸ்வரன் சிரித்தார்.

சங்கரன் நாயர் உட்புறமாகத் திரும்பி மனைவியை அழைத்தார்.

அந்த அழைப்பின் பொருள் அவளுக்குத் தெரியும்.

அவள் ஒரு பெரிய கிளாஸில் பாதியளவு ரம்மும், மற்றொரு கிளாஸில் தண்ணீரும் எடுத்து வந்தாள்.

பரமேஸ்வரன் இரண்டு கிளாஸ்களையும் வாங்கி வைத்தார்.

மற்றவர்கள் நினைத்தது போல் நடக்கவில்லை. தண்ணீர் கலக்காமல் முழு ரம்மையும் ஒரே மூச்சில் உள்ளே இறக்கியவர் ஒருவாய் தண்ணீரையும் குடித்தார்.

உதடுகளைத் துடைத்தபடி எழுந்தவர் கிளாஸில் மீதமிருந்த தண்ணீரைத் தொட்டியிலிருந்த செடியில் ஊற்றி விட்டுத் திரும்பி வந்தார்.

இதை வேடிக்கை பார்த்த மூன்று ஆண்களுடன், சங்கரன் நாயரின் மனைவியும் மூக்கின்மேல் விரலை வைத்து வியந்தனர்.

பரமேஸ்வரன் திரும்பி வந்ததும் நாயர் கேட்டார். ''இன்னும் கொஞ்சம் தரட்டுமா?''

''வேண்டாம்... இதுவே போதும்!'' என்ற பரமேஸ்வரன் மடியிலிருந்து ஒரு வாய் புகையிலை எடுத்து, மூன்று விரல்களால் அதை அழுத்தி நெரித்து ஓர் உருண்டையாக்கி கடைவாய்ப் பல்லிடையில் செருகினார்.

''உங்களைப் பாராட்டுவதற்காகவே வரவழைத்தோம். இதுவரை நாங்கள் தேடிக் கொண்டிருந்தவர் நீங்கள்தான் என்பதே தெரியாமலிருந்தது.'' உண்ணி மேனோன் பேச்சைத் தொடங்கினார்.

பரமேஸ்வரன் விவரம் புரியாமல் திகைத்தார்.

''அந்த பங்களாவில் நீங்கள் செய்திருக்கிற வேலையைப் பற்றித்தான் சொல்கிறார்.'' ராமசாமி எடுத்துக் கொடுத்தார்.

''அதைச் சொல்கிறீர்களா? அதில் என்னுடைய பங்கு அதிகமில்லையே...'' - அவர் சாதாரணமாகப் பேசினார்: ''இருந்ததை அப்படியே பெயர்த்தெடுத்து, இருந்த மாதிரியே பொருத்திக் கொடுத்தேன் அவ்வளவுதான்.''

மூன்று பேருக்கும் உற்சாகம் தோன்றியது. ''நாங்கள் தெரிந்து கொள்ள விரும்பிய காரியம் மிகவும் சுலபமாகி விட்டது.''

''ஆமாம்... ஏற்கெனவே கட்டியிருந்த ஒரு பங்களாவின் பொருள்கள்தான் அது. அதை அப்படியே பிரித்தெடுத்து அலுங்காமல் நலுங்காமல் மறுபடி பொருத்தினோம்.''

''ஆமாம் அந்தப் பழைய பங்களா எந்த இடத்தில் இருந்தது?'' மேனோன் விசாரித்தார்.

''அங்கு அரண்மனை மாதிரியான பங்களாக்கள் நிறைய உள்ளதே.''

''அதற்கும் இதற்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது. நிலம்பூரிலிருந்து பதினைந்து கிலோ மீட்டர் தள்ளி தனியாக இருந்த பங்களா அது.''

''அதற்கு சொந்தக்காரர்கள் இருந்திருப்பார்களே?''

''அது எனக்குத் தெரியாது. அச்சுதன் பிள்ளைதான் எங்களை அங்கு அழைத்துக் கொண்டு போனர். வேலைக்கு ஒப்பந்தமும் செய்தார்.''

''அப்படியானால், அந்த இடத்தில் இன்னும் ஏதாவது மிச்சம் மீதி இருக்க வேண்டுமே?''

''வெறும் தரைப்பகுதியில் பழைய அடையாளம் மட்டும் இருக்கும்.''

''எங்களுடன் அந்த இடம் .வரையில் உங்களால் வர முடியுமா?'' - உண்ணி மேனோன் கேட்டார்.

''அதற்கென்ன... தாராளமாக! உங்களை மாதிரி இருப்ப வர்கள் இப்படிக் கேட்கும்போது முடியாதென்றா சொல்ல முடியும்?'' பரமேஸ்வரன் ஒப்புக்கொண்டார்.

''நாம் என்றைக்குப் புறப்படலாம்?'' உண்ணி மேனோன் நண்பர்களைப் பார்த்தார்.

''நாளைக்கே புறப்படலாமே! வீணாக எதற்குத் தள்ளிப் போட வேண்டும்?'' -ராமசாமி கேட்டார்.

''என்ன பரமேஸ்வரன், உங்களுக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லையே?'' -சங்கரன் நாயர் கேட்டார்.

''எந்த ஆட்சேபனையும் கிடையாது. நீங்கள் சொன்னபடியே செய்யலாம். அப்படியானால் நான் புறப்படுகிறேன்.''

## 9

**பே**சியபடியே மறுநாள் அவர்கள் புறப்பட்டனர்.

உண்ணி மேனோனது அபிப்பிராயப்படி ஒரு டாக்சியை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு பயணம் செய்தனர். ஏறத்தாழ எட்டுமணி நேரப் பயணம்.

அப்போது நேரம் மாலை ஐந்து மணி. அருகில் எங்குமே ஆள் நடமாட்டம் இருப்பதாகத் தெரியவில்லை. கண்ணுக் கெட்டிய தூரம் வரையில் கூட்டங் கூட்டமாகப் புதர்கள் மண்டியிருந்தன. மெயின் ரோட்டிலிருந்து ஏறக்குறைய நாற்பது கிலோ மீட்டர் தூரம் வந்து விட்டிருந்தனர்.

ஒரு பெரிய பங்களா இருந்த அடையாளம் தெரிந்தது. வெளிப்புற காம்பவுண்டுச்சுவர் பெரும்பாலும் இடிந்து போயிருந்தது. பரமேஸ்வரன் சொன்னபடி தரைப்பகுதி மட்டும் அதிகமாக சேதாரமாகாமல் இருந்தது.

தரையில் பதிக்கப்பட்டிருந்த கற்களைப் பார்த்தபடியே நடந்தபோது அகலமான ஒரு கல்லில் செதுக்கப்பட்டிருந்த தேதியை உண்ணி மேனோன் கவனித்தார்.

ஆயிரத்து நானூற்றுப்பத்தாவது வருடம் ஆகஸ்ட் 31-ஆம் தேதி.

''இதைப் பாருங்கள்!'' உண்ணி மேனோன் சுட்டிக்காட்டினார்.

''இந்த பங்களாவைக் கட்டத் தொடங்கிய நாள் அது!'' பரமேஸ்வரன் கூறினார்.

''வேலை முடிய ஒரு வருடம் ஆகியிருக்கும்.'' நாயர் கருத்து தெரிவித்தார்.

''போதாது! குறைந்தது ஐந்து வருடமாவது ஆகியிருக்கும்.'' பரமேஸ்வரன் கூறினார்.

இப்போது ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பன்னிரண்டு... ஐந்நூறு வயதான பங்களா!'' உண்ணி மேனோன் கணக்கிட்டார்.

''மற்ற விஷயங்களைச் சுலபமாகக் கண்டுபிடித்து விடலாம்.'' சங்கரன் நாயர் அந்த காம்பவுண்டின் மூலைப் பகுதியிலிருந்த ஒரு சிறிய கோயிலை நோக்கி நடந்தார்.

கருவறை மட்டுமே மீதமாக இருந்த ஒரு கோயிலின் பகுதி அது.

சங்கரன் நாயர் அதன் அருகே சென்றார்.

கோயில் கதவு மூடியிருந்தது.

''இதைத் திறந்து பார்க்கலாம்...'' என்ற சங்கரன் நாயர் முதல் படிக்கட்டில் காலை வைத்தார்.

''ஐயோ கடவுளே!'' பரமேஸ்வரன் பயந்து போனவராகத் திடுமென்று அலறினார்.

சங்கரன் நாயர் முன்வைத்த காலைச் சட்டென்று பின்னுக்கு இழுத்தார்.

முன்புறம் தங்க நிறமான ஒரு பாம்பு படம் எடுத்தபடி நின்றிருந்தது. அதன் கண்கள் புஷ்பராகக் கற்கள் போல் மின்னின.

சங்கரன் நாயர் கால் வைத்த இடத்திற்கு நேர் எதிரிலிருந்தது பாம்பு.

உண்ணி மேனோனும், ராமசாமியும் பயந்து நடுங்கி, ஒதுங்கினார்கள்.

'பாம்பு இப்படி வழிமறிப்பது போல் நிற்பதால் கோயிலுக்குள் முக்கியமான பொருள் ஏதாவது இருக்க வேண்டும்' என்று உண்ணி மேனோன் நினைத்தார்.

''இதோ வந்து விடுகிறேன்!'' என்றவாறு காரை நோக்கி நடந்தார். திரும்பி வரும்பொழுது உண்ணி மேனோனது கையில் இருந்த சிறிய சூட்கேஸில் கேமரா ஒன்றும், கைத்துப்பாக்கி ஒன்றும் இருந்தன.

சூட்கேஸைத் திறந்து ரிவால்வரை எடுத்து பாண்ட் பாக்கெட்டில் போட்டுக்கொண்டு சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்தபடி திரும்பி வந்தார்.

''எதை எடுக்கப் போனீர்கள்?'' சங்கரன் நாயர் கேட்டார்.

''பாம்பின் அடுத்த கட்ட நடவடிக்கை என்னவென்று பார்க்க வேண்டாமா?'' உண்ணி மேனோன் சிகரெட் சாம்பலைத் தட்டியபடி பேசினார்.

''பாம்பு இருக்கிற இடத்திலிருந்து நகர்கிற வழியாகக் காணோமே!'' பரமேஸ்வரன் பின்வாங்கியவாறு பேசினார்.

உண்ணி மேனோன் பாக்கெட்டிற்குள் கையை விட்டபடி சங்கரன் நாயரை நெருங்கினார்.

பாம்பு அப்போதும் கருவறை வாசலில் படம் எடுத்த படியே நின்றிருந்தது. அதன் தலைப்பகுதி லேசாக அசைந்து கொண்டிருந்தது.

''இதைத் தொலைத்துக் கட்டினால் என்ன?'' உண்ணி மேனோன், சங்கரன் நாயரிடம் கேட்டடர்.

''அடித்துக் கொல்வதா?''

''அதெல்லாமில்லை. சுலபமான ஆயுதம் கையில் உள்ளதே!''

''ஓகோ! ரிவால்வரைக் கொண்டு வந்திருக்கிறீர்களா? அப்படியானால் சுட்டுத் தள்ளுங்கள். எதற்காகத் தயக்கம்?''

துப்பாக்கியிலிருந்து ரவை சீறிப்பாய்ந்தது. புகை பரவியது. பக்கத்து மரக்கிளைகளில் குடியிருந்த பறவைகள் வெடியோசை கேட்டுச் சிறகடித்துப் பறந்தன.

புகை அடங்கிய பிறகு பாம்பு அங்கே இல்லை.

''குண்டு பாம்பைத் தாக்கியிருக்கிறது. பொதுவாக என்னுடைய குறி தவறுவதில்லை.'' உண்ணி மேனோன் ரிவால்வரின் குழல் பகுதியிலிருந்த புகையை ஊதியபடி பாக்கெட்டிற்குள் போட்டுக் கொண்டார்.

''அப்படியானால் பாம்பு எங்கே?'' சங்கரன் நாயர் சந்தேகத்துடன் கேட்டார்.

''எங்காவது தப்பித்து ஓடியிருக்கலாம்.''

''அதெப்படி? குண்டுக்காயம் பட்ட பாம்பு துடித்தபடி தரையிலல்லவா கிடக்க வேண்டும். ஆனால், அப்படிப்பட்ட அடையாளம் எதுவுமில்லையே?''

உண்ணி மேனோனால் அதற்கு பதில் பேச முடியவில்லை. எப்படி இருந்தாலும் வழிமறித்த பாம்பு இடத்தைக் காலி செய்துவிட்டது. அப்படியே திரும்பி வந்தாலும் கையில்தான் துப்பாக்கி உள்ளதே சுயமாக ஆறுதலடைந்தார்.

''அது பாம்பாக இருக்க முடியாது. பாம்பு வேடத்தில் வந்த வேறு ஏதாவதாக இருக்கும்...'' பரமேஸ்வரன் குறுக்கிட்டுப் பேசினார்.

''ஆமாம், இவர் சொல்வதுதான் உண்மையென்று தோன்று கிறது!'' ராமசாமி ஒப்புக்கொள்கிறவரைப் போல் கூறினார்.

''இருக்கட்டும். முன்வைத்த காலை பின்வைக்காமல் முன்னேறுங்கள்.'' மேனோன், சங்கரன் நாயரிடம் கூறினார்.

சங்கரன் நாயர் கருவறை வாசலில் கால் வைத்தார். நல்லவேளையாக எதுவும் நடக்கவில்லை.

''பாம்பு போய் விட்டது. நீங்கள் பயப்படத் தேவை யில்லை.'' மேனோன் அவரை உற்சாகப்படுத்தினார்.

கருவறை வாசல் கதவைத் திறந்து பார்ப்பது என்று முடிவு செய்தவராகக் கதவை விசையுடன் இழுத்துத் திறந்தார்.

திறந்து உள்புறம் பார்த்தவர் திடுக்கிட்டார்.

மறைந்த பாம்பு கருவறைக்குள் இருந்த சிவலிங்கத்தைச் சுற்றியபடி தலையை உயர்த்தி நின்றிருந்தது.

பாம்பின் உடம்பில் எந்தவிதமான காயத்தையும் காணோம்.

உண்ணி மேனோன் மீண்டும் துப்பாக்கியை எடுத்துச் சுட முயன்றபோது, அவரைத் தடுத்த ராமசாமி கூறினார்: ''வீணாக நாம் ஏன் விபரீதங்களை வரவழைக்க வேண்டும்?''

மேனோன் துப்பாக்கியை மீண்டும் பாக்கெட்டிற்குள் போட்டுக் கொண்டார்.

சிவலிங்கத்தின் மீது தங்கநகைகள் மின்னின. பளபளப்பான தங்க நகைகள்!

நகைகளுடன் மற்றொரு நகையாகப் பாம்பு தோற்ற மளித்தது. எனவே, சிவலிங்கத்தின் மீதிருந்த நகையை எடுக்க அவர்கள் தயங்கினர்.

சங்கரன் நாயருக்குச் சட்டென்று ஒரு யோசனை தோன்றியது.

''ராமன் நம்பீசனிடம் இதைப் பற்றி யோசனை கேட்டால் என்ன?'' ராமசாமியைப் பார்த்தபடி பேசினார் சங்கரன் நாயர்.

''ஏன் அவரை இங்கேயே அழைத்துக் கொண்டு வந்தால் என்ன?'' ராமசாமி திருப்பிக் கேட்டார்.

''வேண்டாம். முதலில் அவரிடம் விஷயத்தைச் சொல்வோம். பிறகு அவர் சொல்கிறபடி செய்யலாம்.''

''அப்படியானால், நானே போய் அவரை அழைத்துக் கொண்டு வருகிறேன்.''

ராமசாமி காரில் ஏறிப் புறப்பட்டார்.

ராமன் நம்பீசனது வீட்டை அடைந்தபோது அவர் கேட்டார்: ''போன காரியம் என்ன ஆனது?''

ராமசாமி நடந்ததை ஒப்பித்தார்.

எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்ட பிறகு ராமன் நம்பீசன், ராசிப் பலகை மற்றும் சோழிகளை எடுத்துக் கொண்டு தென்புறத்திற்குச் சென்று மூதாதையரின் சமாதிகளை வணங்கி னார்.

பின்பு பழைய இடத்திற்கே வந்து மந்திரம் சொல்லிவிட்டு ராசி பார்க்கத் தொடங்கினார்.

சோழிகள் கலகலத்து வீழ்ந்தன.

சட்டென்று ராமன் நம்பீசனின் கண்கள் வியப்பால் விரிந்தன.

'தான் காண்பது உண்மையா?'

ராசிப் பலகையின் மீது வைத்த சோழிகள் உண்மையிலேயே அசைகிறதா?

சோழிகளுக்குள் ஏதோ உயிர் புகுந்து கொண்டவை போல் அவை மெதுவாக அசைந்தன... நகர்ந்தன!

சந்தேகம் கொண்ட நம்பீசன் ஒரு சோழியை எடுத்துப் புரட்டிப் பார்த்தார். சோழிக்குள் எதுவுமில்லை!

''என்னை சோதிக்கிறாயா நீ?'' நம்பீசன் உரத்த குரலில் கேட்டார். பின்பு தன் கையால் தரையில் ஓங்கி அடித்துவிட்டுக் கையை மலர்த்திப் பார்த்தார்.

கைகளில் ரத்தம்!

உள்ளங்கைப் பகுதியில் ரத்தம் கசிந்தது.

அவர் கண்கள் சிவந்து ஜொலித்தன.

''அவற்றைக் கைப்பற்ற வேண்டுமானால், அதற்கு ஒரே ஒரு வழிதான் உள்ளது.'' -நம்பீசன் கூறினார்: ''அந்த சிவலிங்கத்தை எடுத்துக் கொண்டு வரவேண்டும். அதில் வலுவான சக்தி உள்ளது. அந்த சக்தியை நமக்கு எதிராகத் திருப்பினால்தான் பலன் நமக்கு சாதகமாக இருக்கும்.''

அவர் சொன்னது சரிதான் என்று ராமசாமியும் நினைத்தார்.

''ஆனால், ஒரு சின்னச் சிக்கல்...'' ராமசாமி தயங்கியபடி இழுத்தார்.

''என்ன... என்ன சொல்லுங்கள்!'' நம்பீசன் ஆர்வத்துடன் கேட்டார்.

''அந்த சிவலிங்கத்தின் மீது ஒரு தங்க நிறப் பாம்பு சுற்றிக் கொண்டிருக்கிறது.''

''அது ஒரு பிரச்சினையே இல்லை. நான் சொல்கிறபடி செய்தால் போதும்.''

நம்பீசன் அறைக்குள் நுழைந்து ஒரு பித்தளைக் குடத்துடன் திரும்பினார்.

படியரிசி கொள்ளும் ஒரு சிறிய குடம். அதை தனக்கு முன்பாகத் தரையில் வைத்து நாக வசீகரண மந்திரம் ஜபித்தார். பனையோலைத் துண்டு ஒன்றை எடுத்துச் சில மந்திரங்களை எழுதினார்.

பின்பு வீட்டின் தென்புறம் சென்று மரத்திலேயே பழுத்துத் தொங்கிய கதளிப் பழக் குலையிலிருந்து ஒரு பழத்தை உருவி

அதைக் குடத்திற்குள் போட்டார். மந்திர ஓலையையும் போட்டு சிவப்பு நிறப் பட்டுத் துணியால் குடத்தின் வாயை இறுகக் கட்டினார். எழுத்தாணியால் பட்டுத்துணியின் நடுவே உண்டியல் மாதிரி கீறினார்.

''இந்தக் குடத்தைக் கொண்டுபோய் அந்த சிவலிங்கத்தின் கீழே வைத்தால் பாம்பு இதற்குள் தானாகவே புகுந்து கொள் ளும்!'' நம்பீசன் உறுதியளித்தார்.

நூற்றியோரு ரூபாயை நம்பீசனது முன்னால் வைத்து விட்டு, ராமசாமி குடத்துடன் அங்கிருந்து கிளம்பினார்.

சீறிப்பாய்ந்த கார் விரைவிலேயே நண்பர்கள் தங்கியிருக்கும் இடத்தை அடைந்தது.

அவர்கள் ராமசாமியை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

''போன காரியம் பழம்தானே?'' உண்ணி மேனோன் கேட்டார்.

''இதோ இந்தக் குடத்தைக் கொடுத்து அனுப்பியிருக்கிறார். பாம்பு இதற்குள் நுழைந்ததும் நாம் சிவலிங்கத்தை எடுத்துக் கொள்ள வேண்டியதுதான். அதைக் கொண்டு போய் அவரிடம் கொடுத்தால் மற்றதை அவர் பார்த்துக் கொள்வார்.''

காரியம் சுலபமானதாகவே தோன்றியது.

சங்கரன் நாயர் குடத்தை எடுக்க முற்பட்டபோது, மேனோன் தடுத்தார். ''குடத்தைக் கொண்டு வந்தவரே அதையும் செய் யட்டும். அதுதான் நல்லது. அதை நீங்களும் தொட்டு அதனால் ஏதும் தவறு நிகழாமல் இருக்கட்டுமே.''

''அதுவும் சரிதான்!'' சங்கரன் நாயர் ஒப்புக்கொண்டார்.

ராமசாமி குடத்துடன் மெதுவாகக் கருவறைப் படிகளில் ஏறினார்.

நம்பீசனது மந்திரம் வேலை செய்யத் தொடங்கியது.

குடத்தின் வாய்ப்புறத்தில் இறுகக் கட்டியிருந்த பட்டுத் துணிக்குள் துடிப்புத் தென்பட்டது.

ராமன் நம்பீசன் மந்திரம் ஜெபித்துக் கொடுத்தனுப்பிய குடத்தின் வாயில் கட்டப்பட்டிருந்த பட்டுத்துணி மீது, கண்ணுக்குத் தெரியாத கை விரல்கள் தாளமிடுவதைப் போல் அது படபடத்தது.

அதிசயமான அந்தக் காட்சியைக் கண்ட நால்வரும் வியப்பால் மலைத்துப்போய் மூச்சை அடக்கியபடி நின்றிருந்தனர். பஞ்சுத் துண்டு ஒன்று கீழே விழுந்தால் கூட அதன் ஓசை கேட்கும் அளவுக்கு அமைதி அங்கு நிலவியது.

கருவறைப் பகுதியை ஒட்டி வளர்ந்திருந்த கருவில்வ மரத்தின் இலைகளைச் சட்டென்று யாரோ பிடித்து உலுக்கியது போல் சலசலத்தன.

அங்கு நின்றிருந்த ஒவ்வொருவரின் மயிர்க்கால்களிலும் அந்தச் சலசலப்புப் பரவியது.

பயம் ஒரு தேள் மாதிரி அவர்களின் இதயச் சுவர்களின்மீது ஊர்ந்தது.

இயற்கையே ஒரு கணத்தில் மாற்றமடைந்தது போல் இருந்தது. சட்டென்று அந்தப் பகுதியே இருளடைந்தது போல் தோன்றியது. அங்கிருந்த நான்கு பேரின் கால்களும் தரையுடன் தரையாகப் பதிந்துவிட்டவை போல் அசைவற்று நின்று விட்டன.

அவர்கள் கண்களுக்கு முன்பாகவே, சிவலிங்கத்தின் மீது சுற்றியிருந்த பாம்பு மெதுவாக அதிலிருந்து ஊர்ந்து இறங்கத் தொடங்கியது. தரையை அடைந்ததும் அது குடத்தை நோக்கி வந்தது. படத்தை உயர்த்தி, மூடியிருந்த பட்டுத் துணியை மெதுவாகத் தீண்டியது.

நால்வரின் கண்களும் உன்னிப்பாக அதையே கவனித்தன. பாம்பு பட்டுத் துணியின் துவாரத்திற்குள் தலையை நுழைத்துக் குடத்திற்குள் இறங்கியது. கண்மூடித் திறப்பதற்குள் பாம்பு குடத்திற்குள் முழுவதுமாக மறைந்தது.

ஒரு கணம் குடம் அங்கும் இங்குமாக அலைக்கழிப்பது போல் அசைந்தது. அதன்பிறகு மொத்த அசைவும் நின்று சலனமற்றுப் போனது.

'குடத்தை யார் எடுப்பது?'

பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''உறுதியான மற்றொரு துணியால் குடத்தின் வாயைக் கட்டிவிட்டால், பிறகு நாம் பயப்பட வேண்டியது இல்லை.'' ராமசாமி கூறிய யோசனையை மற்றவர்களும் ஒப்புக் கொண்டனர்.

மேனோன் காரை நோக்கி நடந்து, கார் ஸீட்டின் ரெக்ஸினைச் சிறிது கிழித்து எடுத்தார். சுமார் இரண்டடி நீளமுள்ள மெல்லிய கம்பி ஒன்றையும் காரிலிருந்து தேடி எடுத்தார்.

பரமேஸ்வரன் அவற்றின் உதவியால் குடத்தின் வாயை இறுக்கிக் கட்டினார். அவரே அதை எடுத்து காருக்குள் வைக்கவும் செய்தார்.

''மேற்கொண்டு நாம் என்ன செய்வது?'' -சங்கரன் நாயர் கேட்டார்.

''சிவலிங்கத்தை எடுக்க வேண்டியதுதான்!''-ராமசாமி கூறினார்.

சிவலிங்கத்தைத் தொட்டு அசைத்துப் பார்த்தனர். அது மிகவும் உறுதியாகத் தரையில் பதிக்கப்பட்டிருந்தது.

காரின் டிக்கியில் இரும்புத்துண்டு ஒன்று இருப்பதைக் கேள்விப்பட்டு ராமசாமி அதை எடுத்து வந்தார். சுமார் ஒரு மணி நேரக் கடுமையான முயற்சிக்குப் பிறகு சிவலிங்கத்தை ஒரு வகையாகப் பெயர்த்து எடுத்தனர். நால்வருமாக அதை காருக்குள் கொண்டுவந்து வைத்தனர்.

அவர்களைச் சுமந்துகொண்டு கார் வேகமாகப் புறப்பட்டது.

அவர்கள் நம்பீசனிடம் வந்து சேர்ந்தபோது, நேரம் நள்ளிரவைத் தாண்டியிருந்தது. நம்பீசன் அவரது வழக்கமான இடத்தில் கல்விளக்கிற்கு அருகே அமர்ந்திருந்தார்.

''நீங்கள் சொன்னபடியே கொண்டு வந்து விட்டோம்...'' மேனோன் கூறினார்.

''கீழே வையுங்கள் பார்க்கலாம்.'' என்ற நம்பீசன் எழுந்தார்.

நால்வரும் காரிலிருந்து ஒவ்வொன்றாக எடுத்து வந்தனர்.

''அருமையான சிவலிங்கம்!'' நம்பீசன் சங்கிலி விளக்கின் ஒளியில் சிவலிங்கத்தைப் பார்த்து சிலாகித்தார்.

மிகவும் லாகவமாக சிவலிங்கத்தைக் கையில் எடுத்தவர், ''இதை நான் பத்திரமாக வைத்துவிட்டு வருகிறேன்!'' என்று சொல்லி, வீட்டிற்குள் நுழைந்தார்.

சிவலிங்கத்தைத் துளசி மாடத்தின் அருகில் வைத்துவிட்டு நம்பீசன் திரும்பி வந்தார்.

''குடத்திற்கு நீங்களும் ஒரு கட்டுப் போட்டது பாராட்டக் கூடிய செயல்தான்!'' -நம்பீசன் மற்றவர்களிடம் கூறினார்.

எல்லாரும் வராந்தாவிற்கு வந்தனர். ராமசாமி சங்கிலி விளக்கைக் கையில் எடுத்து வந்தார்.

நம்பீசன் மற்றொரு பெரிய விளக்கை ஏற்றித் தூணில் பொருத்தினார்.

''சரி... இனி நடக்க வேண்டியதை நான் பார்த்துக் கொள் கிறேன்.'' என்ற நம்பீசன் ராசிப் பலகை மற்றும் சோழிப் பையை எடுத்து வந்தார்.

பலகையை வைத்துச் சோழிகளை அதன் மீது கணக்கின்படி வைத்தார்.

சோழிகளைக் குலுக்கிப் போட்டார்.

''இப்போது பிரச்சினை எதுவும் இருப்பதாகத் தெரிய வில்லை...'' நம்பீசன் முணுமுணுத்தார்.

இதற்கு முந்தைய தடவை சோழிகள் உயிருள்ளவை போல் நகர்ந்த மாதிரி, இம்முறை எதுவும் நிகழவில்லை.

'ஏதோ ஒரு சிக்கல் தெரிகிறது'. நம்பீசன் நினைத்தார்.

விழுந்த சோழிகளை கவனித்தார்.

மீதம் வந்தது.

நம்பீசன் முகத்தில் சுளிவுகள் தோன்றின. அவரது புருவங்கள் மேலெழும்பின. அந்த நேரத்து நம்பீசனது தோற்றம் அரபுக் கதைகளில் இடம் பெறும் பூதத்தைப் போல் இருந்தது.

கண்களில் கோபம்!

உதடுகளில் வஞ்சகச் சிரிப்பு.

சட்டென்று எழுந்த நம்பீசன் துணிகட்டிய குடத்தைக் கையில் எடுத்தார். அறையைத் திறந்து குடத்தை உள்ளே வைத்துத் தாழிட்டார். வீட்டின் தெற்குப்புறம் சென்றார்.

தாத்தாவை மனதில் தியானித்தார்.

''என்ன?'' தாத்தா விசாரித்தார்.

''நான் நினைத்தது சரிதானா தாத்தா?''

''நூற்றுக்கு நூறு சரிதான்!''

''மேற்கொண்டு நான் என்ன செய்யலாம்?''

''ஹோமம் தொடங்கு!''

''பிறகு...?''

''ஹோமாக்னியில் குடத்தைக் கவிழ்த்து வை. மறந்தும் நேராக வைக்காதே!''

''அப்படியே செய்கிறேன்.''

''எல்லாம் அதில் அடங்கியுள்ளது.''

''எப்போது ஹோமத்தைத் தொடங்கலாம்?''

''முடிந்தளவு விரைவில் நடத்து.''

''சொன்னபடியே செய்கிறேன்.''

நம்பீசன் திரும்பி வந்தார்.

''தற்சமயம் உங்களுக்கு எந்தவிதமான தொந்தரவும் இருக்காது. விரைவிலேயே ஒரு ஹோமத்தைச் செய்ய வேண்டும். அதற்குக் கொஞ்சம் பணம் செலவு செய்ய வேண்டியிருக்கும்.''

''செலவைப் பற்றி நீங்கள் கவலைப்படத் தேவையில்லை. செய்து விடலாம். எவ்வளவு தேவையென்று சொல்லுங்கள்.'' -மேனோன் பர்ஸைத் திறந்தபடி கேட்டார்.

தங்களது நோக்கத்தில் முக்கால்பங்கு நிறைவேறி விட்ட தாகவே அவர்கள் நினைத்தனர்.

குடத்திற்குள் அடைபட்டிருப்பது சாதாரணப் பாம்பல்ல. அதற்கு ஏதோ ஒரு சக்தி இருக்கவேண்டும். அந்த சக்தியை அழித்துவிட்டால், இந்திராபாயின் சக்தியும் அழிந்து விடும் என்று அவர்கள் நினைத்தனர்.

இல்லாவிட்டால், நம்பீசன் குடத்தை அவ்வளவு பத்திரமாக அறைக்குள் வைத்துப் பூட்ட மாட்டார்.

அந்தப் பாம்பிடம் உள்ள சக்தியை அழிப்பதற்காகத்தான் ஹோமம் நடத்துகிறாரோ என்னவோ?

''தற்சமயம் ஆயிரத்து ஒரு ரூபாய் போதும்!'' நம்பீசன் சொன்னார்.

உண்ணி மேனோன் பர்ஸிலிருந்து பத்து நூறுரூபாய் நோட்டுகளையும் ஒரு ரூபாயாக இல்லாததால் ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றையும் வைத்துக் கொடுத்தார்.

நம்பீசன் பெற்றுக் கொண்டார்.

''நீங்கள் நாளை இரவு வாருங்கள்! நாளைக்கே ஹோமம் செய்யலாம்'' என்றார்.

நால்வரும் அங்கிருந்து விடை பெற்றனர்.

''அந்தப் பாம்பு சாதாரணமான ஒரு பாம்பு அல்ல!'' வண்டியை ஓட்டியபடி ராமசாமி பேச்சைத் துவங்கினார்.

''அதுதான் தெரிகிறதே...'' சங்கரன் நாயர் குறுக்கிட்டார்.

''நான் சொல்ல வந்தது அதுவல்ல. இந்திராபாயின் சக்தி முழுவதும் அந்தப் பாம்பில்தான் அடங்கியுள்ளது. அந்தப் பாம்பு ஹோமாக்னியில் வெந்து போனால் ஒன்று இந்திராபாய் ஒரு

சாதாரணப் பெண்மணியாக மாறிவிட நேரும். இல்லாவிட்டால் அந்த அரண்மனையிலிருந்து புகை உயரும்!'' -ராமசாமி மற்றவர்களது கவனத்தைக் கவரும் விதத்தில் கூறினார்.

''அதுபோதுமே நமக்கு! அவள் ஒரு சாதாரணப் பெண்ணாகி விட்டால், அதன் பிறகு நாம் அவளை எப்படியெல்லாம் அலைக்கழிக்க முடியும். இல்லையா சங்கரன் நாயர்?'' உரத்த குரலில் வாய்விட்டுச் சிரித்தபடி உண்ணி மேனோன், சங்கரன் நாயரது தோளில் தட்டினார்.

உண்ணி மேனோனது வார்த்தைகளைக் கேட்டதும் மற்ற மூவர் மனத்திலும் இந்திராபாயின் அழகான உருவம் நடனமாடத் தொடங்கியது.

''இந்திராபாய் ஒரு சாதாரணப் பெண்ணாகி விட்டால்?'' இயல்பாகவே பெண் பித்தனான மேனோனது வார்த்தைகள் காதுக்குள் ஒலிப்பதாக ராமசாமிக்குத் தோன்றியது.

''பாட்டுப் பாடுகிறாளாம்... மழை பெய்கிறதாம்!'' ராமசாமி கேலிக்குரலில் பேசினார்.

''அதெல்லாம் காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்த கதைதான்.'' சங்கரன் நாயர் தனது கருத்தைக் கூறினார்.

கார் விரைந்தது.

''எப்படி இருந்தாலும் இன்னும் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் நமது தொல்லைகள் எல்லாம் தொலைந்துவிடும்.'' சொல்லியபடி மேனோன் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தார். மற்றொரு சிகரெட்டை பரமேஸ்வரனிடம் கொடுத்தார்.

பாம்பு போட்டு கட்டப்பட்ட குடத்தை பரமேஸ்வரன்தான் பத்திரமாக வைத்திருந்தவர். அதைத் தங்கள் கையில் வைத்திருக்க மேனோனுக்கும், சங்கரன் நாயருக்கும் பயமாகவே இருந்தது.

ராமசாமி காரின் வேகத்தை அதிகப்படுத்தினார்.

## 10

நம்பீசன் கையை நீட்டிக் குடத்தை எடுக்க முயன்றபோது, குடம் சற்றுப் பின்புறமாக நகர்ந்தது.

'உள்ளே இருப்பது பாம்பல்லவா, அது அசைந்ததால் குடம் அசைந்திருக்கலாம்!'' என்று நினைத்தார்.

நம்பீசன் சற்று முன்புறமாகச் சாய்ந்து குடத்தின் கழுத்துப் பகுதியைப் பிடித்தார். குடத்தைத் தூக்க முயன்றபோது குடம் உயரவே இல்லை.

நம்பீசன் புன்னகைத்தார்.

மறுபடியும் கையை நீட்டிக் குடத்தைத் தூக்க முயன்றார். இம்முறையும் தோல்வியடைந்தார்.

இரண்டு பேர் சேர்ந்து தூக்க முடியாத மிகப்பெரிய கல் விளக்கை இடது கையால் அனாயாசமாகத் தூக்கிய நம்பீசனால் மிகவும் சிறிய குடத்தைத் தூக்க முடியவில்லை என்பது மற்ற மூவரையும் வியப்படைய வைத்தது.

இடது கையை விலக்கிவிட்டு வலக் கையின் உதவியால் குடத்தைத் தூக்க முயன்றார்; அப்போதும் தூக்க முடியவில்லை. நம்பீசனின் உடல் மெலிதாக வியர்க்கத் தொடங்கியது.

தன் வாழ்வில் ஒருபோதும் சந்திக்காத சம்பவம் இது. மாந்திரீகக் காரியங்களில் இதுவரையில் தோல்வியையே சந்திக்காதவர் நம்பீசன். அவ்ருக்குச் சட்டென்று எதுவும் புரியவில்லை!

சற்றுநேரம் யோசனையில் ஆழ்ந்த பிறகு ஒரு தீர்மானத்திற்கு வந்தவராகக் கூறினார்: ''ஹோமத்தை நடத்த வேண்டியதுதான்.''

நம்பீசன் குடத்தை வராந்தாவில் கவிழ்த்து வைத்தார். கவிழ்த்து வைத்த பிறகு குடம் கனமாகத் தோன்றவில்லை.

கல்விளக்கின் மீது இழையும் பாம்பை குடத்தின் மீது விட்டார்.

குடத்தின் மீது சுற்றிய பாம்பு, ரெக்ஸினைத் தாண்டிக் குடத்திற்குள் நுழைய முயன்றது. இதைப் பார்த்த நம்பீசனுக்குச் சட்டென்று ஒரு யோசனை தோன்றியது.

'தான் வளர்த்து வரும் பாம்பைக் குடத்திற்குள் அனுப்பி வைத்தால் என்ன?' கூடவே மற்றொரு சிந்தனையும் வந்தது. இந்தப் பாம்பை உள்ளே விடும்போது, ஏற்கெனவே உள்ளே இருக்கும் பாம்பு வெளியே வந்துவிட்டால்...

''இருங்கள் இதோ வந்துவிடுகிறேன்!'' என்ற நம்பீசன் வீட்டின் பின்புறமாகச் சென்றார், அங்கு முற்றத்தின் மூலையில் இற்றுப்போன எட்டி மரம் நின்றிருந்தது. அதன் அடிப்புறத்தில் இரண்டு மூன்று பொந்துகள் இருந்தன.

நம்பீசன் ஒரு கல்லை எடுத்து உதட்டுடன் ஒட்டி வைத்து மந்திரம் ஜெபித்து நடுவிலுள்ள பொந்தில் போட்டார்.

உள்ளிருந்து ''சிக்...சிக்...'' என்ற குரல் கேட்டது. தொடர்ந்து பொந்திலிருந்து கீரியொன்று வெளியே வந்தது.

ஒரு பெரிய பூனையளவு வளர்ந்திருந்த கீரி. நம்பீசன் கையை நீட்டினார்.

கீரிப்பிள்ளை அவர் கையில் ஏறி உட்கார்ந்தது. கீரியுடன் நம்பீசன் வராந்தாவிற்கு வந்தார்.

''மேற்புறம் நீங்கள் கட்டியுள்ள கட்டை அவிழ்த்து விடுங்கள்!'' குடத்தைச் சுட்டிக்காட்டியபடி நம்பீசன் கூறினார்.

நான்கு பேரும் பரஸ்பரம் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனரே தவிர, யாரும் அந்தக் கட்டை அவிழ்க்கத் தயாராக இல்லை.

''யாராவது ஒருவர் மேல்கட்டை அவிழ்த்துவிடுங்கள். அப்படியெல்லாம் பாம்பு சட்டென்று சீறிப்பாய முடியாது. உங்களது கட்டிற்குக் கீழே நான் ஏற்கெனவே போட்டிருக்கிற பட்டுத் துணிக்கட்டு இருக்கிறதே?''

''ஆமாம், மற்றொரு கட்டும் உண்டு!'' -பரமேஸ்வரன் அதை ஆமோதித்தார்.

''பிறகு ஏன் பயப்படுகிறீர்கள். நீங்கள் போட்ட கட்டை அவிழ்த்து எடுங்கள்.'' பரமேஸ்வரனிடம், நம்பீசன் கூறினார்.

மற்றவர்களும் வற்புறுத்தவே பரமேஸ்வரன் கட்டை அவிழ்க்கத் தொடங்கினார். கட்டை அவர் அவிழ்த்து முடித்ததும், அதற்காகவே காத்திருந்தவர் மாதிரி நம்பீசன், தனது வளர்ப்புப் பாம்பிடம் சைகை காட்டினார்.

அந்தப் பாம்பு சிவப்புப் பட்டிலிருந்த துவாரம் வழியாகக் குடத்திற்குள் இறங்கியது. பாம்பு, குடத்திற்குள் இறங்குவதை எல்லாரும் ஆவலுடன் பார்த்தனர்.

குடம் ஒரு முறை அசைந்தது. கூடவே ஒரு புறமாகச் சரியவும் ஆடவும் தொடங்கியது. கீரி, குடத்தையே பார்த்துக் கொண் டிருந்தது. நிமிடங்கள் சில கடந்தன.

மறுபடியும் குடம் வலுவாக அசைந்தது. சிவப்பு நிறப் பட்டுத்துணியின் கிழிசல் வழியாக ஒரு பாம்பின் தலை வெளியே வந்தது.

''இதுதான் நீங்கள் கொண்டு வந்த பாம்பு.'' -நம்பீசன் கூறினார்.

''ஐயோ!'' என்றபடி நால்வரும் பின்னுக்கு நகர்ந்தனர்.

''பயப்படாதீர்கள்... நான் அனுப்பிய பாம்பு உள்ளே போய் இதை வெளியேற்றி உள்ளது... விருந்தாளிப் பாம்பைக் கீரிப்பிள்ளை கவனித்துக் கொள்ளும்!'' நம்பீசன் கூறினார்.

குடத்திலிருந்து வெளியேறி பாம்பு படத்தை உயர்த்திக் கீரியைப் பார்த்தது.

நம்பீசன் கீரியிடம் சைகை காட்டினார். கட்டளை கிடைத்ததும் கீரி, பாம்பை நோக்கிப் பாய்ந்தது.

பாம்பு சற்று விலகிப் பழையபடி நிமிர்ந்து நின்றது.

எந்தவிதச் சத்தமும் எழவில்லை. ஏறத்தாழ மூன்றடி தூரம் வந்த கீரி. சற்றுப் பின்வாங்கி மீண்டும் பாய்ந்தது.

கண் மூடித் திறப்பதற்குள் பாம்பு கீரியின் உடம்பில் சுற்றிக் கொண்டது. உடனே பாம்பு கீரியின் உடம்பை இறுக்கவும் தொடங்கியது.

கீரி மூச்சுத் திணறித் துடித்தது. அதன் வாயிலிருந்து ரத்தம் வடியத் தொடங்கியது. பாம்பு ஒன்று கீரியைக் கொல்லும் காட்சியை அங்கிருந்தவர்கள் முதன் முதலாகக் கண்டனர்.

கீரியின் உடம்பில் ஆங்காங்கே தோல் வெடித்து அவற்றின் வழியாக ரத்தம் வழிந்தது... கடைசியில் கீரி அசைவற்றுப் போனது.

எதுவும் நடக்காதது போல் பாம்பு மீண்டும் குடத்திற்குள் நுழைந்து மறைந்தது.

இதைப் பார்த்த ராமன் நம்பீசனின் முகம் கோபத்தால் சிவந்தது.

''ஓகோ. இது எனக்கு வைத்த சோதனையா? இருக்கட்டும். இதுவரை இந்த ராமன் நம்பீசன் யாரிடமும் தோல்வியடைந்த தில்லை.'' நம்பீசனின் குரலில் கட்டுக்கடங்காத கோபம் தெரிந்தது.

குடத்தை மீண்டும் பழையபடி கட்டிவைத்தார்.

''இன்று நள்ளிரவில் ஹோமத்தைத் தொடங்க வேண்டியது தான்'' நம்பீசன் அறிவித்தார்.

''இனிமேலும் நாம் தாமதிப்பது அபாயம் என்றே தோன்றுகிறது!'' மேனோன் கூறினார்.

ஹோமத்திற்கான ஏற்பாடுகள் துரித கதியில் நடந்தேறின.

ஹோமச்சிதை கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது.

ராமன் நம்பீசன் குடத்தைக் கையில் எடுத்தார். மந்திரங்களை உச்சரித்தபடி குடத்தை ஹோம நெருப்பின் மீது கவிழ்த்தார்.

மகா மாந்திரீகரான ராமன் நம்பீசன் மந்திரத்தை உச்சரித்தார்.

''ஓம் சத்ரு ஸம்காராய...''

நெருப்பு ஜுவாலைகளின் சுடலை நடனத்திற் கேற்றாற் போல் அந்த மந்திரத்தின் ஒலி உயர்ந்து ஒலித்தது. உண்ணி மேனோனும் அவர் நண்பர்களும் மௌனமாக அவரையே

வேடிக்கை பார்த்தனர். சற்று முன்பாக நடந்த சம்பவத்தைக் கொண்டு பார்த்தால், இன்னும் என்னவெல்லாமோ நடக்க வாய்ப்பு உள்ளது!

அந்த அளவிற்கு நம்ப முடியாததாகவும் பயமேற்படுத்துவ தாகவும் இருந்தது அந்தக் காட்சி.

இது ஒரு ஜீவ மரணப் போராட்டமாக இருந்ததால்தான் மேனோன் இதற்கெல்லாம் தயாரானார்.

வெளிநாட்டிலிருந்து ஏராளமான விமானங்கள் வரும் நேரம் இது. கள்ளக் கடத்தல் பொருள்கள் ஏராளமாக இருக்கும். அவற்றில் ஒரு பங்கு தனக்கு உண்டு. ஆனால், இதன் பொருட்டு அலைவதால் அவையெல்லாம் நஷ்டமடைகிறது.

ராமசாமியும் தன்னைப் போன்ற ஒரு நிலையில்தான் இருக்கிறார். சங்கரன் நாயருக்கு இப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பமாக இல்லாவிட்டாலும், செப்டிக் டாங்கில் கிடக்கும் எலும்புக்கூடு அவரை எந்த நேரத்திலும் ஆபத்தில் தள்ளிவிடலாம்.

உடனடியாக அதை அப்புறப்படுத்துவதும் சுலபமான காரியமல்ல. அதற்கு உதவுபவனிடம் பயப்பட நேரும். வேறு ஏதாவது ஓர் இடத்திற்கு மாற்றுவதாக இருந்தால் கூட அந்த இடத்தையும் கண்டுபிடித்து விடமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

எது எப்படி இருந்தாலும் இந்திராபாய் உயிருடன் இருப்பது வரை, தாங்கள் நிம்மதியாக இருக்க முடியாது. அவள் அப்படிப் பட்ட ஒரு பெண்மணி.

## 11

இந்திராபாய் தனது பங்களாவின் பூஜையறையில் வைத் திருந்த மும்மூர்த்தி சிலைகளை அலங்கரித்துக் கொண்டிருந்தாள்.

சிவன், பிரம்மா, விஷ்ணு ஆகியோரது நாலடி உயரமுள்ள பஞ்சலோகச்சிலைகள் அந்த அறைக்குள் கம்பீரமாக நின்று

கொண்டிருந்தன. தங்கம் மாதிரித் தேய்த்துப் பளபளப்பாக்கப் பட்ட சிலைகள்.

சிவனது கழுத்தில் ஒரு பாம்பு இழைந்து கொண்டிருந்தது. தங்கநிறப்பாம்பு!

அலங்கரிக்கப்பட்ட இந்த மூன்று சிலைகளுக்கு முன்பாக இந்திரா மற்றொரு சிலையை எடுத்து வைத்தாள். இரண்டடி உயரமுள்ள ஒரு சிலை அது. பெண்ணின் சிலை. அந்தச் சிலை ஏறத்தாழ இந்திராபாய் மாதிரியே தோற்றமளித்தது. அந்தச் சிலை மட்டும் அலங்கரிக்கப்படவில்லை. இந்தச் சிலைகளுக்கு முன்னால் நூற்றியொரு திரிகள் கொண்ட நிலவிளக்கு ஒன்று எரிகிறது. சட்டென்று அந்தத் திரிகள் கொழுந்து விட்டு எரியத் தொடங்கின. திரிகளில் திடுமென்று உயர்ந்த வெப்பநிலை அவளைக் கடுமையாகத் தாக்கியது. அவள் முகத்தில் சந்தேக அலைகள் எழுந்தன.

கண்ணிமைப் பீலிகள் சட்டென்று சுருங்கின. இந்திரா தன் கையை உயர்த்தி நிலவிளக்கின் மேற்புறமாக வட்டமிட்டபடி கையைத் தாழ்த்தியபோது கையின் உயரத்திற்கேற்றவாறு தீ ஜுவாலைகளின் உயரம் குறைந்து வந்தது. பின்பு திரிகள் ஒவ்வொன்றாக அணைந்தன. கடைசித் திரியும் அணைந்த பிறகு இந்திராபாய் கையைத் திறந்தாள். அவள் உள்ளங்கைக்குள் ஓர் அக்னிக் கோளமிருந்தது.

நூற்றியொரு திரிகளிலுமிருந்த நெருப்பும் ஒன்றாகத் திரண்டு இந்திராவின் கையில் ஒரு பெரிய நாகமாணிக்கம் மாதிரி உருண்டையாகக் கூடியது, அந்த அக்னிக் கோளத்தை வாசலுக்கு வெளியே வீசி எறிந்தாள்.

ஒரு நெருப்புப் பந்து மாதிரி அது பாய்ந்து சென்றது. வாசலைத் தாண்டி வெற்றுவெளியில் அது விசையுடன் பயணம் செய்தது.

**ரா**மன் நம்பீசன் இந்த சந்தர்ப்பத்தில் அக்னியில் கவிழ்த்து வைத்த குடத்தின் மேற்புறம் நெய் ஊற்றினார்.

சரியாக அதே நேரத்தில் அந்த வீட்டின் கிழக்குப்புறத்தின் மேற்பகுதியில் ''பும்'' என்றொரு சத்தம் கேட்டது. உடனே எல்லார் பார்வையும் அதை நோக்கித் திரும்பியது.

அக்னிக் கோளம் ஒன்று வருகிறது. ராமன் நம்பீசனின் தலைக்கு நேராக வந்த அந்தக் கோளம் அவர் தலையை மூன்று முறை வலம் வந்தது. பின்பு ஹோமகுண்டத் திற்கு நேராக வந்து பனிச் சிதறல்களைப் போல் வெடித்துச் சிதறியது.

யாருக்கும் ஒரு சில விநாடிகள் எதுவும் புரியவில்லை.

ஹோமகுண்டத்தில் ஒரு பெரிய நெருப்பு உருண்டை மட்டுமே தெரிந்தது. பாம்பு அடைக்கப்பட்டிருந்த குடத்தைக் காணவில்லை.

ராமன் நம்பீசன் இடது கையால் கல்விளக்கை எடுத்தார். ஹோமகுண்டத்து அக்னி உருண்டையை லட்சியமாக்கி ஓங்கி வீசினார். அதற்குள் இருந்த குடத்தை உடைப்பதுதான் அவரது நோக்கம். ஆனால், நடைபெற்றதோ அதற்கு எதிர்ப்பதமாகத் தான்!

நெருப்பு உருண்டையிலிருந்து உயர்ந்து எழுந்த கையொன்று அந்தக் கல்விளக்கைத் தடுத்துப் பிடித்தது. பழுக்கக் காய்ச்சிய தாமிரத்தின் நிறமுள்ள மோதிரங்கள் - வளையல்கள் அணிந்த ஒரு கை!

ராமன் நம்பீசன் உற்று கவனித்தார். கைத்தண்டையில் நாக வளையல்கள். நம்பீசன் ஒரு கணம் திடுக்கிட்டுப் பின்வாங்கி னார்.

அந்தக் கை விரல்களில் நகங்கள் வளர்ந்து வந்தன. முதலில் பார்த்தபோது நகங்கள் இயல்பாகத் தென்பட்டன. இப்போது ஒவ் வொரு நகமும் ஒன்றரை அங்குலத்திற்கு மேல் நீண்டிருந்தன.

நாலாள் பலத்தையும் ஒருங்கே கொண்ட ஒரு மனிதனால் கூட எடுக்க முடியாத அந்தக் கல்விளக்கை ராமன் நம்பீசன் மிகவும் அனாயாசமாகத் தூக்கி, விசையுடன் அக்னி குண்டத்தில் அடித்தார். ஆனால், நெருப்பிற்குள்ளிருந்து எழுந்த மென்மை

யான ஒரு பெண்ணின் கை அதை வெகு லாகவமாகத் தடுத்துப் பிடித்தது!

ராமன் நம்பீசனது திகைப்பு இன்னும் விலகவில்லை. திடுமென்று எழுந்த அவர் ஒரு சாவியை எடுத்துப் பூட்டியிருந்த அறையைத் திறந்தார். அவசர அவசரமாக அறைக்குள் நுழைந்த நம்பீசன் ஒரு மூலையில் சாய்த்து வைத்திருந்த வாளை எடுத்தார். ரத்தக்கறை படிந்திருந்த அந்த வாளின் உதவியால் அவர் முன்னோர் நரபலிகள் நடத்தியிருந்தனர்.

ராமன் நம்பீசனும் தனது பங்கிற்கு ஏழு கன்னிப் பெண்களை ரத்தசாமுண்டிக்கு பலியிட்டிருந்தார். வாளை எடுத்தவர் கோபத்துடன் ஹோமகுண்டத்தை நெருங்கினார். அப்போதும் அந்தக் கை ஹோமகுண்டத்திற்குள் இருந்தபடி கல் விளக்கைத் தாங்கிக் கொண்டிருந்தது.

வாளால் வெட்டினால், வாள் கல்விளக்கின் மீதுதான் படும் என்று முதலில் பயந்த நம்பீசன் தன்னையும் அறியாமல் சற்றுப் பின்னுக்கு நகர்ந்தார்.

கல்விளக்கு உயரத் தொடங்கியது. மேல்புறம் சுற்றளவு குறைந்த பகுதியைப் பிடித்தபடி விளக்கின் அடிப்பரப்பை உயர்த்தியது அந்தக் கை.

ராமன் நம்பீசன் மறுபடியும் தன்னையும் மீறி ஒரு கணம் திடுக்கிட்டார். தனது திகைப்பை மற்றவர்கள் பார்த்துவிடக் கூடா தென்று சாமர்த்தியமாக அதை மறைக்கவும் செய்தார்.

உண்ணி மேனோனும் அவர் தோழர்களும் வியப்பில் வாயடைத்துப் போயிருந்தனர்.

ராமன் நம்பீசன் வாளை உயர்த்தி வெட்டினால்... என்ன நடக் கும் என்பதைக் காணும் ஆவலுடன் அவர்கள் காத்திருந் தனர்.

அவர்களது வியப்பை மேலும் அதிகமாக்குவது போல் மற்றொரு காட்சியும் தெரிந்தது.

ஹோமகுண்டத்திலிருந்து குடமொன்று உயர்ந்து வந்தது. நம்பீசன் கவிழ்த்து வைத்திருந்த குடம் இப்போது நிமிர்ந்தபடி

வெளியே வந்தது. மேற்புறமாக உயர்ந்த அது வெளிவாசலை நோக்கி நகர்ந்தது. அதை வேடிக்கை பார்ப்பதைத் தவிர நம்பீசனால் வேறு எதுவும் செய்ய முடியவில்லை.

கோபம் நிறைந்த பார்வையுடன் ஹோமகுண்டத்தைப் பார்த்தார். கல்விளக்கு அப்போதும் தலைகீழாக நின்று கொண்டிருந்தது.

நம்பீசன் எதையோ யோசனை செய்தவராகச் சட்டென்று அங்கிருந்து புறப்பட்டு, வீட்டின் தென்புறமிருந்த முப்பாட்டனாரின் சமாதியை நெருங்கினார்.

வலது கையில் வைத்திருந்த வாளை விசையாக சுழற்றித் தன் உச்சந்தலையை நோக்கி இறக்கினார்.

மூன்று தடவை வாளைச் சுழற்றிச் சுழற்றி மெதுவாக இறக்கியதும் கண்ணுக்குத் தெரியாத ஒரு கரம் அந்த வாளை இறுகப் பிடித்துத் தடுத்தது.

''டேய் மடையா... நாம் தோல்வியடைவதா?'' கொள்ளை நோயில் இறந்து போன மனிதர்களை சவக்குழி வரையில் நடக்க வைத்த தன் பெரிய மாமாவின் குரல் அது என்று நம்பீசன் அடையாளம் கண்டுகொண்டார். இப்போதுதான் முதல் முறையாக அவர் அந்தக் குரலைக் கேட்கிறார்.

''நான் என்னதான் செய்வது?'' ராமன் நம்பீசன் ஆற்றாமையுடன் கேட்டார்.

''அந்தக் கையை உடனே போய் வெட்டியெறி!'' மாமாவின் வார்த்தைகள் திடமாக ஒலித்தன.

சட்டென்று ஏற்பட்ட புத்துணர்ச்சியுடன் தன் கையிலிருந்த பலிவாளைச் சுழற்றியபடி நம்பீசன் ஹோமகுண்டத்தை நோக்கி வேகமாக நடந்தார்.

''அதோ... அந்தக் கை!''

அந்தக் கை அப்போதும் விளக்கைத் தலைகீழாகப் பிடித்திருந்தது. நம்பீசன் ஹோமகுண்டத்தை மிகவும் நெருங்கி வந்தபோது கல்விளக்கு சரிந்து விழுந்தது.

அந்தக் கையால் அதிக நேரம் பளுவைத் தாங்க முடியாததால், விளக்கு சரிந்திருக்கக் கூடும். தன் முன்னோர்களின் சக்தி வேலை செய்யத் தொடங்கி விட்டதா?

நம்பீசன் ஒரு கணம் யோசித்தார்.

தான் வெட்டுவதற்கு ஏற்றபடி கை வாகாகவே இருக்கிறது. ராமன் நம்பீசன் வலது கையை உயர்த்தினார். அவர் கையிலிருந்த வாள் தீ ஜுவாலைகள் பட்டு மின்னியது.

தன் முன்னோர்களையும் பிதாமகன்களையும், பிற தெய்வங் களையும் மனத்திற்குள் தியானித்தபடி, ஆவேசத்துடன் அந்தக் கையைக் குறிபார்த்து வாளால் ஓங்கி வெட்டினார்.

நெருப்புப் பொறிகள் நான்கு புறமும் பொறிப் பொறியாகச் சிதறின. நெருப்புக்கங்குகள் விசையுடன் தெறித்தன.

ராமன்நம்பீசனின் முந்தைய பரம்பரையினர் பயன்படுத்திய இருபுறமும் கூர்மை வாய்ந்த அந்தக் கொடுவாள் அந்தக் கையின் ஏதோ ஓர் இடத்தில் பதிந்தது.

ஆனால், அதன் விளைவோ முற்றிலும் எதிர்பாராததாக இருந்தது.

இருபுறமும் கூர்மையுடன், பட்டாலே சீவித்தள்ளும் கூர்மை யான வாளை அந்தக் கை அழுத்திப் பிடித்திருந்தது. வாளை விசையுடன் உருவினால் அந்தக் கையின் விரல்கள் துண்டு துண்டாகி விழும் என்று கணக்கிட்ட நம்பீசன் வாளை தன்னை நோக்கி இழுத்தார்.

ஆனால், அதன் விரல்களோ, கையோ அறுபட்வே இல்லை. அதற்கு பதிலாக ராமன் நம்பீசன் முகம் அக்னி குண்டத் திற்குள் அமிழ்ந்தது!

தீ ஜுவாலைகளுக்குள் அவர் அந்தக் கைக்கு உரிய முகத்தைக் கண்டார்.

அப்பா எப்படிப்பட்ட ஒரு காட்சி!

ஜொலிக்கும் விழிகள் மற்றும் ரத்தம் படிந்த உதடுகளுடன், தன்னையே உற்றுப் பார்க்கும் ஒரு பெண்ணின் முகம்!

கூர்மையான தனது கத்தி அந்தப் பெண்ணின் கையில் ஓர் உருளைத் தண்டு போல் அழகாகப் பொருந்தியிருந்தது.

''டேய் துரோகி... நீ என்னையா சோதிக்கத் துணிந்தாய்?''

ஹோமகுண்டத்தில் தெரிந்த முகத்தின் வாய் அசைந்தபோது, நம்பீசன் வார்த்தைகளை கவனித்தார்.

முகத்தை அக்னி குண்டத்திலிருந்து விடுவிக்க முயன்றார். ஆனால், முடியவில்லை. ராமன் நம்பீசனின் முகம் மற்றும் முன் நெற்றிப் பகுதியிலிருந்த முடிகள் கருகின. முடி கருகிய நாற்றம் மூக்கைத் துளைத்தது. முடியைத் தாண்டி முகத்தின் தசைப் பகுதிகளில் நெருப்பு ஜுவாலைகள் ஊடுருவின. எவ்வளவோ போராடியும் அவரால் அங்கிருந்து சட்டென்று தன் முகத்தை வெளியே எடுக்க முடியவில்லை!

அவர் உடம்பின் பிற பாகங்கள் வேதனையால் துடித்து விடைத்தது. கால்கள் தரையை ஓங்கி அடித்தன.

அக்னி குண்டத்திற்குள் நடைபெறும் எதுவும் வெளியே நின்று வேடிக்கை பார்க்கும் உண்ணி மேனோனுக்கும் அவர் நண்பர்களுக்கும் தெரியவே இல்லை.

அவர்கள் திகைப்புடன் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தனர். படிப்படியாக நம்பீசனின் உடல் துடிப்பு குறைந்தது. சட்டென்று ஒரு கணத்தில் அதுவும் நின்று போனது.

''ஆள் இறந்து விட்டார்!'' -சங்கரன் நாயர் வருத்தத்துடன் கூறினார்.

அதே நேரம் பரமேஸ்வரன் மெதுவாக அந்த வீட்டிலிருந்து வெளியேறினார். வெளிவாசலைக் கடந்து வந்த அவர், அங்கிருந்து ஓடித் தப்பிக்கலாம் என்று நினைத்தார்..

''சரி நாம் புறப்படலாமா?'' -ராமசாமி பின்னுக்கு நகர்ந்தபடி கேட்டார்.

இனிமேல் அங்கிருப்பதால் எந்தவிதப் பயனும் இல்லையென்று தெரிந்துவிட்டதால் எல்லாரும் வீட்டிற்கு வெளியே வந்தனர்.

''மணி பதினொன்றரை ஆகிவிட்டது'' -சங்கரன் நாயர் கைக்கடிகாரத்தைப் பார்த்தபடி பேசினார்.

'ஐயோ நேரம் நள்ளிரவை நெருங்குகிறதே... எப்படியாவது வீட்டிற்குப் போய்ச் சேர்ந்து விட்டால் நல்லது' என்று பரமேஸ்வரன் கண்ணை இறுக மூடி பரபரத்தார்.

''என்ன பரமேஸ்வரன் ஏகத்திற்கு பயந்து விட்டீர்கள் போலிருக்கிறதே?'' சங்கரன் நாயர் கேட்டார்.

''நல்ல கேள்வி கேட்டீர்கள்! பயப்படுத்தாத மாதிரிக் காரியங் களா நம் கண்களுக்கு முன்னால் நடந்ததெல்லாம்?'' கண்ணைத் திறக்காமலே பரமேஸ்வரன் பதிலளித்தார்.

''உண்மைதான். ஒரு விஷயத்தை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்'' காரை ஸ்டார்ட் செய்து புறப்படத் தொடங்கியதும் உண்ணி மேனோன் கூறினார்.

''எந்த விஷயத்தை?'' நாயர் கேட்டார்.

''அங்கு நாம் பார்த்ததை... அது அந்த இடத்துடன் தீர்ந்து விட்டது. இனிமேல் நாம் அதைப் பற்றி நினைக்கவே கூடாது!'' மேனோன் ஓர் எச்சரிக்கை மாதிரி இதைக் கூறினார்.

எல்லாருக்கும் அது உசிதமானதாகவே தோன்றியது. முதல் காரியம் அவர்கள் ஒரு மந்திரவாதியைக் காணச் சென்றதை ஊரார் தெரிந்து கொள்வார்கள். இரண்டாவதாக, ராமன் நம்பீசனது மரணத்திற்குக் காரணம் இவர்கள்தான் என்ற குற்றச்சாட்டிற்கும் ஆளாகலாம்.

எனவே, நம்பீசனின் வீட்டில் நடந்ததையெல்லாம் மறப்பதென்று தீர்மானித்தனர்.

ஆனால், அதனால் அவர்களது பிரச்சினை தீரவில்லையே? அவர்களது முயற்சியின் முதற்கட்டம் முடிவடைந்துள்ளது. அதுவும் அப்பட்டமான தோல்வியுடன்!

உண்மையைச் சொல்வதானால் இனிமேல்தான் அவர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டியுள்ளது. நீசமனங்கள் அனைத்தும் ஒரே மாதிரி யோசித்தன.

ஒவ்வொருவரும் தத்தமது வீட்டையடைந்தபோது நள்ளிரவு ஒருமணியாகி விட்டது. உண்மையில் அன்று அந்த நால்வருக்கும் உறக்கமே வரவில்லை.

கண்ணிமைகள் மயங்கி மூடத் தொடங்கும்போது, ராமன் நம்பீசனது வீட்டில் நடந்தவை, ஒரு திரைப்படம் மாதிரித் தெளி வாகக் கண்களுக்குத் தெரியும். அத்துடன் திடுக்கிட்டெழும்போது உறக்கம் காததூரத்தைக் கடந்து விடும். அருகில் படுத்திருக்கும் மனைவியின் மீது கை படும்போது மறுபடி தைரியம் தோன்றும். மறுபடி உறங்கும் முயற்சி... மறுபடி திடுக்கிடல்...

## 12

மறுநாள் காலையில் சங்கரன் நாயர் கண்விழித்தபோது மணி ஒன்பதைத் தாண்டியிருந்தது. மனைவி காபித் தம்ளருடன் வந்த போது யாரோ இரண்டு தடவை போன் செய்ததாகத் தெரிவித்தாள்.

''யாரென்று பேர் ஏதாவது சொன்னார்களா?'' சங்கரன் நாயர் கேட்டார்.

''யாரோ ஒரு பெண் பேசினாள். பெயரைச் சொல்ல வில்லை!'' அவர் மனைவி கூறினாள்.

''பெண்ணா? அப்படி யார் இருக்கிறார்கள்?''

அப்போது மறுபடியும் தொலைபேசி ஒலித்தது.

''அதை எடு!'' நாயர் பரபரத்தார்

அவர் மனைவி டெலிபோனை எடுத்து வந்து அவரது கட்டிலின் அருகே இருந்த டீப்பாயில் வைத்தாள்.

''ஹலோ... நான் சங்கரன் நாயர். நீங்கள் யாரென்று தெரியவில்லையே?'' ரிசீவரைக் காதில் வைத்தபடி கேட்டார்.

''நேற்றிரவு உங்களை ராமன் நம்பீசனது வீட்டில் சந்தித்தேன். போன காரியம் எப்படி வெற்றிதானே?'' பெண் குரல்.

''......................''

''பயப்படுகிறீர்களா என்ன? பயப்படுவதால் எந்தவிதப் பலனுமில்லை. செய்த தவறுக்கு தண்டனை அனுபவிக்க முடியாமல் தப்பிக்க முடியுமா என்ன? அதுவும் கொஞ்சம் கொஞ்சமாக... அதை நிறைவேற்றத்தான் நான் இங்கு வந்திருப்பதே!''

''நீங்கள்... யார் என்று புரியவில்லையே?'' அவர் குரல் நடுங்கியது.

''உண்மையிலேயே என்னை உங்களுக்குத் தெரியவில்லையா? அன்றைக்குக்கூட நான் உங்கள் பள்ளிக்கூடத்திற்கு வந்திருந்தேனே... ஞாபகமில்லையா? அதுதான் ஓர் ஏழைப் பையனை உங்கள் பள்ளிக்கூடத்தில் சேர்ப்பதற்காக சாரட்டில் வந்தேனே...''

''யார் இந்திராபாயா நீங்கள்?'' அவரது கேள்வி முடிவதற்கு முன்பாகவே எதிர்முனையில் டெலிபோன் வைக்கப்பட்டது.

விடியற்காலைக் குளிர் இன்னும் விட்டபாடில்லை. இருப்பினும் சங்கரன் நாயரின் உடம்பு வியர்வையால் நனைந்தது.

''என்னங்க... என்னமோ பேயறைந்த மாதிரி இருக்கீங்க?'' -மனைவி விசாரித்தாள்.

''அதுவா... வந்து... ஒன்றுமில்லை!'' நாயர் போர்வையை விலக்கிவிட்டுப் படுக்கையிலிருந்து எழுந்தார்.

'எதற்கும் தன் நெருங்கிய நண்பரான சப் இன்ஸ்பெக்டர் ஜகதீஷை சந்திக்க வேண்டியதுதான்' என்று சங்கரன் நாயர் தீர்மானித்தார்.

மாந்திரீக வழியை விட, போலீஸ் முறையில் அவளை மடக்க முடியுமா என்று பார்க்க வேண்டும்.

இந்திராபாய் மோசமான மந்திரங்கள் செய்யும் ஒரு சூனியக்காரக் கிழவியென்றும், ஏதோ மந்திரஸித்தி மூலம் குடுகுடு கிழவியான அவள் இளம்பெண்ணாகத் தோற்றமளிக்கிறாள் என்றும் ஜகதீஷிடம் அவளைப் பற்றி முறையிட வேண்டும் என்பது சங்கரன் நாயரது திட்டம்.

சங்கரன் நாயர் தனது அம்பாசிடர் காரை ஸ்டார்ட் செய்தார். போலீஸ் ஸ்டேஷனுக்குச் சற்று முன்பாகக் கோயில் மைதானத்தில் காரை நிறுத்தினார். ஒரு முறை கோயில் பக்கம் திரும்பி மனத் திற்குள் பிரார்த்தனை செய்தார். பிறகு போலீஸ் ஸ்டேஷனுக்குள் நுழைந்தார்.

''ஹலோ உட்காருங்கள் சார். ஏதாவது விசேஷமான செய்தி உண்டா?'' சங்கரன் நாயரைக் கண்டதும், ஜகதீஷ் தோழமை யுடன் குசலம் விசாரித்தார்.

''நான் வந்திருப்பது ஒரு முக்கியமான செய்தியைச் சொல்வதற்காக!'' -நாயர் நேரடியாக விஷயத்திற்கு வந்தார்.

''தாராளமாகப் பேசலாமே. சொல்லுங்கள்...'' என்றபடி சௌகரியமாக உட்கார்ந்தார் ஜகதீஷ், சங்கரன் நாயரது பேச்சைக் கேட்பதற்காக!

''விஷயம் ரகசியமாக இருக்க வேண்டும். சமீப காலத்தில் புதிதாக இந்த ஊருக்குக் குடிவந்திருக்கிற இந்திராபாயைப் பற்றிய விஷயம்.''

''இந்திராபாய்,'' என்ற பெயரைக் கேட்டதும் இன்ஸ் பெக்டர் ஜகதீஷ் திடுக்கிட்டார்.

சப்இன்ஸ்பெக்டர் ஜகதீஷின் முகத்தில் சட்டென்று தோன்றி மறைந்த திடுக்கிடலை, சங்கரன் நாயரும் கவனிக்கத் தவற வில்லை.

''நான் குறிப்பிடும் நபரை உங்களுக்கு ஏற்கெனவே தெரியு மென்று தோன்றுகிறது. அப்படித்தானே?'' சங்கரன் நாயர் கேட்டார்.

தான் வந்துள்ள காரியத்திற்கு ஒரு 'பிடி' கிடைத்து விட்டதாக சங்கரன் நாயருக்குத் தோன்றியது. அப்படியானால் சுலபமாகவும், சுருக்கமாகவும் பேச்சை முடித்து விடலாமே.

''இந்திராபாயைத்தானே சொல்கிறீர்கள். நன்றாகத் தெரியும்? அவரைப் பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது?'' ஜகதீஷ் சாதாரண மாகக் கேட்டார்.

''இருக்கிறது மிஸ்டர் ஜகதீஷ், ஏராளமான செய்திகள் இருக்கிறது!'' என்றவாறே நாயர் சுற்றுமுற்றும் பார்த்தார்.

''இந்த இடத்தில் அதைப்பற்றிப் பேச உங்களுக்குத் தயக்கமாக இருக்கிறதா?''

''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. இங்கு அடிக்கடி யாராவது வந்து போவார்கள். அதனால், நிதானமாக உட்கார்ந்து பேச முடியுமா என்று யோசிக்கிறேன்.''

சங்கரன் நாயரது வார்த்தையைக் கேட்ட ஜகதீஷுக்கு அவர் ஏதோ முக்கியமான, ரகசியம் பேச விரும்புகிறார் என்று தோன்றியது.

தனக்கு முன்பின் பழக்கமில்லாத இந்திராபாய் தன்னைப் பார்த்தவுடன் பேசிய வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. ஸ்போர்ட்ஸ் கோட்டாவில் தனக்கு வேலை கிடைத்தது என்பதைக் கூட அந்தப் பெண்மணி தெரிந்து வைத்திருக்கிறாள்.

முதல் நாளன்று பாட்டுப்பாடி மழை பெய்ய வைத்த அன்றே அந்தப் பெண்ணைப் பற்றித் தன் மனத்தில் ஏதேதோ அபிப் பிராயங்கள் தோன்றின. பலரது மனங்களை அந்தப் பெண்மணி இன்னும்கூட புரியாத புதிராகவே பயமுறுத்துகிறாள்.

''ஒன்று செய்யலாமே... கொஞ்ச நேரத்தில் அடிஷனல் எஸ்.ஐ.வந்து விடுவார். நாம் டிராவலர்ஸ் பங்களாவிற்குப் போய் சௌகரியப்படி பேசலாம். என்ன சொல்கிறீர்கள்?''

ஜகதீஷ் பேசிக் கொண்டிருக்கும்போதே அவர் குறிப்பிட்ட மாத்யூஸ் அங்கு வந்தார்.

''ஹலோ மிஸ்டர் மாத்யூஸ், இவர் மிஸ்டர் சங்கரன் நாயர் பள்ளிக்கூட மேனேஜர். என்னுடைய நல்ல நண்பரும் கூட. நாங்கள் அவசரமாக ஓர் இடம்வரை போக வேண்டிஉள்ளது. சற்று நேரத்தில் வந்து விடுகிறேன்!'' என்றபடி இருக்கையை விட்டு எழுந்தார்.

''நான் பைக்கில் வருகிறேன். நீங்கள் புறப்படுங்கள் சார்!'' ஜகதீஷ் தனது மோட்டார் சைக்கிளை நோக்கிப் போனார்.

இருவரும் சற்று நேரத்திற்குள் டிராவலர்ஸ் பங்களாவை அடைந்தனர். வாட்ச்மேன் அவர்களுக்காக ஓர் அறையைத் திறந்து விட்டான்.

''என்ன சாப்பிடுகிறீர்கள்?'' சங்கரன் நாயர் கேட்டார்.

''லைட்டாக ஏதாவது போதும். இரண்டு சில்லி சிக்கன், இரண்டு டீ!'' ரூம் பாயிடம் ஆர்டர் செய்து விட்டு சங்கரன் நாயர் பக்கம் திரும்பினார்.

''சொல்லுங்கள். உங்களது பிரச்சினை என்ன?''

''அந்தப் பெண்ணைப் பற்றி முதலில் உங்களது அபிப் பிராயம் என்ன என்பதைத் தெரிவித்தால் நல்லது!'' சங்கரன் நாயர், ஜகதீஷிடம் கேட்டார்.

ஜகதீஷ் சற்று நேரம் மௌனமாக யோசித்தபடி அமர்ந் திருந்தார்.

''அந்தப் பெண்மணி அசாதாரணமானவளாகத் தோன்று கிறாள்!.'' என்று ஜகதீஷ் கூறினார்.

''உண்மைதான்! நான் சொல்ல வந்ததும் அதையேதான்!'' சங்கரன்நாயர், ஜகதீஷ் கூறியதை ஆமோதித்தார்.

ஏறத்தாழத் தன்மனநிலைதான் ஜகதீஷுக்கும் என்பது புரிந்தபோது, சங்கரன் நாயருக்குச் சற்று ஆறுதலாக இருந்தது. மற்றொரு வகையில் கூறினால் உற்சாகமாகக் கூட இருந்தது.

''நீங்கள் அந்தப் பெண்ணைப் பற்றிக் குறிப்பிடுமளவு அப்படி என்ன நடந்திருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை.'' ஒரு போலீஸ் அதிகாரி என்ற நிலையில் ஜகதீஷ் குறிப்பிட்டார்.

''சொல்கிறேன். அவள் ஒரு மந்திரவாதினி, இன்னும் தெளிவாகச் சொல்வதானால் சூனியக்காரி!'' சங்கரன் நாயர் பேச்சைத் தொடங்கினார்.

அந்த வார்த்தைகள் ஜகதீஷின் மனத்தில் சுருக்கென்று தைத்தன.

சங்கரன் நாயர் தொடர்ந்தார்:

''அந்தப் பெண் ரகசியச் செயல்களின் உறைவிடமாக இருக்கிறாள். சந்தர்ப்ப வசமாக நான் அவளது முன்கதையைத் தெரிந்துகொள்ள நேர்ந்தது. துரதிர்ஷ்டவசமாக அது முழுக்க மிகவும் மோசமாக உள்ளது.''

''உங்கள் நண்பரான மிஸ்டர் அச்சுதன் பிள்ளைதானே அந்த பங்களாவைக் கட்டியவர்?'' ஜகதீஷ் குறுக்கிட்டார்.

''ஆமாம், அவர்தான் கட்டினார். அந்த பங்களாவின் வேலை முடிந்த ஒரு சில நாட்களுக்குள்ளேயே அவர் கொல்லப்பட்டார்.''

''அது ஒரு ஆக்ஸிடென்ட் அல்லவா?''

''இல்லை. ஒரேயடியாக அப்படித் தள்ளிவிட முடியாது. அந்த விஷயத்தில் எனக்கு ஒரு சந்தேகம் உண்டு.'' தனது கருத்தை வெளியிடத் தகுந்த சந்தர்ப்பம் வாய்த்ததாக நினைத்தார்.

''அதிலென்ன சந்தேகம்?'' ஜகதீஷின் நெற்றி சுளிவடைந்தது.

''அந்த பங்களாவில் என்னென்னவோ ரகசியங்கள் அடங்கி யுள்ளன. அந்த ரகசியங்களில் சிலவற்றை அச்சுதன் பிள்ளை தெரிந்து கொண்டிருக்கலாம். அந்த ரகசியங்கள் என்றென்றும் ரகசியமாகவே இருக்கவேண்டும் என்பதற்காக அச்சுதன் பிள்ளையின் வாயை அவள் நிரந்தரமாக அடைத்து இருக்கலாம் என்று தோன்றுகிறது. அதுதான் எனது சந்தேகம்.''

''என்ன... அப்படியும் இருக்குமா?'' ஜகதீஷ் திடுக்கிட்ட வராகக் கேட்டார்.

''ஆமாம். அப்படித்தான் இருக்க வேண்டும். அச்சுதன் பிள்ளையின் கார் ஆலமரத்தின் மீது மோதியது என்று கேள்விப் பட்டதும் நான் திகைப்படைந்தேன்.''

''நீங்கள் சொல்கிறபடி அது ஒரு விபத்தே அல்ல... அப்படித்தானே?''

''இருக்கலாம். இதன் பின்னணியில் நமக்குத் தெரியாத ஏதோ மந்திரதந்திரங்கள் இருக்கிறது.'' சங்கரன் நாயர் பதிலளித்தார்.

''அப்படியானால், அந்தப் பெண்ணைப் பற்றி நாம் நிறைய விசாரிக்க வேண்டியுள்ளது!''

''அதைச் சொல்லத்தான் உங்களிடம் வந்திருக்கிறேன்.''

''சரி, அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?''

''மிஸ்டர் ஜகதீஷ், நீங்கள் அந்தப் பெண்ணின் கடந்த கால வாழ்க்கையைத் தெரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும்.''

''தகுந்த ஒரு காரணமில்லாமல் எப்படி வெறுமனே அப்படி ஒரு விசாரணையைத் தொடங்குவது?''

''நீங்கள் சொல்வதும் உண்மைதான்!'' சங்கரன் நாயர் யோசனையில் ஆழ்ந்தார்.

''நீங்கள் இந்த விஷயத்தில் மிகவும் பிடிவாதமாக இருப்ப தால் நான் ஒரு யோசனை சொல்கிறேன். அச்சுதன் பிள்ளையின் மனைவியிடம் ஒரு புகார் கொடுக்கச் சொல்லுங்கள். அதில் தன் கணவரின் மரணம் விபத்தால் ஏற்பட்டது அல்ல. அவரது மரணத் திற்கு இந்திராபாய் ஒரு காரணமென்று அவர் சந்தேகப்படுவதாக அதில் குறிப்பிட்டால் போதும். மற்றதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்.''

''உண்மையிலேயே இது ஒரு நல்ல யோசனைதான். நானே அப்படி ஒரு புகாரை வாங்கி வருகிறேன்.'' சங்கரன் நாயர் மகிழ்ச்சியுடன் கூறினார்.

சிற்றுண்டியை முடித்துக் கொண்டு அவர்கள் புறப்பட்டனர். சங்கரன் நாயர் நேராக அச்சுதன் பிள்ளையின் வீட்டிற்குச் சென்றார். மாதவியம்மாளது அபிப்பிராயத்தில் இந்திராபாய் தங்கமான ஒரு பெண்மணியாக இருந்தாள். இருப்பினும் சங்கரன் நாயரது வற்புறுத்தலுக்கு இணங்கி இரண்டு வெள்ளைத் தாள்களில் அவள் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தாள்.

சங்கரன் நாயர் புகார் தயாரித்தார். நேராக போலீஸ் ஸ்டேஷனை அடைந்தார். நல்லவேளையாக ஜகதீஷ் அங்கு இருந்தார்.

புகாரை வாங்கிப் படித்த ஜகதீஷ் திருப்தியடைந்தார்.

''தற்சமயம் நான் இந்தப் புகாரைப் பதிவு செய்யப் போவதில்லை. காரணம் என்னவென்றால், இது ஒரு அசாதாரணமான கேஸ். முதலில் நான் ஒரு விசாரணையை மேற்கொள்ள வேண்டும். அதன் பிறகு தேவையான நடவடிக்கை எடுக்கலாம்'' என்றவர் புகாரின் இரண்டு பிரதிகளையும் தனது மேஜைக்குள் போட்டுப் பூட்டினார்.

''இன்று மாலை ஐந்து மணிக்கு என்னுடைய டூட்டி முடிகிறது. அதற்குப் பிறகு நான் அந்தப் பெண்மணியை சந்திக்கப் போகிறேன்.'' ஜகதீஷ் பேசினார்.

''நீங்கள் ஒரு விஷயத்தை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அதாவது இந்த ஏற்பாட்டில் நான் சம்பந்தப்பட்டிருப்பதாக ஒருபோதும் யாரிடமும் கூறாதீர்கள்!'' சங்கரன் நாயர், ஜகதீஷிடம் முன்னெச்சரிக்கையாகக் கூறவும் செய்தார்.

''நீங்கள் பயப்பட வேண்டாம். இந்த ரகசியம் என்னிடமிருந்து ஒருபோதும் வெளியாகாது!'' ஜகதீஷ் உறுதியளித்தார்.

தனது நோக்கம் நிறைவேறிவிடும் என்கிற அழுத்த மான நம்பிக்கையுடன் சங்கரன்நாயர் அங்கிருந்து புறப்பட்டார்.

வீட்டை அடைந்ததும் முதல் காரியமாக உண்ணி மேனோனுக்கு போன் செய்து விவரம் தெரியப்படுத்தினார். ராமசாமி ஊரில் இல்லாததால் அவரிடம் தகவலைத் தெரிவிக்க முடியவில்லை.

மேனோன் மகிழ்ச்சியடைந்தார். சங்கரன் நாயர் புத்திசாலிதான் என்று மனத்திற்குள் சிலாகிக்கவும் செய்தார்.

## 13

**ச**ரியாக ஐந்தரை மணிக்கு ஜகதீஷின் பைக் போலீஸ் ஸ்டேஷனிலிருந்து வெளியேறியது. இந்திராபாயின் பங்களாவை நோக்கி அதன் சக்கரங்கள் உருண்டன.

பங்களாவின் 'கேட்டை' அடைந்த ஜகதீஷ் ''மிஸ் இந்திரா பாய்'' - என்ற பெயரை ஒருமுறை வாய்விட்டு வாசித்தார்.

அப்போது சட்டென்று வீசிய காற்று கேட்டை உட்புறமாகத் திறந்துவிட்டது.

ஜகதீஷ் மோட்டார் பைக்கை காம்பவுண்டிற்குள் செலுத்தினார். கேட்டை அவர் தாண்டியவுடன், கதவுகள் மீண்டும் தாமாகவே மெல்லிய சப்தத்துடன் மூடிக் கொண்டன. ஜகதீஷ் அதை கவனித்ததாகத் தெரியவில்லை.

போர்டிக்கோவில் வண்டியை நிறுத்தி அணைத்த ஜகதீஷ், ஸ்டாண்ட் போட்டுவிட்டு நிலைவாசலை நெருங்கினார்.

காலிங்பெல் சுவிட்சை அழுத்த முற்படுவதற்குள் உட்புறத் தாழ்ப்பாளை நீக்கிக் கதவு திறக்கும் சத்தம் கேட்டது.

திறந்த கதவின் முன்னால் ஒரு மகாராணிக்கு உரிய கம்பீரத்துடன் இந்திராபாய் நின்றிருந்தாள்.

''வாருங்கள் மிஸ்டர் ஜகதீஷ், சற்று நேரத்திற்கு முன்புதான் உங்களைப் பற்றி யோசித்தேன். உடனே நீங்களே வந்து விட்டீர்கள்'' என்று வாசலில் வழிவிட்டு ஒதுங்கி நின்றாள் இந்திராபாய்.

ஜகதீஷ் பூட்சைக் கழற்றி வெளியில் வைத்துவிட்டு வரவேற்பு அறைக்குள் நுழைந்தார்.

அறைக்குள் மனோரஞ்சிதப் பூவின் வாசம். அத்துடன் சாம்பிராணியும் சந்தனமும் கலந்தது போல் இருந்தது. மனத்தை மயக்கும் மணம்.

''உட்காருங்கள் ஜகதீஷ்!'' இந்திரா சோஃபாவைச் சுட்டிக் காட்டியபடி கூறினாள்.

ஜகதீஷ் அமர்ந்தார்.

''அச்சுதன் பிள்ளையின் மனைவி ஒரு புகார் கொடுத்திருக் கிறார் இல்லையா?'' இந்திராபாய் நிதானமான குரலில் இயல்பாகக் கேட்டாள்.

ஜகதீஷுக்குத் தொண்டை அடைப்பது போல் ஓர் உணர்ச்சி ஏற்பட்டது.

இந்திராபாயின் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று புரியாமல் தவித்த ஜகதீஷ், அவள் முகத்தை கண்ணிமைக் காமல் பார்த்தார்.

அவரது இதயத்துடிப்பின் வேகம் அதிகரித்தது. தான் வருவதற்கு சற்று நேரத்திற்கு முன்னால் நடந்த சம்பவம் அதற்குள் எப்படி இவளுக்குத் தெரிந்திருக்கும்? யோசித்தது போலீஸ் மூளை. யார் வந்து சொல்லியிருக்க முடியும்?

''அச்சுதன் பிள்ளையின் மரணத்திற்கு நான் தான் காரணம் என்று அந்தப் புகாரில் குறிப்பிடப்பட்டிருக்கிறது இல்லையா?'' இந்திராவின் அடுத்த கேள்வி!

''உண்மைதான்!'' ஜகதீஷ் ஒரு விதமாக சமாளித்தபடி பேசினார்.

''ஆனால், அதில் இருக்கும் வாசகங்கள் என்னவென்று அவர் மனைவிக்குத் தெரியாதே. அவர் வெற்றுத் தாளில் கையெழுத்து போட்டுக் கொடுத்திருக்கிறார்?''

இந்திராபாயின் கடைசிக் கேள்வி ஜகதீஷைத் திடுக்கிட வைத்தது. உடம்பு முழுவதும் சிலிர்த்தது.

இதற்கென்ன பதிலைச் சொல்வது?

''சரி உட்காருங்கள்... இதோ வந்து விடுகிறேன்.''

இந்திரபாய் உள்ளே போனாள். திரும்பி வரும்பொழுது அவள் கையில் ட்ரே ஒன்று இருந்தது. கிளாஸ்களில் மாங்கோ ஜூஸ், நெய்யில் வறுத்த முந்திரிப்பருப்பு, சிகரெட் பாக்கெட் ஒன்று. அருகிலேயே சிறிய தீப்பெட்டி.

தான் விரும்பிச் சாப்பிடும் பொருள்களை அவள் எடுத்து வந்திருக்கிறாள். அதில் உள்ள சிகரெட்கூட தான் வழக்கமாகப் புகைப்பதுதான்!

''சாப்பிடுங்கள்!'' இருக்கையில் அமர்ந்த இந்திரா கூறினாள்.

தங்கச் சரிகையில் வெள்ளிச் சரிகை நட்சத்திரங்கள் பதித்த சேலையும் அதே நிறத்திலான ரவிக்கையும் அணிந்திருந்தாள்.

கழுத்தில் சிவப்புக் கற்கள் பதித்த பழைய கல் நெக்லஸையும் நீண்ட காசுமாலையும் அணிந்திருந்தாள்.

கைகளில் நாகவளையல்கள்.

அவளது நெருக்கம் மனோரஞ்சிதப் பூவாசம் வழங்கியது.

கன்னங்களில் அந்திவானச் சிவப்பு.

தீப்பிழம்புகளின் நிறம் பெற்ற உடல்.

''புகாரைப் பற்றி நான் சொன்னதெல்லாம் சரிதானே?'' புன்னகைத்தபடி கேட்டாள்.

அவளது சிரிப்பைக் கண்ட பிறகு ஜகதீஷுக்குச் சற்று ஆறுதலாக இருந்தது. இதுவரை இருந்த இறுக்கம் அகன்றது போல் இருந்தது. தன் மனத்தில் ஓடும் நினைப்புகளைக்கூட இவளால் எப்படிப் புரிந்து கொள்ள முடிகிறது என்று அவருக்கு வியப்பாக இருந்தது.

''நீங்கள் சொன்னதெல்லாம் உண்மைதான்!'' ஜகதீஷ் ஒப்புக்கொண்டார்.

ஜகதீஷ் டம்ளரை எடுத்து ஒரு மிடறு குடித்தார். அப்பா... என்ன ஒரு சுவை!

இவ்வளவு சுவையான மாம்பழச்சாறை இதுவரை ஜகதீஷ் பருகியதே இல்லை. முந்திரிப் பருப்பும் அருமை.

டீப்பாயின் கீழிருந்து ஆஷ்ட்ரே ஒன்றை எடுத்து வைத்தாள் இந்திராபாய்.

ஜகதீஷ் சிகரெட்டைப் பற்ற வைத்தார்.

''இந்த வீட்டில் வேலைக்காரர்கள் யாருமில்லையா?'' ஜகதீஷ் விசாரித்தார்.

''யாருமில்லை. எனக்குத் தேவையான பொருள்களை போன் செய்து கூறுவேன். கொண்டுவந்து கொடுப்பார்கள். இன்றைக்கு நீங்கள் வருவீர்கள் என்று தெரியும். ஹோட்டல் 'பிளாஸா'வி லிருந்து இவற்றை வரவழைத்தேன்.''

தனக்கு விருப்பமான ஹோட்டல் பிளாஸாதான். என்ன ஆச்சரியம்!

ஒரு வேளை இதெல்லாம் மந்திர வேலையாக இருக்குமோ?

''நான் சாதாரணமாக அங்குதான் சாப்பிடுவது வழக்கம். ஆமாம், இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரிந்தது?''

''எனக்குத் தெரியாததென்று எதுவும் இல்லை. ஒருவர் எனக்கு அறிமுகமாகும்போதே, நான் அவரைப் பற்றிய எல்லாவற்றையும் தெரிந்து கொள்வேன்.''

இந்திராவின் இந்த பதில், ஜகதீஷுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பத்தை அளித்தது.

''அப்படியானால், நாங்கள் நினைத்தது சரிதான் இல்லையா?'' ஜகதீஷ் நேரடியாக விஷயத்திற்கு வந்தார்.

''என்ன கேட்க விரும்புகிறீர்களோ அதைத் தயங்காமல் கேளுங்கள். ஆனால் ஒரு விஷயம்...'' இந்திரபாய் எதையோ யோசிப்பதாகத் தோன்றியது.

அவள் என்ன சொல்ல வருகிறாள் என்பதை அறிந்து கொள்ள ஜகதீஷுக்கு ஆர்வம் தோன்றியது. அவளது பேச்சு வித்தியாசமானதாகத் தெரிந்தது. ஒருபுறம் எல்லாம் தெரிந்தவள் போலவும், மறுபுறம் எதுவும் தெரியாத வெகுளி போலவும் தோன்றியது.

''என்ன பேச்சைப் பாதியிலேயே நிறுத்திவிட்டீர்கள்?'' ஜகதீஷ் இரண்டாவது சிகரெட்டைப் பற்ற வைத்தார்.

''புகாரை நீங்கள் இன்னும் பதிவு செய்யவில்லையே?''

''பதியவில்லை.''

''நல்ல வேலை செய்தீர்கள். இல்லாவிட்டால் நான் கோர்ட் படியேற நேர்ந்திருக்கும். எனக்கு அதில் எந்த விதமான சிரமமும் கிடையாது. ஆனால், மற்றவர்களுக்கு அதெல்லாம் ஒரு தொல்லையாக இருக்கும் என்பதுதான் காரணம்.''

''எதனால் அப்படிச் சொல்கிறீர்கள்? எனக்குப் புரியவில்லை!''

''சொல்கிறேன் மிஸ்டர் ஜகதீஷ். இதை நீங்கள் ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. இன்னும் சொல்லப்போனால், எந்த விதத்திலும் எனக்குத் தொடர்பில்லாத ஒரு காரியத்திற்காக மற்றொருவரது பெயரில் நான் ஒரு புகார் எழுதித்தருவது முறையானதும் அல்ல!''

''உண்மையில் நீங்கள் பேசுவது எனக்குப் புரியவே இல்லை.'' என்ற ஜகதீஷ் அவளை சந்தேகத்துடன் பார்த்தார்.

மேற்புறம் மின்விசிறி சுழல்கிறது. சுற்றுப்புறம் முழுவதும் மனோரஞ்சித மணம் பரவியிருந்தது. மின் விசிறியின் காற்று அவளது ஆடைகளில் அலைகளை எழுப்பியது. ஆனால், மற்றொரு விஷயம் ஜகதீஷின் கவனத்தைக் கவரத் தவறவில்லை, 'இவ்வளவு காற்றிலும் அவளது தலைமுடி கொஞ்சம்கூட அசையவே இல்லை. செதுக்கி வைத்த சிலையின் முடிபோல அவை சலனமற்றிருந்தன. சங்கரன் நாயர் கூறியது போல் தனக்கு முன்பாக அமர்ந்திருப்பவள் ஒரு சூனியக்காரி தானோ? அல்லது அபூர்வ சக்தி கொண்ட வேறு ஏதோ ஒரு துர்தேவதையாக இருப்பாளோ?' மெல்லிய திகைப்பு ஜகதீஷைச் சூழ்ந்து கொண்டது.

இருள் பரவத் தொடங்கும் நேரம்.

பங்களாவின் முன்புறத் தோட்டத்தில் மாலைக் கதிரவனின் சிவப்புப் படிந்திருந்தது. இன்னும் சில நிமிடங்களில் அதுவும் மறைந்துவிடும்.

இருட்டுவதற்கு முன் அங்கிருந்து புறப்பட்டு விட வேண்டுமென்று விரும்பியது ஜகதீஷின் மனம்.

அறைக்குள் விளக்கு எரியத் தொடங்கியது. மச்சுப் பகுதியிலிருந்து தொங்கிய பிரமாண்டமான கண்ணாடியாலான அலங்கார விளக்கின் ஒளி சுவர்களில் வானவிற்களை வரைந்தன.

''சங்கரன் நாயருக்கு என்மீது கோபம் ஏற்பட்டதற்கான காரணத்தை நான் சொல்கிறேன். சொல்லாமல் இருக்கக்கூடாது என்பதற்காக சொல்கிறேன். ஒரு வகையில் நான் அதைச் சொல்லியே தீர வேண்டும்.'' பேசிய இந்திராபாய் சற்று நேரம் கண்களை மூடியபடி இருக்கையில் சாய்ந்து உட்கார்ந்தாள்.

வார்த்தெடுத்த சிலையைப் போல் அமர்ந்திருக்கும் அந்த அழகு வடிவத்தைக் கண்ணிமைக்காமல் பார்த்தபடி அமர்ந்திருந் தார் ஜகதீஷ்.

அவள் நெற்றிப் பரப்பிலும் மூக்கு முனைகளிலும் சன்ன மான வியர்வைத் துளிகள் அரும்பத் தொடங்கின.

'அவள் என்ன சொல்லப் போகிறாள்?' ஜகதீஷ் யோசனை யில் ஆழ்ந்தார்.

சற்று நேரத்திற்குப் பிறகு கண்களைத் திறந்த இந்திராபாய் பேசத் தொடங்கினாள்:

''நான் அந்தக் காட்சியை வேடிக்கை பார்த்துக் கொண் டிருந்தேன். அந்த எலும்புக்கூடு இன்னும் அங்கேயே தான் உள்ளது.'' வாசலுக்கு வெளியே பார்வையைச் செலுத்தியபடி கூறினாள்.

''என்ன எலும்புக்கூடா? எங்கே இருக்கிறது?'' ஜகதீஷ் எதுவும் புரியாதவராகக் கேட்டார்.

''உங்களை இங்கே சொல்லியனுப்பியிருக்கிறாரே அந்த சங்கரன் நாயரது வீட்டின் பின்புறமுள்ள செப்டிக் டாங்கிற்குள்!''

''யாருடைய எலும்புக்கூடு அது?''

''வேலைக்காரி அம்மிணியினுடையது. அந்தக் கள்ள நோட்டு வழக்கு தேய்ந்து மறைந்து போனது, ஜகதீஷுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. அதைப்பற்றி நீங்கள் அவரிடமே கேட்டுப் பார்க்கலாம். நீங்கள் ஒன்றை நினைவில் வைத்துக் கொள்வது நல்லது. அவர்கள் எதையும் செய்யத் தயங்காதவர்கள். எனவே, மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும்.'' இந்திராபாய் ஜகதீஷுக்கு எச்சரிக்கை தரவும் தவறவில்லை.

ஜகதீஷின் மூளைக்குள் சட்டென்று மின்சாரப் பிரவாகம் ஒன்று பாய்ந்தது போல் இருந்தது.

'சங்கரன் நாயரது வீட்டு செப்டிக் டாங்கில் ஓர் எலும்புக் கூடா?'

வேலைக்காரி ஒருத்தி திடீரென்று நள்ளிரவில் காணாமல் போன கதையை ஜகதீஷும் கேள்விப்பட்டிருந்தார். ஓகோ அந்தக் கதை இங்கிருந்துதான் தொடங்குகிறதோ?

''இன்னும் நான் ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்பு கிறேன். ஜகதீஷ், நீங்கள் இளைஞர். வேலையில் சேர்ந்து கொஞ்சம் நாட்கள்தான் ஆகிறது. மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும். நடக்கப் போவதை முன்கூட்டியே சொல்லிவிட்டால் சிலதெல்லாம் நடக்காமலே போய்விடும். எனவே மேற்கொண்டு நான் எதையும் கூறவிரும்பவில்லை...''

''இப்போதுதான் சில சிக்கல்கள் விடுபடுகின்றன.'' ஜகதீஷ் தனக்குத் தானே முணுமுணுத்தார்.

''நீங்கள் நினைப்பது சரிதான். அடுத்ததாக அச்சுதன் பிள்ளையின் மரணம். அது அவரது விதி. அவருக்கு என்ன கிடைக்க வேண்டுமோ, அது கிடைத்திருக்கிறது! கார் மரத்தில் மோதி இறக்க வேண்டும் என்பது அவரது தலையெழுத்து என்று எண்ணிக் கொள்ளுங்கள்.''

''சரி, அப்படியானால் நான் புறப்படட்டுமா?'' ஜகதீஷ் எழுந்தார்.

''சென்று வாருங்கள். எனக்கும் பூஜை செய்ய வேண்டி உள்ளது.''

இந்திராபாய் எழுந்தாள். ஜகதீஷ் கேட்டை கடந்தார்.

## 14

**மோ**ட்டார் பைக்கை ஸ்டார்ட் செய்து புறப்பட்ட ஜகதீஷ், வண்டியை நிறுத்திய இடம் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் திரிவிக்கிர மனின் வீடு.

அவர் ஆபீசர்ஸ் குவார்ட்டர்ஸில் தங்கியிருந்தார்.

''என்ன மிஸ்டர் ஜகதீஷ் இந்த நேரத்தில்...'' சர்க்கிள் கேட்டார்.

''ஸ்கூல் மேனேஜர் சங்கரன் நாயரது வீட்டைச் சோதனையிட வேண்டும்.'' ஜகதீஷ் கூறினார்.

''அவர் வீட்டு செப்டிக் டாங்கை என்று தெளிவாகச் சொல்லுங்கள்...'' என்று திரிவிக்கிரமன் திருத்திக் கூறியபோது ஜகதீஷ் ஒரு கணம் அதிர்ந்தே போனார்.

''அப்படியானால், நீங்களும் அதைத் தெரிந்து வைத்திருக் கிறீர்கள் இல்லையா சார்?'' ஜகதீஷ் கேட்டார்.

''முதலில் உள்ளே வந்து உட்காருங்கள். வீட்டில் இன்று நான் மட்டும்தான் இருக்கிறேன்.'' சர்க்கிள் இன்ஸ்பெக்டர் திரி விக்கிரமன்பிள்ளை, ஜகதீஷை வரவேற்று உபசரித்தார்.

ஜகதீஷ் அவர் குறிப்பிட்ட இடத்தில் அமர்ந்தார்.

தான் எதைச் சொல்ல வந்தோமோ, அதைத் தன் மேலதி காரியே தன்னிடம் சொன்னது ஜகதீஷுக்கு மகிழ்ச்சி அளித்தது. தான் அதிகமாகப் பேசி விளக்க வேண்டிய தேவையே இல்லை.

திரிவிக்கிரமன் அறையிலிருந்து சிகரெட், தீப்பெட்டியை எடுத்து வந்து, ஜகதீஷுக்கு எதிரில் அமாந்தார்.

''நீங்கள் இங்கு தாராளமாகப் புகைக்கலாம். நோ ஃபார்மா லிட்டீஸ்.''

ஜகதீஷ் ஒரு சிகரெட்டை உருவிப் பற்ற வைத்தார்.

''இந்தப் புராதன கதையை உங்களிடம் யார் இப்போது சொன்னது?''

''இந்திராபாய்!''

''நீங்கள் எதற்காக அங்கு போனீர்கள்?'' சர்க்கிள் விசாரித் தார்.

ஜகதீஷ் காரணத்தை விளக்கினார்.

''அந்தப் பெண் மீது எனக்கும் சந்தேகம் உண்டு.''

''அந்த சந்தேகம் பயனற்றதாகத் தோன்றுகிறது. இருந்தாலும் அந்தப் பெண்மணி கூறியது உண்மைதானா என்பதைப் பார்த்து விடலாமே!''

''யாராவது எதையாவது சொல்லி விட்டார்கள் என்பதற்காக நாம், நமக்குத் தேவையில்லாத விஷயங்களில் தலையிடாமல் இருப்பதே நல்லது என்று தோன்றுகிறது. நீங்கள் இளைஞர் இன்னும் நிறைய சாதிக்க வேண்டி உள்ளது.''

''நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லை.''

''சங்கரன் நாயரைப் போன்றவர்கள் சமூகத்தில் பெரிய அந்தஸ்த்தில் இருப்பவர்கள். அவர்கள்மீது இது போன்ற பொய் வழக்குகளைச் சுமத்தினால் நாம் காணாமல் போய் விடுவது மட்டுமல்ல, நாம் ஜெயிலுக்குப் போகும்படிகூட நேரிடலாம்!'' சர்க்கிள் எச்சரித்தார்.

''அப்படியானால். இந்திராபாய் மீது தந்துள்ள புகாரை என்ன செய்வது?''

''இரண்டையுமே ஓரங்கட்டிவிடுங்கள். அவ்வளவுதான்! நீங்கள் மற்ற அவசர அவசியமான வேலையைப் பார்த்து, உங்களது பதவியைக் காப்பாற்றிக் கொள்ளப் பாருங்கள்.'' சர்க்கிள் இன்ஸ்பெக்டரின் குரல் ரகசியம் போல் ஒலித்தது.

ஜகதீஷுக்கு ஒரே குழப்பமாக இருந்தது. எவ்வளவோ எதிர்பார்ப்புகளுடன் சர்க்கிள் இன்ஸ்பெக்டரை நாடி வந்தோம். ஆனால், அவரோ இதை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. அது மட்டுமல்ல தனது உற்சாகத்தையே வடிந்து போக உபதேசம் செய்கிறார்!

'இனி இதைப் பற்றி வேறு யாரிடம் பேசுவது?' ஜகதீஷ் யோசித்தார்.

ஒன்று செய்யலாம். சி.பி.ஐ.-க்கு புகார் அனுப்பலாம். ஆனால், அதில் நாம் நமது பெயரைப் பயன்படுத்தாமல் செய்ய வேண்டும். அது முடியக்கூடிய காரியமும் அல்ல.

வேறு என்ன செய்யலாம்?

மீண்டும் இந்திராபாயை சந்தித்து ஆலோசனை கேட்டால் என்ன? முதலில் தனது குவார்ட்டர்ஸிற்குப் போய் உடை மாற்றி, மப்டியில் போவதுதான் நல்லது.

ஜகதீஷ் விடை பெற்றுச் சென்றவுடன் திரிவிக்கிரமன், சங்கரன் நாயருக்கு போன் செய்தார்.

''நிலைமை சற்றுச் சிக்கலாகியிருக்கிறது. சப் இன்ஸ் பெக்டர் ஜகதீஷிடம் நீங்கள் ஒரு புகார் கொடுக்கப்போக, இப்போது அது உங்கள் தலைக்கே ஆபத்தாக விடிந்திருக் கிறது.''

''ஐயோ... நீங்கள் என்ன சொல்கிறீர்கள் சார்?'' நாயர் பரபரப்புடன் எதிர்முனையில் தவித்தார்.

''உங்கள் வீட்டு வேலைக்காரி கொலை செய்யப்பட்டதை இப்போது அவரும் தெரிந்து கொண்டார். உங்கள் வீட்டு செப்டிக் டாங்கைச் சோதனையிட என்னிடம் அனுமதி கேட்டு வந்தார்.''

''அடக்கடவுளே! நான் வேறொரு வழியில் யோசித்துத்தான் அவரை அணுகினேன். நீங்கள் சொல்வதைப் பார்த்தால் தலை தப்புவது கடினமாகிவிடும் போல் தோன்றுகிறது! ஜகதீஷ் ஆள் எப்படி சார்?''

''கொஞ்சம் அதிகப் பிரசங்கித்தனமான ஆள்தான்!''

''இப்போது என்ன செய்வது? நான் உங்கள் வீட்டுக்கு வரட்டுமா?''

''உங்களது காரை என் வீட்டுக்கு அனுப்பிவையுங்கள். நான் டிபார்ட்மெண்ட் ஜீப்பை அங்கு கொண்டுவருவது நல்லதல்ல.''

''நீங்கள் சொல்வதும் சரிதான். என்னுடைய காரை அனுப்பி வைக்கிறேன்.''

சங்கரன் நாயர், அருகிலேயே குடியிருக்கும் டிரைவரை அழைத்து வண்டியைக் கொடுத்து, ''நீங்கள் உடனே சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஐயாவை அழைத்து வாருங்கள்!'' என்றார்.

கார் திரிவிக்கிரமனது வீட்டை அடைந்தபோது, அவர் வேட்டி, சட்டையில் தயாராகக் காத்திருந்தார். அவரைச் சுமந்து கொண்டு வண்டி வந்த வழியிலேயே திரும்பியது.

சங்கரன் நாயர் மனைவியிடம் முட்டை ஆம்லெட்டை சர்க்கிள் இன்ஸ்பெக்டருக்காக ஆர்டர் செய்தார்.

அவரும் வந்து சேர்ந்தார்.

''டிரைவர் நீங்கள் வீட்டிற்குப் போக வேண்டாம். ஷெட்டில் போய்ப் படுத்துக் கொள்ளுங்கள். ஒரு வேளை உங்கள் உதவி எங்களுக்குத் தேவைப்படலாம்!'' - சங்கரன் நாயர் டிரைவரிடம் கூறினார்.

டிரைவர் இடத்தைக் காலி செய்ததும் சங்கரன் நாயர் விஷயத்திற்கு வந்தார். ''நாம் உடனடியாகச் செய்ய வேண்டியது என்ன?''

''ஜகதீஷ் ஏதாவது பிரச்சினை ஏற்படுத்தக் கூடும். எனவே, முதலில் அதை இடம் மாற்ற வேண்டும்!'' சர்க்கிள் வழி சொன்னார்.

''டாங்கிற்குள் இருப்பதையா இடம் மாற்றச் சொல்கிறீர்கள்?''

''ஆமாம் வேறு வழி இல்லை!''

''உடனே முடிகிற காரியமா அது?''

''ஏன் முடியாது? செப்டிக் டாங்கில் எந்த அறையில் கிடக்கிறது அது?''

''மூன்றாவது அறையில்...''

''பிறகு என்ன? அதிகமாகக் கஷ்டப்பட வேண்டியது இல்லை. அதிலிருந்து எடுப்பது சுலபம்தானே?''

''அதெல்லாம் சரிதான். இந்த நேரத்தில் ஆட்களுக்கு நான் எங்கே போக?''

''டிரைவர் ஒருவர் மட்டும் போதுமே?''

''எல்லாம் தெரிந்த நீங்கள் இப்படிச் சொன்னால் எப்படி? பிறகு அவனைக் கொன்று புதைக்க இன்னொரு செப்டிக் டாங்க் கட்டுவதா?'' சங்கரன் நாயர் பரிதாபமாகக் கேட்டார்.

சங்கரன் நாயரின் மனைவி விஸ்கி பாட்டில் மற்றும் முட்டை ஆம்லெட்டுடன் வந்தாள்.

''முதலில் இந்தச் சரக்கில் கொஞ்சம் உள்ளே போகட்டும். அதன் பிறகு எல்லாம் ஒரு நிலைக்கு வந்துவிடும்.'' திரிவிக்கிரமன் விஸ்கியை கிளாஸ்களில் ஊற்றியபடி பேசினார்.

மூன்று பெக்குகள் உள்ளே போனவுடன் திரிவிக்கிரமனது மூளை முன்னைக்காட்டிலும் சுறுசுறுப்பாகச் செயல்படத் தொடங்கியது.

''வேலைக்காரியின் பிணம் இதற்குள் எலும்புத் துண்டுகளாக மாறியிருக்கும். மற்றொரு மனிதனது உதவி இல்லாமல் இதை வெளியே எடுக்கவும் முடியாது. உங்கள் டிரைவரைத்தான் இதற்குப் பயன்படுத்த வேண்டும்.'' சர்க்கிள் கண்டிப்பான தொனியில் பேசினார்.

''அதன் பிறகு டிரைவர் தான் செய்ததை ஊர் பூராவும் சொல்லிக் கொண்டு திரிவானே? அதற்கு என்ன செய்வது?''

''அதற்கெல்லாம் வழி இருக்கிறது!''

''டிரைவர் குடிப்பாரில்லையா?''

''அதிலென்ன சந்தேகம்?''

''உங்கள் பள்ளிக்கூடத்தில் சயனைடு இருக்க வேண்டுமே!''

''இருக்கும்.''

''நான் கொஞ்ச நாள் வாத்தியாராக வேலை பார்த்தவன்தான். நீங்கள் முதலில் கொஞ்சம் சயனைடு எடுத்து வாருங்கள். மிச்சத்தை அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்.''

திரிவிக்கரமன் சொன்னதன் முழுப்பொருளும் சங்கரன் நாயருக்கு விளங்காவிட்டாலும், அதில் ஏதோ ஒரு வழி இருக்கிறது என்பது மட்டும் புரிந்ததால், டிரைவருடன் காரில் பள்ளிக்கூடத்திற்குப் புறப்பட்டார்.

சங்கரன் நாயர் திரும்பி வர குறைந்தபட்சம் முக்கால் மணி நேரமாவது ஆகுமென்று கணக்கிட்ட திரிவிக்கிரமன் சௌதாமினியை நோக்கிப் புன்னகைத்தார். அவளும் சிரித்தாள்.

இருவரும் அறைக்குள் நுழைந்தனர்.

கடிகாரத்தில் முள் நகர்ந்து கொண்டிருந்தது.

காரின் சத்தம் கேட்டதும் திரிவிக்கிரமன் சட்டைப் பித்தான் களை மாட்டியபடி எழுந்து பழைய இடத்தில் வந்து அமர்ந்து விஸ்கி கிளாஸைக் கையில் எடுத்துக் கொண்டார்.

''இதோ நீங்கள் குறிப்பிட்ட பொருள்!'' காகிதத்தால் மடித்த பொட்டலத்திற்குள் ஒரு சிறு பாட்டில் இருந்தது. அதை சங்கரன் நாயர் டீப்பாய் மீது வைத்தார்.

''அதை டி.வி.யின் மேல் வையுங்கள். நான் சொல்லும்போது எடுத்தால் போதும்!'' -திரிவிக்கிரமன் கூறினார்.

பொட்டாசியம் சயனைடு என்கிற கொடிய விஷம் அடங்கிய காகிதப் பொட்டலத்தை டெலிவிஷன் பெட்டி மீது வைத்தார் சங்கரன் நாயர்.

''அடுத்த கட்டம் என்ன?''

''டிரைவரிடம் முதலில் ஒரு பள்ளம் தோண்டச் சொல் லுங்கள்.''

''எலும்பைப் புதைப்பதற்கா? வேண்டாம். அதை ஆற்றுத் தண்ணீரில் எறிந்து விடலாம். இல்லாவிட்டால் பூரா நிலத்தையும் தோண்டிப் பார்த்துவிட்டால் என்ன செய்வது?''

''அதுவும் சரிதான். அப்படியானால், முதலில் ஒரு கோணியைக் கொண்டு வாருங்கள்.''

சௌதாமினி கோணி ஒன்றைக் கொண்டு வந்தாள்.

''வாருங்கள் இனி நாம் செப்டிக் டாங்கிற்குப் போகலாம்.'' -சர்க்கிள் உத்தரவிட்டார்.

நால்வரும் செப்டிக் டாங்கை நெருங்கினர்.

''டிரைவர், மண்வெட்டியால் அங்கு வளர்ந்திருக்கிற புல்லைச் சுத்தமாகச் செதுக்கி எடுங்கள்!'' -சர்க்கிள் செப்டிக் டாங்கின் பரப்பைச் சுட்டிக்காட்டியபடி கூறினார்.

சௌதாமினி டார்ச்லைட்டை எரியவிட்டு இடத்தைக் காட்டினாள். புல்வெட்டும் வேலை சுலபமாக இருந்தது. கடப்பாறையால் செப்டிக் டாங்கின் மூடியையும் சுலமாகப் பெயர்த்தனர்.

''இனி நான்கு பேரும் சேர்ந்து மேற்புறமுள்ள சிமெண்ட் ஸ்லாப்பை அசைத்துத் தூக்கவேண்டும்!'' சங்கரன் நாயர் யோசனை கூறினார்.

நால்வரும் சேர்ந்து தூக்கிப் பார்த்தனர். ஊஹூம் அது அசையவே இல்லை!

''இது சாத்தியமென்று தோன்றவில்லை!'' -சர்க்கிள் மூச்சு வாங்கியபடி பேசினார்.

அதே நேரம் டிரைவர் ''ஐயோ'' என்று அலறியபடி பின்புறமாகச் சரிந்து விழுந்தான்.

''என்னப்பா, என்ன ஆச்சு?'' சௌதாமினி ஸ்லாப்பிலிருந்து கையை எடுத்தபடி கேட்டாள்.

டிரைவர் மல்லாந்த நிலையிலேயே தரையில் படுத்துக் கிடந்தார். எழுந்திருக்க முயன்றும் அவரால் முடியவில்லை.

சர்க்கிள் இன்ஸ்பெக்டர் திரிவிக்கிரமனும் சங்கரன் நாயரும் சேர்ந்து டிரைவரைத் தூக்கிப் பிடித்து வீட்டின் பின்புறமிருந்த திண்ணையில் படுக்க வைத்தனர். டிரைவர் குட்டப்பனது தாடையிலிருந்து ரத்தம் வடிவதை இருவரும் அப்போதுதான் கவனித்தனர்.

சௌதாமினி தண்ணீர் எடுத்து வந்து டிரைவரின் முகத்தில் தெளித்தாள். சங்கரன் நாயர் வீட்டிற்குள்ளிருந்து துணித்துண்டு ஒன்றை எடுத்து வந்தார். மருந்து வைத்து முதலில் அந்தக் காயத்தைக் கட்டி ரத்தக்கசிவை நிறுத்தினார். பின்னர் டிரைவரது வாயில் கொஞ்சம் விஸ்கியை ஊற்றினார்.

சற்று நேரத்தில் டிரைவர் கண் திறந்தார்.

''என்ன நடந்தது?'' சங்கரன் நாயர் கேட்டார்.

நம்பமுடியாத ஒரு கதையைச் சொன்னான் டிரைவர் குட்டப்பன்.

காங்க்ரீட் ஸ்லாப்பைப் பிடித்துத் தூக்கியபோது டிரைவரது பக்கம்தான் அதிகமாக உயர்ந்தது. சட்டென்று பிரமாண்டமான கால் ஒன்று ஸ்லாப்பை அழுத்தி மிதிப்பது அவனுக்குத் தெரிந்தது. ஸ்லாப் பழையபடி பொருந்திய அதே நேரத்தில் அதே போன்ற மற்றொரு கால் டிரைவரை ஓங்கி உதைக்கவும் செய்தது.

''அந்தக் கால்கள் இரண்டும் பார்ப்பதற்கு எப்படி இருந்தது?'' சங்கரன் நாயர் கேட்டார்.

''காலில்... ஒரு பெரிய கொலுசு இருந்தது. கால் விரல்களில் பாம்பு மோதிரங்கள் இருந்தன.''

''அது அவள் கால்களேதான்!'' சங்கரன் நாயர் உறுதியான முடிவுக்கு வந்தார்.

''நீங்களும் அவனுடன் சேர்ந்து கொண்டு என்ன உளறு கிறீர்கள்? அதெல்லாம் அவனது பிரமையாக இருக்கும்.'' -திரிவிக்கிரமன், சங்கரன் நாயர் கூறியதை ஒப்புக் கொள்ளவே இல்லை.

''இல்லை சார் அந்தக் கால்களை நான் நன்றாக கவனித்தேன். அது நிச்சயமாக ஒரு பெண்மணியின் பிரமாண்டக் கால்கள்தான். அதில் சந்தேகமே இல்லை!''' டிரைவர் சத்தியம் செய்தான்.

''அப்படியானால் என்ன செய்வது?'' திரிவிக்கிரமன் யோசித் தார்.

'எலும்புக்கூட்டை அந்த இடத்திலிருந்து எடுக்கவும் வேண்டும்; விட்டுவைப்பதும் ஆபத்து. நிலைமை இந்த அளவிற்கு வந்த பிறகு, இந்த முயற்சியில் பின்வாங்கினால் நிச்சயம் அது விபரீதமாகவே முடியும்?' சங்கரன் நாயர் தவித்தார்.

தன்னுடைய பொருளாதார நிலை மற்றும் சமூக அந்தஸ்து போன்றவற்றால் என்றோ புதைக்கப்பட்ட அந்தக் கொலை மறுபடி உயிர் பெற்றெழுவது உறுதி என்பதை உணர்ந்தபோது, சங்கரன் நாயர் திணறினார். அவரது மூச்சிரைப்பு அதிகமாகியது; இதயத் துடிப்பின் வேகம் அதிகரித்தது.

திரிவிக்கிரமன், ''அப்படியானால் என்ன செய்வது?'' என்று கேட்ட கேள்வி, ஆபத்தின் நெருக்கடியை அதிகமாக்கியது போல் தெரிந்தது.

மூவரும் ஆபத்தின் விளிம்பில் செய்வதறியாது திகைத்தபடி நின்றிருந்தனர். இரவு நகர்ந்து கொண்டிருந்தது.

## 15

**டி**.எஸ்.பி. சங்கர்ராவின் வீட்டிலிருந்த தொலைபேசி கிணுகிணுத்தது. ராவ் மகாராஷ்டிராக்காரர். சமீபத்தில் டிரான்ஸ்ஃபராகி வந்தவர். வந்த மூன்று மாதத்திற்குள்ளேயே அரசியல்வாதிகள், பொதுமக்கள், மத்தியில் மிகுந்த பாராட்டுப் பெற்றுவிட்டார்.

முடிக்கப்படாத கேஸாக மூலையில் தூக்கிப் போட்டிருந்த சிலைத் திருட்டு வழக்கு ஒன்றையும், அத்துடன் தொடர்பு கொண்ட கள்ளநோட்டு வழக்கு ஒன்றையும் ராவ் அசாத்தியமான துணிச்சலுடன் நிரூபித்து, குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தந்திருந்தார். இந்த சம்பவம் அவரது பெயரை மிக விரைவில் பெரிய அளவில் புகழுடைய வைத்தது. எந்தவித சிபாரிசுக்கும் வளைந்து கொடுக்காத ராவ் நியாயத்தின் பக்கம் நிற்பவர்.

சங்கர்ராவ் ரிசீவரை எடுத்தார்.

மறுமுனையிலிருந்து இந்திக் குரல் கேட்டது.

''எஸ்.பி.ராவ் இருக்கிறாரா?'' -ஒரு பெண்மணியின் குரல்.

''நான்தான் பேசுகிறேன் நீங்கள் யார்?''

''உங்கள் நண்பர் அல்லது நண்பி என்று கருதலாம்!''

''சரி, உங்களுக்கு என்ன வேண்டும்?'' ராவ் தூக்கக் கலக்கத்தில் விசாரித்தார்.

''ஸ்கூல் மேனேஜர் சங்கரன் நாயரின் வீட்டு செப்டிக் டாங்கிற்குள் ஒரு பெண்ணின் எலும்புக்கூடு கிடக்கிறது. அது கொலை செய்து மறைக்கப்பட்ட ஒரு பெண்ணினுடையது.''

அவர்களுக்கு இடையிலான பேச்சு மேலும் சில நிமிடங்கள் நீடித்தன.

எதிர்முனையில் தொடர்பு துண்டிக்கப்பட்டதும் ராவ் உடனே போலீஸ் ஸ்டேஷனது எண்ணைச் சுழற்றினார்.

சில நிமிடங்களுக்குள் ஒரு வேன் நிறைய போலீஸார் சங்கர்ராவின் குவார்ட்டர்ஸுக்கு முன்னால் வந்து இறங்கினர். ராவ் அதற்குள் சீருடை அணிந்து தயாராகியிருந்தார். அவர் வேனின் முன்புறம் ஏறி அமர்ந்தார்.

சீறிப் புறப்பட்ட வேன் சங்கரன் நாயரது வீட்டை நோக்கிப் பாய்ந்தது.

நாயரது வீட்டிற்கு முன்னால் சுமார் இருபது அடி தூரத்திலேயே வேனை நிறுத்தி, போலீஸ்காரர்கள் இறங்கினர். அந்த வீட்டைச் சூழ்ந்து கொள்ளுமாறு டி.எஸ்.பி. உத்தரவிட்டார்.

போலீஸார் சத்தமில்லாமல் நகர்ந்து, சங்கரன் நாயரது வீட்டின் மெயின் கேட்டைத் தாண்டி உட்புறம் நுழைந்தனர். அவர்கள் வீட்டின் பின்புறத்தை அடைந்தபோதுதான் திரிவிக்கிரமனும், சங்கரன் நாயரும் விபரீதத்தை உணர்ந்தனர்.

''என்ன வேண்டும் உங்களுக்கு?'' -எதிரில் வந்து நின்ற ஹெட்கான்ஸ்டபிளிடம் திரிவிக்கிரமன் கேட்டார்.

அந்த ஹெட்கான்ஸ்டபிள் தமக்குப் பின்புறமிருந்தவரை சைகையால் காட்டினார்.

அந்தத் திசையில் டி.எஸ்.பி. சங்கர்ராவ் வந்து கொண்டிருந்தார்.

''என்ன எலும்புக்கூட்டை எடுத்து விட்டீர்களா?'' ராவ் தமிழுக்கு இறங்கி வந்தார்.

''என்ன எலும்புக்கூடு சார்?'' திரிவிக்கிரமன், டி.எஸ்.பி.-க்கு சல்யூட் அடித்தபடி கேட்டார்.

''வாருங்கள் காட்டுகிறேன்.'' என்றபடி போலீஸாரிடம் செப்டிக் டாங்கின் ஸ்லாப்பை உயர்த்துமாறு கட்டளையிட்டார்.

பதினைந்து பேருக்கு மேல் இருந்ததால் ஸ்லாப் விரை விலேயே இடம் பெயர்ந்தது.

ராவ் தன் கையில் வைத்திருந்த எலெக்ட்ரிகல் டார்ச்சின் உதவியுடன் டாங்கிற்குள் வெளிச்சம் பாய்ச்சினார்.

டாங்கிற்குள் எலும்புக்கூடு ஒன்று சிதைவடையாமல் நீட்டிநிமிர்ந்து கிடந்தது.

''சரி, ஸ்லாப்பைப் பழையபடி மூடிவையுங்கள்!'' -ராவ் ஆணையிட்டார்.

நான்கு போலீஸ்காரர்களை காவலுக்கு நிறுத்தினார்.

செய்தி பரவியதும் திமுதிமுவென்று ஆட்கள் எங்கிருந்தெல்லாமோ வந்து குழுமினர். ஊரின் முக்கால்வாசி ஜனங்கள் வேடிக்கை பார்க்கும் ஆவலில் வந்து சேர்ந்தனர்.

பொழுது விடிந்தபோது பத்திரிகை நிருபர்கள், புகைப்படக் காரர்கள் என்று ஒரு பெரிய கூட்டமே வந்து சேர்ந்தது.

எல்லாருக்கும் முன்பாக அந்த சிமெண்ட் ஸ்லாப் உயர்த்தப் பட்டது.

கேமராக்கள் பளிச் பளிச்சென்று மின்னல்களை உமிழ்ந்தன. டாங்கிற்குள் இறங்கியவர்கள் எலும்புத் துண்டுகளை மேற்புறம் அனுப்பினர்.

வெளியே கொண்டு வரப்பட்ட எலும்புகளை மனித வடிவில் இணைத்து வைத்தனர்.

சங்கரன் நாயர் உட்பட நால்வரும் கைது செய்யப்பட்டனர்.

அன்று மாலையிலேயே டி.எஸ்.பி. சங்கர்ராவுக்கு ஊர் மக்கள் சார்பாகப் பாராட்டுக் கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

நன்றி உரையின்போது தன்னால் எப்படி இதைக் கண்டு பிடிக்க முடிந்தது என்பதை அவர் வெளிப்படுத்தவில்லை. பத்திரிகையாளர்கள் விடாமல் துளைத்தெடுத்தும் அதை மட்டும் அவர் வெளியிடவில்லை.

மறுநாள் பத்திரிகையில் இந்த சம்பவமே தலைப்புச் செய்தியாக இடம் பெற்றது கைது செய்யப்பட்டவர்களின் புகைப்படங்களையும் வெளியிடப் பத்திரிகைகள் தவறவில்லை.

பெங்களூரிலிருந்து பத்திரிகையைப் படித்த ராமசாமி, மேனோனது வீட்டை நோக்கிப் பாய்ந்து வந்தார்.

''செய்தி தெரியுமா உங்களுக்கு?'' மேனோன் கேட்டார்.

''படித்ததால்தான் பதறிப்போய் ஓடிவந்திருக்கிறேன்.'' ராம சாமி முகத்தில் படிந்த வியர்வையைத் துடைத்தவாறு பேசினார்.

'இனி என்ன செய்வது?' என்று யோசித்தவராக தங்கக் கட்டிகளை மறைத்து வைத்திருக்கும் இடத்தைக் கவலையுடன் பார்த்தார்.

''அவள் நம் ஒவ்வொருவரையும் அழிப்பதற்கு முன்னால் நாம் அவளை ஒரு வழி செய்தே தீரவேண்டும். இல்லாவிட்டால் நாம் விநாடிக்கு விநாடி செத்துப் பிழைக்க நேரிடும்.''

''நமக்கு உதவுவதற்கு யாராவது இருக்கிறார்களா?''

இருவரும் விஸ்கியைச் சுவைத்தபடி தீவிர யோசனையில் ஆழ்ந்தனர்.

அதே வேளையில் தொலைபேசி அலறியது. மேனோன் ரிசீவரை எடுத்தார். மறுமுனையில் டாக்டர் வில்லியம் பேசினார். தான் உடனே புறப்பட்டு வருவதாகத் தெரிவித்துவிட்டு லைனைத் துண்டித்தார்.

''ஆமாம்... டாக்டர் எதற்காக நம்மைத் தேடிவருகிறார்?'' -ராமசாமி கேட்டார்.

''தேவையில்லாமல் வரமாட்டார். ஏதாவது விஷயம் இருக்கும்'' -மேனோன் கேட்டைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தார்.

சற்று நேரத்திற்குள் டாக்டர் வில்லியத்தின் மாருதி கார் வாசலில் வந்து நின்றது.

வாட்ச்மேன் கேட்டைத் திறந்தான். டாக்டர் பரபரப்புடன் வீட்டிற்குள் நுழைந்தார்.

''என்ன டாக்டர் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்?'' மேனோன் கேட்டார்.

மேனோனும், டாக்டர் வில்லியமும் ரோட்டரி கிளப் உறுப்பினர்கள். இருந்தாலும் தேவையேற்பட்டால் மட்டுமே ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்வது வழக்கம்.

''உட்காருங்கள் டாக்டர், கொஞ்சமாகச் சாப்பிடலாமா?'' மேனோன் எழுந்தார். கிளாஸை எடுத்து வந்து விஸ்கியை ஊற்றினார்.

வில்லியம் கிளாஸை எடுத்துக் கொஞ்சமாக சிப்பினார். பிறகு ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தார்.

''அவள் ஒரு தீராத தொல்லையாகி இருக்கிறாள். என்னுடைய ஆபரேஷன் தியேட்டரைக்கூட அவள் விட்டு வைக்கவில்லை. அவளது அத்துமீறல்கள் வரவரத் தாங்க முடியாத நிலையை அடைந்திருக்கிறது.'' டாக்டர் எரிச்சலுடன் பேசினார்.

''யாரவள்?'' -மேனோன் கேட்டார்.

''இந்திராபாய்!'' -என்றவர் ஆத்திரத்துடன் சிகரெட்டை ஆஷ்ட்ரேயில் போட்டு நெரித்தார்.

இந்திராபாய் ஆபரேஷன் தியேட்டருக்குள்ளேயும் வந்து விட்டாள் என்று டாக்டர் கூறியது மற்றவர்களை வியப்பிலாழ்த்தியது.

'உண்ணி மேனோனும், ராமசாமியும் இந்திராவை நேரில் பார்த்ததுகூட இல்லை. அப்படி ஒரு வாய்ப்பு இதுவரை ஏற்பட்டதில்லை. இருப்பினும் இந்த இருவரைப் பற்றிய ரகசியங்களையும் தெரிந்துகொண்டு, தொலைவிலிருந்தபடியே அவர்களை ஆட்டி வைக்கிறாள்.

டாக்டர் கூறியதைப் பார்த்தால் இந்திரா தங்களுடன் நேரடியாக மோதுவதற்குத் தயாராகி விட்டதாகத் தோன்றுகிறது. அப்படியானால், நிலைமை மிகவும் சிக்கலென்று அர்த்தம்.

இதுவரை நடைபெற்றுள்ள சம்பவங்களை வைத்துப் பார்த்தால், அவள் சக்தி வாய்ந்தவள் என்பது தெளிவாகத்

தெரிகிறது. இந்தச் சூழ்நிலையில் தாங்கள் மௌனமாக இருந்து விட்டால், தங்களது வம்சத்தையே அவள் அழித்து விட்டுத்தான் மறுவேலை பார்ப்பாள்.

'எல்லாம் சரிதான். ஆனால், இதற்குச் சரியான மாற்று வழி என்ன?

மகாமாந்திரீகனான ராமன் நம்பீசனுக்கு, தங்களது கண் முன்பாகவே நேர்ந்துவிட்ட ஆபத்தே அதற்கு அடையாளம்.

அவரது மந்திர சக்தியையே, அவள் மிகவும் சாமானியமாக எதிர்த்து வெற்றி பெற்றிருக்கிறாள்! மாந்திரீகனின் முகம் ஹோம குண்டத்தில் வெந்ததை அவர்கள் நேரடியாகப் பார்த்தவர்கள் ஆயிற்றே. அங்கு இந்திராபாயை நேரடியாகப் பார்க்காத போதிலும் மாந்திரீகனது உயிரைப் பறித்தது இந்திராபாயின் மந்திரசக்தியே என்பதில் அவர்களுக்கு எந்தவிதமான சந்தேகமும் இல்லை. எனவே, அப்படிப்பட்ட பெண்மணியுடன் மறுபடியும் எப்படி மோதுவது?

எவரது துணையுடன் அவளை எதிர்ப்பது?

இந்திராபாயைக் கொல்வதற்காகத் துப்பாக்கியை அச்சுதன் பிள்ளையிடம் கொடுத்தனுப்பிய சங்கரன் நாயர் வசமாகச் சிக்கியிருக்கிறார்.

துப்பாக்கியுடன் புறப்பட்டுச் சென்ற அச்சுதன் பிள்ளை மிகவும் சுலபமாகக் கொல்லப்பட்டார்.

ஒரே குழப்பம். அந்தப் பெண்வடிவில் வந்திருக்கும் அரக்கியை அடக்க என்ன வழி?'

''என்ன... இப்படி மௌனமாக உட்கார்ந்தால் எல்லாம் சரியாகிவிடும் என்று நினைக்கிறீர்களா?'' -டாக்டர் அந்த இடத்தின் மௌனத்தைக் கலைத்தார்.

''அதற்கு என்ன செய்வது என்றுதான் நாங்களும் யோசிக்கிறோம்!'' -மேனோன், ராமசாமியைப் பார்த்தபடி பேசினார்.

''அதற்கு இருவரும் இப்படி ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தால் போதுமா?''

''என்ன செய்யலாம் என்று நீங்களாவது ஒரு யோசனை சொல்லுங்களேன் டாக்டர். நாங்கள் ஏற்கெனவே மோதித் தோல்வியில் களைத்திருக்கிறோம்'' ராமசாமி சோகத்துடன் பேசினார்.

''அப்படியா... அதெல்லாம் எனக்குத் தெரியாதே?'' -டாக்டர் யோசனையுடன் கேட்டார்.

மேனோன் நடந்ததையெல்லாம் அவரிடம் விளக்கினார். பிறகு கேட்டார்: ''இப்போது சொல்லுங்கள் நாம் என்ன செய்யலாம் என்பதை!''

டாக்டர் வில்லியத்தின் மனம் சரியான ஒரு வழியைத் தேடித் தேடித் தீவிரமாக வேலை செய்தது. இறுதியாக அது ஒரு வழியைக் கண்டுபிடிக்கவும் செய்தது.

''இந்திராபாயின் தினசரி நடவடிக்கைகள் என்னென்ன என்று தெரிந்து கொண்ட பிறகே இங்கு வந்திருக் கிறேன்.'' -டாக்டர் கூறினார்.

அவர் ஏதோ ஒரு வழியைத் திட்டமிட்டுவிட்டார் என்பதை அறிந்தபோது, மற்ற இருவருக்கும் மகிழ்ச்சி தோன்றியது. ஆவலுடன் அவர் முகத்தையே பார்த்தனர்.

டாக்டர் தொடர்ந்தார்:

''அந்தப் பெண்மணி தினமும் மாலை நேரத்தில் பங்களாவின் வடபுறமாக உள்ள ரோட்டில் சாரட்டில் ஏறிப் போகிறாள்.''

இது மற்ற இருவருக்கும் ஒரு புதிய செய்தியாக இருந்தது.

''... அந்தவழி ஆற்றங்கரையில் போய் முடிவடைகிறது. ஆனால், அந்தப் பாதையின் நடுவே ஒரு வழி மேற்குப் புறமாகப் பிரிகிறது. பிரிகிற அந்த இடத்திலிருந்து ரோட்டின் அகலம் அதிகமாக உள்ளது!''

டாக்டர் இதை எதற்காகச் சொல்கிறார் என்று அவர்கள் இருவருக்குமே புரியவில்லை.

''சுமார் நாலரை மணியிலிருந்து ஐந்து மணிக்குள் அவள் அந்தச் சாலையில் பயணம் செய்கிறாள்.'' -டாக்டர் தன் கண் முன்பாக நடப்பதைப் பார்ப்பது போல் பேசினார்.

''அவள் அந்த வழியில் சாரட்டில் பயணம் செய்வதில் நமக்கு என்ன லாபம்?'' ராமசாமி கேட்டார்.

''அந்த இடத்தில் அவளை நாம் சந்திக்க வேண்டியதில்லை. நான் சொல்ல வருகிற விஷயமே வேறு மிஸ்டர் ராமசாமி. அந்தப் பகுதியில் உங்களுக்கு ஒரு கோடவுன் இருக்கிறது அல்லவா?''

''ஆமாம்... இருக்கிறது!''

''உங்களது கோடவுனிலிருந்து சரக்குகளை ஏற்றவும் இறக்கவும் லாரிகள் அந்த வழியாகத்தானே போய் வருகின்றன?''

''ஆமாம்...''

''அகலம் குறைவான அந்தப் பகுதியில் ஒரு லாரி எதிரே வருவதாக இருந்தால், இரண்டு பக்கமும் ஒதுங்க இடம் உண்டா?''

''கிடையாது. அந்த இடம் மிகவும் குறுகிய பகுதியாயிற்றே!''

''அப்படியானால், வேறு வண்டிகள் அந்த வழியாக வந்தால் எப்படிப் போகும்?!''

''பொதுவாக அந்த இடத்திற்கு நமது லாரியைத் தவிர வேறு வண்டிகள் எதுவும்; வருவது இல்லை. அந்த இடத்தில் வண்டியை நிறுத்திப் பொருள்களை ஏற்றி இறக்குவதே மற்ற வண்டிகளுக்கு இடைஞ்சல்தான்.''

''அந்த இடத்தில்தான் நமக்கு வேலை இருக்கிறது!'' -டாக்டர் வில்லியம் நமுட்டுச் சிரிப்புடன் பேசினார்.

''சொல்வதைக் கொஞ்சம் தெளிவாக சொல்லுங்களேன் டாக்டர்!'' ராமசாமி விளங்காதவராகப் பேசினார்.

''சொல்கிறேன்... நாலரையிலிருந்து நாலேமுக்கால் மணிக்குள் இந்திரா ஓட்டிவரும் சாரட் அந்தப் பகுதிக்கு வரும். அப்போது சரக்கு ஏற்றிய உங்களது லாரி ஒன்று எதிரே வர வேண்டும், மற்றொரு லாரி சாரட்டைப் பின்தொடர்ந்து பின்புறமாக வரவேண்டும். இப்போது எனது திட்டம் உங்களுக்குப் புரிந்திருக்க வேண்டுமே.''

''போதும்... போதும். தெளிவாகவே புரிந்து விட்டது. நல்ல திட்டம்!'' -மேனோன் கைதட்டி வரவேற்றார்.

''இந்த முயற்சிக்கு நமக்குத் தேவைப்படுபவர்கள் எதற்கும் துணிந்த இரண்டு கெட்டிக்கார டிரைவர்கள்!'' டாக்டர் கூறினார்.

''அதற்கென்ன பஞ்சம்? கள்ளக் கடத்தலில் ஈடுபட்டிருக்கும் டிரைவர்கள் லேசுப்பட்டவர்களாகவா இருப்பார்கள்? எல்லாருமே கெட்டிக்காரர்கள்தான்!'' ராமசாமி உறுதியுடன் கூறினார்.

''அதிலும் நாம் கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எனவே, டிரைவர்கள் இந்த ஊர்க்காரர்களாக இருக்கக் கூடாது.'' மேனோன் குறுக்கிட்டுக் கூறினார்.

''கொலை கேஸில் மாட்டிக்கொண்டு ஜெயிலுக்குப் போய் வந்த இரண்டு பேர் இருக்கவே இருக்கிறார்கள். அவர்களையே பயன்படுத்தினால் போகிறது!'' ராமசாமி கூறினார்.

''அப்படியானால் இதைத் தாமதப்படுத்தாமல் முடிக்க வேண்டும்!'' டாக்டரின் குரலில் உறுதி தெரிந்தது.

''இன்னும் எதற்காக நாட்களைத் தள்ள வேண்டும்? விஷயம் நாளைக்கே நடக்கட்டும். இரண்டு லாரிகள் வேலை யில்லாமல் இருக்கின்றன. காலியாக இருப்பதால் வேகமாகச் செயல்படவும் முடியும்.'' -ராமசாமி எழுந்தார்.

இரவு பத்து மணியானபோது, தான் ஏற்கெனவே குறிப்பிட்ட இரண்டு டிரைவர்களுடன் ராமசாமி, மேனோனின் அவுட் ஹவுஸுக்கு வந்தார்.

கறுத்த, பருமனான உடல்வாகு கொண்ட எமகிங்கரர்கள் மாதிரித் தோற்றமளித்த அவர்களைப் பார்த்த மேனோனுக்கும், டாக்டர் வில்லியத்திற்கும் திருப்தியாக இருந்தது.

அந்த இருவருக்கும் லாரி என்கிற ஒன்று வேண்டியதே இல்லை. வெறும் கைகளாலேயே சாரட் வண்டியைத் தகர்த்து நொறுக்கி விடுவார்கள் என்று தோன்றியது.

ராமசாமி அவர்களிடம் தங்களது திட்டத்தை விவரித்தார்.

''அதாவது ஒரு பெண்மணி ஓட்டி வரும் சாரட் குறுகலான வழியில் வேகமாகப் பாய்ந்து வரும். அப்போது மேற்குப் புறமுள்ள ரோட்டிலிருந்து நீ வண்டியை வேகமாக ஓட்டி வரவேண்டும். அந்தச் சாரட்டை லாரியால் மோதி நொறுக்குவது நமது திட்டம். ஒருவேளை நமது திட்டத்தைத் தெரிந்துகொண்டு அவள் குதிரை வண்டியைப் பின்புறமாகத் திருப்பிக் கொண்டு போனால், அப்போது அவளுக்குப் பின்புறமாகச் செல்லும் நீ அதற்கு வழி விடக் கூடாது. இருவரில் யாராவது ஒருவர் அந்தச் சாரட்டை நொறுக்கி அவளைத் தீர்த்துக் கட்ட வேண்டும்!''

''எந்தக் காரணத்தாலும் அந்தச் சாரட்டும், அந்தப் பெண்ணும் தப்பிக்கக்கூடாது. ஜாக்கிரதை...'' டாக்டர் வில்லியம் எச்சரித்தார்.

''உங்களுக்கு அந்தக் கவலையே வேண்டாம். திட்டத்தைச் சொல்லி விட்டீர்கள் இல்லையா? நேரத்திற்குத் தகுந்த மாதிரி மற்றதை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். சந்தேகமே தேவையில்லை.'' இருவரில் ஒருவன் பேசினான்.

''நான் சொன்னபடி காரியம் நடந்தால் உங்கள் இருவருக்கும் ஆளுக்குப் பத்தாயிரம் ரூபாய் பரிசு தருகிறேன் நான்.'' -டாக்டர் வாக்குறுதியளித்தார்.

''நானும் அப்படியே... ஒவ்வொருவருக்கும் பத்தாயிரம் வீதம் பரிசளிக்கிறேன்.'' -மேனோனும் கூறினார்.

ராமசாமி ஏற்கெனவே அவர்களிடம் பத்தாயிரம் ரூபாய் தருவதாக ஒப்புக் கொண்டிருந்ததால், இப்போது எதையும் பேசவில்லை.

கிங்கரர்களான டிரைவர்களின் மகிழ்ச்சி எல்லை கடந்தது.

வேறு எதுவும் கலக்காமல் ஒரு பாட்டில் ரம்மை ராவாகவே தொண்டை வழி இறக்கிவிட்டு இருவரும் விடைபெற்றனர்.

''அப்படியானால் நமது திட்டம் நிறைவேறிவிட்ட மாதிரி தான்!'' ராமசாமி உறுதியான குரலில் கூறினார்.

## 16

சர்க்கிள் இன்ஸ்பெக்டர் திரிவிக்கிரமனையும் சங்கரன் நாயரையம் ஜாமீனில் விட மறுத்து விட்டது நீதிமன்றம்.

ஊர் மக்கள் ஒன்று சேர்ந்து அவர்களை விடுதலை செய்யக் கூடாதென்று, நீதிமன்றத்தில் மகஜர் கொடுத்தனர். அவர்கள் வெளியே வந்தால், சாட்சிகளைக் கலைத்து விடக்கூடுமென்று அரசாங்கத் தரப்பு வக்கீல்களும் கோரிக்கை விடுத்தனர்.

இருப்பினும் அவர்கள் இருவரையும் ஒரு தடவை சந்தித்துப் பேச மேனோன் முயன்றார். அதற்கு அனுமதியும் கிடைத்தது.

சப்ஜெயிலுக்குப் போய் அவர்களைப் பார்த்தார்.

தங்களைக் கைது செய்ததற்கு இந்திராபாய்தான் காரணம் என்று சங்கரன் நாயர் அடித்துப் பேசினார். இந்திராபாயைத் தீர்த்துக் கட்டிவிட்டால், பிறகு எப்படியும் தப்பித்துவிடலாம் என்று அவர் மனத்தில் ஆசை பிறந்தது.

உண்ணி மேனோன் இருவருக்கும் தைரியம் கூறினார். அத்துடன் அவர்கள் ஏற்பாடு செய்திருக்கும் திட்டத்தையும் ரகசியமாகக் கூறினார்.

''அப்படியானால், இன்று இரவே காயா பழமா என்று தெரிந்துவிடும் என்கிறீர்கள்'' -சங்கரன் நாயர் கேட்டார்.

''கண்டிப்பாகத் தெரிந்து விடும்.''

இந்திராபாய் தினமும் மாலை வேளையில் ஆற்றங் கரைக்குச் செல்வது வழக்கம். ஆற்றங்கரைக்கு வந்துவிட்டால் சாரட்டிலி ருந்து இறங்கி அங்கிருக்கும் ஆலமரத்தடியில் உட்காருவாள்.

மிகவும் வயதான ஆலமரம் அது. நான்கு பேர் சேர்ந்த மாதிரி கை கோத்துக் கொண்டால்தான் அதன் அடிப்பரப்பை வளைக்கலாம். அவ்வளவு பருமனான மரம். தடித்த விழுதுகள் ஏராளமாகத் தரையைத் தொட்டு மரத்தை வலுவேற்றியிருந்தன.

மரத்தின் வேர்கள் மண்டபத் தூண்கள் மாதிரி அமைந் திருந்தன. பார்ப்பதற்கு அந்த மரம் ஒரு கோயில் மாதிரியே இருந்தது.

அந்த ஆலமரத்தடியில் நாகச்சிலைகள் ஏராளமாக இருந்தன. மிகவும் பழைய சிலைகளாக இருந்ததால், அவற்றின் மீது கண்டபடி பாசம் படிந்திருந்தது. அந்த ஆலமரத்தடியில் பாம்புகள் குடியிருக்கின்றனவென்றும் பெரிசுகள் சொல்வதுண்டு.

அகால நேரங்களில் அந்த இடத்திற்கு யாரும் செல்வ தில்லை. சுற்றுப்புறத்தில் காற்று இல்லாத அமைதியான சூழ்நிலை யிலும்கூட அந்த மரத்தின் இலைகள் சலசலக்குமாம். உற்று கவனித்தால் யார் யாரோ பேசிக் கொள்வது போல் தோன்றுமாம்.

இந்திராபாய் ஆலமரத்தின் அடியில் உட்கார்ந்திருக்கும் போது, அவளது குதிரை ஆற்றில் இறங்கி நீந்தி விளையாடும்.

மாலை நேரத்தில் - சரியாகக் கோயில் தீபாராதனை வேளையில் ஆலமரத்தின் கீழ் உள்ள விளக்குகளில் கண்ணுக்குத் தெரியாத கரங்கள் தீபமேற்றும். அதன் பிறகே இந்திராபாய் வீட்டிற்குப் புறப்படுவாள்.

மணி நாலு பதினைந்து.

இந்திராபாய் வழக்கம் போல் சாரட்டில் ஏறினாள்.

அன்று பௌர்ணமி நாள்.

குதிரை ஆற்றங்கரையை நோக்கிப் பாய்ந்தது.

குறுகிய பாதையில் சாரட் சற்றுத் தூரம் சென்றபோது எதிர்ப் புறத்தில் பிரமாண்டமான சரக்கு லாரி ஒன்று வேகமாக வந்தது.

வெகு தூரத்திலிருந்து பாய்ந்துவரும் சரக்கு லாரியைப் பார்த்தவுடன் இந்திராபாயின் முகத்தில் புன்னகை அரும்பியது.

எதிரில் சுமார் இருநூறு மீட்டர் தூரத்தில் தனக்கு எதிர்த் திசையில் சாரட் வண்டியொன்று வருவதை டிரைவர் மாரியப்பன் கவனித்தான்.

தனக்குக் கிடைக்கவிருக்கும் முப்பதாயிரம் ரூபாய் மற்றும் மதுபாட்டில்கள் அவன் மனத்தில் கடை பரப்பி ஆசையை அதிகரிக்கச் செய்தது.

குதிரை வண்டி சற்று நெருங்கியவுடன் அதற்குப் பின்னால் ரங்கன் விரைவாக ஓட்டிக் கொண்டு வரும் மற்றொரு லாரியும் கண்ணுக்கு தெரிந்தது.

இந்த இரண்டு லாரிகளில் ஏதாவது ஒன்று நிச்சயம் குதிரை வண்டியைத் தூள்தூளாக்கி விடுமென்று மாரியப்பன் கணக்கிட்டான்.

குதிரை வண்டி நெருங்கியது.

மறுவிநாடி அங்கு ஒரு பெருத்த சத்தம் கேட்டது.

இரும்புத் தகடுகள் வலுவாக மோதி நொறுங்கிய சத்தம். அந்த சத்தம், சுற்றுப்புறத்தையே அதிர்ந்து நடுங்க வைத்தது!

மாரியப்பனும் ரங்கனும் மூடியிருந்த கண்களைக் கஷ்டப் பட்டுத் திறந்து பார்த்தனர்.

மார்பில் அழுத்தியபடி இருந்த ஸ்டீயரிங் வீல் இருவரையும் பின்புறமாகத் தள்ளி நெருக்கியிருந்தது. இரண்டு லாரிகளின் முன் புறமும் சப்பையாகி ஒன்றுக்குள் ஒன்று புகுந்து கொண்டிருந்தது.

லாரியின் கேபினிலிருந்து இறங்க முடியாதபடி கால்கள் நொறுங்கி லாரியின் பாகங்களுடன் ஒன்றிக் கலந்திருந்தன.

ரங்கள் ஓட்டி வந்த லாரிக்குப் பின்னால் ஒரு காரில் மேனோனும் ராமசாமியும் பின்தொடர்ந்து வந்திருந்தனர்.

அங்கு நடைபெறவுள்ள பயங்கரமான - ஒரு வகையில் மகிழ்ச்சியளிக்கக் கூடிய காட்சியை நேரில் பார்ப்பதற்காக வந்தனர் அந்த இருவரும்.

லாரிகள் மோதிக் கொள்ளும் சத்தத்தை அவர்கள் காதாரக் கேட்டனர். அப்படியானால் இந்த இரண்டு வண்டிகளுக்கு நடுவே அகப்பட்ட இந்திராபாயின் சாரட் தூளாக நொறுங்கி யிருக்கும் என்று இருவரும் தீர்மானித்தனர்.

லாரிக்குப் பின்னால் சற்றுத் தூரத்திலேயே காரை நிறுத்தி விட்டு இருவரும் இறங்கி முன்புறமாக வந்தனர்.

''எங்கே குதிரை வண்டி?'' -மேனோன் முதலில் தேடியது அதைத்தான்.

நொறுங்கிய லாரிகள் இரண்டையும், அதற்குள் சாகும் தறுவாயிலிருந்த மாரியப்பனையும் ரங்கனையும் ராமசாமி முதலில் பார்த்தார்.

ராமசாமி லாரியின் பக்கவாட்டுப் பகுதியைப் பார்த்தார். சரியாக ஒரு சைக்கிள் வேண்டுமானால் அந்த வழியாகப் போகலாம். அவ்வளவு சிறிய இடைவெளிதான் இருந்தது.

அப்படியானால், அந்தக் குதிரை வண்டி எங்கே போனது?

ராமசாமி சட்டென்று ஒரு விஷயத்தை கவனித்தார். மாரியப்பன் ஓட்டி வந்த லாரியின் பானட்டில் குதிரைக் குளம்பு மற்றும் சாரட்டின் இரும்புப் பட்டை உராய்ந்த அடையாளங்கள் தெளிவாகத் தெரிந்தன.

''இதை கவனித்தீர்களா? குதிரை வண்டி லாரியின் மேற் பகுதி வழியாகத் தப்பித்திருக்கிறது!'' ராமசாமி மேனோனுக்குச் சுட்டிக் காட்டினார்.

ஏறத்தாழ கால் மணிநேரம் போராடியும்கூட ரங்கனையும் மாரியப்பனையும் அவர்களால் காப்பாற்ற முடியவில்லை.

அதற்குள் அங்கு ஒரு போலீஸ் ஜீப் வந்து நின்றது. சப்-இன்ஸ்பெக்டர் ஜகதீஷும் ஐந்து போலீஸ்காரர்களும் அதிலிருந்து இறங்கினர்.

''இங்குதான் லாரிகள் மோதிக் கொண்டதா?'' ஜகதீஷ் கேட்டார்.

ஜகதீஷுக்குத் தங்களது ரகசியங்கள் ஒருவேளை தெரிந்து விட்டதோ என்கிற சந்தேகத்துடன் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''போலீஸ் ஸ்டேஷனுக்கு போன் செய்து சொன்னார்கள். இந்திராபாய்தான் செய்தி சொன்னவர்.'' ஜகதீஷ் கூறினார்.

அவள் வேறு எதையாவது சொல்லியிருப்பாளோ என்கிற பதைப்புடன் மேனோனும், ராமசாமியும் ஜகதீஷை கவனித்தனர்.

ஆனால், ஜகதீஷ் வேறு எதையும் பேசவில்லை.

''டிரைவர்களை ஏன் இன்னும் வண்டியிலிருந்து இறக்காமல் இருக்கிறீர்கள்?'' ஜகதீஷ் விசாரித்தார்.

''நாங்கள் திகைப்பில் என்ன செய்வதென்று புரியாமல் விழித்துக் கொண்டு நிற்கிறோம். ரங்கா, மாரியப்பா உங்களுக்கு காயம் ஏதாவது பட்டிருக்கிறதா என்ன?'' ராமசாமி கேட்டபடி கேபின் பகுதியை நெருங்கினார்.

அதற்குள் இருவரும் இறந்து விட்டிருந்தனர். அதற்குள் விபத்தைப் பற்றிக் கேள்விப்பட்டு ஆட்களும் நிறையவே கூட்டம் சேர்ந்து விட்டனர்.

நொறுங்கி வளைந்த தகடுகளை ஒருவிதமாக விலக்கி, இருவரது பிணங்களையம் வெளியே எடுத்தனர்.

தொடர்ந்து போலீஸாரின் வழக்கமான நிகழ்ச்சி நிரல்கள் விரைவாக நடைபெற்றன.

பத்திரிகையாளர்கள், புகைப்படக் கலைஞர்கள் வந்தனர், பார்த்தனர்; விசாரித்தனர்.

மறுநாள் பத்திரிகைகளில் புகைப்படத்துடன் செய்தியை இப்படி வெளியிட்டனர். 'குடிபோதையில் ஓட்டியதால் லாரிகள் நேருக்குநேர் பயங்கர மோதல். டிரைவர்கள் இருவர் பலி.'

ராமசாமி காலையில் பத்திரிகையைப் படித்துக் கொண் டிருந்தபோது டெலிபோன் மணியடித்து, கவனத்தைக் கவர்ந்தது.

''ஹலோ, ராமசாமி ஸ்பீக்கிங்... உங்களுக்கு யார் வேண்டும்.''

''நான்தான் இந்திராபாய் பேசுகிறேன். என்ன மிஸ்டர் ராமசாமி, லாரிகளை அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தி விட் டீர்களா? இல்லையானால் சாயங்காலத்திற்குள்ளாவது அதற்கு ஏற்பாடு செய்யுங்கள்!'' குரல் கட்டளை மாதிரி மிரட்டியது.

ரிசீவரை அதன் பழைய இடத்தில் வைப்பதற்குள் ராமசாமி யின் உடம்பு வியர்வையால் நனைந்தது. 'இது ஆபத்தின் அறிகுறி. சீக்கிரம் மாற்று வழி கண்டுபிடி!'

உடனே டாக்டர் வில்லியத்துக்கு போன் செய்தார்.

இருபது நிமிடத்தில் வில்லியம், ராமசாமியின் வீட்டை அடைந்தார்.

''வருத்தத்திற்குரிய செய்தியை அறிந்தேன்!'' வில்லியம் துயரமும் ஏமாற்றமும் கலந்த குரலில் பேசினார்.

''பேப்பரில் வந்ததைத்தானே சொல்கிறீர்கள்? உண்மையில் செய்தி அதைவிட ஆச்சரியமானது. லாரிகளைச் சீக்கிரம் அங்கிருந்து அப்புறப்படுத்தும்படி சற்று நேரத்திற்கு முன்னால் ஒரு போன் வந்தது. செய்தது யார் தெரியுமா? சாட்சாத் இந்திரா பாய்! அப்படியானால், நமது திட்டம் அவளுக்குத் தெரிந்து விட்டிருக்கும். இல்லையா டாக்டர்?''

''மேற்கொண்டு என்ன செய்வதென்றே புரியவில்லை. ஒரே குழப்பமாக உள்ளது!''

''யோசிப்போம். இன்னும் சற்று நேரத்தில் மேனோனும் வருவார்.''

''அப்படியானால், அதற்குள் நான் திரும்பி வருகிறேன்!'' டாக்டர் விடைபெற்றார்.

ராமசாமி கோடவுனுக்கு போன் செய்தார். நான்கு மணிக்குள் லாரிகளை அப்புறப்படுத்தி, போக்குவரத்திற்கு இடைஞ்சலில்லாமல் பார்த்துக் கொள்ளுமாறு கூறினார்.

## 17

**ப**தினோரு மணியளவில் உண்ணி மேனோன் வந்தார். அவருடன் மற்றொரு இளைஞனும் இருந்தார்.

மெல்லிய தங்கச் சரிகைபோட்ட எட்டு முழவேட்டி. வெள்ளை நிற முழுக்கைச் சட்டை. ஏறத்தாழப் பத்து பவுன் எடையுள்ள ருத்திராக்ஷம் கட்டிய தங்கமாலை கழுத்தில். வலது கையின் மோதிர விரலில் சங்கு வடிவ மோதிரம். நல்ல உயரம்.

அதற்கேற்ற உறுதிவாய்ந்த உடல். பார்வையில் பழக இனியவர் என்று தோன்றியது.

அவர் கண்களில் ஏதோ ஓர் ஒளி ஜொலித்தது. ராமசாமி இளைஞனை உற்றுப் பார்த்தார். அந்த முகத்திலிருந்து அவரால் சட்டென்று பார்வையைப் பறித்தெடுக்க முடியவில்லை.

அதற்குள் டாக்டர் வில்லியமும் வந்து சேர்ந்தார்.

''உங்கள் பெயர்?'' - ராமசாமி மரியாதையுடன் கேட்டார்.

''தேவதத்தன்.'' அந்தக் குரல் மிகவும் இனிமையாக இருந்தது.

''உட்காருங்கள்...'' ராமசாமி இருக்கையைச் சுட்டிக் காட்டினார்.

தோளில் போட்டிருந்த பையை மடியில் வைத்தபடி தேவதத்தன் அமர்ந்தார்.

''இவர் யாரென்று தெரியவில்லையே?'' ராமசாமி கேட்டார்.

''நமக்கு உதவுவதற்காக வந்திருக்கிறார்.'' மேனோன் அறிமுகம் செய்தார்.

வெப்பத்தால் சூடாகிச் சிவந்த இதயப் பரப்பின் மீது பனித்துளியொன்று வீழ்ந்தது போல் ராமசாமி ஆறுதலடைந்தார்.

இருப்பினும் ராமசாமி ஒருவித சந்தேகத்துடன்தான் தேவதத்தனைப் பார்த்தார். முந்தைய சம்பவங்கள் அவரை அப்படியெல்லாம் நினைக்கச் செய்தன. மிகவும் கெட்டிக்காரரான மந்திரவாதி நம்பீசனே அவளிடம் தோல்வியடையவில்லையா?

ஆனால், இந்த இளைஞனது தோற்றம் ராமசாமியின் மனத்தில் நம்பிக்கை ஏற்படுத்துவதாக இருந்தது.

''என்ன சாப்பிடுகிறீர்கள்?'' ராமசாமி மூவரையும் பார்த்தபடி கேட்டார்.

ராமசாமியின் வீட்டின் முன்புறமிருந்த தென்னை மரத்தைப் பார்த்தார் தேவதத்தன்.

விஷயத்தைப் புரிந்துகொண்ட ராமசாமி உடனே வேலைக் காரனிடம், இளநீர் கொண்டுவர உத்தரவிட்டார்.

இளநீரைக் குடித்துவிட்டு தேவதத்தன் பேசினார்: ''செய்திகளைக் கேள்விப்பட்டேன்.''

''நீங்கள் மேனோனுக்கு ஏற்பட்ட அனுபவங்களை மட்டுமே கேள்விப்பட்டிருப்பீர்கள். உண்மையில் அதே மாதிரி எங்களுக்கும் நேர்ந்துள்ளது.'' டாக்டர் வில்லியம் கூறினார்.

''இருக்கட்டும்! உங்கள் எல்லாரது லட்சியமும் ஒரே நபரை மையப்படுத்தித்தானே? அதனால் அதில் பிரச்சினை எதுவுமில்லை.'' தேவதத்தன் பதிலளித்தார்.

இருப்பினும் ராமசாமி முக்கியமான சம்பவங்கள் சிலவற்றைத் தேவதத்தனிடம் விளக்கினார். மாந்திரீகன் ராமன் நம்பீசனுக்கு நேர்ந்த கதியைப் பற்றிக் கூறியபோது தேவதத்தன் கவனத்துடன் கேட்டார்.

''சில மனிதர்களுக்கு அமானுஷிகமான சில சக்திகள் இருப்பதுண்டு. அப்படிப்பட்டவர்களுடன் மோதுவது சுலபமான காரியமல்ல... இருப்பினும் எப்படிப்பட்டவரிடமும் ஏதாவது ஒரு பலவீனமும் இருக்கவே செய்யும். மற்றும் சிலரது உடம்புக்குள் வெளி சக்திகள் ஏதாவது புகுந்து கொள்வதாலும் இப்படிப்பட்ட அமானுஷிக சக்திகள் ஏற்படுவதுண்டு. அந்த மாதிரிச் சூழ்நிலையில் புகுந்து கொண்ட சக்தியை அந்த உடம்பிலிருந்து பிரித்து விட்டால், நமது நோக்கம் சுலபமாக நிறைவேறி விடும். அதற்கான சந்தர்ப்பங்களை நாம் ஏற்படுத்த வேண்டும். நீங்கள் குறிப்பிட்ட பெண்மணி அழகியாகவும், இளம் பெண்ணாகவும் இருப்பதால் அது சாத்தியமென்று தோன்றுகிறது...'' தேவதத்தன் வாசலுக்கு வெளியே பார்வையைச் செலுத்தியபடி, வேறு எவருடனோ பேசுவது போல் பேசினார்.

''அங்குதான் சிக்கல், நீங்கள் குறிப்பிட்டதெல்லாம் மனிதப் பெண்ணாக இருந்தால் சரி. ஆனால், இவள் மனிதப் பிறவியாக இருக்க முடியாது என்பது எங்களது முடிவு!'' டாக்டர் வில்லியம் குறுக்கிட்டார்.

''அவள் மனிதப் பெண்ணா இல்லையா என்பதைப் பற்றி நாம் இப்போது எதையும் கூற முடியாது.''

''ஆமாம், நீங்கள் எங்கே தங்கப் போகிறீர்கள்?'' டாக்டர் கேட்டார்.

சற்றுநேரம் மௌனமாக இருந்த பிறகு தேவதத்தன் பேசினார்: ''ஆட்கள் யாரும் வசிக்காமல் இருக்கிற ஏதாவது ஒரு காலிவீடாக இருந்தால்கூடப் போதும்.''

ராமசாமி உடனே அப்படிப்பட்ட ஒரு வீட்டை மனத்தால் தேடியெடுக்கவும் செய்தார்.

எக்ஸ்போர்ட் மட்டுமின்றி ஒரு காண்ட்ராக்டராகவும் இருப்பதால், அவருக்கு ஏராளமானவர்களுடன் நெருங்கிய தொடர்பு இருந்தது. பெரிய பெரிய அதிகாரிகளும், வெளிநாட்டுக் காரர்களும் அதில் அடக்கம். அப்படிப்பட்டவர்களை மகிழ்ச்சிப் படுத்துவதற்காக என்றே ஒதுக்குப்புறமான ஒரு வீட்டை அவர் எப்போதோ வளைத்துப் போட்டிருந்தார்.

நகரிலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் ஏறத்தாழ இரண்டு ஏக்கர் நிலப்பரப்பின் நடுவில் இருந்தது அந்த வீடு.

அந்த வீட்டைச் சுற்றி கல்தூண்களை ஊன்றி முள்கம்பி வேலி கட்டியிருந்தார்.

இது தவிர அந்த வீட்டின் காம்பௌண்டுச் சுவர்கள் உயரமாகவும், வீடு அதன் மையத்திலுமிருந்ததால் அங்கு எது நடந்தாலும் மற்றவர்களுக்குத் தெரியாது.

''ஒருவீடு உள்ளது. ஆனால், அதில் சில குறைகளும் உள்ளன.'' ராமசாமி கூறினார்.

''ஓகோ... அந்தத் தனி வீட்டைச் சொல்கிறீர்களா? ரொம்பவும் நல்லது. அந்த வீடு இவருக்குத் தகுந்தது. உள்ளே என்ன நடந்தாலும் வெளியே ஒரு ஈ காக்காவுக்குக் கூடத் தெரியாது.'' உண்ணி மேனோன் உற்சாகத்தோடு கூறினார்.

''உண்மைதான். ஆனால், அதனால் என்னுடைய மற்ற காரியங்கள் சிலதெல்லாம் பாதிப்படையும்.''

''அதைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். தற்சமயம் அப்படிப் பட்ட அவசியம் ஏதாவது ஏற்பட்டால் நாம் கிழக்கிலுள்ள வீட்டைப் பயன்படுத்தலாம். அங்குதான் மற்றொரு விருந்தினர் மாளிகை உள்ளதே!'' உண்ணி மேனோன் ஆலோசனை கூறினார்.

''மிஸ்டர் ராமசாமி, இப்போதைய நிலையில் இது தான் நமக்கு மிகவும் முக்கியமான காரியம். இனிமேல் உங்களது ஒவ்வொரு நடவடிக்கையையும் அவள் கவனித்துக் கொண்டே இருப்பாள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்!'' டாக்டர் எச்சரித்தார்.

''நீங்கள் சொன்னால் அதை மறுத்துப் பேச முடியுமா? அப்படியே ஆகட்டும்.'' கடைசியில் ராமசாமி ஒப்புக் கொண்டார்.

''அப்படியானால் அங்கு போனபிறகு மற்ற விஷயங்களைப் பேசிக் கொள்ளலாம்!'' மேனோன் எழுந்தார்.

''ஆமாம் அதுதான் நல்லது...'' டாக்டரும் எழுந்தார்.

ராமசாமியும் அவர்களுடன் எழுந்தார். ஜீப்பில் ஏறினார். ஜீப் புறப்பட்டது. பதினைந்து நிமிடத்திற்குள் அந்த வீட்டை அடைந்தனர். நடுவே ரயில்வே கேட்டில் கொஞ்ச நேரம் காத்திருக்க நேர்ந்தது.

அந்த வீட்டின் 'கேட்'டை ராமசாமி திறந்தார். உள்ளே நுழைந்தபோது, வெளியிலிருந்து பார்த்தால் எதுவும் தெரியாத அளவுக்கு செடி கொடிகள் மண்டிக் கிடந்தன. பார்வைக்கு அந்த வீடு ஒரு காட்டிற்குள் இருப்பது போலவே இருந்தது.

ஜீப்பை சாலையோரம் நிறுத்திவிட்டு நால்வரும் கேட்டைக் கடந்தனர்.

தேவதத்தன் சுற்றுமுற்றும் பார்த்தார்.

''நல்ல இடம்தான்!'' தேவதத்தன் சுற்றுப்புறத்தைப் பாராட்டத் தவறவில்லை.

''ஒரு விஷயத்தைச் சொல்லிவிடுகிறேன். இங்கு மின்சாரமும் டெலிபோனும் கிடையாது. அந்தப் பெயரில் கூட

இங்கு யாரும் வந்து தொல்லைப்படுத்தக் கூடாது என்பதற்காக இப்படியொரு ஏற்பாடு.'' ராமசாமி தேவதத்தனைப் பார்த்தபடி பேசினார்.

உள்புறக் கூடத்தில் பெரிய நிலவிளக்கு ஒன்று உள்ளது. மற்ற அறைகளிலெல்லாம் கண்ணாடிச் சிமிழ் போட்ட விலையுயர்ந்த சிம்னி விளக்குகள் உள்ளன. அது மட்டுமில்லாமல் பழையகால விளக்குகளான தூண்டாமணி விளக்கு. பிடியுள்ள கை விளக்கு, சங்கிலி விளக்கு எல்லாம்கூட அதனதன் இடத்தில் பத்திரமாக வைக்கப்பட்டுள்ளது.

தென்புறக் கடைசியில் ஓய்வு அறை ஒன்றும் உள்ளது. ஒரு பெரிய ஹால் போன்ற அறை. அதுவும் மற்ற அறைகளைப் போல் மரத்தாலானதுதான். இதை மட்டும் ராமசாமி புதிதாக அமைத்திருந்தார். அந்த அறையும் பழைய அறைகளின் பாணியிலேயே அமைக்கப்பட்டிருந்தது.

''என்ன, வீடு உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?'' டாக்டர் தேவதத்தனிடம் கேட்டார்.

''தாராளம்! மிகவும் பழைய வீடு மாதிரித் தோன்றுகிறதே, இதைக் கட்டி எத்தனை வருடங்களாகியிருக்கும்?'' தேவதத்தன் கேட்டார்.

''வீட்டின் முன்புறத்திலுள்ள மச்சுப் பலகையில் அதையும் பொறித்து வைத்திருக்கிறார்கள். ஐந்நூறு வருடங்களுக்கு மேலாகிறது.''

ஒருவிநாடி எதையோ யோசித்த தேவதத்தன். ''இருக்கும்... இருக்கும்!'' என்றார்.

''உங்களுக்கு சாப்பாடெல்லாம் எப்படி ஏற்பாடு செய்வதென்று தெரியவில்லையே?'' மேனோன் கேட்டார்.

''அதையெல்லாம் நானே பார்த்துக் கொள்கிறேன். என்னுடன் வேறு யாரும் இங்கு தங்குவதை, குறிப்பாக இரவில் தங்குவதை நான் விரும்பவில்லை.'' தேவதத்தன் அவசரமாகக் குறுக்கிட்டார்.

''உங்களுக்கு ஏதாவது பொருள்கள் தேவைப்பட்டால் வாங்கிவர ஆள் தேவைப்படுமே?''

''எனக்குத் தேவையான பொருள்களின் ஒரு பட்டியலை உங்களிடம் தருகிறேன். அதை மட்டும் எனக்கு வாங்கித் தந்து விட்டால் போதும்.''

''அப்படியே செய்து விட்டால் போகிறது.''

''இந்த வீடு முன்பு யாருக்குச் சொந்தமாக இருந்தது என்பதற்கு ஏதாவது பத்திரங்கள் உண்டா என்ன?''

''இந்த வீட்டின் கடைசி உரிமையாளராக இருந்தவர் தேவநாராயணன் நம்பூதிரி. அவருக்கு ஒரு தொடுப்பு இருந்தது. அவருக்குப் பிறந்த பெண்ணின் வாரிசுகளில் கடைசி நபரிடமிருந்து நான் இந்த வீட்டை வாங்கினேன்.''

''உங்களுக்கு வீட்டை விற்றவர் இப்போது உயிருடன் இருக்கிறாரா?''

''இல்லை!''

''தேவநாராயணன் நம்பூதிரியைப்பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?''

''எதுவும் தெரியாதே!''

''ம்...'' தேவதத்தன் முனகினார்.

''நாங்கள் வேறு ஏதாவது செய்ய வேண்டுமா?'' ராமசாமி கேட்டார்.

''இன்று இரவு எனக்கு சாப்பாடு எதுவும் வேண்டியது இல்லை. நாளைக் காலையில் ஏதாவது உடுப்பி ஹோட்டலி லிருந்து சாப்பாடு எடுத்து வர ஏற்பாடு செய்யுங்கள்.''

''செய்து விடுகிறோம்.''

''இந்த வீட்டில் யாராவது இரவில் தனியாகப் படுத்து உறங்கியிருக்கிறார்களா?''

''எனக்குத் தெரிந்து அப்படியொரு சம்பவம் இங்கு நிகழவில்லை.''

''சரி நீங்கள் புறப்படலாம்.'' தேவதத்தன் அவர்களை வழியனுப்பி வைத்தார்.

மூவரும் புறப்பட்டனர்.

## 18

**அ**ந்தப் பழைய வீட்டில் தேவதத்தன் மட்டும் தனியாக இருந்தார்.

மாலை நேரமானது.

தேவதத்தன் வீட்டின் தென்புறமாகச் சென்றார் அங்கு பிரமாண்டமான பனைமரம் ஒன்று வளர்ந்திருந்தது.

வீட்டையொட்டி, காம்பவுண்டுச் சுவருக்குள் வளர்ந்திருந்த பனை மரத்தைப் பார்த்தபோது தேவதத்தனுக்குச் சிரிப்பு வந்தது.

சூரியனது கடைசி ஒளிக்கீற்றும் பனைமர உச்சியிலிருந்து மறைந்தது. இருள் படரத் தொடங்கியது.

தேவதத்தன் பனைமரத்தின் அருகே சென்றார்.

''அருந்ததி!'' பனைமரத்தைப் பார்த்தபடி அழைத்தார்.

அந்தப் பெயரைக் கேட்டதும் பனைமரம் ஒரு முறை விறைப்படைந்தது. பின்பு அரக்கன் ஒருவன் கையில் அகப்பட்ட மரக்கிளை போல அது பேயாட்டம் ஆடியது.

''அப்படியானால், என்னுடைய கணிப்பு தவறவில்லை. சரிதானே!'' தேவதத்தன் பனைமரத்தை ஒட்டினாற்போல நின்று வலது கையை மேற்புறமாக உயர்த்தினார். ஏறத்தாழ நான்கு அங்குல நீளமுள்ள ஆணியொன்று கையில் தட்டுப்பட்டது. தேவதத்தனின் உதடுகள் அசைந்தன. மந்திரங்கள் அந்த இதழ்களிலிருந்து உதிர்ந்தன.

சட்டென்று தேவதத்தன் அந்த ஆணியை மரத்திலிருந்து உருவினார்.

''அருந்ததி!'' மீண்டும் அழைத்தார்.

''என்னையா அழைத்தீர்கள். நான் இதோ இங்கிருக்கிறேன்.'' பனை மரத்திற்குப் பின்புறம் இருட்டிலிருந்து பதில் வந்தது.

''வெளிச்சத்திற்கு வா!'' தேவதத்தனது குரல் ஒரு கட்டளை போல ஒலித்தது.

பனைமரத்தின் நிழலிலிருந்து ஓர் உருவம் விலகி, நட்சத்திர ஒளி படுமாறு ஒதுங்கி நின்றது.

எல்லாவித அங்க அவயவயங்களும் கச்சிதமாக அமைந்த ஓர் பெண்ணுருவாக அது தெரிந்தது. மெல்லிய சல்லாத்துணி போன்ற ஏதோ ஒன்று அவளது நிர்வாணத்தை மென்மையாக மறைத் திருந்தது. அவள் உடல் தீ ஜுவாலையின் நிறத்தி லிருந்தது.

புட்டப்பகுதியைத் தாண்டி நீண்டு வளர்ந்த கார்மேகக் கூந்தல்...

வளைந்த புருவங்களும், அழகான கண்களும், அளவான மூக்கும், பளபளக்கும் உதடுகளும் எவரையும் வசீகரிக்கக் கூடியதாக இருந்தன.

''இன்றுடன் நூற்றி இருபத்தேழு ஆண்டுகள் ஆகிவிட்டது இல்லையா?'' தேவதத்தன் கேட்டார்.

''ஆமாம்!'' ஒப்புக் கொண்டாள்.

''தேவநாராயணனின் இளைய சகோதரிதானே?''

''நான் மட்டும்தான் மீதமிருந்தேன்.''

''எனக்குத் தெரியும் சங்கரன்குட்டி வளர்த்த காளைமாடு முட்டி...'' தேவதத்தன் கேள்விப்பட்டதைச் சரிபார்த்தார்.

''ஆமாம். உண்மைதான்!''

''உன் அழகுதான் அவனைப் பித்துப்பிடிக்க வைத்தது இல்லையா?'' தேவதத்தன் அவளைப் பார்த்துப் புன்னகை புரிந்தார்.

அவள் தலை குனிந்தாள்.

''அப்படியே பிரம்மரக்ஷஸாக மாறினாய். கிருஷ்ணன் போற்றி உன்னை இந்த மரத்தில் ஆணி அறைந்து சிறைப் படுத்தினார்.''

தேவதத்தன் ஒரு பழைய கதையைச் சொல்லிக் கொண் டிருந்தார்.

அருந்ததி அந்தர்ஜனம், இல்லிக்குளக்கரை இல்லத்தின் கடைசிப் பெண்வாரிசு. அவள் பதினாறாவது வயதில் பருவம் பூத்த நந்தவனமாகத் திகழ்ந்தாள். பருவத்தின் பூரிப்பு அவளின் அங்கங்களைச் செழுமைப்படுத்தியிருந்தன. இயற்கையே அவள் மீது மோகங் கொண்டது.

அருந்ததி ஒரு நாள் கோயிலிலிருந்து திரும்பி வரும்போது சங்கரன்குட்டியின் காளைமாடு அவளைப் பார்த்து விட்டது. ஏனோ அவள் மீது அந்தக் காளைக்கு அப்படியொரு கோபம்.

கோபத்தின் காரணத்தை பின்னாளில் ஜோதிடர் ஒருவர் கூறினார். அருந்ததி ஒரு முறை துளசிமாடத்தில் விளக்கேற்றிய போது தீட்டாக இருந்தாளம்.

காளைமாடு அவளைக் குத்திக் கொன்று விட்டது!

கன்னிப் பெண்ணான அருந்ததி பிரம்ரக்ஷஸாக மாறினாள்! கடைசியில் தொல்லை தாங்க முடியாமலானபோது அன்றைய வாரிசாக இருந்த சங்குண்ணி நாயர் மாந்திரீகரான இளைய வீட்டுப் போற்றியை வரவழைத்தார்.

போற்றி அவளைப் பனைமரத்தில் ஆணி அறைந்து சிறைப்படுத்தினார்

''உன்னை எதற்காக விடுதலை செய்திருக்கிறேன் தெரியுமா?'' தேவதத்தன் கேட்டார்.

''தெரியும்.''

''அப்படியானால் என்னுடன் வா!'' தேவதத்தன் அழைத்தார். அவள், அவரைப் பின்தொடர்ந்தாள்.

## 19

**தே**வதத்தன் அருந்ததியுடன் வீட்டிற்குள் நுழைந்தார்.

தனக்கு விடுதலையளித்த நபரிடம் அருந்ததி என்கிற பிரம்மரக்ஷஸுக்கு நன்றியுணர்வு தோன்றியது.

''நான் என்ன செய்ய வேண்டும் திருமேனி, சொல்லுங்கள்...'' அவள் கேட்டாள்.

''தற்சமயம் இங்கு எனக்கு ஒரு வேலைக்காரி தேவைப் படுகிறாள். வெளியிலிருந்து யாரையாவது வேலைக்குச் சேர்த்துக் கொண்டால், இங்கிருந்து ரகசியங்கள் கசியும்!'' தேவதத்தன் கூறினார்.

''அது ஆரம்பத்திலேயே எனக்குப் புரிந்து விட்டது.''

''நீ சமையல் வேலை செய்ய வேண்டியது இல்லை. அதையெல்லாம் நானே கவனித்துக் கொள்வேன். நீ சில சிலைகளுக்கு முன்னால் தினமும் விளக்கேற்ற வேண்டும்.''

''நீங்கள் சொல்கிறபடியே செய்கிறேன்!''

''சிலசமயங்களில் தூது செல்ல நேரிடும்.''

''எந்த இடத்திற்குப் போக வேண்டும்.''

''அதையெல்லாம் தேவையானபோது நான் சொல்கிறேன்.''

''சரி இப்போது நீ போகலாம். இந்த வீட்டின் தானிய அறையில் நீ போய் ஓய்வெடுத்துக் கொள்ளலாம்.''

அந்த பிரம்மரக்ஷஸஸ் வீட்டின் பின்புறம் நோக்கி நகர்ந்து மறைந்தது.

சற்று நேரம் வெளிப்புறத் திண்ணையில் உலாவிய தேவதத்தன் தனது அறைக்குள் சென்று பையை எடுத்தார்.

நிலவிளக்கின் திரியை உயர்த்தினார்.

அறையில் வெளிச்சம் அதிகரித்தது.

பையிலிருந்து ராசிப்பலகையை வெளியே எடுத்தார். தரையில் வைத்த பிறகு சோழிகளை வெளியே எடுத்தார்.

சில சோழிகளை ராசிப்பலகையின் தேவஸ்தானத்தில் வைத்துவிட்டு, சோழிகளைக் குலுக்கிப் போட்டார். மூன்றாகப் பிரித்தார் எண்ணினார்; கணித்தார்.

முகத்தில் சந்தேகம் நிழலாடியது.

மீண்டும் ஒரு முறை பரிசோதித்தார்.

விடை பழையதேதான்!

பிரஸ்னத்தில் எதுவும் புலப்படவில்லை. எவ்வளவோ யோசித்து விடை கிடைக்கவில்லை.

தேவதத்தன் பரதேவதையை மனத்திற்குள் தியானித்தபடி காரணத்தை ஆராய்ந்தார். மாற்று என்னவென்று யோசித்தார்.

'அடுத்த வழி அக்னிநிமித்தம்தான்!' அவர் மனம் தீர்மானித்தது.

அருந்ததியை அழைத்தார். உடனே எதிரில் வந்து நின்றாள்.

''ஹோமத்திற்குச் சுள்ளிகள் வேண்டும்!'' தேவதத்தன் உத்தரவிட்டார்.

சற்றுநேரத்திற்குள் அருந்ததி ஹோமத்திற்குத் தேவையான மரத்துண்டுகள் மற்றும் நெய்யுடன் திரும்பி வந்தாள்.

''அருந்ததிக்கு இந்த முறையெல்லாம் நன்றாகத் தெரியு மில்லையா?''

''பெரியண்ணனும் உங்களைப் போல மந்திரவாதியா யிற்றே!''

''தெரியும். தேவநாராயணன் நம்பூதிரியைப் பற்றி நான் நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன்.''

''உண்மையாகவா!'' அருந்ததியின் முகத்தில் மகிழ்ச்சி தெரிந்தது.

தேவதத்தன் ஹோமகுண்டத்தை வடிவமைத்தார்.

''இந்த இடத்தில் வேண்டாம். தென்புற அறையின் மேற்குப் புறத்தில் இதற்காகவே ஓர் அறை உண்டு. அந்த அறையில் மேல்கூரை கூடக்கிடையாது.'' அருந்ததி கூறினாள்.

''உண்மையாகவா?'' தேவதத்தன் எழுந்தார்.

அருந்ததியுடன் அவள் குறிப்பிட்ட அறையை அடைந்தார்.

அங்கு ஏராளமான ருத்ர தேவதைகளின் சிலைகள் சுவரை ஒட்டியபடி வரிசையாக நின்றிருந்தன. வெண்கலத் தகட்டில் மந்திரம் எழுதிச் சட்டம் போடப்பட்ட தகடுகள் சிலவும் இருந்தன.

ஹோமகுண்டங்களும் இருந்தன.

எல்லாவித வசதிகளும் உள்ள இப்படிப்பட்ட ஒரு வீடு தன்னுடைய உபயோகத்திற்குக் கிடைத்ததில் தேவதத்தனுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது.

''அப்படியானால், உடனே ஹோமத்தைத் தொடங்க வேண்டியதுதான்!'' அருந்ததியைப் பார்த்தபடி தேவதத்தன் கூறினார்.

ஹோமகுண்டம் சுத்தம் செய்யப்பட்டது. மந்திரங்களை உச்சரித்தபடி தேவதத்தன் ஹோமம் தொடங்கினார்.

சரியான சமயத்தில் பலன் தெரிந்தது.

ஹோமகுண்டத்து தீ ஜுவாலைகளுக்குள் ஓர் உருவம் தெளிவடைந்தது.

பனங்குலை போன்ற கருமையான தலைமுடி முதலில் தெரிந்தது.

மாந்திரீகனான தேவதத்தனே அந்த உடம்பின் ஒளியைக் கண்டு ஒரு கணம் வியப்படைந்தார். அவள் அழகின் மொத்த வடிவமாக இருந்தாள். அந்த வடிவம் இந்திராபாய்!

அருந்ததியும் அந்த உருவத்தைப் பார்த்தாள். அவள் பார்வையில் சந்தேகம் நிழலிட்டது.

''இது இந்திராபாய் அல்லவா?'' - அருந்ததி கேட்டாள்.

''ஆமாம். உனக்கு இவளைத் தெரியுமா?'' தேவதத்தன் வியப்புடன் கேட்டார்.

''நன்றாகத் தெரியும்.''

''சரி...'' சற்று நேரம் எதையோ யோசித்த தேவதத்தன் ஹோமகுண்ட நெருப்பை அணைத்தார்.

அத்துடன் இந்திராபாயின் உருவம் மறைந்தது.

''இப்போது சொல். உனக்கு எப்படி அவளைத் தெரியும்?'' தேவதத்தன் அருந்ததியைப் பார்த்துக் கேட்டார்.

அருந்ததி தரையில் சப்பணமிட்டு அமர்ந்தாள்.

''என் பெரிய அண்ணன் பெரிய மாந்திரீகனாக விளங்கிய போது, இவள் அவருடன் மோதியிருக்கிறாள்.''

''என்ன, இவளா! இவளுக்கு அவ்வளவு வயதாகிறதா என்ன?'' தேவதத்தன் வியப்புடன் கேட்டார்.

''வருடங்கள் எத்தனையோ கடந்து விட்டிருக்கிறது.''

''பிறகு?''

''அவள் சாதாரணமானவள் அல்ல.''

''அவளது சக்தி எங்கே உள்ளது தெரியுமா?''

''தெரியாது. ஒருவேளை அவளிடமுள்ள ஏதாவது ஒரு பொருளில் இருக்கலாம்.''

''நீ சொல்வது போல் இருப்பதானாலும் அதை நாம் எப்படிக் கண்டுபிடிப்பது?''

''அவளுடன் நெருங்கிப் பழகினால்தான் அது முடியும். இல்லாவிட்டால் அது சாத்தியமில்லை!''

''உன் அண்ணன் ஏன் அதற்கு முயலவில்லை?''

அதற்கு அவள் பதிலளிக்காமல் சற்று நேரம் மௌனமாக இருந்தாள்.

''என்ன பதிலையே காணோம்?''

அருந்ததி தேவதத்தனை உற்றுப் பார்த்தாள். அவளது பார்வை அவன் தலையிலிருந்து கீழ்ப்புறமாக இறங்கியது. தசைகள் தடித்துத் திரண்டிருந்த அவன் மார்புப் பகுதி... கருங்கற் சிலையினுடையது போன்ற வயிறு என்று பார்வை படிப்படியாக கீழிறங்கியது.

''இவை எதுவும் பெரியண்ணனிடம் இல்லை.'' அவள் புன்னகையுடன் கூறினாள்.

''எவையெல்லாம்?''

''இந்த மாதிரி உடற்கட்டு?''

''ஓகோ நீ குறிப்பிடும் இந்திராபாய் சாதாரணமானவள், அழகான இளைஞனின் உடல்வாகில் மயங்கி விடக்கூடியவள் என்றா கருதுகிறாய்?''

''இது மனிதர்கள் தொடர்பான காரியமில்லையா? நீங்களும் அமானுஷ்யமான மாந்திரீக சக்தியும் அழகும் உள்ளவர்தான். இவற்றின் துணையுடன் ஒருவேளை நீங்கள் முயற்சி செய்தால் வெற்றி பெறலாம்.''

''ம்...!''

அவர் தன் மனத்தை இந்திராபாயின் பக்கம் திருப்ப முயன்றார்.

அருந்ததி சொல்வதைப் பார்த்தால், இந்திராபாயிடம் ஏதோ ஒரு சக்தி நிறைந்துள்ளது. ஆனால், அதை அகற்றுவது அவ்வளவு சுலபமில்லை. அந்த சக்தி நிலை பெற்றிருப்பது மிகவும் ரகசியமான ஓரிடமாக இருக்க வேண்டும்.

இந்திராபாயை நெருங்க வேண்டுமானால், முதலில் அவள் மனத்தை வசப்படுத்த வேண்டும். மந்திரஸித்தியினால் அது சாத்தியமல்ல.

முதலில் அதற்கேற்ற ஓர் உபாயத்தைக் கண்டுபிடிக்க வேண்டும்.

''இந்த விஷயத்தில் அருந்ததியால் எனக்கு ஏதாவது உதவ முடியுமா?'' தேவதத்தன் கேட்டார்.

''நான் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள்!''

''இந்திராபாயின் வீட்டிற்குச் சென்று அவளது தினசரி நடவடிக்கைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும்.''

''என்னை அவள் அடையாளம் தெரிந்து கொண்டால்?''

''தெரிந்து கொள்ளாதிருக்க, நான் ஏற்பாடு செய்கிறேன்.''

தேவதத்தன் தன்னுடைய பையிலிருந்து ஒரு தாயத்தையும், ஒரு தகடையும் வெளியே எடுத்தார். அந்தத் தகட்டில் பூத பிரேதப் பிசாசுகள்கூட மாந்திரீகரின் பார்வையிலிருந்து மறைந்து போகத் தக்க மந்திரத்தை எழுதினார். அதைத் தாயத்திற்குள் திணித்தார்.

மிகவும் சிறிய அந்தத் தாயத்தை ஒரு தங்க நூலிழையில் கோத்து அருந்ததியின் காலிலுள்ள கொலுசுடன் இணைத்துக் கட்டினார்.

''இனி உன்னை இந்திராபாய் ஒரு போதும் அடையாளம் தெரிந்து கொள்ள முடியாது!'' தேவதத்தன் கூறினார்.

''அப்படியானால் நான் புறப்படட்டுமா?'' அருந்ததி சட்டென்று காற்றில் மறைந்தாள்.

இந்திராபாய் பூஜை அறையில் இருந்தாள். தங்கத்தாலான நிலவிளக்குகளுக்குப் பின்னால் மெருகேறிய சிவலிங்கம், திரிகளின் வெளிச்சத்தில் பளபளத்தது.

சிவலிங்கத்தின் மார்பில் தங்கநிறப் பாம்பு ஊர்ந்து இழைதது.

சிவலிங்கத்திற்கு அருகிலிருந்த மற்ற தெய்வ விக்கிரகங்களுக்கும் வெவ்வேறு பூக்களால் அர்ச்சனை செய்தாள்.

ஆனால், அதிலிருந்து ஒரேயொரு சிலைக்கு மட்டும் அவள் அர்ச்சனை செய்யவில்லை. அந்தச் சிலை அசப்பில் இந்திரா பாயின் ஒரு சிறு வடிவமாகத் தோன்றியது.

பூஜை நடந்து கொண்டிருந்தபோது தெய்வ விக்கிரகங்களில் இருந்து புறப்பட்ட சன்னமான ஒளிக்கீற்றுகள் இந்திராபாய் போன்ற சிலையின் மீது படிந்தன.

பூஜையின் இறுதியில் அந்தச் சிலை ஜொலிக்கத் தொடங்கியது.

இந்திராபாய் அதைக் கையில் எடுத்தாள். சிலிங்கத்தை பிரதிஷ்டை செய்திருந்த இடத்திலிருந்து நகர்த்தினாள். அந்தப் பீடத்தின் கீழே ஒரு ரகசிய அறை இருந்தது. அதற்குள் அந்தச் சிறிய சிலையை வைத்தாள். பிறகு சிவலிங்கத்தைப் பழைய இடத்திலேயே வைத்தாள்.

தங்கநிறப் பாம்பு அப்போதும் சிவலிங்கத்தின் மீது ஊர்ந்து கொண்டிருந்தது. இந்திரா பூஜையறையிலிருந்து வெளியேறி னாள்.

சட்டென்று ஏதோ ஒரு சந்தேகம் தோன்றவே, மீண்டும் பூஜையறைக்குள் சென்றாள். அறைக்குள் எதையோ தேடினாள். என்னவென்றே புரியாத, பிடிபடாத கேள்விக் குறியொன்று அவள் முகத்தில் நிழலாகப் படிந்தது.

எதுவும் தட்டுப்படாமற் போகவே பூஜை அறையிலிருந்து வெளியேறினாள். அறையைத் தாழிட்டுப் பூட்டவும் செய்தாள். சாவியை ஞாபகமாக அவளது இடுப்பி லிருந்த அரைஞாண் கொடியில் கோத்து முடிந்தாள்.

கடிகாரம் மணி பன்னிரண்டைக் காட்டியது. வாசலுக்கு வெளியே வந்தவள், ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தாள்.

மார்கழி மாதத்து நிர்மலமான ஆகாயம். முழக்கோல் நட்சத்திரம் தலைக்கு நேராக ஒளிர்ந்தது.

இந்திரா வீட்டிற்குள் நுழைந்து கதவை மூடினாள்.

## 20

அருந்ததி, தேவதத்தனிடம் திரும்பி வந்தாள்.

அவள் முகத்தைப் பார்த்தவுடன் அவள் போன காரியம் பழம்தான் என்று தேவதத்தனுக்குத் தெரிந்துவிட்டது.

''காரியம் பழம்தானே?'' தேவதத்தன் கேட்டார்.

''ஏறத்தாழப் பழம்தான்!''

''தெரிந்து கொண்டதைச் சொல்!''

அருந்ததி, இந்திராபாயின் பூஜையறைக்குள் தான் கண்ட காட்சிகளை ஒன்று விடாமல் விவரித்தாள்.

''நீ கெட்டிக்காரிதான். ஒப்புக் கொள்கிறேன்!'' தேவதத்தன் அவளைப் பாராட்டினார்.

''ஒரு விஷயம்!''

''தயங்காமல் சொல்!''

''அவளுக்கு ஏதோ சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது...'

''அதற்குக் காரணம் உன் உடம்பிற்கு இயற்கையாகவுள்ள மனோரஞ்சித மணம். அதை உன்னுடம்பிலிருந்து பிரிக்க முடியாதே?''

''ஒருவேளை அப்படியும் இருக்கலாம்.''

''இனிமேல்தான் முக்கிய்மான வேலையே உள்ளது.''

''எதுவாக இருந்தாலும் சொல்லுங்கள் காத்திருக்கிறேன்.''

''இது சற்றுக் கடினமான காரியம். அதாவது நீ அந்த வீட்டின் வேலைக்காரியாக மாற வேண்டும்.'' தேவதத்தன் கட்டளை மாதிரி கூறினார்.

''கடவுளே! அதெப்படி என்னால் முடியும்?'' அருந்ததி அரண்டே போனாள்.

''என்ன... உன்னால் முடியாதா?'' தேவதத்தன் வியப்புடன் கேட்டார்.

''அதற்குக் காரணம் இருக்கிறது. அவள் ஓர் அசாதாரணமான பெண்மணி. ஏதோ ஓர் அற்புதமான சக்தி அவரிடம் உள்ளது. எப்படியும் என்னை அடையாளம் தெரிந்து கொள்வார்...'' அருந்ததி தயங்கினாள்.

தேவதத்தன் புன்னகைத்தார்.

''அருந்ததி, நான் அந்த அளவுக்கு மடையனல்ல. அதை நீ புரிந்துகொள்ள வேண்டும். அவளைப் போல் என்னிடமும் சில சக்திகள் உண்டு. இல்லாவிட்டால், அவள் உன்னை ஆரம்பத் திலேயே மிகச் சுலபமாகக் கண்டு பிடித்திருப்பாள் என்பதை நினைவில் கொள்.''

''அது எனக்கும் புரிகிறது. ஆனால், நிரந்தரமாக அங்கே தங்குவது சாதாரணமான காரியமல்ல - அதுவும் மனித வடிவத்தில். நான் அங்கு வேலைக்குப் போனாலே அவளுக்குச் சந்தேகம் தோன்றாதா?''

அவளது பயம் நியாயமென்று தேவதத்தனுக்குத் தோன்றி யது. 'அவளை எப்படி அங்கு வேலைக்காரியாக்குவது?

வேலைக்காரி யாரும் தனக்குத் தேவையில்லை என்று அவள் திருப்பி அனுப்பிவிட்டால்?

அவள் மறுத்துவிட்டால், அதன்பிறகு அந்த வீட்டிற்குள் எப்படித் தங்கியிருக்க முடியும்?' -தேவதத்தன் யோசித்தார்.

''நான் ஒரு யோசனை சொல்லட்டுமா? நாளைக்கு மாலை நேரத்தில் இந்திராபாய் கோயிலில் தொழுவதற்காக வருவார். நீ அந்த இடத்தில் துணி துவைக்க வேண்டும். நீ சலவை செய்யும் முறையைப் பார்த்து, துணிகளின் வெளுப்பைக் கொண்டு அவள் உன்னை விரும்பும்படி நடந்து கொள். அதற்காகவே அவளுக்கு நீ தேவைப்படலாம். அப்படி ஓர் உதவியாளர் நிச்சயமாக அவளுக்குத் தேவை!'' -தேவதத்தன் உறுதி நிறைந்த குரலில் பேசினார்.

மறுநாள் மாலை நேரம். இந்திராபாய் வழக்கம் போல் ஆற்றங்கரைக்கு வந்தாள். ஆலமரத்தடியை நெருங்கினாள்.

குதிரையை அவிழ்த்துவிட்டு மரத்தடியில் ஓர் ஓரமாக உட்கார்ந்தபோது, நிர்வாண உடம்புடன் பெண்ணொருத்தி துணி துவைப்பதை கவனித்தாள்.

இந்திரா அவளையே சற்று நேரம் பார்த்தாள். அந்தப் பெண் எதையும் கவனிக்காமல் துணி துவைத்துப் பிழிந்து காய வைத்தாள். இந்திராபாய்க்கு அவளை ஏனோ பிடித்து விட்டது.

''இங்கே வாம்மா!'' இந்திராபாய் அழைத்தாள்.

அருந்ததி கைகளால் உடற்பகுதிகளை மறைத்தப்டி இந்திராபாயை நெருங்கினாள்.

''ஆமாம். நீயேன் உடை எதுவும் உடுத்திக் கொள்ளாமல் துணி துவைக்கிறாய்?''

''நான் ஓர் ஏழை. எனக்கு சொந்தபந்தம் என்று யாரும் இல்லை. இருப்பது ஒரே ஒரு உடைதான். வேறென்ன செய்வது தாயே?''

''என்ன உடம்பை மறைக்க மாற்றுத் துணிகூட உன்னிடம் இல்லையா?'' இந்திரபாய் அவளை இரக்கத்துடன் பார்த்தாள்.

''இல்லை தாயே என்ன செய்வது... எல்லாம் என் தலைவிதி!''

''அப்படியானால், நீ என் வீட்டில் வேலை செய்கிறாயா?''

''நான் அந்த அளவுக்குக் கெட்டிக்காரியொன்றும் இல்லை தாயே...'' அருந்ததி பணிவுடன் பேசினாள்.

''பரவாயில்லை. துணி துவைக்க எனக்கொரு ஆள் தேவை. அது போதும்! உனக்குத் தேவையான சாப்பாட்டை நீ சமைத்துக் கொள்ளலாம்.''

''ரொம்பவும் நன்றி தாயே. உங்களுக்கு எவ்வளவு பெரிய மனசு!''

''நீ எப்போதிலிருந்து வேலைக்கு வருகிறாய்?''

''நாளையிலிருந்து வரட்டுமா?''

''உனக்கு யாருமில்லையென்று சொன்னாயே, அப்படியானால் நீ இப்போதே என்னுடன் புறப்படலாமே, என்ன சொல்கிறாய்?''

''துவைத்த துணி காயட்டும் தாயே புறப்பட்டு விடலாம்.''

''அந்தத் துணிதானே போய்ப்பார். இந்நேரம் நன்றாக உலர்ந்திருக்கும்!'' -இந்திரா கையைச் சுட்டிக் காட்டிக் கூறினாள்.

அருந்ததி உடையை உடுத்திக் கொண்டாள்.

இந்திராபாய் குதிரையை அழைத்தாள்.

குதிரை சாரட்டை நெருங்கியது. இந்திராபாய் வண்டியின் முன்புறத்தைக் குதிரைக்கு வசதியாகப் பிடித்தாள்.

''இன்னும் உன் பெயரைச் சொல்லவில்லையே?'' இந்திராபாய் மறந்து போனவள் போல் கேட்டாள்.

''அருந்ததி!''

''நல்லபெயர். சரி வண்டியில் ஏறிக் கொள்...''

அருந்ததி சாரட்டில் ஏறினாள்.

இந்திரா ஏறி அமர்ந்தவுடன் சாரட் பாய்ந்தோடத் தொடங்கியது.

பங்களாவின் 'கேட்'டை நெருங்கியபோது, அது, தானாகவே திறந்து கொண்டது. அருந்ததி அதைப் பார்த்து வியப்படைவது போல் நடித்தாள்.

''இங்கே வேறு வேலைக்காரர்கள் யாராவது இருக்கிறார்களா தாயே?'' அருந்ததி ஒன்றும் தெரியாதவள் போல் கேட்டாள்.

''எவரும் இல்லை!''

இதுவரையிலும் இந்திராபாய் தன்னை அடையாளம் கண்டு கொள்ளாததை எண்ணி அருந்ததி உண்மையிலேயே வியப்படைந்தாள். அதனால் அவளுக்கு ஓர் உண்மை புரிந்தது. தேவதத்தன் என்கிற மந்திரவாதி சாமான்யமானவரல்ல.

ஒருவேளை அவர் இந்திராபாயைவிட அதிக சக்தி வாய்ந்தவராகக் கூட இருக்கலாம்.

பங்களாவின் முன்னால் வண்டி நின்றது.

இருவரும் இறங்கினர்.

''நீ தங்கிக் கொள்ள நான் ஓர் அறையைத் தருகிறேன்.'' என்ற இந்திராபாய் அருந்ததியை பங்களாவின் பின்புறம் அழைத்துச் சென்று வேலைக்காரர்கள் தங்கும் விடுதியையும் அவர்களது சமையற்கட்டையும் காட்டினாள்.

''உனக்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொள்ள நான் பணம் தருகிறேன்...''

இந்திராவின் வார்த்தைகளைக் கேட்ட அருந்ததி ஒரு கணம் தடுமாறினாள்.

'தனக்கு எதற்கு உணவு? இந்தப் பணத்தைக் கொண்டு தான் எதையெல்லாம் வாங்கி வருவது?'

''இந்தா வைத்துக் கொள்!'' - என்று இந்திரா பத்து புதிய ரூபாய் நோட்டுகளை எடுத்து அவளிடம் நீட்டினாள்.

அருந்ததிக்கு அதைப் பெற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

''முதலில் நீ போய் உனக்குத் தேவையான பொருள்களை வாங்கி வா!''

அருந்ததி பணத்துடன் பங்களா கேட்டைக் கடந்தாள்.

வெளியே -

தேவதத்தன் நின்றிருந்தார்.

''இப்போது நான் என்ன செய்வது?'' அருந்ததி தேவ தத்தனிடம் கேட்டாள்.

''கவலைப்படாதே. நீ பக்கத்திலேயே ஒளிந்திரு. நான் போய் வருகிறேன்.'' தேவதத்தன் பணத்தை வாங்கிக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டார்.

சற்று நேரத்திற்குள் சில பொருள்களுடன் திரும்பி வந்தார்.

''வா... போகலாம். நானும் வருகிறேன்.'' தேவதத்தன் அவளுடன் பங்களாவை நோக்கி நடந்தார்.

## 21

**தே**வதத்தன் வாயில் ஜிப்பாவும், சன்னமான சரிகை வேட்டியும் அணிந்திருந்தார். அவர் தோளில் ஒரு பை தொங்கி யது. தங்கத்தில் பதிக்கப்பட்ட ருத்திராக்ஷ மாலையொன்று அவரது முடியடர்ந்த நெஞ்சுப்பகுதியில் தொங்கியது.

படிய வாரிய தலை. சிறிய மீசை.

வாசலை நெருங்கிய தேவதத்தன் காலிங்பெல்லை அழுத்தினார்.

உள்ளே மணியொலித்தது.

இந்திராபாய் கதவைத் திறந்தாள்.

தேவதத்தன் கண்களும் இந்திராபாயின் கண்களும் நேருக்குநேர் சந்தித்தன. பொதுவாகத் தன்னைக் கண்டவுடன் தலைவணங்கும் மனிதர்களை மட்டுமே இந்திராபாய் அதுவரை சந்தித்திருக்கிறாள்.

ஆனால், இந்த இளைஞன் அந்த ரகம் இல்லை. இளைஞ னின் கண்களில் ஏதோ ஒரு பளபளப்பு. அடிமைப்படுத்தும் சக்தி அந்தப் பார்வையில் இருப்பதாக அவளுக்குத் தோன்றியது.

''என்ன இந்தப் பெண்ணுடன் வந்திருக்கிறீர்கள்?'' இந்திரா சட்டென்று அவரிடம் கேட்டாள்.

''இந்தப் பெண்மணி வீட்டுக்குத் தேவையான பொருள் களை வாங்க மிகவும் சிரமப்பட்டாள். அதே சமயத்தில் இரண்டு இளைஞர்கள் இவளை வட்டமிடத் தொடங்கினர். அதை கவனித்த நான், தேவையான பொருள்களை வாங்க உதவிசெய்து, பத்திரமாக இங்கு கொண்டு வந்தேன். இதுபோன்ற அழகான

பெண் ஒருத்தியை பொதுவாகத் துணையில்லாமல் வெளியே அனுப்புவது நல்லதல்ல!'' - அவரது குரல் 'முறையீடு' போல் இருந்தது.

''நீங்கள் யாரென்று தெரியவில்லையே?'' இந்திராபாய் கேட்டாள்.

''நான் ஒரு பாடகன்... கோயில்களில் அவ்வப்போது கிடைக்கும் வாய்ப்புகள் எனது வாழ்க்கையை நகர்த்துகின்றன.''

''பாகவதரோ?''

''தேர்ந்த பாகவதர் என்று கூற முடியாது!''

''சரி உள்ளே வாருங்கள். அருந்ததி நீ உன் இடத்துக்குப் போகலாம்...'' இந்திராபாய் கதவுப் பகுதியிலிருந்து விலகி வழி விட்டாள்.

தேவதத்தன் உள்ளே நுழைந்தார்.

''உட்காருங்கள்!'' - சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த இருக்கையைச் சுட்டிக் காட்டினாள்.

தேவதத்தன் தயங்கியபடி அமர்ந்தார்.

அவர் கண்கள் அந்த அறையில் இருந்த ஒவ்வொன்றையும் வேடிக்கை பார்த்தன. கடைசியில் அங்கிருந்த அழகான வீணை மீது கண்கள் நிலைத்தன.

''நீங்கள் வீணை வாசிப்பீர்கள் இல்லையா?'' - தேவதத்தன் பேச்சைத் துவக்கினார்.

''தெரியும்... அவ்வளவுதான். மற்றபடி வீணை வித்துவான் என்றெல்லாம் சொல்ல முடியாது. ஆமாம் நீங்கள் வீணை வாசிப்பீர்களா?''

''வாசிப்பு முறைப்படி இருக்காது!''

''பரவாயில்லை... தெரிந்தவரை வாசியுங்களேன்...'' - இந்திராபாய் கேட்டுக்கொண்டாள்.

தேவதத்தன் எழுந்து வீணையின் பின்புறம் சென்று உட்கார்ந்து, வீணையை மடியில் வைத்துக் கொண்டு மீட்டத் தொடங்கினார்.

அவர் விரல்முனைகள் வீணைக் கம்பிகளைத் தழுவிய போது, அந்த அறைக்குள் நாதத்தின் மாயாலோகம் திறந்து கொண்டது.

'எத்தனை இனிமையாக உள்ளது அவரது வாசிப்பு!' இந்திராபாய் வியந்தாள்.

அந்த வீணாகான ஒலியலைகள் சுவர்களில் மோதி மீண்டும் மீண்டும் எதிரொலித்தபோது, சொர்க்கானுபவ போதையில் இந்திராபாய் மூழ்கினாள்.

காம்போதி ராக ஆலாபனையை முடித்தவர் வீணையைக் கீழே வைத்தார்.

''இதைத்தான் ஏதோ தெரியும் என்று சொன்னீர்களா? வாசிப்பைப் பார்த்தால் வீணை வித்துவான் மாதிரியல்லவா உள்ளது!'' இந்திராபாய் பாராட்டினாள்.

''ம்... என்ன செய்யலாம்? இன்றைய நிலையில் யார் இதையெல்லாம் கவனிக்கிறார்கள்?'' தேவதத்தன் மனக்குறை உள்ளவர் போல் பேசினார்.

''இன்னும் உங்களது பெயரைச் சொல்லவில்லையே?'' இந்திராபாய் சட்டென்று நினைவு வந்தவளாகக் கேட்டாள்.

''தேவதத்தன்.''

''இப்படி வந்து உட்காருங்கள்!'' - இந்திரா எதிர்ப்புறமிருந்த சோபாவைச் சுட்டிக் காட்டினாள்.

வீணையின் பின்புறத்திலிருந்து எழுந்த தேவதத்தன் அவள் சுட்டிக்காட்டிய இடத்தில் அமர்ந்தார்.

''உங்களுக்கு எந்த ஊர்?''

''எந்த ஊரைச் சொல்ல? சிறுவயதில் நான் சென்று சேர்ந்த இடம் ஒரு பாகவதரின் வீடு. அவரிடம் சீடனாகக் கொஞ்ச காலம்

போனது. அவரது மறைவுக்குப் பிறகு மறுபடியும் அனாதை வாழ்க்கை. இப்போது போகிற இடமெல்லாம் சொந்த ஊர்தான்...'' -தேவதத்தன் மிகவும் சமத்காரமாக பதிலளித்தார்.

தேவதத்தன், இந்த பங்களா காம்பவுண்டிற்குள் காலெடுத்து வைப்பதற்கு முன்னாலேயே, தன்னை அவள் தெரிந்து கொள்ளா திருக்க கவச மந்திரம் பயன்படுத்தி யிருந்தார்.

மந்திரமெழுதிய தகடு பொருந்திய தாயத்தைக் கயிற்றில் பிணைத்து உடம்பில் கட்டியிருந்தார். அது உடம்பில் உள்ளவரை அவரை மற்ற மந்திரசக்திகள் எதுவும் செய்ய முடியாது என்று அவருக்குத் தெரியும்.

எந்த வகையான எதிர்ப்பையும் எதிர்பார்க்காத இந்திராபாய், தேவதத்தன் விஷயத்தில் அதிகமாக எதையும் யோசிக்கவு மில்லை. எனவே, எந்தத் தற்காப்பு முயற்சியிலும் ஈடுபடவு மில்லை.

எல்லாவற்றையும் விட தேவதத்தனைப் பார்த்தபோது அவர் ஒரு மந்திரவாதி என்றோ, தன்னை எதிர்த்து அழிக்க வந்துள்ள ஒரு நபர் என்றோ அவளுக்குத் தோன்றவில்லை.

''என்னைப் பற்றி விசாரித்தீர்கள். ஆனால், உங்களைப் பற்றி எதுவுமே சொல்லவில்லையே?'' தேவதத்தன் கேட்டார்.

''என் பெயர் இந்திராபாய். பழைய கோவிலகம் ஒன்றில் பிறந்தேன். நான்தான் எங்கள் குடும்பத்தின் கடைசிப் பெண் வாரிசு.''

''தனியாகவா வசிக்கிறீர்கள்?''

''ஆமாம். இந்தக் காலத்தில் முன்பின் தெரியாதவர்களைக் கூட வைத்துக் கொள்வதைவிட, தனியாக வசிப்பதே நல்லது என்று நினைக்கிறேன்.''

''இருப்பினும் திடுமென்று உடம்பு சரியில்லாமல் போனால் மிகவும் சிரமம் அல்லவா? யாராவது ஒருவர் துணையாக இருப்பது நல்லது!''

தேவதத்தனது பேச்சைக் கேட்ட இந்திராபாய் மனத்துக்குள் சிரித்தாள். தான் உண்மையில் யார் என்று எதிரிலுள்ள மனிதருக்குத் தெரியவில்லையே என்ற ஆதங்கம் தோன்றியது. ஒருவகையில் அது ஓர் ஆறுதலாகவும் இருந்தது.

தேவதத்தனும் வேண்டுமென்றே அப்படிப் பேசினார். அதாவது தன்னை அவள் அடையாளம் தெரிந்து கொள்ளா திருக்கட்டும் என்கிற நோக்கத்துடன் அப்படிக் கேட்டார்.

''அருந்ததி...'' இந்திரா அழைத்தாள். ''இங்கிருந்து கூப்பிட்டால் கேட்காதுதான். நானே போய் வருகிறேன்...'' இந்திரா உட்புறமாக நடந்தாள்.

தேவதத்தன் சுற்றுமுற்றும் பார்த்தார். அவசர அவசரமாகத் தனது தோள்பையிலிருந்து மந்திரம் எழுதிய ஒரு தகட்டை எடுத்து சுருட்டி, சுவரில் பதிக்கப்பட்டிருந்த கலைமானை நோக்கி எறிந்தார். அந்தத் தகடு சரியாக அந்தக் க்லைமானின் வாய்க்குள் போய் விழுந்தது.

சரியாக அப்போது இந்திராபாய் திரும்பி வந்தாள்.

''இப்போது டீயுடன் வருவாள் அருந்ததி. ஒவ்வொன் றையும் அவளுக்குச் சொல்லித் தர வேண்டி உள்ளது. அவளுக்குத் துணி துவைப்பதைத் தவிர வேறு எதுவும் தெரியாது!'' இந்திராபாய் கூறினாள்.

''இந்த பங்களாவை வேறு எங்கிருந்தோ பெயர்த்து எடுத்து வந்து இந்த இடத்தில் பொருத்தியதாகத் தோன்றுகிறது. நான் நினைத்தது சரிதானா?''

''ஆமாம்... அதெப்படி உங்களுக்குத் தெரிந்தது?''

''நான் போன தடவை இங்கு வந்திருந்தபோது, இந்த பங்களா கிடையாது. அடிக்கடி நான் இந்த ஊருக்கு வருவதுண்டு.''

''நீங்கள் நினைத்தது சரிதான். இது வெகு தூரத்திலுள்ள கோவிலகம் ஒன்றைப் பெயர்த்து எடுத்துவந்து இங்கு பொருத் தியதுதான்.''

''ஆனால், முதல் தடவையாகப் பார்ப்பவர்களுக்கு அது தெரியாது. ஆமாம் நீங்கள் இங்கு வந்து குடியேறக் காரணம் ஏதாவது உண்டா?''

''கிராம வாழ்க்கை அலுத்துவிட்டது. அதனால் ஒரு மாற்றத்திற்காகத்தான்!''

''அப்படியானால், இனி நீங்கள் உங்களது ஊருக்குத் திரும்பிப் போகப் போவதில்லை, இல்லையா?''

''இல்லை!''

தேவதத்தன் எந்த வகையிலும் விட்டுக் கொடுக்காமல் பேசினார். அது மட்டுமின்றி, தன்னுடைய மாந்திரீக வித்தையில் இந்திராபாய் ஓரளவு வசப்பட்டு விட்டதாகவும் அவருக்குத் தோன்றியது. மேலும் தன்னை அவள் இன்னும் அடையாளம் கண்டு கொள்ளவில்லை என்பதும் உறுதியானது.

அருந்ததி டீக் கோப்பையுடன் வந்தாள். தேவதத்தன் அவளை கவனிக்கத் தவறவில்லை. ஆனால், அருந்ததி தேவ தத்தனைத் தெரிந்தவளாகக் காட்டிக் கொள்ளவில்லை.

டீயைக் குடித்துவிட்டு எழுந்த தேவதத்தன் வீட்டிற்கு வெளியே வந்தார்.

''என்ன புறப்பட்டு விட்டீர்களா?'' இந்திரா கேட்டாள்.

''இல்லை. இப்போதுதான் நான் ஒரு விஷயத்தை கவனித்தேன். இந்த பங்களாவின் அமைப்பில் ஒரு சிறு தவறு நிகழ்ந்துள்ளது. கிழக்குப் புறமாகச் சற்றுச் சாய்ந்திருக்க வேண்டும். அதாவது அந்தப் பகுதி சற்றுத் தூக்கலாக உள்ளது. இதைச் சரி செய்யவில்லையென்றால், உங்களது கிரக நிலையின் படி அது உங்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தலாம்!'' வெளிப்புறத் தோற்றத்தைப் பார்த்தபடி கூறினார்.

''உங்களுக்கு மனையடி சாஸ்திரம் தெரியுமா என்ன?''

''ஏதோ கொஞ்சம் தெரியும். பொழுதுபோக்காக ஒரு காலத்தில் கற்றுக்கொண்டேன்.''

''என்னுடைய கிரக நிலை என்ன சொல்கிறது?''

''நீங்கள் தெரிந்து கொள்ள விரும்பினால், அதையும் தெளிவாகப் பார்த்துவிடலாம்.'' வரவேற்பறைக்குத் திரும்பி வந்த தேவதத்தன் சோபாவில் பழைய இடத்தில் அமர்ந்தார்.

தோளில் இருந்த பையிலிருந்து ஒரு சிறு பையை வெளியே எடுத்தார். அதில் சோழிகள் இருந்தன.

''ராசிப் பலகை இருந்தால் நல்லது. இந்த டீப்பாயில் கோடு போடுவது சரியென்று தோன்றவில்லை.''

''அப்படியானால், நான் வேறு ஒரு பலகை கொண்டு வருகிறேன்.'' இந்திராபாய் மீண்டும் உட்புறம் சென்றாள்.

தேவதத்தனுக்கு இந்தத் தடவை மெலிதான சந்தேகம் தோன்றியது. 'இவ்வளவு நேரமாக அவளுடன் பேசியும் உண்மை யிலேயே அவள் நம்மைத் தெரிந்து கொள்ளவில்லையா? அல்லது தெரிந்தும் தெரியாதது மாதிரி நடிக்கிறாளா?'

விநாடிக்கு விநாடி அவரது சந்தேகம் வலுவடைந்தது.

## 22

**உ**ண்மையில் இந்திராபாய் தன்னை அடையாளம் கண்டுகொள்ளாதிருந்தால், அதற்குக் காரணம் வேறு என்னவாக இருக்கும் என்று யோசித்தது தேவதத்தன் மனம்.

அதே நேரம் இந்திராபாய் மனை ஒன்றை எடுத்து வந்தாள்.

தேவதத்தன் தனது பையிலிருந்து 'சாக்பீஸ்' ஒன்றை யெடுத்துக் கட்டங்களை வரைந்தார்.

மந்திரம் சொன்னார்.

மீதமிருந்த சோழிகளை மூன்றாகப் பங்கிட்டார்.

எண்ணிக்கையைக் கணக்கிட்டு அவளது நட்சத்திரத்தைக் கூறினார்.

''இப்போது உங்களது தசாபுக்தி சற்று மோசமாக உள்ளது!'' தேவதத்தன் கூறினார்.

''ம்...'' இந்திராபாய் ஊம் கொட்டிக் கேட்டுக் கொண்டாள்.

''இந்தத் தசாபுக்தியைப் பற்றி நீங்கள் இதுவரை தெரிந்து கொள்ளவில்லையே?'' தேவதத்தனது கேள்வி, இந்திராபாயைக் குழப்பியது.

அவள், அவரை ஊன்றி கவனித்தாள்.

''சனியின் பிடி வலுவாக உள்ளது இல்லையா?'' இந்திரா கேட்டாள்.

''அப்படித்தான் சொல்ல வேண்டும்...'' தேவதத்தன் பதிலளித்தார்.

''எனக்குத் தெரிந்த சேதிதான் அது!''

''வியாழனின் கடைசிக் கட்டமாக இருப்பதால், உக்கிரமாக உள்ளது. ஒவ்வொரு காரியமும் துல்லியமாக நடைபெறுகிறது. நினைத்ததெல்லாம் நடக்கிறது. எதிரிகளைச் சுலபமாக வெல்ல முடிகிறது உங்களால்.''

''உம்...''

''இனிமேல் எதிரிகள் திருப்பித் தாக்குவதற்கான வாய்ப்புகள் உள்ளன.''

''அதிலிருந்து மீள்வதற்கு மாற்று வழிகள் உள்ளதே?'' இந்திரா குறுக்கிட்டாள்.

''சனி அவ்வளவாக உங்களுக்குத் தோஷம் செய்யாது என்றாலும்... சற்றுக் கஷ்டப்படுத்தும்.''

''தெரியும்... இன்னும் உங்களது தொழிலைச் சொல்லவே இல்லையே?'' இந்திரா சட்டென்று கேட்டாள்.

''முக்கியமான தொழில் ஜோதிடம், மாந்திரீகம்...''

''அதில் துர்மந்திரவாதமும் உட்படும் அல்லவா?''

''எல்லாமே அடங்கும்.''

''நல்லதை எதிர்த்தால் அதன் தோஷம் உங்களை பாதிக்காதா?''

''பொதுவாக மாந்திரீகர்கள் இப்படியெல்லாம் யோசிக்க மாட்டார்கள். பணம் கிடைப்பதானால் எதையும் செய்வார்கள்.''

''பார்த்தால் நல்லவராகத் தெரிகிறீர்கள். ஆரோக்கியமான உடம்பும் உள்ளது. இப்படிப்பட்ட ஒருவர் துர்மந்திரவாதம் செய்து பிழைப்பு நடத்த வேண்டிய அவசியம் என்ன?''

''மாந்திரீகம், ஜோதிடம் போன்றவற்றைக் கற்றுக் கொண்டவர்கள், பெரும்பாலும் பிரத்தியேகமான இயல்புள்ளவர்களாக இருக்கிறார்கள். எதிராளிகள் தங்களை வெற்றி கொள்வதை அவர்களால் தாங்கிக்கொள்ள முடியாது. அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் வெற்றி பெறுவதற்காக எதையும் செய்வார்கள்!''

''நீங்கள் இப்படி மனம் விட்டுப் பேசுவது எனக்கு மிகவும் பிடிக்கிறது. சாதாரணமாக மந்திரவாதிகள் இப்படிப் பேச மாட்டார்கள்.''

தேவதத்தன் அதற்கு பதிலளிக்கவில்லை.

தனக்கு முன்பாக அமர்ந்துள்ள பெண்மணியிடம் அபாரமான சக்திகள் நிறைந்துள்ளன என்பது சட்டென்று புரிந்தது. அவளை சுலபத்தில் வெற்றி கொள்ள முடியாது என்பதும் அவருக்கு உறுதியாகத் தெரிந்தது.

'தான் ஏதாவது ஒரு சக்தியைப் பிரயோகித்தால், அதிலிருந்து அவள் தப்பித்துத் தன்னை அடையாளம் தெரிந்து கொண்டால் தனது நிலை மிகவும் அபாயமாகிவிடும்' என்பதும் விளங்கியது.

எனவே, அவளைக் குறித்து எவ்வளவெல்லாம் தெரிந்து கொள்ள முடியுமோ... அதையெல்லாம் தெரிந்து கொள்வதென்று தீர்மானித்தார். அதற்கு சில நாட்களாவது இங்கு தங்க வேண்டும்; அதற்கு அவள் ஒப்புக்கொள்ள வேண்டுமே?

நாம் எப்படி இதை சாதிப்பது?

'இங்கு அவள் மட்டுமே தனியாக வசிக்கும்போது இது சாத்தியமா?' தேவதத்தன் மனம் இவ்வாறு பலவித யோசனை களில் மூழ்கியிருந்தபோது இந்திராபாயும் அவரைப் பற்றி யோசித்தாள்.

தனது நட்சத்திரத்தையும் கிரக நிலைகளையும் துல்லியமாகச் சொன்னதால், வந்திருப்பவர் சாதாரண மனிதரல்ல என்பது தெரிகிறது. எனவே கேட்டாள்:

''உங்களுக்கென்று குறிப்பிட்ட இடம் எதுவும் இல்லை என்று சொன்னீர்களே?''

''உண்மைதான். தற்சமயம் நான் ஒரு அனாதையான நாடோடியும் கூட!''

''நீங்கள் விரும்பினால் இங்கு தங்கலாம். வெளியே அவுட் ஹவுஸ் ஒன்று உள்ளது. ஆனால், உங்களுக் கான உணவை நீங்களே சமைக்க வேண்டி இருக்கும்.''

''சமைப்பது எனக்கு சந்தோஷமான விஷயம்!''

''அப்படியானால் உங்களது விருப்பம் போல் செய்யலாம்.'' இந்திராபாய் கூறினாள்.

அவளது வார்த்தைகள் தேவதத்தனுக்கு மிகுந்த மகிழ்ச்சி அளித்தன. தான் எதற்காக இந்த வீட்டிற்கு வந்தோமோ, அதில் பாதியளவு வெற்றியடைந்து விட்டதாக அவருக்குத் தோன்றியது.

'இன்னும் ஒரேயொரு விஷயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும்! அதாவது இந்திராபாயின் சக்தி எங்கு உள்ளது?' என்பதுதான் அது.

''உங்களது அன்பான வேண்டுகோளுக்கு நன்றி. விரைவி லேயே நான் உங்கள் அவுட் ஹவுஸுக்குக் குடி வருகிறேன். ஆனால், அதற்கு முன் நான் சில கோயில்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. சின்னச் சின்ன வேண்டுதல்கள்!'' தேவதத்தன் கூறினார்.

அப்படிச் சொன்னதற்கும் ஒரு காரணம் இருந்தது. அதாவது அந்த வீட்டில் தங்கும் நோக்கத்துடன் தான் அங்கு வரவில்லை என்பதை அவள் உணர்ந்து கொள்ளட்டும்.

''உங்களுக்கு எப்போது வசதிப்படுகிறதோ அப்போது வரலாம்...'' இந்திராபாய் அனுமதி அளித்தாள்.

தேவதத்தன் விடை பெற்றார்.

அங்கிருந்து புறப்பட்ட தேவதத்தன், நேராக வந்து சேர்ந்த இடம் உண்ணி மேனோனின் பங்களாதான்.

அந்த நேரத்தில் அங்கு மேனோனுடன் டாக்டர் வில்லியமும், ராமசாமியும் இருந்தனர்.

தேவதத்தனைப் பார்த்தவுடன், அவர்களுக்கு ஏதோ ஒரு சந்தேகம் எழுந்தது. ஆனால், அவரது தெளிந்த முகத்தையும் பூடகமான புன்சிரிப்பையும் கண்டவுடன் அவர் எதையோ சாதித்திருப்பதாக அவர்களுக்குத் தோன்றியது.

''எப்படியிருக்கிறீர்கள் ஜோதிடரே?'' ராமசாமி கேட்டார்.

''சுகம் என்று கூறலாம்!'' - என்றபடி தோளில் தொங்கும் பையைத் திறந்துகிடந்த கதவின் மீது போட்டவராக, அவர்களுடன் சோபாவில் அமர்ந்தார்.

''போன காரியம் என்னவாயிற்று?'' மேனோன் கேட்டார்.

''ஐம்பது சதவிகிதம் வெற்றிதான்!''

''புரியவில்லை!'' டாக்டர் வில்லியம் புரியாத சிரிப்புடன் கேட்டார்.

''அவளது வீட்டில் தங்கிக்கொள்ள எனக்கு அனுமதி யளித்திருக்கிறாள்.''

''என்ன! உண்மையாகவா?'' மூவரும் ஏக காலத்தில் கேட்டனர்.

''உண்மைதான். அப்படியொரு சந்தர்ப்பம் வாய்த்திருக் கிறது!'' - தேவதத்தன் தன் கழுத்தில் அணிந்திருந்த தங்க ருத்திராக்ஷ மாலையை நிமிண்டியபடி பேசினார்.

''அப்படியானால் நாம் வெற்றியடைவோம் என்று பொருள்!'' மேனோன் எழுந்து சென்று பிரெஞ்சு நாட்டுச் சரக்கை எடுத்து வந்தார்.

மேனோன் வீட்டு வேலைக்காரப் பெண், அவருக்குப் பின்னாலேயே கண்ணாடித் தம்ளர்களையும், ஐஸ் கேனையும் எடுத்து வந்தாள்.

டாக்டர் வில்லியமும், ராமசாமியும் மேனோனை ஒருவிதப் பொறாமையுடன் பார்த்தனர்.

மேனோன் மனைவியின் இயல்பு அப்படிப்பட்டது. தன் கணவரது நடவடிக்கைகளை அடிக்கடி கண்காணிப்பவள். பெரும்பாலும் இந்தக் கண்காணிப்பு, அவர் பணத்தைச் செலவு செய்வதைக் கட்டுப்படுத்துவதற்காக இருக்கும்.

அவர் மனைவிக்கு இரட்டை நாடி உடம்பு. ரத்த அழுத்த நோய் வேறு. உடல் ரீதியான காரியங்களில் கணவரைத் திருப்திப்படுத்த அந்தப் பெண்மணியால் முடியவில்லை. மாதத்தின் பெரும்பாலான நாட்கள் அவள் நர்சிங்ஹோமில்தான் குடியிருந்தாள்.

தனது பலவீனத்தைப் பயன்படுத்தி மற்ற பெண்கள், கணவரிடமிருந்து பணத்தைக் கறந்துவிடக் கூடாதே என்கிற கவலையால் அழகும், இளமையும் உள்ள பெண்களையே வீட்டு வேலைகளுக்கு அமர்த்தியிருந்தாள்.

மேனோன் நான்கு கிளாஸுகளில் விஸ்கியை ஊற்றினார்.

''இந்தப் பெண் புதுமுகமாகத் தெரிகிறதே?'' வேலைக்காரி அந்த இடத்திலிருந்து நகர்ந்ததும், டாக்டர் கிசுகிசுப்பான குரலில் கேட்டார்.

''ஒருத்தியின் உயர்ந்த பட்ச கால அளவு மூன்று மாதங்கள் தான்!'' - மேனோன் சிரித்தபடி பதிலளித்தார்.

''ஜோதிடர் அந்த வீட்டுக்குக் குடிபோய் விட்டால்... அவளது ரகசியங்களைச் சுலபத்தில் தெரிந்துகொள்ள முடியுமல்லவா?'' ராமசாமி நேராக விஷயத்திற்கு வந்தார்.

''முடிய வேண்டும். ஆனால், அவ்வளவு சுலபத்தில் அவளை வெற்றி கொள்ள முடியுமென்று தோன்றவில்லை!'' தேவதத்தன் பெருமூச்சுடன் பேசினார்.

''எப்படி இருந்தாலும் நாம் வெற்றி பெற்றே தீர வேண்டும்! அதற்காக எவ்வளவு பணம் வேண்டுமானாலும் செலவழிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்...'' - மேனோன் உறுதி நிறைந்த குரலில் கூறினார்.

''நாளைக்கே நான் அங்கு குடியேறலாம் என்று நினைக்கிறேன்...'' தேவதத்தன் எழுந்தார்.

''என்ன ஜோதிடரே, எழுந்து விட்டீர்கள்!'' ராமசாமியும் அவருடன் எழுந்தார்.

''நான் முன்னேற்பாடாகச் சிலவற்றைச் செய்ய வேண்டி உள்ளது. இல்லாவிட்டால் அவளை எதிர்ப்பது மிகவும் சிக்கலாகி விடும்!'' தேவதத்தன் பையை தோளில் போட்டுக் கொண்டு விடைபெற்றார்.

## 23

**மெ**யின் ரோட்டுக்கு வந்த தேவதத்தன் பஸ் ஸ்டாப்பை நெருங்கினார். கிழக்குப்புற மலையடிவாரப் பகுதிக்குச் செல்லும் பஸ் வந்ததும் அதில் ஏறிக் கொண்டார்.

பஸ்ஸ்டாண்ட் வருவதற்கு இரண்டு கிலோ மீட்டர் முன்பாகவே மற்ற பயணிகள் எல்லாரும் இறங்கினர். தேவதத்தன் மட்டும் மீதமானார்.

''நீங்கள் எந்த இடத்துக்குப் போக வேண்டும்?'' கண்டக்டர் கேட்டார்.

''குறிப்பாக இன்ன இடம் என்று எதுவும் இல்லை. இந்தப் பஸ் கடைசியாக எங்கு நிற்கும்?'' தேவதத்தன் கண்டக்டரைப் பார்த்துக் கேட்டார்.

''இன்னும் கொஞ்சதூரம் போனதும் ஒரு ஆலமரம் வரும். அத்துடன் இந்த ரோடு முடிவடைந்து விடும். மலைவாழ் மக்களுக்காகத்தான் இந்த பஸ்ஸை இவ்வளவு தூரம் கொண்டு வந்திருக்கிறார்கள். எங்களுக்குக் கொடுத்திருக்கிற நிபந்தனை

யின்படி நாங்கள் அந்த இடம் வரை பஸ்ஸைக் கொண்டு போக வேண்டும். அதற்காக வண்டி போகிறது.''

''அந்த ஆலமரத்தடியில் ஒரு கோயில் உள்ளது இல்லையா?''

''அது இன்னும் சற்றுத் தள்ளி உள்ளது!''

''நான் அதான் போக வேண்டும்!''

''அந்தக் கோயிலில் அடிக்கடி மிருகங்களை பலியிடு வார்கள். சில சமயங்களில் மனிதர்களையும் பலி கொடுப்பார்கள் என்றும் கேள்விப்பட்டிருக்கிறோம்!'' -கண்டக்டர் கூறினார்.

தேவதத்தன் அதற்கு பதில் கூறவில்லை.

பஸ் அந்த ஆலமரத்தை வலம் வந்து நின்றது.

தேவதத்தன் பஸ்ஸிலிருந்து இறங்கியதும், டிரைவரும் கண்டக்டரும் வியப்புடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

சாதாரணமாக அந்த இடத்தில் இறங்கும் பயணிகள் மலைவாழ் மக்கள்தான்.

''இவர் எங்கே போகிறவராக இருப்பார்? இந்த இடத்தில் இறங்கியிருக்கிறாரே?'' - டிரைவர், கண்டக்டரிடம் கேட்டார்.

''பார்ப்பதற்கு ஒரு பிரயாணி மாதிரி இருக்கிறார். ஒரு வேளை கஞ்சா பயிரிட்டிருப்பதைக் கண்டுபிடிக்க வந்திருக்கும் போலீஸ் அதிகாரியாகக்கூட இருக்கலாம்!'' -கண்டக்டர் பதில் கூறினார்.

''அப்படியானால் திரும்பி வரவேண்டிய அவசியமிருக் காது. கஞ்சாச் செடிக்கு எருவாகப் போட்டு விடுவார்கள்!'' -டிரைவர் வண்டியைத் திருப்பியபடி கூறினார்.

தேவதத்தன் நிழல்படிந்த வழியில் நடந்தார்.

சூரியன் மேற்குத் திசையில் மலைச் சிகரங்களுக்கு இடையில் கீழ்ப்புறமாக இறங்கியது. அந்தப் பகுதியை இருள் மெதுவாக கவ்வத் தொடங்கியது.

ஒற்றையடிப் பாதையில் சன்னமான வெளிச்சம் இருந்தது. புதர்ச் செடிகள் மண்டிக்கிடந்த அந்தப் பாதை ஒரு பாம்பு ஊர்வது போல் வளைந்தும் நெளிந்தும் நீண்டு கிடந்தது.

ஏதோ ஓர் இலக்கை வைத்துக் கொண்டு தேவதத்தன் நடந்து கொண்டிருந்தார்.

ஒரு பழைய ஓலைச் சுவடி மூலம்தான் அவர் இந்தக் கோயிலைப் பற்றித் தெரிந்து கொண்டார். அந்தச் சுவடியில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டிருந்தது:

'கிழக்குத் திசையிலுள்ள மலையடிவாரத்தில் குதிரை முகம் கொண்ட பாறையின் கீழே, ஓர் ஆள் நுழைந்து செல்லக்கூடிய அளவுள்ள பாதையில் ஆபத்து காத்திருக்கும்.

அந்தப் பாறையின் மேற்புறம் இரண்டு பெரும் பாறைகள் நெருக்கியடித்து நிற்கின்றன. ஏதாவது ஒரு காரணத்தால் ஒரு பாறை சற்று அசைந்தாலோ, பூமி அதிர்ச்சி ஏற்பட்டாலோ, அந்தப் பாறை நகர்ந்து அங்குள்ள குறுகிய இடைவெளியை மூடிவிடலாம். அப்படி ஒரு நிலை ஏற்பட்டால், அந்தப் பாதையில் சென்றவர் திரும்பிவர வேறு வழி கிடையாது!

அந்த வழியில் சென்றால் உட்புறம் ஒரு சிறிய குகை. குகையின் வலது புறம் சென்றால் முன்னர்க் குறிப்பிட்ட கோயிலை அடையலாம்...'

அந்தக் கோயிலில் ஓரளவுக்கு வெளிச்சம் இருந்தது. மலையின் மேற்புறமிருந்த ஒரு சிறிய பிளவின் மூலம் சன்னமான வெளிச்சம் வந்தது.

ஒருவேளை இருட்டாகவே இருந்தால்கூட தேவதத்தனால் சுற்றுப்புறத்தை அடையாளம் தெரிந்து கொள்ள முடியும்.

சர்ப்பகந்தி மரம் ஒன்று உருண்டையான காய்கள் தொங்க நிற்பதை தேவதத்தன் கவனித்தார். சிறிய குடங்களைக் கட்டித் தொங்கவிட்டதுபோல் தெரிந்த காட்சி தேவதத்தனுக்கு ஓர் அடையாளமாக இருந்தது. அதன் அடியில் சற்றுநேரம் நின்றார்.

தான் லட்சிய இலக்கை அடைந்து விட்டதாக நினைத்தார். அங்கிருந்து சுற்றுமுற்றும் பார்த்தார். சன்னமான ஒளியில் குதிரை முகம் கொண்ட பாறை தெரிந்தது.

அவர் முகத்தில் புன்னகையொன்று மலர்ந்தது. 'வழி தவறவில்லை' என்கிற உறுதி தோன்றியது. தோளிலிருந்த பையிலிருந்து டார்ச் லைட்டை வெளியே எடுத்தார். அதன் ஸ்விட்சை அழுத்தியபோது ஒரு வெளிச்ச வட்டம் தரையில் விழுந்தது. அந்த வெளிச்சம் அவருக்குப் போதுமானதாக இருந்தது.

பாறையின் அடிப்பகுதியை நெருங்கினார். ஒரு சிறிய இடைவெளி தெரிந்தது. ஆனால், அதன் வழியாக ஒரு மனிதன் நேராக நுழைய முடியாது.

சற்றுச் சரிந்தவாறு நகர்ந்து, பாறையைப் பிடித்து ஒருவிதமாக உள்ளே நுழைந்தார். பாறை நனைந்து குளிர்ந்திருந்தது. அந்தக் குளிர்ச்சியும், ஈரமும் உடலை சிலிர்க்கச் செய்தன.

ஏழு தப்படிகளை எடுத்து வைத்தபோது, நேராக நிற்க முடிந்தது. கைகளை உயர்த்தி, இரண்டு புறமும் நீட்ட முடிந்தது. கை எதன் மீதும் படாததால், இது குகையின் முதல் பகுதி என்று தெரிந்தது.

டார்ச் லைட்டை மீண்டும் எரியவிட்டார்.

வலது புறம் வழியொன்று தெரிந்தது.

தேவதத்தன் அந்தப் பக்கமாகத் திரும்பினார். குறுகிய வழியில் சற்றுத் தூரம் நடப்பதற்குள் இயற்கை வெளிச்சம் தெரிந்தது. தான் கோயிலுக்கு முன்னால் வந்து விட்டோம் என்பதை அவராலேயே நம்ப முடியவில்லை.

நிம்மதியுடன் கோயிலுக்குள் காலை எடுத்து வைத்த அதே நேரத்தில், தனக்குப் பின்புறத்தில் பாறை நெரிபடும் ஓசையும், உடைந்து விழும் சத்தமும் கேட்டன.

தேவதத்தன் அசைவற்று நின்றார்.

'உட்புறமாக வந்த வழி அடைபட்டு விட்டது?' - அவர் மனம் எச்சரித்தது. இருப்பினும் என்ன நேர்ந்தாலும் சரி என்ற முடிவுடன் முன்னேறினார்.

தேவியின் விக்கிரகம் எதிரே தெரிந்தது.

ஏறத்தாழ முப்பது அடி பரப்பளவுள்ள ஒரு கோயில் அது. நடுவில் ஒரு தூண். அதில் ஏராளமான சிற்பங்கள் செதுக்கப்பட்டு இருந்தன.

சரியாக ஓராள் உயரத்துடனிருந்தது தேவியின் சிலை. சிலையின் கீழே கல்லாலான ஒரு வீணை இருந்தது.

இரண்டு கைகளைக் கொண்ட தேவியின் ஒரு கையில் வாள் ஒன்றும், மற்றொரு கையில் ஏட்டுச்சுவடி ஒன்றும் இருந்தன.

தேவி சிலைக்கு நேராக டார்ச் லைட்டைப் பயன்படுத்துவது உசிதமல்ல என்பதால், லைட்டைப் பைக்குள் போட்டார்.

மேற்புறத்திலிருந்து வந்த வெளிச்சம் தேவியின் தலைமீது படிந்தது. நிலவு வந்துவிட்டால், அந்த ஒளியின் திசை மாறிவிடும் என்று நினைத்தார் தேவதத்தன்.

தேவியின் தலையிலிருந்த கிரீடத்தில் சிவப்பு வைரம் ஒன்று ஒளி வீசியது.

தேவதத்தன் பையிலிருந்து தீப்பெட்டியை எடுத்து ஒரு குச்சியை உரசினார்.

சிலைக்கு முன்னால் கல்விளக்கு ஒன்று இருந்தது. மிகவும் பழையதான திரி ஒன்றும், நிறைய எண்ணெயும் அதில் இருந்தன.

தேவதத்தன் அந்த விளக்கை ஏற்றினார். முதலில் சற்று தயங்கிய தீபம் பிறகு சுடர்விட்டு எரியத் தொடங்கியது.

அந்த ஒளியில் தேவதத்தன் தேவி சிலையின் முகத்தைப் பார்த்தார்.

''என்ன!'' என்று தன்னையும் மீறிக் கேட்ட தேவதத்தனின் முகம் திகைப்பில் ஆழ்ந்தது.

## 24

உண்ணி மேனோனும் டாக்டர் வில்லியமும் அவுட் ஹவுஸில் அமர்ந்து விஸ்கியைச் சுவைத்தனர்.

''டாக்டர் சார், இந்தத் தடவை அவள் நம்மிடமிருந்து தப்பவே முடியாது. வசமாகச் சிக்கிக் கொண்டாள்; நம்மிடம் வந்து சேர்ந்திருப்பவர் சாதாரண நபர் அல்ல!''

''அதில் எனக்கு எந்தவிதமான சந்தேகமும் கிடையாது. இல்லாவிட்டால்... ஒரு ரக்ஷஸைப் பிடித்து அவரது வீட்டு வேலைக்காரியாக்கி அனுப்ப முடியுமா என்ன? பயங்கரமான ஆசாமிதான்! ஆளைப் பார்த்தால் இவராவது மந்திரவாதியாவது என்றல்லவா நினைக்கத் தோன்றுகிறது. ஓர் அப்பாவி மாதிரியல்லவா காட்சியளிக்கிறார்.'' உண்ணி மேனோன் நிரம்பிய கிளாஸைக் கையில் எடுத்தார்.

அதே நேரம் ராமசாமியின் கார் கேட்டைக் கடந்து உள்ளே நுழைந்தது. ராமசாமியுடன் ஒரு பெண்ணும் காரிலிருந்து இறங்கினாள்.

அவளைப் பார்த்ததும் மேனோனிடம் மகிழ்ச்சி தெரிந்தது. ராமசாமி போன காரியத்தை முடித்து விட்டார் என்று தோன்றியது.

சாதாரணமாகவே ராமசாமி பெண்கள் விஷயத்தில் பெரிய ஜாலக்காரர்!

''புது முகம். படப்பிடிப்பு நடக்கும் இடத்திலிருந்து அழைத்து வருகிறேன்.'' ராமசாமி கூறினார்.

'படப்பிடிப்பாவது ஒன்றாவது! இவர் ஏதாவது ஒரு ஹோட்டலிலிருந்து கொண்டு வந்திருக்க வேண்டும்!' என்று நினைத்தார் உண்ணி மேனோன். அந்த நினைப்பு சிரிப்பாகவும் வெளிவந்தது.

''நான் சொன்னது உண்மை. ஆள் புதுமுகம். நம்புங்கள்.''

''யாராக இருந்தால் நமக்கென்ன? எப்படியும் காரியம் நடந்தால் சரி...'' என்று தனது இருக்கையிலிருந்து எழுந்த மேனோன் அவளை நெருங்கி அவள் தோளைத் தொட்டார்.

அவள் உடம்பிலிருந்து மேல்நாட்டு சென்ட்டின் மணம் குப்பென்று வீசியது. முகத்தில் பௌடர் அப்பியிருந்தாள்.

''இந்த பௌடரை எல்லாம் எடுத்து விட்டால் கூட நீ இப்படியேதான் இருப்பாயா?'' மேனோன் கேட்டார்.

''அதையெல்லாம் நீங்களே நேரடியாகப் பரிசோதித்துத் தெரிந்து கொள்ளுங்கள்! அதற்குள் நாங்கள் இருவரும் இந்த பாட்டிலைக் காலி செய்து வைக்கிறோம்.'' ராமசாமி கிளாஸில் விஸ்கியை ஊற்றியபடி பதிலளித்தார்.

மேனோன் அவளுடன் அருகிலிருந்த அறைக்குள் நுழைந்தார்.

''இந்தப் பூக்களையெல்லாம் அவிழ்த்து எறிந்துவிடு!'' மேனோன் அவளிடம் கூறினார்.

அவள் தலையில் சூடியிருந்த மல்லிகைப் பூச்சரத்தை நலுங்காமல் எடுத்து டீப்பாயின் மேல் போட்டாள். தலைமுடியை அவிழ்த்தாள். அடர்த்தியான நீண்டமுடி!

''இந்தா இதைச் சாப்பிடு!'' தன் கையிலிருந்த கிளாஸை அவளிடம் நீட்டினார் மேனோன்.

அவள் அதை வாங்கி, மிகவும் இயல்பாகக் குடித்தாள்.

மேனோன் சற்று நேரம் அவளையே உற்றுப் பார்த்தார்.

எந்தவிதமான வெட்கமோ, தயக்கமோ இல்லாமல் அவள் மிகவும் சாதாரணமாக உட்கார்ந்திருந்தாள்.

'வாழ்க்கையில் இதைப் போன்ற எத்தனையோ அனுபவங்களை நான் சந்தித்திருக்கிறேன்!' என்பதுபோல் இருந்தது அவளது நடவடிக்கை.

மேனோன் அவளை நெருங்கி அமர்ந்தார்.

விளக்கை அணைக்கும் நேரத்தைக் கூட அவர் வீணாக்க விரும்பவில்லை. விஸ்கியின் போதையில் வெளிச்சம் என்ற ஒன்று அந்த அறையில் இருப்பதையே அவர் மறந்திருந்தார்.

வெகுநேரம் கழித்து மேனோன் அந்த அறையிலிருந்து வியர்வையுடன் வெளியே வந்தார்.

அவருக்காகவே காத்திருந்தது போல் தொலைபேசி மணியடித்தது.

ராமசாமி ரிசீவரை எடுத்தார்.

''யார் வேண்டும்? மிஸ்டர் உண்ணி மேனோனா... கொஞ்சம் இருங்கள்... அவரே பேசுவார்!'' என்ற ராமசாமி ரிசீவரை மேனோனிடம் கொடுத்தார்.

''ஹலோ, யார் பேசுவது?'' உண்ணி மேனோன் கேட்டார்.

''நான் ஜார்ஜ் பேசுகிறேன், கஸ்டம்ஸ் கமிஷனர்.'' மறு முனையிலிருந்து எழுந்த குரலைக் கேட்ட மேனோன் நடுங்கினார்.

கமிஷனர் ஜார்ஜ் ஒரு கறார் பேர்வழி. கொஞ்சம் கூட வளைந்து கொடுக்காத நேர்மையாளர். முன்னோர் ஏராளமாக சொத்துச் சேர்த்து வைத்து விட்டுப் போயிருப்பதால், நேர்மையாக நடந்து கொள்ளும் மேலதிகாரி.

சட்டத்தின் முன் எவரது சிபாரிசுக்கும் தலை வணங்காதவர்.

தன் மீது அவருக்கு அவ்வளவாக நல்ல அபிப்பிராயம் இல்லையென்று மேனோனுக்கு நன்றாகத் தெரியும். எனவே, தனது அலுவலகம் தொடர்பான நடவடிக்கைகளை மிகவும் ரகசியமாக வைத்திருந்தார்.

'இப்போது எதற்காக நம்மை அழைக்கிறார்?' மேனோனுக்கு சந்தேகம் தட்டியது.

''என்ன சார் என்ன விஷயம்?''

''சமீபத்தில் நீங்கள் கொச்சி நகரில் வாங்கியுள்ள ஐம்பது லட்ச ரூபாய் மதிப்புள்ள கட்டடத்தின் 'சோர்ஸ் ஆஃப் இன்கம்' நமது டிபார்ட்மெண்டுக்குத் தேவைப்படுகிறது!''

'கடவுளே!' மேனோனுக்கு வானமே இடிந்து தன் தலைமீது விழுந்துவிட்டதாகத் தோன்றியது.

கொஞ்ச நாளைக்கு முன்பாக நடந்த கள்ளக்கடத்தல் தங்க வேட்டையின்போது ரகசியமாக ஒதுக்கிய ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள தங்கபிஸ்கட்டுகளைக் கொடுத்துப் பண்டமாற்று செய்த கட்டடம் அது!

கணக்கில் காட்டியது பாதித் தொகை மட்டுமே. அதுவும் அந்தக் கட்டடத்தை வாங்கியிருப்பது மச்சினியின் பெயரில். இவ்வளவு சீக்கிரமாக டிபார்ட்மெண்ட் அதை மோப்பம் பிடிக்குமென்று மேனோன் எதிர்பார்க்கவே இல்லை.

என்ன செய்வது இப்போது?

மேனோன் தடுமாறினார்.

யாரை அணுகினால் இதிலிருந்து தப்பிக்க முடியும் என்று சிந்தித்தார்.

''நான் நேரடியாக வருகிறேன் சார்!'' ஒருவகையாக சமாளித்து ரிசீவரை அதன் இடத்தில் வைத்தார்.

''மிஸ்டர் மேனோன் என்ன நடந்தது? உங்கள் முகம் ஏன் இப்படி வெளிறியிருக்கிறது?'' டாக்டர் வில்லியம் கேட்டார்.

மேனோன் சுருக்கமாக விவரித்தார்.

''அப்படியா சங்கதி! அப்படியானால் ஒருவேளை அவள் தான் காரணமாக இருப்பாளோ?'' ராமசாமி சந்தேகம் எழுப்பினார்.

''அதெல்லாமில்லை. இது அந்த கமிஷனரின் நரி வேலை தான். சந்தேகமே வேண்டாம்.'' மேனோன் கூறினார்.

''எதற்கும் விசாரித்துப் பாருங்கள். கேஸே வராமல் பார்த்துக் கொள்வது புத்திசாலித்தனமில்லையா?'' டாக்டர் வில்லியம் ஐடியா கொடுத்தார்.

மேனோன் உடனே அங்கிருந்து கிளம்பினார்.

## 25

நல்லவேளையாக ஜார்ஜ் அவரது வீட்டில் உறங்காமல் காத்திருந்தார்.

''வாருங்கள் மேனோன். உட்காருங்கள்!'' ஜார்ஜ் இருக்கையைச் சுட்டிக் காட்டினார்.

மேனோன் உட்கார்ந்தார்.

''நீங்கள் இந்த அளவுக்கு முட்டாள்தனமாக நடந்து கொள்வீர்கள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. இந்த டிபார்ட்மெண்டில் முறைகேடுகள் உள்ளன என்பது சரிதான். அது எனக்கும் தெரியும். ஆனால், இப்படிப் பகிரங்கமாகத் தெரியக் கூடிய அளவில் யாரும் நடந்து கொண்டிருக்க மாட்டார்கள் உங்களைத் தவிர!'' ஜார்ஜ் கோபத்துடன் பொரிந்து தள்ளினார்.

மேனோன் எதுவும் பதில் பேசவில்லை. அவரது கோபம் சற்றுத் தணியட்டும் என்று காத்திருந்தார்.

'எப்படிப் பேச்சைத் துவக்குவது? இவரிடம் சொல்லி விட்டால் அதனால் ஏதாவது பயன் உண்டா?' இங்கு பொய் சொல்வதால் எந்தவிதமான நன்மையும் ஏற்படாது' என்பது புரிந்தது.

''உங்களது குற்றச்சாட்டு உண்மைதான் சார். நான் அகப்பட்டுக் கொள்வேன் என்று எண்ணியதில்லை. தங்கையின் பேரில் கொஞ்சம் பணமிருந்தது. ஒரு ரப்பர் எஸ்டேட்டை விற்றதன் மூலம் கிடைத்த பணம். அதைத்தான் கணக்கில் காட்டியிருக்கிறேன்.'' மேனோன் சமாளித்தார்.

''சரி, நீங்கள் சொல்வதை ஒப்புக் கொள்கிறேன். எஸ்டேட்டை விற்றது புத்திசாலித்தனமான செயல்தான். ஆனால்...''

''அதில் என்ன பிரச்சினை சார்?'' மேனோன் பதறினார்.

''எஸ்டேட்டை ஐம்பத்தியேழு லட்ச ரூபாய்க்குத் தானே விற்றிருக்கிறீர்கள்?''

''ஆமாம் சார்!'' மேனோன் வியப்புடன் தனது மேலதிகாரியைப் பார்த்தார்.

''அந்த ஐம்பத்தியேழு லட்ச ரூபாய் வேறு ஓர் இடத்தில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதே...'' ஜார்ஜின் வார்த்தைகளைக் கேட்ட மேனோன் சட்டென்று சோபாவில் மல்லாந்தபடி சாய்ந்தார்.

'கடவுளே இது என்ன சோதனை? இதெல்லாம் எப்படி இவருக்கு இவ்வளவு துல்லியமாகத் தெரிகிறது!'

யாரும், எந்த விதத்திலும் கண்டுபிடிக்க முடியாத ஓரிடத்தில் அந்தப் பணம் பாதுகாக்கப்பட்டுள்ளது.

'மரத்தால் செய்யப்பட்ட யானைச் சிற்பத்திற்குள் அந்தப் பணம் மறைத்து வைக்கப்பட்டிருப்பதை வேறு யாராவது அறிந்து கொண்டிருப்பார்களா?'

''எவருக்குமே தெரியாது!''

''இல்லை எவருக்கோ அது தெரிந்திருக்கிறது. யாரோ தகவல் தெரிவித்திருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு இன்னும் பல விஷயங்கள் தெரிந்திருக்கும். ஒருவேளை மேலும் இதுபோன்ற விஷயங்கள் பல வெளியாகவும் கூடும்!'' ஜார்ஜ் எச்சரித்தார்.

''நான் இப்போது என்ன செய்ய வேண்டுமென்று நினைக்கிறீர்கள்?'' மேனோன் பரிதாபமாகக் கேட்டார்.

''உங்களைப் பற்றி நன்றாகத் தெரியும் என்ற நிலையில் உங்களை 'சஸ்பெண்ட்' செய்வதைத் தவிர எனக்கு வேறு வழி இல்லை. அடுத்த கட்டமாக உங்கள் மீது விரிவான விசாரணை ஒன்றுக்கு ஏற்பாடு செய்ய நேரிடும். இதையெல்லாம் எதற்காக உங்களிடம் சொல்கிறேன் என்றால், நிலைமையை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். என்னுடைய துறையைச் சார்ந்த ஓர் அதிகாரி என்பதால் மனிதாபிமான அடிப்படையில் இப்போது உங்களிடம் பேசுகிறேன்.'' ஜார்ஜ் பேச்சை முடித்தார்.

மேனோன் எழுந்தார்.

கமிஷனர் வீட்டுத் தொலைபேசி மணியடித்தது. கமிஷனர் ரிசீவரை எடுத்தார்.

''ம்... கொஞ்சம் பொறுங்கள். இங்குதான் இருக்கிறார். மிஸ்டர் மேனோன், போன் கால் உங்களுக்குத்தான்... பேசுங்கள்!'' ஜார்ஜ், மேனோனிடம் ரிசீவரைக் கொடுத்தார்.

நடுங்கும் கையுடன் மேனோன் ரிசீவரை வாங்கினார்.

''மிஸ்டர் உண்ணி மேனோன்! நான் உங்களைச் சும்மா விட்டு விடுவேன் என்றா நினைக்கிறீர்கள்?'' இந்திராபாயின் குரலை டெலிபோனில் கேட்டதும் மேனோன் திகிலின் உச்சிக்கே போனார்.

அவரால் பதில் பேச முடியவில்லை.

''உங்களால் தப்பிக்க முடியாது மேனோன். எல்லாம் பிடிபட் டாகிவிட்டது... இனிமேல் எனது நடவடிக்கைகள் துரிதமாக இருக்கும்!'' அவள் குரல் சவாலாக ஒலித்தது. உண்ணி மேனோன் கையிலிருந்து ரிசீவர் நழுவித் தரையில் விழுந்தது.

''மிஸ்டர் மேனோன், என்ன நடந்தது?'' ஜார்ஜ் விசாரித்தார்.

''இதற்கெல்லாம் காரணம் ஒரு பெண். இந்திராபாய் என்கிற அரக்கி!'' மேனோன் கோபத்துடன் கத்தினார்.

''யாரவள்?''

''ஊரின் மேற்குப் புறத்தில், பகவதி கோயிலுக்கு அருகே புதியதாக பங்களா கட்டி, குடிவந்திருக்கிற பெண்மணி!''

''ஓகோ, அந்தப் பெண்மணியா? நானும் அவளைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவள் ஒரு சகலகலாவல்லியம்மா?''

''அப்படித்தான் சொல்கிறார்கள். ஆனால், காலம் எப்போதும் ஒரே மாதிரி இருப்பதில்லையே?''

''அதனால்தான் உங்களுக்கு இதெல்லாம் நிகழ்ந்திருக் கிறது.''

''சரி சார் நான் வரட்டுமா... குட்நைட் சார்!'' விடை பெற்றார்.

கார் புறப்பட்டது.

## 26

**கா**ர் வேகமாகப் பாய்ந்து கொண்டிருந்தது. இனிமேலும் தாமதப்படுத்துவதில் அர்த்தமே இல்லை. அவளை இரண்டி லொன்று பார்த்துவிட வேண்டியதுதான். அதுதான் லட்சியம்!

மெயின்ரோட்டிலிருந்து மேனோனது கார் இடது புறமாகத் திரும்பியது. அந்தப் பாதை இந்திராபாயின் வீட்டின் முன்புற மாகச் செல்வது.

பங்களாவின் 'கேட்'டிற்கு முன்னால் மேனோன் காரை நிறுத்தினர். 'கேட்'டைத் திறந்தார். பங்களாவின் முன்னால் அதிக சக்தி வாய்ந்த விளக்கு ஒன்று எரிந்து கொண்டிருந்தது. கேட்டைத் திறந்த பிறகு மறுபடியும் காரில் ஏறினார்.

காரை ஸ்டார்ட் செய்து சரியாக பங்களாவின் முன்னால் நிறுத்தினார். வண்டியிலிருந்தபடி ஹாரன் அடித்தார். பிறகு வண்டியிலிருந்து இறங்கி 'காலிங்' பெல்லை அழுத்தினார்.

சற்று நேரத்தில் ஓர் இளம் பெண் வந்து கதவைத் திறந்தாள். திறந்தவள் அருந்ததி.

''இந்திராபாயை நான் அழைப்பதாகச் சொல்!'' மேனோன் கூறினார்.

''அவர் இங்கு இல்லையே?'' அருந்ததி பதிலளித்தார்.

''எங்கே போயிருக்கிறாள்?''

''சாரட்டில் ஏறிப் போனார்கள்.''

''எங்கே என்பது தெரியுமா?''

''கிழக்குப் பக்கமாகப் போயிருக்கிறார் என்று நினைக் கிறேன்.''

''அங்கு யாரைப் பார்க்கப் போயிருக்கிறாள்?''

''குதிரை வண்டியின் சத்தம் மலையடிவாரத்தை அடைந்தது போல் தெரிகிறது.''

''நீ தேவதத்தனின் ஆள்தானே?''

''ஆமாம்!''

''எதையாவது கண்டுபிடித்தாயா?''

''இல்லை.''

''கிழக்குத் திசையில்தானே போயிருக்கிறாள்.''

உண்ணி மேனோன் சந்தேகத்துடன் நின்றார்.

''இன்னும் சரியாகச் சொன்னால் கிழக்குப்புற மலைச்சரிவில் ஒரு தேவி கோயில் உள்ளது. இந்திராபாய் அங்குதான் போயிருப்பார் என்று தோன்றுகிறது.''

''உனக்கு அந்த இடம் எதுவென்று சரியாகத் தெரியுமா?''

''தெரியாது; ஆனால் கண்டுபிடித்துவிடலாம்.''

''அப்படியானால் நீ என்னுடன் புறப்படு.''

அருந்ததி தயங்கினாள்.

''ஏன் தயங்குகிறாய்?'' மேனோன் கேட்டார்.

''அவரது அனுமதி இல்லாமல் நான் இங்கிருந்து வெளியேற முடியாது'' அருந்ததி தன்னுடைய நிலையை எடுத்துரைத்தாள்.

''நீ சொல்வது தேவதத்தனைத்தானே?''

''ஆமாம்!''

''அவர் வேலை செய்வது எங்களுக்காகத்தான். எங்களது நிலை மிகவும் மோசமாக இருப்பதால், இந்த சமயத்தில் நீ எங்களுக்கு உதவுவதில் எந்த வகையிலும் தவறே இல்லை.'' மேனோன் வற்புறுத்தினார்.

''நீங்கள் சொல்வதும் சரிதான். ஆனால், இந்த வீட்டிலிருந்து நான் வெளியேறி விட்டால், எனக்கு ஏதாவது நேர்ந்து விட்டால் அதற்கு அவர் பொறுப்பேற்றுக் கொள்ள முடியாது.''

''அப்படியானால் ஒன்று செய். நீ வழியை மட்டும் சொல்லித் தந்தால் போதும்.''

''அதை வேண்டுமானால் சொல்கிறேன்.''

அருந்ததி உள்ளே சென்று வெள்ளிப் பாத்திரம் ஒன்றை எடுத்து வந்தாள். அதைத் தரையில் வைத்து விட்டுக் கூறினாள். ''இதை உற்றுப் பாருங்கள் தெரியும்.''

மேனோன் பாத்திரத்தின் உட்புறம் பார்த்தார்.

மலைப்பகுதியும் இந்த பங்களாவும், பங்களாவிலிருந்து அந்தக் கோயிலுக்குச் செல்லும் வளைந்த பாதையும் அதில் தெளிவாகத் தெரிந்தன.

சற்றுத் தொலைவில் ஒரு மண்டபம் தெரிந்தது. அதன் அருகிலிருந்து மூன்று வழிகள் பிரிந்து சென்றன. தென்புறமாகச் சென்ற வழி மட்டும் நீண்டு சென்றது. மற்ற இரண்டும் பாதியிலேயே மறைந்தன.

''வழியை நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள். வழி தவறக் கூடாது!'' அருந்ததி கூறினாள்.

''சரி.'' மேனோன் எழுந்தார்.

எப்படியிருந்தாலும் இந்திராபாயை அங்கேயே சந்திப்பதென்று மேனோன் தீர்மானித்தார்.

காரில் ஏறினார். காரின் வேகம் விநாடிக்கு விநாடி அதிக்ரித்தது.

ஏறத்தாழ ஐம்பது கிலோ மீட்டர் தூரம் சென்றபோது மண்டபம் ஒன்று தென்பட்டது. அதன் அருகில் ஒரு பெரிய ஆலமரம் இருந்தது.

மேனோன் காரை நிறுத்தினார்.

மூன்று வழிகளில், தான் செல்ல வேண்டிய வழி எதுவென்று நினைவில் கொண்டுவர முயற்சித்தார். அப்போது தூரத்திலிருந்து குதிரைக் குளம்படிச் சத்தம் கேட்டது. அந்த சத்தம் விநாடிக்கு விநாடி அவரை நெருங்கியது.

'வருவது இந்திராபாய்தான்' என்பது மேனோனுக்கு சந்தேகமறத் தெரிந்தது.

உற்று கவனித்தார். ஆம் வருவது வெள்ளைக் குதிரையே தான்!

மேனோன் காரின் டேஷ் போர்டிலிருந்து ரிவால்வரை எடுத்தார். இம்முறை அவளைத் தப்பிக்க விடக்கூடாதென்று தீர்மானித்தார்.

அவள் எப்படிப்பட்ட மாயாஜாலக்காரியானாலும் ஆறு ரவுண்டு சுடக்கூடிய தன்னுடைய துப்பாக்கியிலிருந்து இப்போது தப்பிக்க முடியாதென்று தோன்றியது.

சாரட் நெருங்கிவந்து கண்ணிமைக்கும் நேரத்தில் அவரைக் கடந்தது.

அவள் இந்திராபாயேதான்!

மேனோன் ரிவால்வரின் குதிரையை இழுத்தார். தோட்டாக்கள் சீறிப் பாய்ந்தன. இருந்தும் சாரட் விரைந்தது.

துப்பாக்கி குண்டுகள் நிச்சயம் அவளைத் துளைத்திருக்கும் என்பதில் அவருக்கு சந்தேகமே இல்லை.

உடனே காரில் ஏறி, சாரட்டைப் பின்தொடர்ந்தார்.

காரின் ஸ்பீடா மீட்டர் நூறைத் தாண்டியும் அவரால் சாரட்டை நெருங்க முடியவில்லை. வில்லிலிருந்து புறப்பட்ட அம்புபோல் சாரட் பாய்ந்து கொண்டிருந்தது.

மேனோன் இந்திராபாயின் வீட்டு 'கேட்'டை நெருங்கிய போது அது மூடியிருந்தது.

உள்ளே குதிரையும், சாரட்டும் இருந்தன. காரை நிறுத்தி விட்டு 'கேட்'டைத் திறந்தார்.

கார் உள்ளே நுழைந்தது.

அருந்ததி கதவைத் திறந்தாள்.

''எங்கே அவள்? நான் வந்திருப்பதாகச் சொல்!'' மேனோன் ஆத்திரத்தில் அலறினார்.

அருந்ததி உள்ளே போனாள். சற்று நேரத்தில் திரும்பி வந்தாள்.

''உங்களை உள்ளே வந்து உட்காரச் சொல்லியனுப் பினார்கள்!''

மேனோன் ஒரு தடவை சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, வரவேற்பறைக்குள் நுழைந்தார்.

அறையில் மங்கலான வெளிச்சமே இருந்தது. சோபாவில் அமர்ந்தார். நிதானமாக சிகரெட் ஒன்றைப் பற்றவைக்க முயன்ற போது அந்த வரவேற்பறையிலிருந்த எல்லா விளக்குகளும் சட்டென்று எரிந்தன.

காதுக்கு இனிமையான இசை எங்கிருந்தோ காற்றில் தென்றலாகத் தவழ்ந்து வந்தது. சற்று நேரத்தில் அந்த அறையே இசையால் நிறைந்தது போல் தோன்றியது.

''மிஸ்டர் உண்ணி மேனோன்!'' இந்திராபாயின் குரல் தெளிவாகக் கேட்டது.

மேனோன் தன்னையும் அறியாமல் திடீரென்று எழுந்து நின்றார். எதிரே-

இந்திராபாய் நின்றிருந்தாள்.

ஒரு மகாராணி மாதிரி கம்பீரமாக ரவிவர்மாவின் ஓவியம் போல்... மிடுக்கு தோன்றும் ஆடையாபரணங்களுடன், உதடு களில் புன்னகையுடன், பரிமள சுகந்தத் திரவியங்களின் நறு மணத்துடன் மெதுவாக நடந்த இந்திராபாய், மேனோனை நெருங்கினாள். அவளது ஒவ்வொரு காலடியோசையும் 'கலீர் கலீர்' என்று சிலம்பொலியை எழுப்பியது.

''உட்காருங்கள் மிஸ்டர் மேனோன்.'' சொல்லியபடி அவள் அமர்ந்தாள்.

மேனோன் பதில் பேச முடியாதவராக எதிரில் இருந்த சோபாவில் அமர்ந்தார்.

''இந்த வீட்டை இப்போதுதான் முதல் தடவையாகப் பார்க்கிறீர்கள் இல்லையா?'' இந்திராபாய் கேட்டாள்.

''ஆ...மா...ம்!'' தொண்டையிலேயே நின்றுவிட்ட வார்த்தை களை மிகவும் சிரமப்பட்டு வெளியே கொண்டு வந்தார் மேனோன்.

''வழியிலேயே என்னைப் பார்த்தீர்கள் இல்லையா?''

''பார்த்தேன்.''

''கைத்துப்பாக்கியையும் பயன்படுத்தினீர்கள்!''

''... ... ...''

வெட்கம் அவரைப் பிடுங்கித் தின்றது. கஸ்டம்ஸ் ஆபீசரான உண்ணி மேனோன் இரண்டு முறை ரிவால்வர் சுடும் போட்டி யிலும், மூன்று முறை ரைஃபிள் சுடும் போட்டியிலும் சாம்பியன் ஷிப் பெற்றவர். இந்தத் தடவை ஆறு முறை தோட்டாக்களை குறி பார்த்துச் செலுத்தியும், ஒன்றுகூட அந்த உடலைத் துளைக்க வில்லை என்பதை அறிந்தபோது அவமானமாகவும், வெட்க மாகவும் இருந்தது. பதில் பேசத் தயக்கமாக இருந்தது அவருக்கு!

''கவனியுங்கள் மேனோன்...'' என்ற இந்திராபாய் தனது இடது கை முஷ்டியைத் திறந்து கவிழ்த்தாள்.

'பட் பட்'டென்ற ஓசையுடன் டீப்பாயின் மீது எவையோ விழுந்தன.

மேனோன் விதிர்விதிர்த்துப் போனார்!

தன்னுடைய ரிவால்வரிலிருந்து சீறிப் பாய்ந்த தோட்டாக்கள் அவை!

''நல்லவேளையாக இவை என் உடம்பில் பாயவில்லை. லாகவமாக ஒவ்வொன்றையும் பிடித்தேன்.''

அருந்ததி தேநீர்க் கோப்பைகளுடன் வந்தாள்.

''சூடாகச் சாப்பிடுங்கள்!'' இந்திராபாய் உபசரித்தாள்.

மேனோன் தயங்கினார்.

''ம்... எடுத்துக் குடியுங்கள்!'' இந்திராபாயின் குரல் ஒரு கட்டளை மாதிரி ஒலித்தது.

மேனோன் கோப்பையைக் கையில் எடுத்தார். தயங்கியபடி குடித்தார்.

ஒருவாய் குடித்தவுடன் கோப்பையைச் சட்டென்று கீழே வைத்தார். தேநீருக்குப் பதில் கோப்பையில் விஸ்கியின் மணம் வீசியது. அதுவும் வழக்கமாக அவர் அருந்தும் அதே விஸ்கியின் மணம்.

''மிஸ்டர் மேனோன் நான் தோல்வியடைவேன் என்று நினைத்து ஏமாந்து விட்டீர்கள் இல்லையா? வருத்தத் திற்குரிய காரியம்தான். உண்மையிலேயே நான் யார் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.'' திடுமென்று அந்தக் குரல் ஓர் ஆணின் குரலாக ஒலித்தது.

உடனே தலையை உயர்த்திய மேனோனுக்கு முன்னால் தேவதத்தன் அமர்ந்திருந்தார். இந்திராபாய் உட்கார்ந்த இடத்தில் அவளுக்கு பதிலாக தேவதத்தன்!

மேனோ தன் கண்களையே நம்பமுடியவில்லை. 'தேவ தத்தன் இந்த அளவுக்கு வல்லமை வாய்ந்தவரா?'' யோசித்தார்.

''நீங்கள் நினைத்தது அந்தப் பெண்மணி வெற்றி பெற்று விடுவாள் என்றுதான் இல்லையா? ஆனால், இப்போது அவள் என்னுடைய கைதி. நான் நினைத்தால் மட்டுமே அவளை விடுதலை செய்ய முடியும்!'' தேவதத்தன் கூறினார்.

மேனோன் விபரீதமான நிலைமையை உணர்ந்தார்.

''சற்று நேரத்தில் எல்லாம் சரியாகிவிடும் பாருங்கள்...'' தேவதத்தன் கூறினார்.

கமிஷனரின் போன் நம்பரை அவரிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொண்ட தேவதத்தன், அந்த நம்பருக்கு டயல் செய்தார்.

''ஹலோ மிஸ்டர் ஜார்ஜ்தானே பேசுகிறீர்கள்...? என் பெயர் தேவதத்தன். என்னைப் பற்றி உங்களுக்கு ஏதாவது சந்தேகம்

தோன்றினால் உங்களது டி.வி.க்கு மேல் வைத்துள்ள 'கதகளி' பொம்மையிடம் கேட்டுப் பாருங்கள்!'' தேவதத்தன் கூறினார்.

மறுமுனையிலிருந்து வந்த வார்த்தைகளைக் கேட்டு ஜார்ஜ் ஒருகணம் திடுக்கிட்டார்.

அவர் வெறும் ஓர் அலங்காரப் பொருள் என்கிற முறையில் டெலிவிஷனுக்கு மேலே வைத்திருந்த பொம்மையைப் பார்த்தார். அதனிடம் கேட்டார். ''யார் இந்த தேவதத்தன்?''

''ஒரு பயங்கரமான மந்திரவாதி!'' அந்தப் பொம்மை மனிதனைப் போலவே வாயை அசைத்துப் பேசியது.

## 27

அவரது வீட்டு டெலிவிஷன் மீது அழகுக்காக வைக்கப் பட்டிருக்கும் 'கதகளி' பொம்மை பேசியபோது, ஜார்ஜ் உண்மையிலேயே வியப்படைந்தார்.

இப்படியொரு அனுபவம் அவருக்கு இதுவரை ஏற்பட்டதில்லை! சிறுவயதில் படித்த குழந்தைப் புத்தகங்களிலும், விக்கிரமாதித்தன் கதை போன்ற அற்புத சாகசக் கதைகளில் இதுபோன்ற சம்பவங்களை வாசித்ததுண்டு.

ஆனால், அதெல்லாம் சாத்தியம் என்பது இப்போது தான் தெரிகிறது. தேவதத்தன் பயங்கரமான மந்திரவாதி என்பதில் சந்தேகமே இல்லை. அப்படியானால் தேவதத்தனின் லட்சியம் என்னவாக இருக்கும்?

''ஹலோ மிஸ்டர் உங்களுக்கு என்ன வேண்டும்?'' ஜார்ஜ் தொலைபேசியின் மறுமுனையிலிருந்து கேட்டார்.

''உண்ணி மேனோன் மீது நீங்கள் எடுக்கவிருக்கும் நடவடிக்கையைக் கைவிட வேண்டும்!'' பொம்மைதான் இப்போதும் பதில் அளித்தது.

''உண்மையில் வியப்புக்குரிய காட்சிதான்!'' ஜார்ஜ் தன்னை மறந்து கூவினார்.

''உண்மைதான். வியப்புக்குரியதும்தான். தண்டனை நடவடிக்கையைக் கைவிடாத பட்சம் நீங்கள் இதைவிடப் பெரிய வியப்பான காட்சிகளைக் காண நேரிடலாம்!'' பொம்மை எச்சரித்தது.

இந்த வார்த்தைகள் ஜார்ஜை மிகவும் பயப்படுத்தின.

கடைசியில் வேறு வழியின்றி ஒப்புக் கொள்ளவும் செய்தார்.

இந்த சம்பவத்துடன் உண்ணி மேனோனுக்கு தேவதத்தன் மீதிருந்த நம்பிக்கை இரண்டு மடங்காக உயர்ந்தது. எல்லாக் காரியங்களும் ஒரு முடிவுக்கு வந்து விட்டதாக நினைத்தார்.

''இதெல்லாம் எப்படி சாத்தியமானது?'' மேனோன் கேட்டார்.

''அதையெல்லாம் நீங்கள் புரிந்து கொள்ள முடியாது. எனவே, தற்சமயம் நீங்கள் இப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்காமல் இருப்பது நல்லது.'' தேவதத்தன் எச்சரித்தார்.

மேனோன் அங்கிருந்தபடியே ராமசாமிக்கும், டாக்டர் வில்லியத்திற்கும் போன் செய்து விவரத்தைத் தெரியப்படுத்தினார்.

செய்தியைக் கேட்ட பெரிய ஓர் ஆபத்திலிருந்து தப்பித்த நிம்மதி அவர்களுக்கும் ஏற்பட்டது. இத்தனை நாட்களாக பயப்பட்ட ஓர் எதிரி அழிந்து விட்டதாகவே அவர்கள் மகிழ்ந்தனர்.

இதைக் கொண்டாடுவதற்காக ஒரு பார்ட்டி நடத்தத் தீர்மானித்தனர். அதையும் இந்திராபாயின் பங்களாவிலேயே நடத்தத் திட்டமிட்டனர்.

தேவதத்தன் அருந்ததியை அழைத்தார். அவள் வந்தாள்.

''நீ தற்சமயம் இங்கிருந்து புறப்படு. நமது பழைய வீட்டில் போய்த் தங்கியிரு. நான் அங்கு உன்னை சந்திக்கிறேன்.'' தேவதத்தன் கூறியதும், அருந்ததி உடனே புறப்பட்டாள்.

அரைமணி நேரத்திற்குள் டாக்டர் வில்லியமும் ராமசாமியும் மாருதி வேனில் அங்கு வந்து சேர்ந்தனர். அவர்களுடன் வேறொரு புதிய நபரும் இருந்தார். அவர் பாங்க் மானேஜர் வாசுதேவன்.

சொந்தமாக ஒரு பாங்க்கை நிர்வகித்து வரும் வாசுதேவன் பெரும் பணக்காரர். தங்க நகைகளின் பேரில் கடன் கொடுப்பது வாசுதேவனின் முக்கியத் தொழில்.

பார்ப்பதற்கு ஒரு சிறிய கட்டடமாகத் தோற்றமளித்தாலும் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள தங்க நகைகள், பாங்கின் பாதாள அறையிலுள்ள இரும்புப் பெட்டிகளில் பத்திரமாகப் பாதுகாக்கப்படுகின்றன.

பணப் பட்டுவாடாவின்போது வந்துள்ள ஆட்களின் தரத்தையொட்டி நல்ல நோட்டுகளுடன் கள்ள நோட்டுகளையும் கலந்து கொடுப்பது அவரது வழக்கம்.

அந்த பாங்கிற்கு அடமானத்திற்காக வரும் தங்க நகைகள் பெரும்பாலும் திரும்பி வெளியே செல்வதில்லை. அதற்குக் காரணம் அதிகமான வட்டி விகிதம்தான்.

மாருதி வேன் வாசுதேவனுடையது. அந்த வேனுக்குள் விஸ்கி பாட்டில்கள், சமைத்துப் பக்குவப்படுத்தப்பட்ட இறைச்சி வகைகள், இரண்டு பெண்கள் உட்பட எல்லாம் இருந்தன(ர்).

எல்லாரும் பங்களாவின் மேல் மாடிக்குச் சென்றனர்.

பெண்கள் கிளாஸுகளில் விஸ்கியை ஊற்றினார்கள்.

ஒரு சுற்று முடிந்த பிறகு டாக்டர் வில்லியம் கேட்டார். ''தேவதத்தன், ஏன் நீங்களும் எங்களுடன் சேர்ந்து மகிழ்ச்சி யடையக் கூடாது?''

''அதற்குக் காரணம் உண்டு!'' என்றவாறே விஸ்கியைச் சுவைத்த தேவதத்தன் தொடர்ந்தார்: ''நீங்கள் இதற்கு அடுத்தகட்ட சுகங்களில் ஈடுபடலாம். ஆனால், என்னால் அது முடியாது.''

''அதற்கென்ன காரணம்?''

''இந்திராபாயை நான் ஒரு சிக்கலான சூழ்நிலையில் சிறைப்படுத்தியிருக்கிறேன். அந்தச் சிறைப்படுத்துதல் உறுதி என்று தெரிந்த பிறகே என்னால் நிம்மதியாக இருக்க முடியும்!''

''விளக்கமாகச் சொல்லுங்களேன்'' டாக்டர் கேட்டார்.

''நீங்கள் அதைத் தெரிந்து கொள்வதில் எந்தவிதமான பிரயோஜனமும் கிடையாது. என்னைப் போன்ற ஒரு மந்திர வாதிக்கு மட்டுமே அது விளங்கும். அதனால் அதைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை.''

''நாங்கள் புரிந்து கொள்ள முயலுகிறோம்!''

''இல்லை... நீங்கள் அதைத் தெரிந்து கொள்ளாமலிருப்பது நல்லது.''

தேவதத்தன் உடனே அங்கிருந்து புறப்பட்டு, முதலில் தங்கியிருந்த வீட்டை நோக்கி விரைந்தார்.

வீட்டிற்குள் நுழைந்த தேவதத்தன் நிம்மதி இழந்தவரைப் போல் அங்குமிங்குமாக உலாவினார். அவர் நெற்றியில் சுளிவுகள் உயர்ந்தும் தாழ்ந்தும் அலையடித்தன.

''அருந்ததி!'' அழைத்தார்.

''என்னங்க?'' என்றவாறு அவர் எதிரே வந்து நின்றாள்.

''ராசிப் பலகையை எடுத்து வா!''

வீட்டிற்குள் சென்றவள் ராசிப் பலகையுடன் திரும்பி வந்தாள்.

பரபரப்பாக ராசி வைத்து, பிரஸ்னம் பார்த்தார். கணக்கிட்டார்.

பூரம் நட்சத்திரம்.

அதை வைத்து மறுபடி கணித்தார்.

சனி தசைதான். இருப்பினும் சுக்கிரனது பார்வை துணையாக இருந்தது. ஆனால், அது ஒரு நிழலான பாதுகாப்பு மட்டுமே. ஒருவேளை வலுப்பெற்று விடவும் வாய்ப்பு உள்ளது.

எதிர்பாராத விதமாக மட்டும் நிகழக்கூடிய தசாபுக்திகளின் சந்திப்பும் தேவதத்தனுக்கு அதில் தெரிந்தது.

தற்சமயம் அவையேதும் வலுப்பெற்றுவிடாதிருக்க ஒரு ஹோமம் நடத்தத் தீர்மானித்தார் தேவதத்தன்.

அருந்ததியை அழைத்து ரத்த சாமுண்டி ஹோமம் நடத்துவதற்குத் தேவையான பொருள்களை உடனடியாக ஏற்பாடு செய்யச் சொன்னார்.

அருந்ததி விரைந்தாள்.

தேவதத்தன் ஹோமம் தொடங்கினார். ஏறத்தாழ நள்ளிரவு வேளையில் ரத்த சாமுண்டிதேவி, தேவதத்தனின் முன்னால் வெளிப்பட்டார்.

''என்ன வேண்டும்?''

''அது உங்களுக்கே தெரியுமே தேவி!''

''ம்...'' தேவி புகை மண்டலத்திற்குள் மறைந்தாள்.

தேவதத்தன் அருந்ததியை அழைத்தார். ''ஹோமம் முடிந்து விட்டது. ஹோமச் சிதை தானாகவே அணையட்டும். நாம் படுத்து உறங்கலாம்...'' அவளுடன் ப்டுக்கை அறையை நோக்கி.நடந்தார்.

## 28

மறுநாள் காலையில் மேனோனும் அவர் நண்பர் குழாமும் மாருதிவேனில் இந்திராபாயின் பங்களாவிலிருந்து புறப் பட்டனர்.

மதிய நேரத்தில் அந்த நால்வரும் மீண்டும் இந்திராபாயின் வீட்டில் ஒன்று சேர்ந்தனர்.

ஒரு முக்கியமான விஷயத்திற்காக அவர்கள் அங்கு குழுமியிருந்தனர்.

''இந்த பங்களா இப்போது நமக்கு சொந்தமாகி உள்ளது. எனவே, இதற்கான உரிமைப்பத்திரம் ஒன்றை நாம் தயார் செய்யவேண்டும். இந்திராபாய்க்கு பதிலாக அவளைப் போன்ற வேடத்தில் வேறொரு பெண்ணை நாம் ரிஜிஸ்ட்ரர் ஆபீசுக்கு அழைத்துச் செல்லலாம். அதன் பிறகு இந்த பங்களாவை ஒரு

ஹோட்டலாக மாற்றி விடலாம். அருமையான ஒரு ஃபைவ்ஸ்டார் ஹோட்டலாகிவிடும்.''

பாங்க்கர் வாசுதேவன்தான் இந்த மகத்தான யோசனையைக் கூறியவர்.

எல்லாரும் அதை ஒப்புக்கொண்டனர். என்றைக்கு ரிஜிஸ்டர் செய்வது என்பதையும் அவர்கள் அன்று தீர்மானித்தனர்.

இந்திராபாயின் வீட்டுக்குரிய பத்திரங்கள் எங்கே உள்ளது என்று தேடத் தொடங்கினார் மேனோன்.

ரிஜிஸ்டர் ஆபீசில் விசாரித்தபோது அது தொடர்பான எல்லா ஏற்பாடுகளையும் செய்தவர், பங்களாவைக் கட்டும் பொறுப் பேற்ற அச்சுதன் நாயர்தான் என்பது தெரிந்தது.

கிளார்க் ரகுநாதனிடம் யோசனை செய்ததில் அவர் ஒரு யோசனை கூறினார்.

''உண்மையான பத்திரம் தொலைந்து விட்டதால், தயவு செய்து அதன் உண்மை நகல் ஒன்றைத் தந்து உதவுமாறு, ஒரு விண்ணப்பத்தை இந்திராபாயின் பேரால் கொடுங்கள். பிரச்சினை சுலபமாகத் தீர்ந்துவிடும்.''

அப்படியே செய்தார்கள்.

ஒரு வாரத்திற்குள் பத்திரத்தின் புதிய நகல் கைக்கு வந்தது.

அடுத்தகட்ட நடவடிக்கை பங்களாவை விற்பதற்கான புதிய பத்திரம் எழுதுவதுதான். அதற்கும் ரகுநாதன் உதவினார். ஐம்பது லட்ச ரூபாய்க்கு விற்பனை செய்ததாகப் பத்திரம் கூறியது.

பத்திரத்திற்குச் சாட்சிக் கையெழுத்துப் போட்டவர்கள் வழக்கமான இருவர். பணம் மட்டும் கொடுத்தால் யாருக்கும் சாட்சியாகக் கையெழுத்து போட அவர்கள் தயாராக இருந்தனர்.

பலவகையான வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த ராமசாமி வெகு தூரத்தில் உள்ள ஒரு பாடகியை நினைவு கூர்ந்தார்.

திட்டமிட்டபடியே உண்ணி மேனோனின் நண்பர்கள் பத்திரப் பதிவைச் சுத்தமாக முடித்துக் கொண்டனர்.

பத்திரப் பதிவு முடிந்த இரண்டாவது நாள் பத்திரிகைகளில் ஒரு விளம்பரம் வந்தது.

''ஹோட்டல் பேலஸ்,''

'புகழ்பெற்ற பாடகியான இந்திராபாயின் பங்களா ஹோட்டலாக மாற்றப்பட்டுள்ளது. பழைமை பொதிந்த நவீன ஹோட்டல். அனைத்து வகையான உணவு வகைகளும் இங்கு கிடைக்கும்.'

ஊருக்குள் அந்தச் செய்தி ஒரு பரபரப்பையே ஏற்படுத்தியது!

## 29

சப்இன்ஸ்பெக்டர் ஜகதீஷ் பத்திரிகையில் வந்த விளம்பரத்தைப் படித்துக் கல்லாய்ச் சமைந்தார்.

அவர் மனத்தில் அன்றைய நிகழ்ச்சி ஒரு திரைப்படம்போல் தெளிவாகத் தெரிந்தது.

இந்திராபாயின் பங்களாவிலுள்ள விசாலமான வரவேற்பறை... அங்கு தனக்குக் கிடைத்த வரவேற்பு!

ஒரு தேவகன்னிகையைப் போல் இந்திராபாய் வெளிப்பட்டது, நிலவிளக்கின் முன்னால் அமர்ந்து வீணை வாசித்தது... வெயில் காலத்தில் மழை பெய்தது... என்று ஒவ்வொன்றாகக் காட்சிகள் விரிந்தன.

இப்போதும் அதெல்லாம் மனத்திலேயே பசுமையாக இருந்தன.

மீண்டும் ஒரு சந்திப்பு.

அவள் அழகிதான்!

அந்த அழகு அமானுஷிகமானது.

அவள் கண்களுக்குப் பிரத்தியேகமான ஒரு வசீகர சக்தி இருந்தது.

'சே... பங்களாவை விற்பதற்கு முன் ஒரு தடவை அவளை சந்திக்க முடியாமல் போய் விட்டதே.' ஜகதீஷ் யோசித்தார்.

மேஜை மீதிருந்த டெலிபோனையும் பத்திரிகையையும் மாறிமாறிப் பார்த்தார் ஜகதீஷ். ஹோட்டலின் ஆறு டெலிபோன் நம்பர்கள் தெளிவாகப் பத்திரிகையில் இருந்தன.

ஹோட்டலுக்கு போன் செய்து அவளைக் குறித்து விசாரிக்கலாமே என்று நினைத்தது ஜகதீஷின் மனம்.

முதலில் இருந்த நம்பரை டயல் செய்தார்.

''ஹோட்டல் பேலஸ்தானே... நான் சப் இன்ஸ்பெக்டர் ஜகதீஷ் பேசுகிறேன். நான் அவசரமாக இந்திராபாயை சந்திக்க வேண்டி உள்ளது. தொடர்பு கொடுக்க முடியுமா?''

உருப்படியான பதில் கிடைக்கவில்லை.

என்ன செய்வது என்று யோசித்தவர் மீண்டும் டயல் செய்தார்.

''ஹோட்டல் உரிமையாளர்கள் யாராவது இருந்தால் கூடப் போதும். தொடர்பு கொடுங்கள்!'' என்றார். ''யாருமே ஊரில் இல்லை''யென்ற பதில் கிடைத்தது.

ஆனால், ஜகதீஷால் பொறுமையாக இருக்க முடியவில்லை.

ஐந்து மணியளவில் குவார்ட்டர்ஸுக்கு வந்தார். ஜகதீஷ் யூனிஃபாரத்தை மாற்றிவிட்டுக் குளித்தார். வேறு உடையை அணிந்து புறப்பட்டார். இந்த உடையில் கண்ணாடியில் பார்த்தபோது, பழைய கல்லூரி நாட்கள் நினைவுக்கு வந்தன.

ஜகதீஷ் தன்னுடைய புல்லட்டில் ஏறி ஹோட்டல் பேலஸை அடைந்தார்.

போர்டு பளபளப்புடன் மின்னியது.

பங்களாவின் உட்புறம் முழுவதும் விளக்குகள் ஒரு கனவுலகத்தைக் கடை பரப்பியிருந்தது.

கேட்டிலிருந்து வாட்ச்மேனை அரைவட்டமாகச் சுற்றி, கேட்டைக் கடந்து உள்ளே நுழைந்தார் ஜகதீஷ். வாகனங்களைப் 'பார்க்' செய்வதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் வண்டியை நிறுத்தினார். சுற்றுமுற்றும் ஒருமுறை பார்த்தார். நகரின் முக்கியப் பிரமுகர்கள் பலரது கார்கள் அங்கிருந்தன.

ஜகதீஷ் உள்ளே நுழைந்தார்.

என்கொயரி கௌவுண்டரில் இளைஞன் ஒருவன் அமர்ந் திருந்தான்.

''இந்த ஹோட்டலின் உரிமையாளர்கள் யாராவது இருக் கிறார்களா?'' ஜகதீஷ் கேட்டார்.

''ஒருவர் வந்திருக்கிறார்!''

''அவர் பெயர்?''

''மிஸ்டர் ராமசாமி.''

''அவரை நான் பார்க்க முடியுமா?''

''அவர் தற்சமயம் ரூம் நம்பர் இருநூற்று இரண்டில் இருக்கிறார்.''

''சரி, நான் பார்த்துக் கொள்கிறேன்!''

ஜகதீஷ் லிஃப்டில் ஏறி, மூன்றாவது எண்ணை விரலால் அழுத்தினார்.

லிஃப்ட் மேல்நோக்கி நகர்ந்தது.

ரூம் நம்பர் இருநூற்று இரண்டுக்கு முன்னால் வந்த ஜகதீஷ் சற்று நேரம் நின்றார். ராமசாமியுடன் பேசினால் இந்திராபாயைப் பற்றி ஏதாவது தெரிந்து கொள்ள முடியும் என்று அவர் நம்பினார்.

எப்படியும் ஒரு தடவையாவது இந்திராபாயை சந்தித்ததே தீருவது என்கிற ஆசையும் பிடிவாதமும் ஜகதீஷிற்குள் உயர்ந்தது. அதற்கு என்ன காரணம் என்பது புரியவே இல்லை. இருப்பினும், அவளைப் பார்க்க வேண்டும் என்கிற ஆவல் அதிகரித்தது.

எதிரே தெரிந்த கதவை இரண்டு விரல்களை மடக்கித் தட்டினார்.

விநாடிகளின் இடைவெளியில் கதவு திறந்தது.

''மிஸ்டர் ராமசாமி இருக்கிறாரா?'' ஜகதீஷ் கேட்டார்.

''நானேதான். நீங்கள் யாரென்று தெரியவில்லையே?'' ராமசாமி சுவாரஸ்மில்லாதவராக பதிலளித்தார்.

''என் பெயர் ஜகதீஷ். இந்த டிவிஷனின் சப்இன்ஸ்பெக்டர்.''

''ஓஹோ அது நீங்கள்தானா? சட்டம் தொடர்பான விஷயம் ஏதாவது என்றால் நான் ஸ்டேஷனுக்கு வருகிறேன், போதுமா?''

''இல்லை. இது ஒரு பர்ஸனல் மேட்டர். எனவேதான் நான் உங்களை சந்திக்க வந்திருக்கிறேன்.''

''அப்படியானால், நாம் அடுத்த அறையில் உட்கார்ந்து பேசலாமே...'' என்றவர் அறையிலிருந்து வெளியே வந்தார்.

பக்கத்து அறையின் கதவு வெறுமனே சாத்தி வைக்கப்பட் டிருந்தது. உள்ளே நுழைந்தபடி ஜகதீஷை அழைத்தார்: ''வாருங்கள்!''

அறைக்குள் நுழைந்தவுடன் ராமசாமி இன்டர்காம் மூலமாக ரூம்பாயை அழைத்தார். அவன் வந்தவுடன் ''விஸ்கியும் நட்ஸும் எடுத்துவா!'' என்றார்.

''வேண்டாம். ஹாட் ட்ரிங்கஸ் எதுவும் இப்போது வேண் டாம். வேண்டுமானால் ஒரு பாட்டில் பீர் சாப்பிடலாம்'' ஜகதீஷ் கூறினார்.

''அப்படியானால் எனக்கும் பீரே போதும். நாலு பீர்... வறுத்த முந்திரிப் பருப்பு.''

ஆர்டருடன் போனார் பேரர்.

''சொல்லுங்கள்... நான் உங்களுக்கு எந்த வகையில் உதவ வேண்டும்? ஏதாவது டிரான்ஸ்ஃபர் மேட்டரா? இந்த இடம்

உங்களுக்கு அலுத்துவிட்டதா?'' கேட்டபடியே ராமசாமி சிகரெட் பாக்கெட்டைத் திறந்து நீட்டினார்.

''அந்த மாதிரி உதவிகள் எதுவும் எனக்குத் தேவை இல்லை. என் அப்பாவே ஒரு சூபரின்டெண்டெண்டுதான்!'' ஜகதீஷ்ய இயல்பாகப் பேசினார்.

ஜகதீஷின் வார்த்தைகளைக் கேட்ட ராமசாமிக்கு அசடு வழிந்தது.

''இவ்வளவு பெரிய நிலையில் இருக்கும் உங்களுக்கு நான் வேறு என்ன உதவி செய்ய வேண்டும் என்பது புரியவில் லையே?'' ராமசாமி சற்றுத் தணிந்த குரலில் கேட்டார்.

''நான் இந்திராபாயை உடனடியாகப் பார்க்க வேண்டும்...'' சிகரெட் பாக்கெட்டிலிருந்து சிகரெட் ஒன்றை எடுத்துப் பற்ற வைத்தபடி பேசினார்.

அதற்குள் பேரர், பீருடன் வந்தார்.

பேரர், பீர்பாட்டிலைத் திறந்து இரண்டு கிளாஸ்களில் ஊற்றினார்.

''சாப்பிடுங்கள்!'' ராமசாமி உபசரிப்பைத் தொடர்ந்தார்.

ஜகதீஷ் கிளாஸை எடுத்து ஒருவாய் குடித்தார்.

''நீங்கள் அவரை இவ்வளவு அத்தியாவசியமாகப் பார்க்க விரும்பும் காரணம்?'' ராமசாமி கேட்டார்.

''ஹோட்டல் விளம்பரத்தைப் பத்திரிகையில் பார்த்தபோது சட்டென்று அவரது நினைவு வந்தது. ஒரு தடவை சந்திக்க வேண்டுமென்று தோன்றியது. அவ்வளவுதான்...'' ஜகதீஷ் கூறினார்.

''உண்மையைச் சொல்லி விடுகிறேன். அவரைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது.'' ராமசாமி கையை மலர்த்தியபடி உள்ள நிலைமையை விளக்குவது போல் பேசினார்.

ஜகதீஷுக்கு ஏமாற்றமாக இருந்தது.

இருந்தாலும் 'அவளை எப்படியாவது கண்டுபிடித்தே தீருவது!' என்கிற வேட்கை ஜகதீஷிடம் வளர்ந்தது. ஜகதீஷுக்கே இந்த நினைப்பு ஒரு வகையில் மிகவும் வேடிக்கையாக இருந்தது.

''அதாவது இந்த பங்களாவை நீங்கள் விலைக்கு வாங்கிய பிறகு அவரை மறுபடி பார்க்கவே இல்லை, அப்படித்தானே?'' ஜகதீஷ் கேட்டார்.

''ஆமாம். சந்திக்க வேண்டி அவசியம் எங்களுக்கு ஏற்படவில்லை என்பதுதான் உண்மை.''

''முழுப்பணத்தையும் நீங்கள் ஒரே தடவையில் கொடுத்து விட்டீர்கள் அப்படித்தானே?''

''உண்மையும் அதுதான்!''

''எப்படி எல்லாவற்றையும் கரன்சியாகவே கொடுத்தீர்களா அல்லது...''

''நீங்கள் இந்த மாதிரிக் கேள்விகள் கேட்பதே எனக்குப் பிடிக்கவில்லை. உங்களது தொனியைப் பார்த்தால் நாங்கள் அவரை ஏமாற்றிவிட்டது போல் உள்ளது. இது ஒரு சாதாரண விஷயம்.''

''நீங்கள் சொல்வதுபோல் இது ஒரு சாதாரண விஷயம் என்பதை நானும் ஒப்புக் கொள்கிறேன். நீங்கள் அவரை ஏமாற்ற வேண்டிய அவசியமும் இருக்காது. ஆனால், இந்த விஷயத்தில் எனக்குச் சில சந்தேகங்கள் உள்ளன. அதனால்தான் கேட்கிறேன்!'' ஜகதீஷ் மீண்டும் ஒரு சிகரெட்டைப் பற்றவைத்தபடி பேசினார்.

''புகார் ஏதாவது வந்துள்ளதா என்ன?'' ராமசாமி சட்டென்று கேட்டார்.

''இதுவரை எதுவும் வரவில்லை. ஆனால், விரைவிலேயே வரலாம்.''

''என்ன இப்படிப் பேசுகிறீர்கள்! இந்த பங்களாவை வாங்கியிருப்பவர்கள் கிரிமினல் குற்றவாளிகளா என்ன?''

''அப்படியெல்லாம் நான் சொல்லவில்லையே? நீங்கள் தான் புதிய புதிய சந்தேகங்களை எழுப்புகிறீர்கள். நீங்கள் மோசமானவர்கள் அல்ல என்று நான் நம்புகிறேன்...'' ஜகதீஷ் எழுந்திருக்க முயன்றார்.

''உட்காருங்கள் இன்ஸ்பெக்டர். நீங்கள் இந்திராபாயைக் கண்டிப்பாக சந்திக்க வேண்டுமானால், வரவழைக்கிறேன்!'' ராமசாமி எழுந்தார்.

இதைக் கேட்டதும் ஜகதீஷுக்கு மகிழ்ச்சி தோன்றியது. நாம் நினைத்த காரியம் நிறைவேறப் போகிறது என்கிற குறுகுறுப்பு மனத்தில் தோன்றியது.

ராமசாமி விறுவிறுவென்று ரங்கம்மாள் தங்கியிருந்த இடத்திற்குச் சென்றார்.

''மிஸ் ரங்கம்மாள், நீங்கள் ஓர் உதவி செய்ய வேண்டும்!'' ராமசாமி விண்ணப்பித்தார்.

''இனியும் நான் ஏதாவது செய்ய வேண்டி உள்ளதா என்ன? இதுவரை நான் செய்திருப்பதே பெரிய குற்றம் என்று எனக்குத் தெரியும். எனவே, எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் நான் இங்கிருந்து கிளம்புவது நல்லது என்னுடைய பாட்டுத் தொழில், நான் ஊரில் இல்லாவிட்டால் பாதிப் படையும்...'' ரங்கம்மாள் சற்றுக் கோபத்துடன் பேசினாள்.

ராமசாமி இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவித்தார். எப்படி ரங்கம்மாளை வசப்படுத்தி, சம்மதிக்கச் செய்வது என்று யோசித்தார். இறுதியாக ஒரு வழி கண்டுபிடித்தார். பத்தாயிரம் ரூபாய் மதிப்புள்ள நூறு ரூபாய் நோட்டுக்கட்டு ஒன்றை அவள் கையில் வைத்தார்.

பணத்தைப் பார்த்தவுடன் அவள் கண்கள் பளபளத்தன. மனநிலை சட்டென்று மாறி விட்டதாகவும் தோன்றியது.

''ஆனால், ஒரு நிபந்தனை. இந்த ஒரு உதவியுடன் நான் ஊருக்குக் கிளம்பிவிடுவேன். சம்மதமா?''

''சம்மதம்! இந்த ஓர் உதவியை மட்டும் செய்தால் போதும். நீங்கள் ஊருக்குப் புறப்பட நானே கார் ஏற்பாடு செய்து தருகிறேன்.'' வேறு வழியில்லாமல் ராமசாமி சம்மதித்தார்.

ரங்கம்மாள் இந்திராபாயின் வேடத்தை இரண்டாவது முறையாக அணிந்தாள். முழுவதும் சரிகை பதித்த ஆடையில் அவள் இந்திராபாயின் மற்றொரு நகலாகவே இருந்தாள்.

''சரி... இங்கே உட்கார்ந்திருங்கள். நான் ஒருவரை அழைத்துக்கொண்டு வருகிறேன். அவர் என்ன கேள்வி கேட்டாலும் அதிகமாகப் பேசாமல் சற்று கௌரவமாக கோபத்துடன் இருப்பதாக நடியுங்கள்...'' ராமசாமி சொல்லிவிட்டுப் புறப்பட முயன்றார்.

''அவர் இக்கட்டாக எதையாவது கேட்டு வைத்தால் நான் என்ன செய்வது?''

''வேறு என்னத்தைக் கேட்பார்? நீங்கள் எந்த ஊருக்குப் போகப் போகிறீர்கள் என்று கேட்கலாம். அப்படிக் கேட்டால் இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை என்று சொல்லுங்கள். இப்படி ஒவ்வொரு கேள்விக்கும் தகுந்த மாதிரி பதில் சொல்லுங்கள். மற்றதையெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன்!'' ராமசாமி கூறினார்.

''இது ஒரு பெரிய தொல்லையாகி விட்டது. சரி முயற்சி செய்கிறேன். நீங்கள் போய் அவரை அழைத்து வாருங்கள்.''

ராமசாமி, ஜகதீஷை அழைத்து வருவதற்குப் புறப்பட்டார்.

## 30

''புறப்படுங்கள், அவர் உங்களுக்காகக காத்திருக்கிறார். இங்கேயே ஒரு விஷயத்தைச் சொல்லிவிடுகிறேன். அவரிடம் ஏடாகூடமான கேள்விகளைக் கேட்டு மன வருத்தப்படும்படி செய்து விடாதீர்கள்!''

''நிச்சயமாக மாட்டேன். ஒரு தடவை பார்த்தாலே போதும். அத்துடன் அவசியமான ஒன்று அல்லது இரண்டு கேள்விகள் மட்டும்தான்!'' ஜகதீஷ் சம்மதித்தார்.

''அப்படியானால் புறப்படுங்கள்.''

ஜகதீஷ், ராமசாமியுடன் புறப்பட்டார்.

ராமசாமியே கதவைத் திறந்தார். ஜகதீஷ் உட்புறமாகப் பார்த்தார். மங்கலான வெளிச்சமுள்ள அறை.

அதோ! இந்திராபாய் அமர்ந்திருக்கிறாள்.

ஜகதீஷைத் தொடர்ந்து ராமசாமியும் அறைக்குள் நுழைந்தார்.

ஜகதீஷ் வணக்கம் செய்தார்.

''உங்களை மறுபடியும் பார்க்க நேர்ந்ததில் மகிழ்ச்சி.''

''எனக்கும்தான்!'' ரங்கம்மாள் பேசினாள்.

''எதற்காக உங்களது பங்களாவை விற்றீர்கள்?''

''விற்க வேண்டுமென்று தோன்றியது; விற்றுவிட்டேன் அவ்வளவுதான்!''

''எந்த ஊருக்குப் போவதாகத் தீர்மானித்திருக்கிறீர்கள்?''

''இன்னும் தீர்மானமாகவில்லை!''

''அன்று என்னைக் கண்டபோது நீங்கள் கேட்ட கேள்வி நினைவுக்கு வருகிறதா?'' ஜகதீஷ் அவள் கண்களை உற்று நோக்கியபடி கேட்டார்.

''எப்போது? நான் இப்போதுதானே உங்களை முதல் தடவையாகச் சந்திக்கிறேன்?'' விரைவாகப் பேச்சை முடித்துக் கொள்ளும் அவசரத்துடன் ரங்கம்மாள் பதிலளித்தாள்.

''என்ன! இதற்கு முன் என்னைப் பார்த்ததில்லையென்றா சொல்கிறீர்கள்?'' ஜகதீஷ் வியப்புடன் அவளைப் பார்த்தார். ஜகதீஷின் கண்களில் சந்தேக நிழல் கவிந்தது.

'என்ன சொல்கிறார்? தன்னைத் தெரியாது என்றா! ஸ்போர்ட்ஸ் கோட்டாவில்தானே உங்களுக்கு வேலை கிடைத்தது என்று கேட்டது இன்னும் என் காதில் ஒலிக்கிறதே! அந்த இனிமையான குரல்! பார்க்கப்பார்க்க ஆவலை ஏற்படுத்தும் முகம்... கட்டளை பிறப்பிக்கும் கண்கள்... இவர் ஏன் இப்படிப் பேசுகிறார்?'

ஜகதீஷ் எதுவும் புரியாமல் குழம்பினார். 'இந்தப் பெண்மணி பொய் பேசுகிறாரா? அல்லது தன்னைத் தவிர்ப்பதற்காக இப்படிப் பேசுகிறாரா?'

''சரி அதெல்லாம் போகட்டும். நான் ஒரே ஒரு விஷயத்தைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்...'' ஜகதீஷ் மறுபடியும் சோதித்துப் பார்க்க முயன்றார்.

''கேளுங்கள்...'' என்றவாறே ரங்கம்மாள் தன் வலது கையில் கட்டியிருந்த தங்கச்செயின் போட்ட கடிகாரத்தைப் பார்த்தாள்.

''இந்த பங்களாவின் புதுமனை புகுவிழாவில் நீங்கள் பாடிய பாட்டின் ராகம்...''

இந்த வார்த்தையைக் கேட்டதும் ரங்கம்மாள், ராமசாமியின் முகத்தைப் பார்த்தாள்.

ராமசாமியால் இந்தக் கேள்விக்கு பதிலளிக்க முடியவில்லை.

தப்பிக்க முடியாமல் அகப்பட்டுக் கொண்டதுபோல் இருவரும் திருதிருவென விழித்தனர்.

ஜகதீஷ் அப்போதும் பதிலை எதிர்பார்த்து நின்றிருந்தார்.

அப்படியொரு சம்பவத்தைப் பற்றித் தன்னிடம் யாரும் இதுவரை எதையும் சொன்னதில்லையே. எப்படி அவள் இதற்கு பதில் சொல்ல முடியும்?

''நீங்கள் குறிப்பிடும் பாட்டு சட்டென்று என் நினைவுக்கு வரவில்லை. எத்தனையோ பாட்டுகள் பாடியிருக்கிறேன். அதையெல்லாம் நினைவில் வைத்திருக்க முடியுமா என்ன?''

ராமசாமி அந்த பதிலைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தார்.

''சரி... நான் வரட்டுமா?'' என்ற ஜகதீஷ் விடைபெற்றுப் புறப்பட்டார்.

குவாட்டர்ஸிலுள்ள தனது அறைக்கு வந்த பிறகும் ஜகதீஷின் மனம் நிம்மதியற்றுத் தவித்தது. ஏதோ ஒரு சக்தி தன்னை இந்திராபாயை கண்டுபிடிக்குமாறு உந்துவதை உணர்ந்தார். அத்துடன் சந்தேகங்கள் வேறு ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ந்து கிளம்பின.

'தான் ஹோட்டலில் பார்த்த பெண் இந்திராபாய்தானா? அல்லது அவளைப் போன்ற தோற்றமுள்ள வேறொரு பெண்ணா? ஒருவேளை இந்திராபாய்க்கு ஆபத்து ஏதாவது நேர்ந்து விட்டதா?'

ஜகதீஷின் மனத்தில் ஒரு புதிய யோசனை தோன்றியது. 'இந்திராபாய்க்கு நிலத்தை விற்ற நபரை சந்தித்து இந்திராபாய் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ள முயன்றால் என்ன? அதுதான் நல்லது.'

ஒரு சிறிய விசாரணைக்குப் பிறகு அந்த நம்பூதிரியைக் கண்டுபிடித்தார்.

''எனக்கு அவரைப்பற்றி அதிகமான விவரங்கள் தெரியாது. இதற்கான ஏற்பாடுகளைச் செய்தவர் அச்சுதன் நாயர் என்கிற காண்ட்ராக்டர். பணமாகத் தரவில்லை. தங்க நகைகளைத் தான் அவர் என்னிடம் தந்தார்!'' - நம்பூதிரி கூறினார்.

''நீங்கள் அந்தப் பெண்மணியை சந்தித்திருக்கிறீர்களா?''

''ஒரேயொரு தடவை!''

''எங்கு சந்தித்தீர்கள்?''

''இங்கே வந்திருந்தார்.''

''அவர் ரிஜிஸ்டர் ஆபீசுக்கு வரவில்லையா?''

''வாங்குபவர் ரிஜிஸ்டர் ஆபீசுக்கு வரவேண்டும் என்பதில்லையே? அதற்காக வந்தவர் அச்சுதன் நாயர் தான்!''

ஜகதீஷுக்கு இம்முறையும் ஏமாற்றமே மிஞ்சியது.

''எதற்காக அவரைப் பார்க்க நீங்கள் இவ்வளவு ஆவலாக இருக்கிறீர்கள்?'' -நம்பூதிரி கேட்டார்.

''அவசியமான காரணம் உள்ளது!''

''எதற்காக என்பதை நீங்கள் கூறினால், அதற்கேற்றபடி வழி தேடலாம். ஏனென்றால் நானும் அவரை ஒருமுறை பார்க்க விரும்புகிறேன்.''

நம்பூதிரியின் வார்த்தைகளைக் கேட்டதும் ஜகதீஷுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. அப்படியானால், இந்திராபாயை நிச்சயமாக சந்திக்க முடியும் என்ற நம்பிக்கை தோன்றியது.

''கேளுங்கள் இன்ஸ்பெக்டர்...'' என்று பேச்சைத் தொடங்கிய திருமேனி, ஒரு தடவை சுற்றுமுற்றும் பார்த்தார். வெளிநாட்டில் வசித்த நம்பூதிரி சமீபத்தில்தான் திரும்பி வந்திருக்கிறார். இப்போதும் அவர், அவருடைய பரம்பரை வீட்டில்தான் தங்கியிருக்கிறார். ஒருகாலத்தில் இந்த ஊரின் முக்கால் பகுதி நிலம் அவரது குடும்பத்தினரிடம் இருந்தது. அன்று இந்த ஊரே ஒரு சிறிய கிராமம் மாதிரிதான் இருந்தது.

''அதுமட்டுமின்றி, அந்த பங்களா கட்டுவதற்கான இடத்தை விற்றதில் திருமேனிக்கு ஒரு பெரும் தொகை கிடைத்தது. ஏற்கெனவே அவர் பெரிய பணக்காரர். அவரது சொத்துகளைத் தாராளமாகச் செலவு செய்தாலே இரண்டு தலைமுறைக்கு வரும். வட்டி மட்டுமே ஏராளமாக வருவதால் அவருக்கு எந்த விதமான கவலையும் கிடையாது. போதாக்குறைக்கு கோயிலிலிருந்தும் நல்ல வருமானம் கிடைக்கிறது.

''அவர் சாதாரணமான ஒரு பெண்மணியாக எனக்குத் தோன்றவில்லை. அவரிடம் ஏதோ தேவாம்சம் இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. அதனால்தான் மறுபடியும் அவரைப் பார்க்க வேண்டுமென்று தோன்றுகிறது. எனவே இந்த வகையில் நமக்கு உதவுகிறாற் போல நாம் ஒருவரைக் கண்டு பிடிப்போம். நீங்கள் கவலைப்படாதீர்கள்!'' திருமேனி தனது நீண்ட பேச்சை முடித்தார்.

''அதற்காக நான் என்ன செய்ய வேண்டும். எப்போது வரவேண்டும் என்று சொன்னால் நல்லது!'' ஜகதீஷ் கேட்டார்.

நம்பூதிரி காலண்டரைப் பார்த்தார்.

''ஒன்று செய்யுங்களேன். நாளைக்கு வியாழன்... நாளைக்கே போகலாமே. மறந்து விடாதீர்கள். நான் உங்களை எதிர்பார்த்துக் காத்திருப்பேன்!'' நம்பூதிரி உறுதியான குரலில் கூறினார்.

நம்பூதிரியின் யோசனையும் ஏற்பாடும் ஜகதீஷிற்குத் திருப்தியாக இருந்தது. ஜகதீஷ் அங்கிருந்து விடைபெற்று 'ஹோட்டல் பேலஸ்' வழியாக வந்தார்.

சரியாக ஜகதீஷ் அந்த 'கேட்'டை நெருங்கியபோது ஒரு சிவப்பு நிற மாருதி வேன் அந்த கேட்டிலிருந்து சர்ரென்று வெளியேறியது. ஜகதீஷ் காருக்குள் பார்த்தார். தான் ஹோட்டலில் சந்தித்த பெண்மணி அதற்குள் அமர்ந்திருந்தார்!

ஜகதீஷ் தனது மோட்டார் பைக்கை காரின் பின்னாலேயே செலுத்தினார்.

மாருதி கார் வேகமாகச் சென்றது. அதன் உள்ளே டிரைவர் ஸீட்டுக்குப் பின்புற இருக்கையில் ராமசாமியும், ரங்கம்மாளும் அமர்ந்திருந்தனர்.

ஏதோ ஓர் உந்துதலில் சட்டென்று திரும்பிய ராமசாமி மாருதியைத் தொடர்ந்து ஜகதீஷ் மோட்டார் பைக்கில் வருவதை கவனித்தார். ராமசாமிக்குள் சந்தேகம் முளைவிடத் தொடங்கியது.

ஜகதீஷ் தங்களைப் பின்தொடர்கிறார் என்பது சந்தேகமின்றிப் புரிந்தது.

''டிரைவர்!'' ராமசாமி அழைத்தார்.

''என்ன சார்?'' டிரைவர் தலையைத் திருப்பாமலே கேட்டார்.

''நமது வண்டிக்குப் பின்னால் பைக் ஒன்று வருகிறது. நம்மைப் பின்தொடர்வாகத் தெரிகிறது. எனவே நாம் அவரிடமிருந்து எப்படியாவது தப்பிக்கவேண்டும்!'' ராமசாமி எச்சரித்தார்.

கள்ளக்கடத்தல் தொழிலில் ராமசாமிக்கு உதவும் கெட்டிக்கார டிரைவர் பல்குணன். வண்டி அவனிடம் மாயாஜால வித்தைகளைச் செய்யும். ராமசாமி எச்சரிக்கை செய்ததும், அவன் கால் ஆக்ஸிலேட்டரை அழுத்தி மிதித்தது.

ஸ்பீடா மீட்டரின் முள் நிலையில்லாமல் உயர்ந்தது.

நூற்றி இருபது... இருபத்தி ஐந்து... மாருதி ஒரு ரயில்வே கேட்டை நெருங்கியது. கேட் கீப்பர் கேட்டை மூடத் தொடங்கியிருந்தார். மாருதி கண்ணிமைப்பதற்குள் கேட்டைக் கடந்தது. கேட் மூடிக் கொண்டது.

ஜகதீஷ் கேட்டைக் கடக்க முயலவில்லை.

அதே சமயம் ரயிலின் கூவல் மிகவும் அருகில் கேட்டது. இல்லாவிட்டால் ஜகதீஷ் எப்படியும் வண்டியைப் பின் தொடர்ந்திருப்பார்.

வண்டி அந்தப் பகுதியைக் கடந்து கேட்டைத் திறக்க எட்டு நிமிடங்களுக்கு மேலாகி விட்டது.

அதற்குள் மாருதி வெகுதூரம் போயிருக்கும்.

இருந்தும் ஜகதீஷ் பைக்கை கார் சென்ற வழியிலேயே செலுத்தினார். சற்றுத் தூரத்தில் வழி இரண்டாகப் பிரிந்தது. அங்கிருந்த பெட்டிக்காரரிடம் ஜகதீஷ் மாருதியைப் பற்றி விசாரித்தார். ஒரே சமயத்தில் இரண்டு பாதையிலும் இரண்டு சிவப்பு மாருதி போனதாக அவர் குறிப்பிட்டார்.

ஜகதீஷுக்கு ஏமாற்றமாக இருந்தது.

வேறு வழியில்லாததால் ஜகதீஷ் வண்டியைத் திருப்பினார்.

மறுநாள் பங்களா உள்ள இடத்தை விற்ற நம்பூதிரியிடம் சென்றார்.

''நான் உங்களுக்காகத்தான் காத்திருக்கிறேன். வாருங்கள் ஓர் இடம்வரை போய் விட்டு வரலாம்.''

''போக வேண்டிய இடம் சற்றுத் தொலைவாக இருக்குமோ?'' ஜகதீஷ் கேட்டார்.

''ஆமாம், மோட்டார் பைக்கில் பயணம் செய்வது சரிப் படாது. ஒரு டாக்ஸியை அமர்த்தலாம்!'' நம்பூதிரி ஆலோசனை கூறினார்.

''நாம் எப்போது புறப்பட வேண்டும்?''

''இந்தப் பயணத்தைத் தள்ளிப் போடுவது நல்லதல்ல. நான் கார் ஒன்றை ஏற்பாடு செய்திருக்கிறேன். உடனே வந்துவிடும்.''

சற்று நேரத்திற்குள் டாக்ஸி வந்தது.

நம்பூதிரி இருப்பிடத்திலிருந்து எழுந்தார். ஜகதீஷ் தனது பைக்கை அவரது வீட்டிலேயே விட்டுவிட்டு அவருடன் புறப்பட் டார்.

இருவரும் காரில் ஏறினார்கள்.

''நாம் போக வேண்டிய இடம் நிலம்பூர்.'' நம்பூதிரி டிரை வரிடம் கூறினார்.

அவ்வளவு தொலைவு பிரயாணம் செய்ய வேண்டியிருக்கு மென ஜகதீஷ் நினைக்கவில்லை. ஏறத்தாழ இருநூற்று ஐம்பது கிலோ மீட்டர்.

''அங்கே போய்?'' ஜகதீஷ் கேட்டார்.

''நான் இதுவரை உங்களிடம் அதைச் சொல்லவில்லை. இப்போது சொல்கிறேன்.'' என்றவர் தன் மடியிலிருந்து ஒரு காகிதப் பொட்டலத்தை வெளியே எடுத்தார். அதிலிருந்து சிறிது புகையிலையை எடுத்து வாயில் போட்டார்.

ஐம்பதைத் தாண்டிய நம்பூதிரி பழைய காலத்தைச் சேர்ந்தவராகத் தோற்றமளித்தார். வெளிநாட்டில் வசித்தவராக இருப்பினும், அவரது ஆசார அனுஷ்டானங்களில் எந்தவிதமான மாற்றமும் ஏற்படவில்லை.

புகை பிடிப்பதில்லை. ஆனால், வெற்றிலை - பாக்கு - புகையிலை அவசியம் அவருக்கு. சிலபோது வெறும் புகை யிலையை மட்டுமாவது வாயில் போட்டு மெல்லுவார்.

தடித்த உடம்பு என்று சொல்ல முடியாது. சிவந்த உடம்பு. சற்று உயர்ந்த வடிவம். வெள்ளைச்சட்டை, வெள்ளைவேட்டி மட்டுமே அணிவார். பூணூலுடன் ஐந்து பவுன் சங்கிலி ஒன்றும் அவர் கழுத்தில் கிடந்தது.

மடியில் வைத்திருந்த பொட்டலத்திலிருந்து ஒரு துண்டு பேப்பரை வெளியே எடுத்தார்.

''இந்தாருங்கள்... இதைப் படித்துப் பாருங்கள்!'' நம்பூதிரி, ஜகதீஷிடம் கொடுத்தார்.

ஜகதீஷ் அதை வாங்கிப் படித்தார்.

'கொச்சு உண்ணித் தம்புரான், கோவிலகம்' என்று அதில் எழுதியிருந்தது.

''அவரைத்தான் நாம் பார்க்கப் போகிறோம்.'' நம்பூதிரி அந்தக் காகிதத்தைத் திரும்ப வாங்கிக் காகிதப் பொட்டலத்தில் வைத்து மடியில் முடிந்து கொண்டார்.

''இவருக்கு இந்திராபாய் உறவா!'' ஜகதீஷ் கேட்டார்.

''உறவு ஏதுமில்லை. ஆனால், அவருக்கு இந்திராபாயைப் பற்றித் தெரியும்.''

''அப்படியானால் இந்திராபாய்க்கு வேறு ஏதாவது சொத்துகள் உண்டா?''

''பங்களாவை மட்டும்தானே அங்கிருந்து பெயர்த்தெடுத்துக் கொண்டு வந்தார். அங்கு ஒரு கோயில் இருக்கிறது.''

''இந்திராபாய்க்கு உறவினர்கள் யாராவது இருக்கிறார் களா?''

''அதையெல்லாம் அவரிடமிருந்துதான் தெரிந்து கொள்ள வேண்டும்!''

''உங்களுக்கு இவர் எப்படிப் பழக்கமானார்?''

''அவர்தான் முதலில் இந்த விஷயமாக என்னை அணுகிய வர்.''

''அவருக்கு என்ன வயசிருக்கும்?''

''சற்று வயது முதிர்ந்தவராகவே தெரிகிறார்.''

நீண்ட தொலைவு பயணம் செய்ய வேண்டி இருந்ததால், நம்பூதிரி பின் ஸீட்டில் சாய்ந்து படுத்து உறங்கத் தொடங்கினார்.

ஜகதீஷ் இந்திராபாயைப் பற்றி மனத்துள் நினைத்தவாறே ஜன்னலுக்கு வெளியே வேடிக்கை பார்த்தார்.

நம்பூதிரி ஒரு தூக்கம் போட்டு எழுந்தபோது கோவிலக வீடுகள் தென்படத் தொடங்கின.

மிகவும் பழைய ஒரு கோவிலகத்தின் முன்னால் கார் வந்தவுடன் நம்பூதிரி காரை நிறுத்தச் சொன்னார்.

கார் நின்றது.

''இங்குதான் நாம் பார்க்க வேண்டிய நபர் இருக்கிறார்.'' நம்பூதிரி காரிலிருந்து இறங்கினார். ஜகதீஷும் இறங்கினார்.

முன்புற தெருக்கதவைத் திறந்துகொண்டு இருவரும் நுழைந்தனர்.

ஒரு பெரிய போர்ட்டிக்கோவுக்குப் பின்னால் அந்த வீடு ஓர் அரண்மனை மாதிரி காட்சியளித்தது. சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த தூண், அந்தக் கட்டடத்தின் பழைமையைப் பறை சாற்றியது.

நம்பூதிரி காலிங்பெல்லைச் சுட்டிக் காட்டினார். ஜகதீஷ் பெல்லை அழுத்தினார். உள்ளே ஒரு பறவை குரல் எழுப்புவது போல் ஒலித்தது. யாரோ கதவை நெருங்கி வருவது தெரிந்தது.

கதவுகள் உட்புறமாகத் திறந்தன.

தாங்கள் தேடி வந்த நபரல்ல எதிரில் நின்றிருந்தவர்.

அவள் பதினேழை நெருங்கிய பருவப்பெண்.

பளபளப்பான உடல் கொண்ட அழகி.

''உங்கள் தாத்தாவைப் பார்க்க வந்திருக்கிறோம்.'' நம்பூதிரி கூறினார்.

சந்தேகம் நிழலடிக்கும் கண்களுடன் அந்தப் பெண் ஜகதீஷை உற்று கவனித்தாள்.

''நம்மவர்தான். கோவிலகத்துக்குள் இவரை அனுமதிக்கலாம். என் பெயர் கங்காதரன் நம்பூதிரி!'' ஜகதீஷை அறிமுகப்படுத்தினார்.

இளம்பெண்ணின் கண்களிலிருந்த சந்தேகம் விலகியது.

''வாருங்கள்...'' அவள் வழிவிட்டு ஒதுங்கி நடந்தாள். அவளைத் தொடர்ந்து நம்பூதிரியும் ஜகதீஷும் சென்றனர்.

விசாலமான வரவேற்பறையைத் தாண்டி இரண்டு மூன்று அறைகளைக் கடந்து, ஏறத்தாழ பங்களாவின் பின்புறத்தை அடைந்தனர். அங்கு தனியாகக் கட்டப்பட்டிருந்த ஓய்வு அறைக்குள் அழைத்துச் சென்றாள்.

அழகாகக் கட்டப்பட்டிருந்த அந்த அறை சிற்ப வேலைப்பாடுகளுடன் கண்ணைப் பறித்தது.

அந்த அறையின் நான்கு புறங்களிலும் வராந்தா இருந்தது. உட்புறம் இரண்டு அறைகளாகத் தடுக்கப்பட்டிருந்தது.

ஓர் அறை படுக்கையறை, மற்றது குளியலறை.

வராந்தாவில் சித்திர வேலைப்பாடுகள் நிறைந்த சிவப்பு வெல்வெட் துணி விரிக்கப்பட்டிருந்தது. அங்கிருந்த சோபாவிலும் சிவப்பு வெல்வெட் மெத்தென்று காட்சியளித்தது.

''உட்காருங்கள்!'' அந்தப் பெண் அவர்களை உட்கார வைத்துவிட்டு உள்ளே சென்றாள்.

உட்புற அறையின் நடுவில் இருந்த கட்டிலில் மிகவும் வயதான, ஆனால் ஆரோக்கியசாலியான கொச்சு உண்ணித் தம்புரான் அமர்ந்திருந்தார்.

அவரைப் பார்த்தால் நூறு வயதுக்கு மேல் மதிப்பிடத் தோன்றும். வெள்ளி இழைகளைப் போன்ற தலைமுடி.

புருவங்களும் நரைத்திருந்தன.

கண்ணிமைகளிலிருந்த பீலிகள்கூட வெள்ளி நூல் போல் வெளுத்திருந்தன.

தீட்சண்ணியமான கண்கள்.

மயில்கண் வேஷ்டி அணிந்திருந்தார்.

ஒரு நாட்டை ஆளும் மன்னருக்குரிய எல்லா லட்சணங் களும் அவரிடம் பொருந்தி இருந்தன.

அவரது தலையணையின் அருகே ஏறத்தாழ ஒன்றரையடி நீளமும் இரண்டரை அங்குல கனமும் உள்ள ஓர் ஓலைச்சுவடி இருந்தது.

''தாத்தா...!'' அந்தப் பெண் அவரது காதருகே மணி ஒலிப்பது போல் அழைத்தாள்.

''யார்... கங்காதரன் நம்பூதியா வந்திருப்பது?'' கண் இமைகளைத் திறக்காமலேயே பெரியவர் பேசினார்.

அதைக் கேட்டதும் அந்தப் பெண்ணுக்கு எந்தவிதமான ஆச்சரியமும் ஏற்படவில்லை.

''ஆமாம் தாத்தா!'' இளம்பெண் பதிலளித்தாள்.

''உட்காருங்கள்... பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு நான் எழுந்து கொள்வேன். அவர்களுக்கு வேண்டிய சௌகரியங் களைச் செய்து கொடுங்கள்... வழியில் அவர்கள் எதுவும் சாப் பிடாமல் வந்திருப்பார்கள்!'' பெரியவர் கூறினார். அப்போதும் அவர் கண்களைத் திறக்கவில்லை.

''செய்கிறேன் தாத்தா!'' அந்தப் பெண் அங்கிருந்து அகன்றாள்.

வராந்தாவிற்கு வந்தவள், விருந்தினர்களிடம் கூறினாள். ''உட்காருங்கள்... நீங்கள் வந்திருப்பதைத் தாத்தாவிடம் சொல்லியிருக்கிறேன். கூப்பிடுவார். நான் உங்களுக்குச் சாப்பிட ஏதாவது கொண்டு வருகிறேன்.''

வீட்டின் உட்புறம் போனாள்.

கொச்சு உண்ணித் தம்புரான் வெள்ளி நூலிழைகள் போன்ற தாடி முடியிழைகளுக்குள் விரலை அளைந்தபடி சற்று நேரம் படுத்திருந்தார். பிறகு மிகுந்த சிரமத்துடன் எழுந்திருக்க முயன்றார்.

கங்காதரன் நம்பூதிரி, அந்த முதியவர் படுக்கையில் சாய்ந்து உட்கார உதவினார்.

சீவிய செவ்விள நீர் இரண்டு, ரஸ்தாளிப் பழங்கள், நெய்யில் பொரித்த சிப்ஸ் போன்றவற்றுடன் அந்த இளம் பெண் திரும்பி வந்தாள். அனைவரும் பெரியவரின் அறைக்குள் சென்றனர்.

''முதலில் இவற்றைச் சாப்பிடுங்கள். பிறகு பேசலாம்'' - முதிய நம்பூதிரி இடது கையை நீட்டி அருகிலிருந்த விசிறியை எடுத்தார். உடனே அந்தப் பெண் அதை அவரிடமிருந்து வாங்கி அவருக்கு விசிறத் தொடங்கினாள்.

''இன்று யாராவது வருவார்கள் என்று தோன்றியது...'' பெரிய்வர் கூறினார்.

கங்காதரன் நம்பூதிரி, அவரை வியப்புடன் பார்த்தார்.

அந்தப் பெண் கொண்டுவந்து வைத்த பொருளில் ஒன்றைக் கூட மிச்சம் வைக்காமல் எல்லாவற்றையும் அவர்கள் சாப்பிட்டனர். சாப்பிட்ட இளநீர் மட்டையை வெளியே எறிவதற்காக எழுந்தபோது, அந்தப் பெண், அவர்களைத் தடுத்து அவற்றை வாங்கிக்கொண்டு போனாள். தென்னை மரத்தின் அடியில் அவற்றைப் போட்டுவிட்டு வந்து மீண்டும் அவள் பெரியவருக்கு விசிறத் தொடங்கினாள்.

''சரி இப்போது சொல்லுங்கள், நீங்கள் வந்திருக்கிற விஷயத்தை...'' - பெரிய தம்புரான் கேட்டார்.

''நாங்கள் எதற்காக வந்திருக்கிறோம் என்பது உங்களுக்குத் தெரியுமென்று நம்புகிறோம். இருந்தாலும் சொல்கிறோம். இந்திராபாயைத் தேடிக் கண்டுபிடிக்கும் நோக்கத்துடன் வந்திருக்கிறோம். இங்கே வந்தால் எல்லா விவரங்களையும் முழுமை

யாகத் தெரிந்து கொள்ள முடியும் என்று நினைக்கிறோம்...'' கங்காதரன் நம்பூதிரி கூறினார்.

இதைக் கேட்ட கொச்சு உண்ணித் தம்புரான் சற்று நேரம் மேற்புறமாகப் பார்த்தபடி யோசனையில் ஆழ்ந்தார்.

''தாயே... மகாமாயே...'' என்று மெதுவாகக் கூறினார், கழுத்தில் கிடந்த தங்கம் கட்டிய ருத்திராக்ஷ மாலையை வருடியபடி முதியவர் தன் பேத்தியைப் பார்த்தார்.

பெரியவரின் நோக்கத்தைப் புரிந்து கொண்டவள் போல் விசிறிக் கொண்டிருந்த விசிறியை அவரது தலையணை மீது வைத்துவிட்டு அங்கிருந்து கிளம்பினாள்.

''அது ஒரு பெரிய கதை!'' பெரியவர் தமது நினைவுகளைக் குடைந்து எதையெல்லாமோ தோண்டியெடுக்க முற்பட்டார். அவரது பார்வை எங்கோ வெகு தொலைவில் பதிந்திருப்பது போல் தோன்றியது.

கங்காதரன் நம்பூதிரிக்கும், ஜகதீஷுக்கும் ஆவல் அதிகரித்தது.

அந்த இளம்பெண் சற்று நேரத்தில் திரும்பி வந்தாள். ஜகதீஷ் அவளையே பார்த்தார்.

கோயில்களில் கல் விளக்கேந்தி நிற்கும் தேவகன்னிகை போலிருந்தாள்.

இந்திரவில்லை இரண்டாக உடைத்தது போன்ற புருவக் கொடிகள்.

எள்ளின் பூப்போன்ற உட்புறம் வளைந்த அழகான மூக்கு.

செந்தாமரை இதழ்களை பெயர்த்து எடுத்து ஒட்டியது போன்ற இதழ்கள்.

சந்த்யா ராகம் ததும்பும் கன்னக் கதுப்புகள்.

அந்தக் கண்களில் கரும்பு வில்லேந்திய காமனின் இதயம் ஒளிந்திருந்தது.

''குழந்தை... செண்பகவல்லி...'' கொச்சு உண்ணித் தம்புரான் அப்போதுதான் அவளது பெயரை முதல் முதலாக உச்சரித்தார்.

''என்ன தாத்தா?'' மிகவும் வினயத்துடன், பூசாரியின் விரல் முனையில் அதிரும் மணிநாதம் போல் ஒலித்தது அவள் குரல்.

''நீ அந்த ஓலைச்சுவடியை எடுத்து வந்திருக்கிறாயா?''

''கொண்டு வந்திருக்கிறேன் தாத்தா!''

''அப்படியானால் அதன் சாராம்சத்தை இவர்களிடம் கூறு!''

செண்பகவல்லி சப்பணமிட்டுத் தரையில் அமர்ந்தாள்.

அவள் கையில் ஓலைச்சுவடி ஒன்று இருந்தது. அவள் அதன் ஒவ்வோர் ஏட்டையும் திருப்பினாள்.

''நான் எல்லாவற்றையும் படித்துப் புரிந்து கொண்டேன் தாத்தா!''

''அப்படியானால் அதன் சுருக்கத்தை அவர்களுக்குச் சொல்லிக் கொடு!'' முதியவர் கட்டளையிட்டார்.

## 31

**செ**ண்பகவல்லி சொல்லத் தொடங்கினாள்:

''சுமார் முந்நூற்று எழுபத்தைந்து வருடங்களுக்கு முன்னால் புலியனூர் கோவிலகத்தில் ஓர் இளவரசி இருந்தார். அவர் பெயர் இந்திராபாய்.

எல்லாக் கலைகளிலும் தேர்ந்து விளங்கிய இந்திராபாய், மாந்திரீகத்திலும் வியக்கத்தக்க அளவில் சக்தி பெற்றிருந்தார். கைலாசத்தின் அருகே சௌபர்ணிகா தடாகக் கரையில் தவமிருந்து ஒரு யோகீஸ்வரர் பெற்ற, ஓலைச்சுவடி அவரிடம் இருந்தது.

அந்தச் சுவடி எப்படி இந்திராபாயின் கையில் கிடைத்தது என்பதற்குப் பல்வேறு வகையான யூகங்கள் உள்ளன. அவற்றில் ஒன்று.

வைசாக மாதத்தில் ஒரு பௌர்ணமி தினத்தன்று அந்த யோகீஸ்வரர் இந்திராபாயின் புலியனூர் அரண்மனைக்கு வந்தார்.

வந்திருப்பவர் சாதாரணமான நபர் அல்ல என்பதையும், தேவாம்சம் பொருந்திய ஒரு யோகி என்பதையும் மந்திரத்தில் கைதேர்ந்த இந்திராபாய் புரிந்து கொண்டார். அவரது அன்றைய வயது இருபத்தொன்று.

அழகின் வடிவமாக இருந்தார் இளவரசி. அவரது உடை, தொப்பூழுக்குக் கீழ்ப்புறமாக உடுத்துள்ள மெல்லிய சல்லா முண்டு ஒன்றும், மார்பை மறைக்கும் ஒரு கச்சையும்தான். பிறகு உடலில் இருந்த ஆபரணங்கள்.

அந்த ஆபரணங்கள் எல்லாம் இந்திராபாயின் உடம்பு எது, ஆபரணம் எது என்று பிரித்தறிய முடியாமல் ஒன்றிக் கலந் திருந்தன.

வந்திருந்த யோகீஸ்வரருக்கு உணவளித்து உபசாரம் செய்த பிறகு அவர் படுத்து உறங்க, சப்ரமஞ்சக் கட்டிலில் பட்டு நூலால் நெய்த துணியை விரித்தபோது, இந்திராபாயின் மார்புக் கச்சை எதிர்பாராமல் முடிச்சு அவிழ்ந்து விழுந்தது.

யோகீஸ்வரர் தனக்கு முன்பாகக் கண்டது யாரை?

சந்தனத்தில் கடைந்தெடுத்த, அதன் பரிமள சுகந்தமுள்ள மணங்கமழும் இந்திர சபையின் நடனமணியான ஊர்வசியின் மற்றொரு வடிவத்தை!

பராசரன் கடற்கன்னிகையைத் தொட்டது போல் யோகீஸ்வரர் இந்திராபாயின் தோள்மீது கை வைத்தார்.

அவள் கைகள் பட்டதும் உடல் முழுவதும் குளிர்ந்த ஒரு மின்னல் ஊடுருவித் துளைத்தது போல் தோன்றியது. அவளுடன் அந்த யோகீஸ்வரர் கட்டிலில் சரிந்தார்.

பட்டு நூலிழைகளால் நெய்த அந்த மெத்தை விரிப்பின் மீது செந்தூரப் பொட்டுகள் ஒன்றிக் கலந்தன.

விடியற்காலையில் விழித்தெழுந்த இந்திராபாய் சுருங்கிக் கலைந்திருந்த விரிப்பைப் பார்த்து வெட்கத்தால் தலைகுனிந்தார்.

ஆனால், அவருடன் இரவைப் பகிர்ந்து கொண்ட யோகீஸ்வரன் கட்டிலில் இல்லை!

அவருக்கு பதிலாக அங்கு கிடந்தது ஓர் ஓலைச்சுவடி. அந்தச் சுவடியில் எல்லாவிதமான மந்திரமுறைகளும் அடங்கி யிருந்தன.

கூடுவிட்டுக் கூடுபாய்தல், உயிருள்ள ஓர் உடம்புக்குள் புகுந்து அந்த உடம்புக்கு உரியவரது நடவடிக்கைகளை தனது விருப்பப்படி கட்டுப்படுத்துதல், மரணத்தை வெல்லுதல் போன்ற மந்திரங்கள் ஏராளமாக இருந்தன.'' செண்பகவல்லி சொல்லி முடித்தாள்.

மூச்சை அடக்கிப் பிடித்தவர்களாக கங்காதரன் நம்பூதிரியும், ஜகதீஷும் அந்தக் கதையை மிகவும் சுவாரஸ்யத்துடன் கேட்டுக் கொண்டிருந்தனர்.

''செண்பகவல்லி, இனி நீ போகலாம்!'' பெரிய தம்புரான் கூறினார்.

அவள் அந்த ஓலைச் சுவடியுடன் புறப்பட்டாள்.

''இது வரை நீங்கள் கேட்டது சில சம்பவங்களை. இன்னும் சிலவற்றையும் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.'' படுக்கையி லிருந்து சற்று நிமிர்ந்தபடி பேசினார் பெரியதம்புரான்.

செண்பகவல்லி திரும்பி வந்தாள்.

''தாத்தா வேலைக்கான நேரமாகி விட்டது'' பேத்தி நினைவூட்டினாள்.

''நான் அதை மறந்தே போனேன். மன்னித்து விடம்மா. நீங்கள் சற்று நேரம் அடுத்த அறையில் ஓய்வெடுங்கள். நான் உங்களை அழைக்கிறேன். இன்னொரு விஷயம், நீங்கள் இனி இன்று திரும்பு பயணம் புறப்படுவது நல்லதல்ல. நாளைக்கு உங்களிடம் மேலும் சில விஷயங்களைச் சொல்ல வேண்டி உள்ளது...'' பெரியவர் கூறினார்.

அதன்படியே இருவரும் பக்கத்து அறைக்குச் சென்றனர்.

செண்பகவல்லி அந்த அறைக்கு வந்தாள்.

''நீங்கள் குளித்து களைப்பைப் போக்கிக் கொள்ளுங்கள். அதற்குரிய எல்லா வசதிகளும் இங்கு உள்ளன. கொஞ்ச நேரத்தில் சாப்பாடு வரும். தாத்தா இன்று இனிமேல் யாரிடமும் எதுவும் பேசமாட்டார்.'' இருவரையும் பார்த்துக் கூறினாள் செண்பகவல்லி.

இந்தத் திட்டமும் நல்லதுதான் என்று அவர்களுக்கும் தோன்றியது. இருவரும் குளித்து முடித்த சற்று நேரத்திற்குள் சாப்பாடு வந்தது. கொண்டு வந்தவர்கள் இரண்டு வேலைக்காரப் பெண்கள். செண்பகவல்லியை அதன் பிறகு அவர்களால் காண முடியவில்லை.

தூரத்தில் எங்கேயோ ஒரு கடிகாரத்தில் மணி பதினொன்று அடிப்பது கேட்டது. அப்போதுதான் நேரம் நள்ளிரவை நெருங்கி விட்டது என்று அவர்களுக்குத் தோன்றியது.

''இவ்வளவு நேரம் நம்மிடம் பேசியும் அவருக்கு அலுப்பு எதுவும் தோன்றாதது நம்முடைய அதிர்ஷ்டம்தான்!'' ஜகதீஷ் சிகரெட் ஒன்றைப் பற்றவைத்தபடி பேசினார்.

''அவர் ஒரு மகான். அது மட்டுமல்ல... நம்மைப் போன்ற விருந்தாளிகள் அவரது வீட்டிற்கு வருவது எப்போதாவது ஒருமுறைதான். அதனால் நம்மீது அவருக்கு அப்படியொரு அன்பு தோன்றியிருக்கலாம்.'' கங்காதரன் நம்பூதிரி, ஜகதீஷிடம் கூறினார்.

இருவரும் படுத்துக் கொண்டனர்.

எங்கும் அமைதியாக இருந்தது.

ஓர் இலைகூட அசையவில்லை.

பயணக் களைப்பினால் படிப்படியாக இருவரின் விழியிமை களிலும் கனம் படியத் தொடங்கியது. மெதுவாக அவர்கள் உறக்கத்தில் ஆழ்ந்தனர்.

விடியற்காலையில் செண்பகவல்லியின் குரலைக் கேட்டு இருவரும் கண்விழித்தனர்.

''காலைச் சிற்றுண்டி தயாராக உள்ளது. நீங்கள் சாப்பிட வரலாம்.'' செண்பகவல்லி அவர்களை அழைத்தாள்.

இருவரும் எழுந்து காலைக்கடன்களை முடித்துக் கொண்டு சிற்றுண்டி அருந்தத் தயாராக வந்தனர்.

அப்போது சுவரில் பதிக்கப்பட்டிருந்த ஆயில் பெயிண்டிங் படங்கள் அவர்களது கவனத்தைக் கவர்ந்தது.

அவற்றில் ஒன்றை ஜகதீஷ் உற்று கவனித்தார்.

சிலந்தி வலைகளையும், படிந்திருந்த தூசியையும் தட்டுவதற்காக வைத்திருந்த ஒட்டடைக் குச்சியினால் அந்தப் படத்தின் மேலிருந்த தூசியை அகற்றினார். அப்படியும் திருப்தி யடையாமல் தனது பாக்கெட்டிலிருந்த கர்சீப்பைப் பயன்படுத்திப் படத்தைச் சுத்தம் செய்தார்.

படத்தைப் பார்த்த ஜகதீஷுக்கு வியப்புத் தோன்றியது.

அந்தப் படம்...

இந்திராபாயின் படம்!

தான் முதன் முதலாக இந்திராபாயை சந்தித்தபோது அவள் உடுத்தியிருந்த அதே சரிகை உடை மற்றும் ஆடை ஆபரணங் களை அணிந்துள்ள படம்.

ஜகதீஷின் அருகே வந்து நின்றபோது தெரிந்த அதே முகம்! எந்தவிதமான மாற்றமோ இளமையோ முதிர்ச்சியோ அற்ற முகம்!

'கடவுளே... என்ன இது!' ஜகதீஷ் படத்தின் அடிக்குறிப்பை உற்று கவனித்தார்.

''கார்த்திகைத் திருநாள், இந்திராபாய் தம்புராட்டி. தோற்றம் 1644-ஆம் வருடம் ஆனி மாதம், கார்த்திகை நட்சத்திரம்.

ஏறத்தாழ முந்நூற்று இருபத்தைந்து வருடங்களுக்கு முந்தைய படம்!

அப்படியானால் இந்திராபாயின் வயது முந்நூற்று ஐம்பது வருடங்களா?

இதை எப்படி நம்புவது?

''என்ன பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?'' கங்காதரன் நம்பூதிரி கேட்டார்.

''நான் பார்த்த அதிசயத்தை உங்களிடம் எப்படி சொல்வ தென்று யோசிக்கிறேன்!'' ஜகதீஷ் அவருக்கு பதில் அளித்தார்.

செண்பகவல்லி அவர்களது காலை நேரப் பலகாரத்தைப் பரிமாறியிருந்தாள்.

சிற்றுண்டிக்குப் பிறகு மற்றவற்றைப் பேசிக் கொள்ளலாம் என்று நினைத்த ஜகதீஷ், டைனிங் டேபிளின் முன்னால் அமர்ந்தார்.

அப்போதும் அவர் கண்கள் அந்தப் படத்தையே கவனித்தன.

கைகழுவும்போது ஜகதீஷ், செண்பகவல்லியிடம் கேட்டார்:

''உங்கள் தாத்தாவிடம் இன்று நாங்கள் பேச முடியு மல்லவா?''

''இன்று தாத்தா மதியம் வரைதான் பேசுவார். எனவே, முதலில் உங்களிடம் பேசுவதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன்.'' செண்பகவல்லி, தாத்தாவின் அறைக்குள் நுழைந்தாள்.

சற்று நேரத்திற்குள் செண்பகவல்லி அவர்களைத் தாத்தாவின் அறைக்கு அழைத்துச் சென்றாள்.

''நாங்கள் வந்த நோக்கம் இதுவரை முழுமையாக நிறைவேற வில்லையே!'' ஜகதீஷ் பணிவுடன் பெரியவரிடம் கூறினார்.

''செண்பகம் உங்களிடம் ஏறத்தாழ எல்லாவற்றையும் சொல்லிவிட்டாள் இல்லையா?''

''சொன்னாள். முதலில் நான் தெரிந்துகொள்ள விரும்புவது அந்தப் படத்தைக் குறித்துத்தான்...'' ஜகதீஷ் கூறினார்.

''டைனிங் ரூமில் இருக்கும் படத்தைப் பற்றித்தானே நீங்கள் கேட்கிறீர்கள்?'' கொச்சு உண்ணித் தம்புரான் மோட்டு வளையை வெறித்தபடி கேட்டார்.

சற்று நேர இடைவெளிக்குப் பிறகு பேச்சைத் தொடங்கினார்: ''அந்தப் படத்தை முந்நூற்று இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னால் வரைந்தனர். ஆனால், அந்தப் படத்தில் நீங்கள் பார்ப்பது இப்போதைய இந்திராபாயை அல்ல!''

''அப்படியா சொல்கிறீர்கள்? நான் அவரை நேரிலேயே பார்த்திருக்கிறேனே?'' ஜகதீஷ் குறுக்கிட்டார்.

தம்புரான் ஜகதீஷைப் பார்த்துப் புன்னகைத்தார்.

''நீங்கள் சிரிப்பதன் பொருள் எனக்குப் புரியவில்லை தம்புரான்!'' ஜகதீஷ் கூறினார்.

''அந்தப் பெண்மணி மரணத்தை வென்றவர். ஒவ்வோர் அத்தியாவசியமான சந்தர்ப்பங்களிலும் அவர் வெளிப்படு கிறார், அவ்வளவுதான்!''

''அப்ப்டியானால் நீங்கள் எனக்கு மற்றொரு உதவி செய்ய வேண்டும்.''

''சொல்லுங்கள்!''

''இப்போது அவர் எங்கே இருக்கிறார் என்று சொல்ல வேண்டும்!''

''சமீபத்தில் நீங்கள் அவரைச் சந்தித்திருக்கிறீர்களா?''

''சந்தித்தேன். அவர் அந்த பங்களாவை விற்று விட்டார். பத்திரம் எழுதுவதற்காக ரிஜிஸ்டர் ஆபீசுக்குச் கூட வந்திருந்தார். அந்த அழகான பங்களாவைக் கொஞ்சம் கூட மன வருத்தமின்றி எழுதிக் கொடுக்கவும் செய்தார்.''

''பிறகு எங்கு போனார்?''

''தெரியவில்லை. நான் அவர் சென்ற வண்டியைப் பின் தொடர்ந்து சுமார் ஐந்து கிலோ மீட்டர் வரை சென்றேன். ஆனால்,

ஒரு லெவல் கிராசிங்கில் அந்த வண்டி முந்திக் கொண்டு விட்டது. பிறகு நான் விசாரித்தும் பயனில்லாமல் போய்விட்டது. நாங்கள் இங்கு வருவதற்கான காரணமே இதுதான்.''

''நீங்கள் அவரைப் பார்த்திருக்க வாய்ப்பே கிடையாது. அதே மாதிரி அவர் அந்த மாளிகையை விற்றிருக்கவும் முடியாது. அது எனக்கு உறுதியாகத் தெரியும்.'' பேசியபடியே தம்புரான் தலையணையில் மேலும் சற்று சாய்ந்து படுத்தார்.

''நீங்கள் சொல்வதை ஒப்புக் கொண்டால் நான் பார்த்த பெண்மணி நிச்சயம் இந்திராபாயாக இருக்க முடியாது!'' ஜகதீஷ் வியப்புடன் கூறினார்.

''செண்பகம்... ராசிப்பலகையும சோழிகளையும் எடுத்து வாம்மா!''

எடுத்து வந்தாள்.

தம்புரான் ஒரு தேர்ந்த ஜோதிடர் என்பது அப்போது தான் ஜகதீஷுக்குத் தெரிந்தது.

''செண்பகம் எனக்குக் கொஞ்சம் உதவி செய்யம்மா...'' என்று அவர் கூறியதும் செண்பகவல்லி அவர் நிமிர்ந்து உட்கார உதவி செய்தாள்.

ராசிப் பலகையை முதலில் மட்டமாக வைத்தார் தம்புரான். பிறகு முறைப்படி உரிய இடங்களில் சோழிகள் சிலவற்றை வைத்து ஒரு கைப்பிடியளவு சோழிகளை எடுத்துக் குலுக்கிப் போட்டார்.

அடுத்தடுத்து மூன்று தடவை பிரஸ்னத்தைத் தொடர்ந்தார். அவர் நெற்றியில் சுளிவுகள் தோன்றின.

''நிச்சயமாக இல்லை. இந்திராபாய் நீங்கள் குறிப்பிட்ட எதையும் செய்யவில்லை. முதலில் இந்திராபாய் நீங்கள் குறிப்பிடுகிற பகுதியிலேயே இல்லை! அவரால் எங்கேயும் போக முடியாத நிலை!''

''எங்கும் போக முடியாத நிலையா?''

''ஒருவகையில் சொன்னால் அவர் சிறைக்காவலில் இருக்கிறார்.''

''சிறைக் காவலிலா?''

''ஆமாம். பிரமாண்டத்திலுள்ள சர்வ சராசரங்களுக்கும் காலகட்டம் உண்டு. தசாமாற்றமும், சோதனையான கட்டங்களும் உண்டு. இந்திராபாய்க்கு இப்போது சனி தசை. அதனால் சில நாட்கள் அவர் சக்தி இல்லாதவராக இருக்கிறார்...'' தம்புரான் ராசிப்பலகை, மற்றும் சோழிகளை ஒரு பையில் போட்டு செண்பகவல்லியிடம் கொடுத்தார்.

''அப்படியானால் அதற்குப் பரிகாரம் இல்லையா?'' ஜகதீஷ் விசாரித்தார்.

''உண்டு. பரிகாரம் இல்லாத எதுவுமே ஜோதிடத்தில் கிடையாது. இன்னும் சரியாகச் சொல்வதானால் இந்திராபாய் ஒரு மந்திரவாதியிடம் சிறைப்பட்டிருக்கிறார். எனவே, அந்த மந்திர வாதியைக் கண்டுபிடித்தால், ஒருவேளை அவரது காலக்கெடு முடிந்த பிறகாவது காப்பாற்றப் பார்க்கலாம். இந்திராபாயின் தற்போதைய பலவீனமான நிலையில் அந்த மந்திரவாதி நினைத்தால் அவரை முற்றிலுமாக அழித்து விடவும் முடியும்!''

''அப்படியானால் நீங்கள் குறிப்பிடும் மந்திரவாதியை நாம் உடனடியாகக் கண்டுபிடிக்க வேண்டும் இல்லையா?'' ஜகதீஷ் பரபரப்புடன் கேட்டார்.

''அதற்கு முன்னால் நான் வேறொரு வழி சொல்லித் தருகிறேன். அதாவது இந்திராபாய் கட்டிய பங்களாவிற்குள் ஒரு பூஜையறை உள்ளது. அந்த அறையிலுள்ள பரதேவதைகளின் சிலைகளுடன், இந்திராபாயின் தோற்றம் கொண்ட ஒரு சிறிய சிலையும் உள்ளது. அதை நீங்கள் முதலில் எடுத்து வாருங்கள். மற்றவற்றை அதன் பிறகு பேசிக் கொள்ளலாம்.''

''நீங்கள் சொன்னபடி அதை நிச்சயம் எடுத்து வருகிறேன்.'' ஜகதீஷ் உறுதியுடன் பேசினார்.

''அப்படியானால் நீங்கள் புறப்படலாம்!''

கங்காதரன் நம்பூதிரியும் ஜகதீஷும் அங்கிருந்து விடை பெற்றுப் புறப்பட்டனர்.

## 32

அதே சமயம் மாந்திரீகனான தேவதத்தன் மலையடிவார குகைக் கோயிலுக்குள்ளிருந்து அற்புத சக்தி வாய்ந்த ஒரு பொருளைக் கைப்பற்றியிருந்தார். அவர் குகைக் கோயிலினுள் நுழைந்தபோது பார்த்த சிலை இந்திராபாயினுடையதுதான்!

மகா மாந்திரீகனான தேவதத்தனுக்கு இந்திராபாய் யார் என்பது அப்போதே புரிந்து விட்டது. அவளது சக்தி எப்படிப் பட்டது என்பதும் விளங்கிவிட்டது.

தற்சமயம் அவளுக்குச் சனிதசை என்பதும், அதனால் தன்னை அவளால் எதிர்த்து நிற்கவோ, தனக்குத் தொல்லை தரவோ முடியாது என்பதும் அவருக்கு விளங்கியது.

தேவதத்தன் அந்தச் சிலையை மீண்டும் ஒரு தடவை மேலிருந்து கீழாகப் பார்த்தார். அவர் கண்கள் ஆராய்வது போல் சிலையை கவனித்தன. சரிகை முண்டு உடுத்து, சரிகை பதித்த மார்புக்கச்சை கட்டி, கழுத்து மற்றும் இடைப் பகுதிகளிலும் தங்க ஆபரணங்களை அணிந்த ஒரு வடிவம். காலில் சப்த ஸ்வரத்தைத் தோற்றுவிக்கும் பாதக் கொலுசுகள். வலது கையில் வைரக் கற்கள் பதித்த தங்கவாள். பார்த்துக் கொண்டே வந்தபோது தலையில் அணிந்திருந்த தங்கக் கிரீடத்தில் சிவப்பு நிற ரத்தினக்கல் ஒன்று இருப்பது தட்டுப்பட்டது.

குகையின் கூரிருட்டிலும் அந்தச் சிவப்பு ரத்தினக்கல் சுடர்விட்டுப் பிரகாசிப்பதை தேவதத்தன் கவனித்தார்.

சிலையின் முன்புறமாகத் தரையிலிருந்த தனது தோள் பையிலிருந்து ராசிப் பலகையையும் சோழிகளையும் எடுத்து வைத்து, அணைந்திருந்த விளக்கை மறுபடி ஏற்றினார். கல் விளக்கு மீண்டும் பிரகாசமாக எரியத் தொடங்கியது.

எச்சரிக்கையாக இந்திராபாயின் கிரக நிலையை மீண்டும் ஒரு தடவை பார்த்தார். அவரது கணக்கு கொஞ்சம் கூடத் தவறவில்லை என்பது உறுதியானது.

குறிப்பிட்ட அந்த நேரம் இந்திராபாய்க்கு மிகவும் மோசமான காலகட்டம் என்பதில் சந்தேகத்திற்கு இடமில்லை.

சனி மற்றும் ராகுவின் பார்வை ஒரே மாதிரி அவளைப் பார்க்கிறது.

பிரஸ்னத்தில் மற்றொரு விஷயமும் தெரிந்தது.

கிரீடத்தில் பதித்திருந்த கல்லுக்கு அபாரமான சக்தி உண்டு என்பதும், அந்தக் கல்லைச் சிலையிலிருந்து எடுத்து விட்டால் அவளது சக்தி மேலும் நலிவடையும் என்பதும் புரிந்தது. அதன் பின் தேவதத்தன் வீணாக் காலம் கடத்தவில்லை.

பலிபீடத்தின் மீது ஏறி நின்று கிரீடத்திலிருந்த சிவப்பு ரத்தினக் கல்லைப் பெயர்த்து எடுத்துத் தனது தோள் பையில் போட்டுக் கொண்டார்.

ரத்தினக் கல் கைக்கு வந்த அதே கணம் தேவதத்தன் வேடிக்கையாக ஒன்று நினைத்தார். 'தான் இந்த நேரம் உண்மை யான இந்திராபாயாக இருந்தால்...' உடனே தேவதத்தனது தோற்றமே இந்திரா பாயாக மாறியது!

அந்த ரத்தினம் தன் கையில் இருப்பது வரை, தனக்கு இந்திராபாயின் எல்லா விதமான சக்திகளும் இருக்கும் என்பது புரிந்தது. அவர் மனம் உடனே வேறு திசையில் கணக்கிடத் தொடங்கியது.

## 33

சப்இன்ஸ்பெக்டர் ஜகதீஷும் கங்காதரன் நம்பூதிரியும் கோவிலகத்திலிருந்து திரும்பித் தங்களது இடத்தை அடைந்தனர்.

கங்காதரன் நம்பூதிரியை அவரது வீட்டில் இறக்கி விட்ட பிறகு ஜகதீஷ் 'ஹோட்டல் பேலஸை' நோக்கிப் போனார்.

ஜகதீஷும் கங்காதரன் நம்பூதிரியும் இந்திராபாயை எப்படியும் கண்டுபிடித்தே தீருவதென்று உறுதியெடுத்தனர்.

'இதுவரை கிடைத்த விவரங்களிலிருந்து பங்களாவை விற்பனை செய்தது இந்திராபாய் அல்லவென்று தெரிந்துவிட்டது. அப்படியானால் உண்மையில் அதை விற்றது யார்?

அன்று ஹோட்டலில் நாம் சந்தித்தது யாரை? அந்தப் பெண்மணியைக் கண்டுபிடித்துவிட்டால், ஏதாவது தடயம் சிக்கலாம்.

அதுமட்டுமின்றி அந்தப் பெண்ணைக் கண்டுபிடித்து விட்டால், அவள் மூலமாக நடைபெற்ற பங்களா விற்பனை செல்லாததாகிவிடும். அதன் பேரில் மோசடி வழக்கு தொடரவும் செய்யலாம்!' ஜகதீஷ் பலவிதமான ஆலோசனைகளில் ஆழ்ந்தார்.

'அந்தப் பெண்மணியை எங்கேயென்று தேடிக் கண்டு பிடிப்பது? எதற்கும் ராமசாமியை மீண்டும் ஒரு தடவை சந்திப்பது!' என்று ஜகதீஷ் தீர்மானித்தார்.

ஞாயிற்றுக் கிழமையன்று ராமசாமிக்கு போன் செய்தார் ஜகதீஷ். ராமசாமி மகிழ்ச்சியுடன் ஜகதீஷிடம் பேசினார்.

எங்கு எப்போது சந்திப்பது என்பதை சந்தோஷத்துடன் கூறினார்.

இருவரும் ரெஸ்ட் ஹவுஸில் சந்திப்பதென்று முடிவு செய்தனர்.

இரவு எட்டு மணிக்கு ஜகதீஷ் ரெஸ்ட் ஹவுஸை அடைந்தார். ராமசாமி, அவருக்காகக் காத்திருந்தார்.

''நானே உங்களை சந்திக்க வேண்டுமென்று நினைத்தேன். காரணம் என்னவென்றால், சில விஷயங்களை உங்களிடம் மனம் விட்டுப் பேசவேண்டி உள்ளது!'' ராமசாமி பேச்சைத் துவக்கினார்.

''பரவாயில்லை. நாம் இருவரும் ஒரே நேரத்தில் ஒரே மாதிரி நினைத்திருக்கிறோம். நான் உங்களை சந்திக்க விரும்பி யதற்கு முக்கியமான ஒரு காரணம் உள்ளது. இந்திராபாயை அன்று நான்

ஹோட்டலில் சந்தித்தபோது அதிகமாக எதையும் பேசிக் கொள்ள முடியவில்லை. எனவே, நான் மீண்டும் அவரை சந்திக்க வேண்டி உள்ளது.''

இதைக் கேட்ட ராமசாமி சற்று நேரம் மௌனமாக அமர்ந் திருந்தார். பிறகு பேசினார் ''டியர் மிஸ்டர் ஜகதீஷ், இந்திரா பாயை சந்திப்பதில் நீங்கள் ஏன் இவ்வளவு ஆர்வமாக இருக்கிறீர்கள் என்பதை நான் தெரிந்து கொள்ளலாமா?''

''நான் உண்மையைச் சொல்லி விடுகிறேன். இந்திராபாய் அந்த பங்களாவின் கிரகப்பிரவேசத்தை நடத்தினாரே அந்த முதல் நாள் என்னருகில் வந்து குசலம் விசாரித்தார். அந்த விநாடியில் இருந்து அவர் என் மனத்தில் நிறைந்திருக்கிறார். எனவே அவரை மீண்டும் சந்திக்க ஆசைப்படுகிறேன், அவ்வளவுதான்!''

ஜகதீஷ் பேசுவதை ராமசாமி கவனமாகக் கேட்டுக் கொண்டார்.

சப்இன்ஸ்பெக்டர் ஏதோ ஒரு தீர்மானத்துடன் வந்திருப்பதாக ராமசாமிக்குத் தோன்றியது. ஜகதீஷின் பேச்சு அப்பட்டமான உண்மையல்ல என்பதும், ஒரு போலீஸ் அதிகாரி என்ற முறையில் தன்னை ஆழம் பார்க்கிறார் என்பதும் ராமசாமியால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

''அப்படியானால் நீங்கள் இந்திராபாயை சந்தித்தே தீரவேண்டும் இல்லையா?''

''கண்டிப்பாக! நான் அவரை சந்தித்தே தீரவேண்டும்.''

''அப்படியானால் நாளைக்கு இதே நேரம் உங்களால் இங்கு வர முடியுமா? வருவதாக இருந்தால் அவரை சந்திக்க நான் ஏற்பாடு செய்கிறேன்.''

''மிக்க நன்றி! இவ்வளவு விரைவில், சுலபமாக என்னுடைய வேண்டுகோளை நிறைவேற்றி வைப்பீர்கள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை!'' ஜகதீஷ் மகிழ்ச்சியுடன் கூறினார்.

''உங்கள் விருப்பப்படியே செய்யுங்கள். ஆனால், ஒரு நிபந்தனை. அந்தப் பெண்மணியை நீங்கள் மட்டுமே சந்திக்க

வேண்டும். வேறு யாராவது அவரை சந்திப்பதாக இருந்தால் அவரிடமிருந்து நான் அதற்கான அனுமதி பெற வேண்டி உள்ளது.''

''என்னுடன் ஒருவேளை மிஸ்டர் கங்காதரன் நம்பூதிரி வருவார். அவர், இந்திரபாயைச் சந்திக்க விரும்பினாலும் விரும்பலாம்.''

''அவர் யார்?''

''அவர்தான் இந்திரபாய்க்கு இந்த நிலத்தை விற்றவர்.''

''ஓகோ... அப்படியா சங்கதி?'' ராமசாமியின் நெற்றியில் சுளிவுகள் பிறந்தன.

''சரி நாளை இரவு வருகிறோம்!'' ஜகதீஷ் விடை பெற்றார்.

மோட்டார் பைக் ஸ்டார்ட் செய்யும் ஓசையையும் அது தேய்ந்து மறைவதையும் ராமசாமி கவனித்தார்.

பைக் ஏறத்தாழ இரண்டு வளைவுப் பாதைகளைக் கடந்திருக்கும். சரக்கு ஏற்றிய லாரி ஒன்று தன்னை நோக்கி வேக மாக வருவதை ஜகதீஷ் கவனித்தார். லாரியின் ஹெட்லைட்டுகள் ஜகதீஷின் முகத்தையே மையப்படுத்தி வைத்திருந்தவை போல் தோன்றியது.

ரோட்டின் இரு புறமும் பைக் போவதற்கான வழி இல்லை. உடனடியாக ஏதாவது செய்வதே தீர வேண்டும்.

ஜகதீஷ் மோட்டார் பைக்கை லாரிக்கு நேராக விட்டுவிட்டு எம்பிக் குதித்தார்.

கண்மூடித் திறப்பதற்குள் ஜகதீஷ் யாராலோ வீசியெறிப் பட்டது மாதிரி லாரியின் பேனட்டின் மீது பொத்தென்று விழுந்தார்.

லாரி, மோட்டார் பைக்கின் மீது மோதி அதை வீசி எறிந்தது.

காரியங்கள் அடுத்தடுத்து வேகத்தில் நடைபெற்றன. ஜகதீஷ் தனது பூட்ஸ் காலால் முன்புறக் கண்ணாடியை ஓங்கி மிதித்தார்.

டிரைவருக்கு வலதுபுறம் உட்கார்ந்திருந்தவனை இழுத்து பேனட்டில் போட்டார். ''ஒழுங்காக லாரியை நிறுத்துகிறாயா அல்லது உன்னைச் சக்கரங்களுக்கு முன்னால் வீசி எறியட்டுமா?'' ஜகதீஷ் அவன் ஒரு கால் ஒரு கையைப் பிடித்துத் தூக்கியபடி கேட்டார்.

டிரைவர் சட்டென்று லாரியை நிறுத்தினார்.

''என்னுடைய மோட்டார் பைக்கை ஒழுங்காக எடுத்து வாருங்கள். ம்...'' ஜகதீஷ் லாரியிலிருந்தவர்களிடம் உத்தரவிட்டார்.

அதற்குள் பின்புறத்திலிருந்து மற்றொரு லாரி வந்தது. அதிலிருந்து ஆறு பேர் ஜகதீஷை நோக்கி பாய்ந்தனர்.

ஜகதீஷுக்கு விஷயம் புரிந்தது. 'தன்னைத் தொலைத்துக் கட்ட யாரோ இவர்களை அனுப்பியிருக்க வேண்டும்.'

முதலில் வந்த இருவரையும் பிடித்து ஒருவர் பின் ஒருவராக சுழற்றி வீசி எறிந்தார். அதற்குள் மற்றும் இருவர் வந்தனர். அவர்களிடம் பெரிய இரும்புத் தண்டுகள் இருந்தன. ஜகதீஷ் சட்டென்று பாய்ந்து ஒருவனிடமிருந்த இரும்புத் தண்டைப் பறித்தார். அதனால் ஒருவனை அடிக்க முற்படுவதற்குள் மற்றவன் ஜகதீஷை நோக்கித் தண்டை ஓங்கினான்.

வேறுவழி ஏதும் தெரியாத ஜகதீஷ் சட்டென்று தன் இடுப்பிலிருந்து கைத்துப்பாக்கியை எடுத்து அவனைச் சுட்டார்.

அவன் முழங்காலைப் பிடித்துக் கொண்டு அலறியபடி சாய்ந்தான்.

''ஓடுங்கள்... ஓடித் தப்பியுங்கள்...'' யாரோ குரல் கொடுத்தனர்.

பின்னால் வந்த லாரியில் எல்லாரும் பாய்ந்து ஏறினர். காயம்பட்டவனையும் இழுத்துப் போய் அதில் ஏற்றினார்கள்.

லாரி, ரிவர்ஸில் நகர்ந்து புறப்பட்டது.

அதற்குள் முந்தைய லாரியின் டிரைவரும் கிளீனரும் மோட்டார் பைக்கின் அருகே நின்றிருந்தவர்களும் பயந்து பைக்கை லாரியில் போட்டனர்.

''வண்டியை ஸ்டேஷனுக்கு ஓட்டுங்கள்!'' ஜகதீஷ் உத்தர விட்டார்.

அதற்குக் கீழ்ப்படிவதைத் தவிர வேறு வழியில்லாத அவர்கள் லாரியைச் செலுத்தத் தொடங்கினர். லாரி சென்று கொண்டே இருந்தது.

லாரி ஓர் இறக்கமான பகுதியில் வந்தபோது டிரைவரும் கிளீனரும் ஆளுக்கு ஒருபுறமாகக் கீழே குதித்தனர்.

ஜகதீஷ் லாரியின் டிரைவிங் ஸீட்டில் அமர்ந்து செலுத்தினார். லாரி போலீஸ் ஸ்டேஷனில் வந்து நின்றது.

அந்த லாரிக்கு நம்பர் பிளேட் இல்லையென்ற உண்மை அப்போதுதான் விளங்கியது. இது ராமசாமியின் நரித்தனம் என்பது ஜகதீஷுக்குச் சந்தேகமறத் தெரிந்தது.

ஜகதீஷ் டாக்ஸி ஒன்றை அமர்த்திக் கொண்டு கங்காதரன் நம்பூதிரியுடன் போனார். அவரையும் காரில் ஏற்றிக்கொண்ட பிறகு காரை ரெஸ்ட் ஹவுஸை நோக்கிச் செலுத்தச் சொன்னார்.

ராமசாமி அவர்களை எதிர்பார்த்து வரவேற்பறையிலேயே காத்திருந்தார்.

''ஹலோ மிஸ்டர் ஜகதீஷ், நாங்கள் எல்லாரும் உங்களை எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம். வாருங்கள்!'' மகிழ்ச்சியுடன் வரவேற்றார் ராமசாமி.

எது வந்தாலும் சரி என்கிற முடிவுடன் ராமசாமி, ஜகதீஷையும் கங்காதரன் நம்பூதிரியையும் அழைத்துக் கொண்டு போனார்.

கங்காதரன் நம்பூதிரியை முன்னறையில் உட்காரவைத்து விட்டு, மற்ற இருவரும் அறைக்குள் நுழைந்தனர்.

அங்கே-

இந்திராபாயின் உருவ ஒற்றுமையுள்ள ரங்கம்மாள் அமர்ந்திருந்தாள்.

''எதற்காக மறுபடியும் என்னை சந்திக்க வேண்டுமென்று விரும்பினீர்கள்?'' ரங்கம்மாள் கேட்டாள்.

''நீங்கள் உண்மையான இந்திராபாய் அல்ல. வேறு யாரோ ஆள் மாறாட்டப் பேர்வழி. அதைப் பரிசோதிப்பதற்காகவே மீண்டும் உங்களைப் பார்க்க விரும்பினேன்!'' ஜகதீஷ் தொடர்ந்தார்: ''நான் ஒரு போலீஸ் அதிகாரி. ஆள் மாறாட்ட வழக்கின் பெயரில் உங்களைக் கைது செய்ய நினைக்கிறேன். விரைவிலேயே நீங்கள் அதற்கான பலனை அனுபவிக்க நேரிடும். எனவே, நீங்கள் இந்த இடத்தை விட்டு வெளியேறக் கூடாது!'' ஜகதீஷ் கோபத்துடன் அறையை விட்டு வெளியே வந்தார்.

''மிஸ்டர் ஜகதீஷ், அவளுடன் பேசி விட்டீர்களா?'' வெளியறையில் காத்திருந்த ராமசாமி கேட்டார்.

''அந்தப் பெண்மணி இந்திராபாயே அல்ல; பிறகு நான் எதைப் பற்றி அவரிடம் பேச?'' ஜகதீஷ் கோபத்துடன் கேட்டார்.

''அப்படியானால், நான் ஒருமுறை பார்த்துவிட்டு வருகிறேன்.'' கங்காதரன் நம்பூதிரி எழுந்து உள்ளே சென்றார்.

அவரைப் பார்த்ததும் ரங்கம்மாள் அன்புடன் வரவேற்றாள்.

''உட்காருங்கள் திருமேனி!''

உட்கார்ந்தார்.

''அன்றைய சந்திப்பிற்குப் பிறகு நாம் இன்றுதான் மறுபடி சந்திக்கிறோமில்லையா?'' ரங்கம்மாள் கேட்டாள்.

''நான் சமீபத்தில் கூட உங்களது படத்தைப் பார்த்தேன்.'' நம்பூதிரி கூறினார்.

''எங்கு பார்த்தீர்கள்?''

''கொச்சு உண்ணித்தம்புரான் வீட்டு டைனிங் அறையில்...''

''அந்தப் படத்தை அவர்கள் இன்னும் பத்திரமாக வைத்திருக் கிறார்களா!''

''அதனால்தான் பார்க்க முடிந்தது!''

''ரொம்ப நாட்களுக்கு முன்னால் வரைந்த படம்!''

''எதற்காக நீங்கள் இப்படி மறைந்து வாழ வேண்டும்?'' நம்பூதிரி நேரடியாக விஷயத்திற்கு வந்தார்.

''எல்லாம் அப்படி அமைந்து விட்டது!''

''நான் எல்லாவற்றையும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.''

''நடந்தது இதுதான்'' ரங்கம்மாள் இருக்கையில் சற்றுப் பின்புறமாகச் சாய்ந்தபடி பேசத் தொடங்கினாள். அப்போது அவள் பழைய ரங்கம்மாளாக இருக்கவில்லை.

பிரத்தியேகமான ஒரு களை அந்த முகத்தில் படர்ந்திருந்தது. அவள் கண்களில் புதியதாகப் பளபளத்த ஒளியை நம்பூதிரி கவனிக்கத் தவறவில்லை.

உண்மையில் அங்கு நடந்தது இதுதான். இந்திராபாய், ரங்கம்மாளின் உடலில் புகுந்திருந்தாள். இது மாந்திரீகரான கங்காதரன் நம்பூதிரிக்கு மட்டுமே தெரியும். ஆனால், ஜகதீஷால் இந்த உண்மையை உணர முடியவில்லை. எனவேதான், அந்த இரண்டு சந்திப்புகளும் வெவ்வேறானது போல் தோன்றியது. ரங்கம்மாள் தொடர்ந்தாள்.

''அதற்குக் காரணம் உண்டு. இப்போது என்னுடைய நேரம் சரியில்லை. அது எனக்கே தெரியும். ஒவ்வொரு குறிப்பிட்ட காலகட்டத்திலும் நான் இதை அனுபவிக்கிறேன். இது தவிர்க்க முடியாததும் கூட!''

''நீங்கள் பேசுவது எனக்குப் புரியவில்லை...'' நம்பூதிரி குறுக்கிட்டார்.

''சொல்கிறேன்... உங்களுக்கும் இதைப் பற்றித் தெரிந் திருக்கும். ஒவ்வொரு நூற்று இருபது வயதிலும் எனக்கு இப்படி யொரு காலகட்டம் ஏற்படுவது இயல்புதான். இது என்னுடைய

மூன்றாவது ஜன்மம். இது எல்லாவற்றையும் விட மிகவும் மோசமானது என்பது எனக்கு நன்றாகத் தெரியும்...'' ரங்கம்மாள் பேச்சை நிறுத்திவிட்டுச் சற்று நேரம் மௌனமாக அமர்ந் திருந்தாள்.

கங்காதரன் நம்பூதிரி அந்த விளக்கத்தைக் கேட்டுக் கல்லாகச் சமைந்தார்.

'மூன்று பிறவிகளைத் தாண்டிய ஒரு பெண்மணியல்லவா தனக்கு முன்பாக அமர்ந்திருக்கிறார்!' என்கிற நினைப்பு அவரை பிரமிப்பில் ஆழ்த்தியது.

இப்படிப்பட்ட ஒரு பெண்மணியை சந்திக்க நேர்ந்ததில் திருப்தியும் நன்றியும் கொண்டவராக அவள் முகத்தையே பார்த்தபடி அமர்ந்திருந்தார்.

''தேவதத்தன் ஒரு பெரிய மாந்திரீகன். நான் பல ஜன்மங் களாக சேகரித்த சக்திகளை எல்லாம் அவர் ஸ்தம்பிக்கச் செய்து விட்டார். அதுமட்டுமின்றி, ஒருபோதும் இளமை அழியாத சக்தியையும் பெற்றுவிட்டார்.''

''தேவதத்தன்!'' நம்பூதிரி ஒருமுறை அந்தப் பெயரை உச்சரித்தார்.

''ஆமாம் தேவதத்தனேதான். அவர் எனது சக்திக்கு முன்னால் ஒரு பொருட்டே அல்ல. என்னுடைய மிகப் பெரிய சொத்தாக நான் சேர்த்து வைத்திருந்தது, குகைக்கோயிலில் உள்ள தேவி சிலையின் கிரீடத்தில் உள்ள சிவப்புநிற ரத்தினக் கல்லை!''

''குகைக் கோயில் தேவி!'' கங்காதரன் நம்பூதிரி தனக்கு முன்பாக இருந்த பெண்ணின் காலடியைத் தொட்டு வணங்கினார்.

''எழுந்திருங்கள்...எழுந்திருங்கள்... என்ன செய்கிறீர்கள்? இப்போது நான் எந்த தேவியுமில்லை. சாதாரண மனிதப் பெண் மட்டுமே!''

''அதெப்படி? ஒருபோதும் நீங்கள் அப்படி ஆக முடியாது. ஒரு மனிதப் பெண்ணின் உடம்பில் புகுந்திருப்பதால் தேவி ஒரு மனிதப் பெண்ணாகிவிட முடியுமா என்ன?''

''இப்போது உங்களுக்கு என்னுடைய நிலைமை ஓரளவுக்குப் புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். வேறு ஏதாவது தகவல்கள் தேவையா நம்பூதிரியாரே?''

''போதும்... இவ்வளவு தகவல்கள் போதும்...'' கங்காதரன் நம்பூதிரி, ரங்கம்மாளைப் பார்த்துக் கூறினார்.

பின்னர் அந்த அறையிலிருந்து தெளிவுடன் வெளியேறினார்.

ஒன்றும் புரியாவிட்டாலும் ஜகதீஷ் அவரைப் பின்தொடர்ந்தார்.

அவர்களை கவனித்துக் கொண்டிருந்த ராமசாமிக்கும் எதுவும் புரியவில்லை. சந்தேகத்தோடு அறைக்குள் நுழைந்து பார்த்தபோது, ரங்கம்மாள் சோபாவில் சோர்ந்து போய்ப் படுத்திருந்தாள்.

''என்ன ரங்கம்மாள், என்ன ஆச்சு?'' ராமசாமி பதற்றத்துடன் கேட்டார்.

ரங்கம்மாளிடம் அசைவே இல்லை.

ராமசாமி அவள் தோளைத் தட்டி எழுப்பிப் பார்த்தார். இதயத்துடிப்பு இருக்கிறதா என்று மார்பில் கை வைத்துப் பார்த்தார். நல்லவேளையாக இதயம் துடிக்கிறது. ராமசாமி குளிர்ந்த தண்ணீரை எடுத்து அவள் முகத்தில் தெளித்தார்.

ரங்கம்மாள் மெதுவாகக் கண்களைத் திறந்து மிரள மிரள விழித்தாள்.

''ரங்கம்மா... ரங்கம்மா என்ன ஆனது?'' ராமசாமி பதறிய குரலில் கேட்டார்.

''ஓ... ஒன்றுமில்லை... தலைசுற்றல்... ஒரே... கிறக்கமா இருந்தது... தலை என்கிற ஒன்றே இல்லாமலாகிவிட்டது போல் இருந்தது சற்று நேரத்துக்கு!'' தலையைக் கைகளால் தாங்கிப் பிடித்தபடி எழுந்தாள்.

''அவர்கள் கேட்டதற்கெல்லாம் தகுந்த பதில் கூறி சமாளித்து அனுப்பி விட்டாய் இல்லையா?'' ராமசாமி கேட்டார்.

''யார் வந்தது? என்ன கேள்வி கேட்டார்கள்?'' ரங்கம்மாள் எதுவும் புரியாதவளாகக் குழப்பத்துடன் கேட்டாள்.

''அப்படியானால் வந்த, இரண்டு பேரும் உன்னிடம் எதுவும் கேட்கவில்லையென்றா சொல்கிறாய்?'' சந்தேகம் இப்போது ராமசாமியைத் தொற்றிக் கொண்டது.

''யாரோ வந்ததாக நீங்கள் சொல்கிறீர்கள்! ஆனால், எனக்கு ஒன்றும் புரியவில்லை!''

இந்த வார்த்தைகள் ராமசாமியின் சந்தேகத்தை இரு மடங்காக்கிவிட்டது. 'தான் எதிர்பார்க்காத ஏதோ ஒன்று நடந்திருக்கிறது' என்பதை யூகித்தார்.

கங்காதரன் நம்பூதிரி திருப்தியடைந்தவராக காரில் அமர்ந்திருந்தார். ஜகதீஷ் காரை குவார்ட்டர்ஸை நோக்கிச் செலுத்தினார். பயணத்தின்போது இருவரும் வேறு எதுவும் பேசிக் கொள்ளவில்லை.

ஏறத்தாழ குவார்ட்டர்ஸை நெருங்கியபோது நம்பூதிரி கூறினார்: ''காரியங்கள் நாம் நினைத்தபடி இல்லை.''

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?''

''இந்திராபாய்க்குத் தற்போது மிகவும் மோசமான தசை நடக்கிறது!''

''நீங்கள் அவரை சந்தித்தீர்களா என்ன?''

''சந்தித்தது மட்டுமில்லை; பேசவும் செய்தேன்.''

''நீங்கள் பார்த்தது ரங்கம்மாளை!'' ஜகதீஷ் உறுதியுடன் பேசினார்.

''அந்த அறைக்குள் இருந்தது ரங்கம்மாள்தான் என்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், எனது மாந்திரீக சக்தியின் மூலம் நான் இந்திராபாயை அந்த உடம்பில் வரவழைத்து,

அவருடன் பேசினேன். தற்போதைய அவரது நிலைமையை என்னிடம் விளக்கினார்.''

''என்ன சொன்னார்?''

''மிகவும் பலஹீனமான ஒரு தசையில் இருக்கிறார். அவரது முக்கியமான பெரும்சக்தி தேவதத்தன் என்கிற மாந்திரீகனின் வசம் சிக்கி உள்ளதாம். இந்திராபாய் என்பது ஒரு மேன்மையான வடிவம். நாம் எவருமே சிந்தித்துப் பார்க்க முடியாத தெய்விகத் தன்மை நிரம்பியது.''

''சற்று விளக்கமாகக் கூறுங்கள்?''

''இது இந்திராபாயின் மூன்றாவது ஜன்மம். ஜன்மங்களை ஜாலவித்தைகளால் வெற்றி கொண்டவர் அவர். அத்துடன் அவருக்கு தேவியின் அருளும் உள்ளது.''

''புரியவில்லை!''

''விளக்கமாகச் சொல்கிறேன். இந்திராபாய் முதல் ஜன்மத்திலேயே இன்றைக்கு அவரிடமுள்ள மந்திரவித்தைகள் எல்லாவற்றையும் கற்றுத் தேர்ந்தார். அதன்பிறகு அவர் மரணத்தை வெல்லுவதற்கான வழிமுறைகளில் ஈடுபட்டார்.''

''மரணத்தை வெற்றி கொள்வதா?''

''ஆமாம். அது ஒரு மகத்தான ஸித்தி. ஒரு ஜன்மத்தின் ஆயுள் முடிவடையும்போது அவர் வேறு ஏதாவது கோவிலகங்களில் பிறந்த இளம் பெண்ணின் உடம்பில் புகுந்து கொள்வார். பிறகு முறைப்படி மாந்திரீகம் பயின்று, ஒரு துறவியாகி அந்த வீட்டிலிருந்து வெளியேறி விடுவார். அதன் பிறகு அவர் காலங்கழிப்பது குகைக்கோயிலில்தான்.''

''குகைக் கோயிலா?''

''ஆமாம்... குகைக் கோயிலேதான்! அங்குள்ள தேவி உக்கிர ரூபிணி. அந்த தேவிக்கு பூஜை செய்து, அவரை மகிழ்ச்சிப் படுத்தி அவரைத் தன் உடம்பிலும் மனத்திலும் ஆவாஹனம் செய்து நிலை நிறுத்தி வைப்பது அவரது லட்சியம். ஏறத்தாழ அதை

நிறைவேற்றவும் செய்தார். ஆனால், இந்த மூன்றாவது ஜன்மத்தில் அவரது லட்சியத்தில் ஒரு சிறு தவறு நிகழ்ந்து விட்டது. அதன் காரணமாக அவர் ஓர் ஆபத்தில் சிக்கியுள்ளார்.''

''அதைக் களைவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?''

''சற்றுப் பொறுங்கள். நான் இன்னும் அதைச் சொல்லி முடிக்கவில்லையே!'' என்ற கங்காதரன் நம்பூதிரி தனது பையி லிருந்த ராசிப்பலகை மற்றும் சோழிகளை வெளியே எடுத்து வைத்தார்.

''நாம் முதலில் கண்டுபிடிக்க வேண்டியது தேவதத்தன் எங்கே இருக்கிறார் என்பதைத்தான்!'' கங்காதரன் நம்பூதிரி கூறினார்.

தேவதத்தன் எந்த திசையில் உள்ளார் என்று கண்டுபிடிப் பதற்காக நம்பூதிரி சோழிகளைப் பிரித்து வைத்து, குலுக்கிப் போட்டுக் கணக்கிட்டார்.

ஆனால், தாம் எதைத் தெரிந்து கொள்ள விழைகிறோமோ அது மட்டும் தெரியவில்லை என்றபோது அவருக்கு சந்தேகம் தோன்றியது. தேவதத்தன் சாமான்யமானவர் அல்ல என்பது விளங்கியது.

பலமுறை திரும்பத் திரும்பப் பார்த்தும் எதுவும் விளங்க வில்லை. இனி அடுத்த கட்டம் மைபோட்டுப் பார்ப்பதுதான்.

''மிஸ்டர் ஜகதீஷ், நம்முடைய எதிராளி மிகுந்த புத்திசாலி என்பது தெரிகிறது. அதனால் அவரைக் கண்டுபிடிக்க நான் வேறொரு வழியைப் பயன்படுத்த வேண்டி உள்ளது...'' நம்பூதிரி கூறினார்.

''வேறு என்ன வழி?'' ஜகதீஷ் கேட்டார்.

''பன்னிரண்டு வயதுள்ள ஒரு பெண் குழந்தை கிடைத்தால் நல்லது.''

''எதற்காக நம்பூதிரி?''

''மை போட்டுப் பார்ப்பதற்கு! அந்த ஒரு வழிதான் உள்ளது.''

''அதற்கென்ன... நான் ஒரு பெண் குழந்தையைக் கொண்டு வருகிறேன். கடைசித் தங்கையே இருக்கிறாள்!''

''அப்படியானால், ரொம்பவும் நல்லது. மை போட்டுப் பார்ப்பதை உங்களது வீட்டிலேயே வைத்துக் கொள்ளலாமே? என்ன சொல்கிறீர்கள்?''

''அதற்கென்ன தாராளமாகப் பார்க்கலாமே...'' ஜகதீஷ் சம்மதித்தார்.

''அப்படியானால், இன்று மாலையிலேயே பார்த்து விடலாம்.''

அன்று மாலையிலேயே சூரியன் மறைவதற்கு முன்பாக நம்பூதிரி, ஜகதீஷின் குவார்ட்டர்ஸை அடைந்தார். அங்கு ஜகதீஷின் தாயும் தங்கையும் இருந்தனர். தாயாருக்கு இதுபோன்ற விஷயங்களில் நம்பிக்கை அதிகம்.

ஜகதீஷின் சகோதரி அஞ்சலி ஒரு கெட்டிக்காரப் பெண். விஷயத்தைக் கூறியதும் ஆர்வத்துடன் ஒப்புக் கொண்டாள்.

அப்போது வேகமாக வந்த ஜகதீஷ். சற்றும் தாமதிக்காமல் வெளிவாசலையும் கேட்டையும் மூடினார். அதிகமாகப் புழங்காத ஓர் அறையில் சக்கரம் வரைந்து அஞ்சலியை அதில் உட்கார வைத்தார் நம்பூதிரி.

அவள் வலது உள்ளங்கையை ஒரு தடவை பார்த்த நம்பூதிரி கையை மடக்கி வைத்துக் கொள்ளுமாறு கூறினார்.

பிறகு தனது பையிலிருந்து ஒரு சிறிய மை டப்பாவைத் திறந்து, வலதுகைச் சுட்டுவிரலால் மையைத் தொட்டு அஞ்சலியின் கையில் வட்டமாகத் தடவினார். பின்பு கைவிரல் களை ஒன்று சேர்த்து நெற்றியின் மையத்தைத் தொடுமாறு சொன்னார். கடைசியாக உள்ளங்கையை மூக்கிற்கு நேராகக் கொண்டுவந்து, இரண்டு கண்களையும் மை தடவிய பகுதியில் மையப்படுத்துமாறு சொன்னார்.

''ஹரி ஸ்ரீ கணபதாய நம :

அவிக்ன நமஸ்து...'' நம்பூதிரி மந்திரம் சொன்னார்.

அஞ்சலி அதைத் திரும்பச் சொன்னாள்.

''இனி நான் சொல்வதை கவனமாகக் கேள்!'' நம்பூதிரி கூறினார்.

''கண்களுக்கு முன்னால் வெளிச்சமாகத் தெரிகிறதா?''

''தெரிகிறது!'' அஞ்சலி பதிலளித்தாள்.

''அதன் நிறம் என்ன?''

''சிவப்பு!''

கங்காதரன் நம்பூதிரியின் முகத்தில் மகிழ்ச்சிப் பளபளப்புத் தெரிந்தது.

''அந்த ஒளி எங்கே போகிறது என்று பாரம்மா!''

''அது போய்க் கொண்டே இருக்கிறது!''

''எந்த திசையை நோக்கிப் போகிறது?''

''வலது புறமாகப் போகிறது!''

கங்காதரன் நம்பூதிரி யோசனை செய்தார்.

அஞ்சலி உட்கார்ந்திருப்பது மேற்குப் புறத்தை நோக்கி, அஸ்தமன நேரமானதால், அந்தத் திசையில் உட்கார வைத்திருந்தார். சூரியன் தற்போது மேற்கில் உள்ளது. அதன்படி வலதுபுறம் வடக்குத் திசையைக் குறிக்கிறது. வடக்கில் நகர்வதாகக் குழந்தை கூறுகிறது.

''மிகவும் கவனமாகப் பாரம்மா. வழியில் வேறு ஏதாவதெல் லாம் தெரியும். அந்தச் சிவப்பு நிற ஒளி எங்கே போய் நிற்கிறது என்பதை கவனிக்க வேண்டும். அதுதான் நமது இலக்கு...'' நம்பூதிரி கூறினார்.

அஞ்சலி உன்னிப்பாக கவனித்தாள். சிறிது நேரத்தில் அந்த ஒளி சட்டென்று மறைந்தது.

''அந்த ஒளி மறைந்துவிட்டது.'' அஞ்சலி கூறினாள்.

''இருக்கட்டும்... நீ பார்த்துக் கொண்டே இரு. வேறு ஏதாவது தெரியும்.''

ஏறத்தாழப் பத்து நிமிடமாகியும் மறுபடி அந்த ஒளி தெரியாமற் போகவே நம்பூதிரி குழந்தையின் கையைக் கீழ்ப்புறமாகத் தாழ்த்தி இறக்கி விட்டார்.

குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு குழந்தையை மை பார்க்க அனுமதிப்பது சரியல்லவென்று நம்பூதிரிக்குத் தோன்றியது.

''என்ன நம்பூதிரி ஏதாவது புரிந்ததா?'' ஜகதீஷ் கேட்டார்.

''அஞ்சலி நீ போகலாம் அம்மா!'' நம்பூதிரி அஞ்சலிக்கு விடை கொடுத்தார். அவள் எழுந்து போனாள்.

''இந்திராபாயின் சக்தி முழுவதையும் உட்கொண்ட ஒரு ரத்தினக் கல்லுடன் தேவதத்தன் ஒரு கோயிலுக்குள் இருக்கிறார். கோயிலைத் தாண்டியவுடன் அஞ்சலியின் பார்வையிலிருந்து அந்த ஒளி மறைந்திருக்கிறது!'' நம்பூதிரி கூறினார்.

## 34

**அ**தே நேரம் ராமசாமியும் மேனோனும், டாக்டர் வில்லியமும் ஹோட்டல் பேலஸின் ரகசிய அறையில் அமர்ந்து ஜகதீஷை எப்படி சமாளிப்பது என்பது குறித்து விவாதித்துக் கொண்டிருந்தனர்.

எப்படியாவது இந்திராபாயை விடுதலை செய்ய வேண்டும் என்கிற வேட்கை ஜகதீஷுக்கு இருப்பது அவர்களுக்குத் தெரியும்.

''அந்த சப்இன்ஸ்பெக்டருடன் சேர்ந்துள்ள நம்பூதிரி, ஒரு ஜோதிடர் என்பதையும் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்...'' மேனோன் எச்சரித்தார்.

''ஆமாம்... அவர் நமக்கு எதிராகச் செயல்படத் தொடங்கியிருக்கிறார். இந்த சந்தர்ப்பத்தில் நாம் என்ன செய்ய வேண்டும்?

எல்லாவற்றுக்கும் மேலாக ஜகதீஷுக்கு நம்மீது வலுவான சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இந்தச் சிக்கலான சூழ்நிலையில் நாம் எந்த முறையில் அவர்களை சமாளிப்பது என்று விளங்க வில்லை...'' வில்லியம் மற்றவர்களைப் பார்த்துக் கேட்டார்.

''எனக்குத் தெரிந்தவரையில் அதற்கு ஒரேயொரு வழிதான் உள்ளது?'' ராமசாமி சொன்னார்.

''சொல்லுங்கள், என்ன வழி?'' மேனோன் கேட்டார்.

''இந்திராபாயைத் தேடியலையும் ஒரே ஒரு நபர்தான் இந்தப் பூமியில் இருக்கிறார். அவரையும் தீர்த்துக்கட்டிவிட்டால், அதன் பிறகு நாம் யாருக்கும் பயப்படத் தேவையில்லை!''

ராமசாமியின் திட்டம் எல்லாருக்கும் பிடித்துப் போனது. அதற்காக இன்னும் ஒருமுறை மோதிப் பார்ப்பதென்று அவர்கள் தீர்மானித்தனர். எனவே, இந்தத் தடவை தோல்வி யடையாதிருப்பதற்கான முன்னெச்சரிக்கைகளையும் கவனமாக மேற்கொண்டனர்.

''சென்ற முறை நாம் ஏற்பாடு செய்தாற் போல் இந்தத் தடவையும் ஒரு விபத்து என்கிற பேராலேயே இதைச் செய்தால் என்ன?'' மேனோன் கேட்டார்.

''அதைவிடச் சிறந்த மற்றொரு வழியை நான் சொல்கிறேன். முதலில் அவரை நமது ஹோட்டலுக்கு வரவழைப்போம். அதற்குப் பிறகு நடக்க வேண்டியதை நான் பார்த்துக் கொள் கிறேன்!'' ராமசாமி கூறினார்.

மற்ற இருவரும் இந்த ஏற்பாட்டுக்கு ஒப்புக் கொண்டனர்.

மறுநாள் மாலை நேரத்தில் ஜகதீஷும் கங்காதரன் நம்பூதிரியும் குவார்ட்டர்ஸிலுள்ள ஜகதீஷின் வீட்டில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

''தேவதத்தன் ஒரு கோயிலுக்குள் ஒளிந்திருக்கிறார். அவரது லட்சியம் இந்திராபாயைத் தனக்கு அடிமையாக்குவது. அதற்குத் தேவையான சக்திகள் எல்லாம் அவர் கைவசம் உள்ளன. மந்திர

வித்தைகளை ஏராளமாகக் கற்று வைத்திருக்கிற இந்திராபாய் அவருக்குக் கீழ்ப்படிந்துவிட்டால், அதன் பிறகு நம்மால் இந்திராபாயை ஒருபோதும் காப்பாற்ற முடியாமல் போய் விடும்!'' நம்பூதிரி ஆழ்ந்த கவலையுடன் கூறினார்.

''அதற்கு பதிலாக இந்திராபாய் தனது சக்தியை மீட்டுக் கொள்ள நாம் உதவி செய்தால், அதன் பிறகு இந்திராபாய் நமக்கு உதவி செய்யமாட்டாரா என்ன?'' ஜகதீஷ் கேட்டார்.

''ஒருவேளை அப்படிப்பட்ட சூழ்நிலை இல்லாமல் போகலாம். சில குறிப்பிட்ட மந்திரங்களுக்கு அப்படியும் சில சக்திகள் உள்ளன.''

''அப்படியானால் வேறு என்னதான் செய்வது?''

''நான் அந்த தேவதத்தனை கண்டுபிடிக்க முயற்சி செய்யட்டுமா?'' நம்பூதிரி கேட்டார்.

''உங்கள் விருப்பப்படியே செய்யுங்கள். நானும் உங்களுக்குத் துணையாக வரட்டுமா?'' ஜகதீஷ் கேட்டார்.

''வேண்டியதில்லை. நான் பார்த்துக் கொள்கிறேன்.''

கங்காதரன் நம்பூதிரி ஜகதீஷிடமிருந்து விடைபெற்றுப் புறப்பட்டார்.

கடிகாரத்தில் பத்து முறை மணியடித்தது. ஜகதீஷ் தனது படுக்கையறைக்குள் நுழைந்தார்.

அப்போது -

தொலைபேசி மணியடித்தது.

ஜகதீஷ் வெளியே வந்து ரிசீவரை எடுத்தார்.

''ஹலோ உங்களுக்கு யார் வேண்டும்?'' ஜகதீஷ் கேட்டார்.

''சார் நான்தான், ஹோட்டல் பேலஸில் பணிபுரியும் வெயிட்டர் பேசுகிறேன். நீங்கள் சொன்னபடியே நான் அவர்களைக் கண்காணிக்கிறேன். இப்போது அவர்களுடன் ஒரு பெண்மணியும் இருக்கிறார்.''

''உண்மையாகவா? சரி இதோ நான் வருகிறேன்!'' ரிசீவரை வைத்தார் ஜகதீஷ்.

அம்மாவிடம் கதவைத் தாழிட்டுக் கொள்ளும்படி கூறிவிட்டு ஜகதீஷ் மோட்டார் சைக்கிளில் ஏறிப் பறந்தார்.

ஹோட்டல் பேலஸின் பார்க்கிங் லாட்டில் வண்டியை நிறுத்திய பிறகு விசாரணை கௌண்டரை நெருங்கினார் ஜகதீஷ்.

''இங்கிருந்து எனக்கு போன் செய்த நபர் யாரென்று உங்களால் சொல்ல முடியுமா?'' ஜகதீஷ் கேட்டார்.

''ஒரு வெயிட்டர்தான் பேசினார். நீங்கள் வந்தால் உடனடியாக ரூம் நம்பர் இருநூற்று மூன்றுக்கு வரச் சொன்னார்...'' வரவேற்பாளரிடமிருந்து பதில் கிடைத்தது.

ஜகதீஷ் நேரத்தை வீணாக்க விரும்பாதவராக மாடிப் படிகளில் தாவியேறினார். குறிப்பிட்ட அந்த அறையின் முன்பாக வந்து நின்றார்.

கதவைத் தட்டினார்.

திறந்து கொண்டது கதவு.

இம்முறை ஜகதீஷை வியப்புக்கு உள்ளாக்கும் காட்சியைக் கண்டார் அறைக்குள்!

''நான் திரும்பவும் வந்திருக்கிறேன்!'' - புன்னகை புரிந்தபடி ஜகதீஷின் முன்னால் நின்றிருந்தாள் இந்திராபாய்!

இந்திராபாய்! - ஜகதீஷ் வியப்புடன் அவளையே பார்த்தார்.

''உட்காருங்கள் ஜகதீஷ்!'' அவள் வரவேற்றாள். ஜகதீஷ் அறைக்குள் நுழைந்தவுடன் வெயிட்டர் அங்கிருந்து வெளி யேறினார்.

ஜகதீஷ் உட்கார்ந்திருந்தார்.

அப்போதும் சந்தேகம் தீராதவராக அவர் இந்திரா பாயையே பார்த்தார். அன்று ரெஸ்ட் ஹவுஸில் தான் சந்தித்த ரங்கம்மாளின் உருவம் அல்ல இது. தன் முன்பாக நிற்பது உண்மையான இந்திராபாய்தான் என்று ஜகதீஷுக்குத் தோன்றியது.

''எதற்காக என்னை சந்திக்க விரும்பினீர்கள்?'' இந்திராபாய் கேட்டாள்.

இந்தக் கேள்வி ஜகதீஷின் நெற்றியைச் சுளிக்கச் செய்தது. தன்னை எப்படியாவது கண்டுபிடிக்க வேண்டும் என்று விரும்பியவள் இந்திராபாய். அப்படியிருக்க தன்னை நோக்கி இந்தக் கேள்வியை இந்திராபாய் கேட்பது எதற்காக என்பது அவருக்குப் புரியவில்லை. இதில் ஏதோ உட்பொருள் இருப்பதாக அவருக்குத் தோன்றியது.

''உட்கார்ந்திருங்கள், நான் இதோ வந்துவிடுகிறேன்...'' என்றவள் பாத்ரூமை நோக்கி நடந்தாள்.

ஜகதீஷ் அவள் நடந்து போவதையே பார்த்தார். உள்ளே நுழைந்து அவள் கதவை மூடிக் கொண்டதும் ஜகதீஷ் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தார்.

சற்று நேரத்திற்குப் பிறகு அந்த அறையிலிருந்து இந்திரா பாய்க்குப் பதில் வெளியே வந்தது ஓர் ஆண் உருவம்.

முப்பத்தைந்து வயது மதிக்கலாம். தோள்பட்டை வரை தலைமுடி நீண்டு வளர்ந்திருந்தது. ஏதோ சதி நடந்திருக்கிறது என்பதை ஜகதீஷ் ஒரு கணத்திற்குள் உணர்ந்தார்.

''யார் நீங்கள்?'' ஜகதீஷ் கேட்டார்.

''உண்மையைச் சொல்லட்டுமா? என்னைத்தான் நீங்கள் தேடுகிறீர்கள். பிரஸ்னம் மற்றும் மை போட்டுப் பார்த்து என்னைத் தேடுவது எனக்குத் தெரியும். என் பெயர் தேவதத்தன்.''

'தேவதத்தன்' என்ற பெயரைக் கேள்விப்பட்டதுண்டு. இதுவரை நேரில் பார்த்ததில்லை என்றாலும் பயங்கரமான ஆசாமி என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த ஆசாமியின் கைவசம் இந்திராபாயை அழித்து விடக்கூடிய ஏதோ ஒரு சக்தி இருப்பதும் ஜகதீஷுக்குத் தெரியும்.

ஒருவகையில் தேவதத்தனை சந்திக்க நேர்ந்தது நல்லதுதான். தான் அவசரமாகவும் அவசியமாகவும் தேடும் நபர். கண்மூடித் திறப்பதற்குள் வேடம் மாற்றிக் கொள்ள முடிந்த ஒரு மனிதனை

இப்போதுதான் முதல் தடவையாக சந்திக்கிறோம் - மனத்தில் தோன்றிய எதையும் வெளிக் காட்டாமல் அமைதியாக அமர்ந்திருந்தார் ஜகதீஷ்.

''நீங்கள் என்னை எந்த விதத்திலும் பிடிக்க முடியாது. என்னைத் தேடிப்பிடிக்க மாந்திரீகரான கங்காதரன் கோயிலுக்குப் போயிருக்கிறார். அதைத் தெரிந்து கொண்டதால் நான் இங்கு வந்திருக்கிறேன்...'' - தேவதத்தன் சுவரிலிருந்த கொக்கியில் மாட்டப்பட்டிருந்த தோள் பையிலிருந்து சில கஞ்சா இலைகளை வாயில் போட்டு மெல்லத் தொடங்கினார்.

ஜகதீஷ் யோசனையில் ஆழ்ந்தார்.

'தனக்கு முன்னால் அமர்ந்திருப்பவர் ஒரு மந்திரவாதி. இந்த உடம்பை நமது கைத்துப்பாக்கியோ, கை பலமோ பாதிக்கப் போவதில்லை. எனவே, புத்திசாலித்தனமாகச் செயல்படுவது நல்லது. அன்று கங்காதரன் நம்பூதிரி அஞ்சலியிடம் மை பார்க்க வைத்தபோது சிவப்பு நிறத்தைப் பற்றிக் கூறியதைக் கேட்டிருந்தார். அந்தச் சிவப்பு நிற ஒளி மறைந்து போனது கோயிலிலிருந்துதான் என்பதும் புரிந்தது. அப்படியானால், அந்தச் சிவப்புப் பொருள் தேவதத்தனிடம் இருக்கக் கூடும் என்று ஜகதீஷ் ஒரு முடிவுக்கு வந்தார். அதைக் கைப்பற்றினால் தேவதத்தனின் சக்தியைக் குறைக்க முடியும் என்று ஜகதீஷ் திட்டமிட்டார்.

தேவதத்தன் அந்தச் சிவப்புப் பொருளை எங்கே வைத்திருப்பார்?

''மிகவும் மோசமான இந்த ராமசாமியின் கூட்டத்தாருடன் தேவதத்தன் இந்த அளவு நெருக்கமாக இருக்கக் காரணம் என்ன? அதை நான் தெரிந்து கொள்ளலாமா?'' ஜகதீஷ் கேட்டார்.

தேவதத்தன் புன்னகை புரிந்தார்.

''அதற்கு எந்தவிதமான காரணமும் கிடையாது. அதே சமயம் மற்றோர் உண்மையை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். இந்திராபாய் மீது எனக்குப் பகைமை உள்ளது.''

''எதனால் பகைமை?''

''நூற்றாண்டுகளைக் கடந்து உயிர் வாழும் வல்லமையுள்ள மந்திரங்களை இந்திராபாய் கற்று வைத்திருக்கிறாள். அதை நான் கைப்பற்ற வேண்டும். அந்தப் போட்டியில் எழுந்த பகைமைதான் இது!''

ஜகதீஷுக்கு, தேவதத்தன் பேசிய வார்த்தைகளின் பொருள் புரியவில்லை.

''அதற்கு இந்திராபாய் எப்படி ஒப்புக் கொள்வார்?''

''உண்மைதான். ஆனால், இப்போதைய அவரது ஜாதக நிலையில் கிரகங்களின் நிலை நல்லதாக இல்லை. எனவே, ஒப்புக் கொள்வதைத் தவிர அவளுக்கு வேறு வழி கிடையாது!''

''ஓகோ, அப்படியொரு சிக்கல் உள்ளதா?'' என்று கேட்ட ஜகதீஷ் தேவதத்தனைப் பார்த்தார்.

''இவ்வளவு வெளிப்படையாக உண்மை பேசிய உங்களை எனக்கு மிகவும் பிடித்துவிட்டது. சந்தோஷமான இந்த சந்திப்பை என்னுடன் பங்கிட நீங்கள் விரும்புகிறீர்களா?'' ஜகதீஷ் கேட்டார்.

''எப்படிப் பங்கிட வேண்டும்?''

''கொஞ்சம் விஸ்கி சாப்பிட்டுத்தான். வேறு என்ன செய்ய முடியும்?''

''ஓ... அதற்கென்ன கொண்டாடி விட்டால் போகிறது.''

ஜகதீஷ் ஹோட்டல் பேரரை அழைத்து விஸ்கி எடுத்து வருமாறு கூறினார்.

கிளாஸ்களில் ஊற்றி இருவரும் குடிக்கத் தொடங்கினர். தேவதத்தனுக்கு அதிகம் கொடுத்து நினைவிழக்கச் செய்வது ஜகதீஷின் திட்டம். எதிர்பார்த்தபடியே நடந்தது. தேவதத்தன் மயங்கிய நிலையில் கட்டிலில் சரிந்தார்.

ஜகதீஷ் தேவதத்தனின் தோள்பையை எடுத்து அதற்குள் என்னவெல்லாம் இருக்கிறது என்று ஆராயாமல், அப்படியே ஹோட்டல் வராந்தாவுக்கு வந்தார்.

வராந்தா காலியாக இருந்தது. மங்கலான வெளிச்சம் வராந்தாவை நனைத்தது.

ஜகதீஷ் விரைவாகப் படிகளில் இறங்கி கீழே வந்தார்.

மோட்டார்பைக்கில் ஏறி அவசர அவசரமாகப் புறப்பட்டார். குவார்ட்டர்ஸை அடைந்த ஜகதீஷ் பரபரப்பாகத் தனது அறைக்குள் புகுந்து கதவைத் தாழிட்டார்.

உடையை மாற்றிய பிறகு அந்தத் தோள்பையைச் சோதனையிடத் தொடங்கினார்.

பார்வைக்குச் சிறிய ஒரு பை மாதிரி தோற்றமளித்தாலும், அதில் ஏராளமான அறைகள் இருந்தன. ஒன்றில் ஏராளமான தாயத்துக்கள். மற்றொன்றில் சிவப்பு நிறப் பட்டுத்துணி. அந்தப் பட்டுத்துணியைக் கையால் தொட்டபோதே ஜகதீஷுக்கு ஒருவிதச் சிலிர்ப்பு தோன்றியது. உடல் முழுவதும் புல்லரித்தது. அதற்குள் என்ன இருக்கிறது என்று அறிந்து கொள்ளும் வேட்கை ஜகதீஷை உந்தியது.

உடனே அந்தப் பட்டுத்துணியின் கயிற்றுச் சுருளை அவிழ்த்து, துணியைப் பிரித்துப் பையை உள்ளங்கையில் கவிழ்த்தார் கையில் வந்து விழுந்தது.

வியப்புக்குரிய ஒரு சிவப்பு நிற வைரம்!

அது கையில் விழுந்த உடனே அந்த அறை அதன் ஜொலிப்பில் பளபளத்தது. ஜகதீஷ் வியப்பில் வாயடைத்துப் போனார்.

இதை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்று ஜகதீஷ் தடுமாறியபோது, ஜகதீஷின் முன்புறமிருந்த கண்ணாடியில் ஏதோ ஓர் அசைவு தெரிந்தது. சட்டென்று ஜகதீஷ் தலையை உயர்த்திப் பார்த்தார். இந்திராபாயின் உருவம்.

ஒருவேளை இதுவும் தேவதத்தனாக இருக்கக்கூடுமோ என்று தோன்றியது. அதனால் ஜகதீஷின் பார்வையில் குழப்பம் தெரிந்தது.

''ஜகதீஷ் இனிமேல் நீங்கள் பயப்பட வேண்டியதில்லை. அந்தச் சிவப்புக் கல்லைப் பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள்!'' இந்திராபாயின் குரல்தான் அது. சந்தேகமே இல்லை!

தேவதத்தனும் இதே போல்தானே தோற்றமளித்தார் ஒருவேளை -

''சந்தேகமே வேண்டாம் ஜகதீஷ்... நான் உண்மையான இந்திராபாய்தான். தற்சமயம் எந்த ஒரு வடிவமும் இல்லாதவள். எங்காவது பிரதிபலிக்க மட்டுமே என்னால் முடியும்.''

''நான் என்ன செய்ய வேண்டும?''

''சற்றுக் கடினமான காரியம். அது உங்களால் முடியுமா என்றுதான் யோசிக்கிறேன்.''

''பரவாயில்லை சொல்லுங்கள்!''

''முதலில் உங்கள் கைவசமுள்ள கல்லை, குகைக் கோயிலில் உள்ள சிலையின் கிரீடத்தில், அதன் பழைய இடத்தில் பொருத்த வேண்டும். அத்துடன் என்னுடைய துர்த்தசை நீங்கும். அப்படிச் செய்தால் நானும் பழையபடி சக்தி பெற்று விடுவேன். என் துர்த்தசை இன்னும் சிலமணி நேரத்தில் மாறும்.''

''குகைக் கோயில் எங்கே உள்ளது?''

''கங்காதரன் நம்பூதிரிக்கு நன்றாகத் தெரியும். ஒருவேளை அவருடன் தொடர்பு கொள்ள முடியவில்லையென்றால், நான் வழக்கமாகப் பயன்படுத்தும் சாரட் பங்களாவின் பின்புறம் உள்ளது. குதிரையை வண்டியில் பூட்டி நீங்கள் ஏறிக் கொண்டாலே குதிரை உங்களைக் கோயிலுக்குக் கொண்டு சென்று சேர்க்கும். ஆனால், குகைக் கோயிலை நீங்கள் கண்டுபிடித்து ரத்தினக் கல்லைப் பொருத்துவது வரை உங்களை எதிரிகள் அடையாளம் தெரிந்து கொள்ளாமல் இருக்க வேண்டும். எச்சரிக்கை தேவை.''

ஜகதீஷ் ஒப்புக் கொண்டார்.

அதனால் ஜகதீஷுக்கு அந்த உருவம் இந்திராபாய்தான் என்பதில் சந்தேகம் ஏற்படவில்லை.

ஜகதீஷ் ரத்தினக் கல்லைப் பழையபடியே பட்டுத் துணியில் வைத்துக் கட்டி, பாண்ட் பாக்கெட்டில் பத்திரப்படுத்தினார்.

மணி பன்னிரண்டாகியிருந்தது.

வெளியே வந்து மோட்டார் பைக்கை ஸ்டார்ட் செய்தார். ஹோட்டல் பேலஸை நோக்கிப் புறப்பட்டார்.

பைக்கை சற்றுத் தொலைவிலேயே நிறுத்தி வைத்து விட்டு, கேட்டை கடந்து ஹோட்டல் காம்பவுண்டிற்குள் நுழைந்தார்.

சுலபமாகப் பின்புறத்தை அடைந்தார்.

குதிரையும் வண்டியும் அருகருகே இருந்தன. சுற்றுமுற்றும் பார்த்தார்.

மனித நடமாட்டம் பின்புறத்தில் சுத்தமாக இல்லாமலிருந்தது.

வெள்ளைக்குதிரை, யாரையோ எதிர்பார்த்து ஆவலுடன் காத்திருந்தது.

ஜகதீஷ் குதிரையிடம் போனார். குதிரையை வண்டியில் பூட்டினார். மெதுவாகக் குதிரையை நடக்கச் செய்து கேட்டை நெருங்கினார்.

கேட்டைத்தாண்டியதும் ஜகதீஷ் குதிரை வண்டியின் மீது தாவியேறினார்.

எங்கிருந்தோ மூச்சிரைக்க, பரபரப்புடன் ஓடிவந்த செக்யூரிட்டி இந்தக் காட்சியைக் கண்டான்.

இடுப்பிலிருந்த துப்பாக்கியை எடுத்துக் குதிரை வண்டியில் அமர்ந்த ஜகதீஷைக் குறிபார்த்துச் சுடத் தொடங்கினான்.

செக்யூரிட்டி கார்டின் துப்பாக்கியிலிருந்து புறப்பட்ட தோட்டாக்கள் சாரட்டின் ஒரு புறத்தில் வந்து பாய்ந்து, அந்தப் பகுதியிலிருந்த மரத்தைச் சிதைத்தது. ஜகதீஷ் அதை கவனித்

தாலும் பொருட்படுத்தாதவராகக் குதிரையின் கடிவாளத்தை விசையுடன் சுண்டினார்.

புராணக் கதைகளில் இடம் பெற்றுள்ள காட்சி மாதிரி குதிரை பாய்ந்தோடத் தொடங்கியது. வழியில் குறுக்கிட்ட திருப்பங் களில் கூட ஜகதீஷ் குதிரையைக் கட்டுப்படுத்த வேண்டியிருக்க வில்லை. குதிரை மிகவும் பழக்கப்பட்டது போல் தானாகவே ஓடியது.

ஏறத்தாழ பதினைந்து கிலோ மீட்டர் தூரம் வந்த பிறகு குதிரை நின்றது. அருகில் ஒரு மண்டபம் தெரிந்தது.

ஜகதீஷ் வண்டியிலிருந்து இறங்கினார். அந்த மண்டபத்தை ஒட்டி ஆலமரம் ஒன்று பிரமாண்டமாக வளர்ந்திருந்தது. அந்த மரத்தில் படர்ந்து பரவியிருந்த இலைப் பரப்பின் உட்பகுதியில் இருந்த மண்டபமும், மரத்தின் அடிப்பகுதியும் இருளில் ஒளிந்திருப்பது போல் தோன்றின.

எனவே, அந்த இருளில் தன்னையும் குதிரை வண்டியையும் வேறு எவரும் சட்டென்று கண்டுபிடிக்க முடியாது என்று தோன்றியது.

குகைக் கோயிலைப் பற்றி ஜகதீஷுக்குத் தெளிவாக எதுவும் தெரியாது. எப்படி இருந்தாலும் இந்த மண்டபத்தை ஒட்டிய மலையடிவாரப் பகுதியில்தான் அந்தக் கோயில் இருக்க வேண்டும் என்று உறுதியாகத் தெரிந்தது.

அதே நேரத்தில் மேற்குப் புறத்திலிருந்து ஏதோ ஒரு வண்டி வரும் வெளிச்சம் தெரிந்தது. ஒரேயொரு விளக்கு மட்டும் தெரிந்ததால் அது மோட்டார் பைக்காக இருக்க வேண்டும் என்று ஜகதீஷ் யூகித்தார்.

'இந்த நேரத்தில் இந்த இடத்திற்கு வருவது யாராக இருக்கும்?' ஜகதீஷ் யோசித்தபடியே பார்த்தபோது அந்த பைக் ஆலமரத்தடியை நெருங்கி நின்றது.

பைக் சற்றுத் தூரத்தில் வரும்போதே விளக்கு வெளிச்சத்தால், வண்டியை ஓட்டி வருபவர் தன்னைப் பார்த்துவிடக் கூடும் என்று

எண்ணிய ஜகதீஷ் சட்டென்று மரத்தின் பின்னால் மறைந்து கொண்டார்.

பைக்கிலிருந்து இரண்டு பேர் இறங்கினர். பின்புறம் அமர்ந்து வந்தவன் ஹோட்டல் செக்யூரிட்டி என்பது தெரிந்தது. வண்டியை ஓட்டி வந்தவன் ஓர் அடியாள் போல் தெரிந்தான்.

இருவரும் சாரட்டை நெருங்கி வந்து சுற்றுமுற்றும் பார்த்தனர்.

''ஆள் இங்தான் இருக்கிறான்...'' பைக்கை ஓட்டி வந்தவன் கூறினான்.

''நாம் ஒரு காரியம் செய்தால் என்ன? இந்தக் குதிரை இருந்ததால்தானே அவன் இங்கு வந்து சேர்ந்தான். அதை இல்லாமல் செய்து விட்டால்...?'' - கேட்டபடியே குதிரையைத் துப்பாக்கியால் குறி வைக்கத் தொடங்கினான்.

அவனது நோக்கம் ஜகதீஷுக்குப் புரிந்தது. ஒரு கணம் திடுக்கிட்ட ஜகதீஷ், இருளினூடாக வேகமாக ஆனால், சத்தம் எழுப்பாமல் நடந்து அவனை நெருங்கினார்.

அவன் குதிரைக்கு நேராகக் குறிவைத்து, துப்பாக்கியின் ஹேண்டிலை அழுத்தத் தொடங்கியிருந்தான். ஜகதீஷ் பின்புறத் திலிருந்து அவனைக் காலால் ஓங்கி மிதித்தார்.

அவன் துப்பாக்கியுடன் கவிழ்ந்து விழுந்தான். அதே சமயம் துப்பாக்கியிலிருந்து தோட்டாவும் பாய்ந்தது.

''யார் அங்கே இருப்பது?'' என்றபடி பைக்கை ஓட்டி வந்தவனும் வந்து சேர்ந்தான்.

''புதிதாக வந்திருக்கிற விருந்தாளிதான். பயப்படாதே!'' என்ற ஜகதீஷ் போலீஸ் முறையில் பின்புறத்திலிருந்து அவன் கழுத்தைப் பிடித்துத் திருப்பி அடிவயிற்றில் ஓங்கிக் குத்தினார்.

அவனும் சாமானியமானவனல்ல.

அவன் ஜகதீஷை முன்புறமாகப் புரட்டிப் போட்டான். மல்லாந்து விழுந்த ஜகதீஷ் எழுந்திருப்பதற்குள் செக்யூரிட்டி துப்பாக்கியை ஜகதீஷின் மார்பில் வைத்து அழுத்தினான்.

ஒருகணம் யோசித்த ஜகதீஷ் கனமான பூட்சு அணிந்த தன் வலது காலால் அவன் இரு தொடைகளுக்கும் நடுவில் ஓங்கி மிதித்தார்.

''ஐயோ!'' - என்று அலறியபடி அவன் தரையில் சுருண்டு விழுந்தான். உடனே மற்றவன் ஜகதீஷின் கால்களைப் பிடித்து உயர்த்தி ஒருமுறை சுழற்றினான். ஜகதீஷ் கண்ணிமைப்பதற்குள் எழுந்து அவன் கால்களைத் தன் பிடிக்குள் வைத்துச் சுழற்றினார். ஜகதீஷ் சற்று விசையாகச் சுழற்றவே அவன் தலை ஏதோ கனமான விழுதின் மீது பட்டது. 'ஐயோ' என்றவனாக மயங்கி விழுந்தான். செக்யூரிட்டி எழுந்திருக்க முடியாமல் வலியில் ஏற்கெனவே துடித்துக் கொண்டிருந்தான்.

ஜகதீஷ் சற்றும் தாமதிக்காமல் இருவரையும் இழுத்துக் குதிரை வண்டியின் பின்புறம் போட்டார். செக்யூரிட்டியின் கையிலிருந்த துப்பாக்கியை எடுத்துப் பார்த்தார். தோட்டாக்கள் தீர்ந்தன.

குதிரை வண்டி மலையடிவாரத்தை நெருங்கியதும், ஏதோ ஓர் உள்ளுணர்வால்தான் குதிரை அங்கே நின்றிருக்க வேண்டும். அல்லது இந்திராபாயின் சக்தி அதை உணர்ந்து அங்கேயே தடுத்து நிறுத்தி இருக்கலாம் என்று ஜகதீஷ் நினைத்தார்.

மலைச்சரிவு நெருங்கியது. ஆட்கள் அதிகமாக நடமாடாத பாதையொன்றில் குதிரை சென்று கொண்டிருந்தது. ஒரு காலத்தில் அந்தப் பாதை முக்கியமான ஒன்றாக இருந்திருக்கும் என்பதற்கு அடையாளமாகப் பாதையின் இருபுறமும் பன்னிரண்டடி அகலத்தில் வரிசையாக மரங்கள் வளர்ந்திருந்தன.

மலையடிவாரத்தில் குறிப்பிட்ட குதிரைமுகப் பாறையின் அருகே இருந்த மரத்தடியில் சாரட் நின்றது.

முழுவதுமாகப் பட்டை உரிக்கப்பட்ட மரம் ஒன்று அங்கு நின்றிருந்தது. அதன் கிளைகளில் கொடிகள் மாதிரி நிறைய ஏதேதோ அசைந்தன. எந்த நேரத்திலும் அவை தரையில் விழலாம் என்று தோன்றியது. சந்தேகப்பட்ட ஜகதீஷ் பாக்கெட்டிலிருந்து டார்ச்லைட்டை எடுத்து மேற்புறமாக ஒளியைப் பாய்ச்சினார்.

எல்லாம் பாம்புகள்!

ஒன்று இரண்டல்ல; ஏராளமான பாம்புகள்! ஒவ்வொன்றும் உல்லாசமாக ஊஞ்சல் ஆடிக் கொண்டிருந்தன.

நிலைமை மிகவும் ஆபத்தானது என்று உணர்ந்த ஜகதீஷ் பின்வாங்கவும் முடியாது என்பதை அறிந்தார். என்ன செய்வது என்று ஒரு கணம் யோசித்த ஜகதீஷுக்கு சட்டென்று ஒரு யோசனை தோன்றியது.

'பாக்கெட்டில் உள்ள ரத்தினத்தை வெளியே எடுப்போம். அதற்கு ஏதாவது சக்தி இருக்காதா என்ன?'

அவசர அவசரமாக அதைப் பிரித்து ரத்தினத்தை வெளியே எடுத்தார்.

அடுத்த வினாடி அந்தப் பகுதி முழுவதும் கண்ணைக் கூசச் செய்யும் ஒளி படர்ந்தது. அந்த ஒளியில் பாம்புகள் தங்கள் தலையைச் சட்டென்று உயர்த்தி மரக் கிளையுடன் மரக்கிளையாக பதிந்து படுத்துக் கொண்டன.

குதிரையை ஓர் இடத்தில் பத்திரமாகக் கட்டி வைத்த ஜகதீஷ் குதிரைமுகப் பாறையை நெருங்கினார். இப்போது டார்ச் லைட்டின் உதவியின்றியே வழி தெளிவாகத் தெரிந்தது. சிறிய இடைவெளி வழியாகக் குகைக்குள் நுழைந்தார்.

வெளிச்சத்தின் உதவியால் முன்னேறிய ஜகதீஷ் விரைவிலேயே அந்தச் சிலையைக் கண்டார்.

ஒரு கணம் வியந்தார்.

அசப்பில் அப்படியே இந்திராபாயின் தோற்றமுள்ள சிலை. ஜகதீஷ் அதன் கிரீடத்தைப் பார்த்தார். அங்கிருந்து ரத்தினத்தைப் பெயர்த்து எடுத்த அடையாளம் தெரிந்தது. மெதுவாகச் சிலையை நெருங்கிய ஜகதீஷ் கிரீடத்தில் ரத்தினத்தைப் பழையபடி பொருத்தினார்.

அந்த இடமே சற்று நேரத்தில் அதிக ஒளி பெற்றது போலானது.

''நீங்கள் ஒரு விஷயத்தைதப் புரிந்து கொள்ள வேண்டும். தேவதத்தன் இன்னும் உயிருடன்தான் இருக்கிறார்!'' - யாரோ ஜகதீஷிடம் கூறியது போல் தெரிந்தது.

## 35

தன்னிடமிருந்து விலைமதிப்பற்ற ரத்தினம் திருடு போய் விட்டது என்பதை தேவதத்தன் தெளிவடைந்ததும் உணர்ந்தார்.

உடனே ராசிப் பலகையை எடுத்து பிரஸ்னம் பார்த்தார். ரத்தினம் குகைக் கோயிலை அடைந்து விட்டது தெரிந்தது.

'அப்படியானால் அதை மீட்டு எடுத்த பிறகே வேறு வேலை!' - என்று நினைத்தவராகப் புறப்பட்டார்.

அந்த ரத்தினம் மட்டும் தன் கையிலிருந்து நழுவாவிட்டால் இந்திராபாயை அடிமையாக்கி, தனது சொற்படி நடக்க வைப்பது சுலபம். எனவே, அதை எப்படியும் திரும்பப் பெற்றே தீருவது என்கிற வெறி அவருள் எழுந்தது.

குகையிலிருந்து பேச்சுக் குரல் கேட்கவே, ஜகதீஷ் மேலும்; ஏதாவது ஆலோசனை கிடைக்கலாம் என்பதற்காகக் காத்திருந்தார்.

தேவதத்தன் தனது மாந்திரீக சக்தியால் விரைவில் அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார்.

குகைக்கு வெளியே குதிரை வண்டி இருப்பதைப் பார்த்தார். அப்படியானால் ரத்தினத்தை எடுத்து வந்தவன் தற்சமயம் கோயிலுக்குள் இருக்க வேண்டும் என்று தோன்றியது.

அதே நேரத்தில் சாரட்டிலிருந்து முனகல் குரல் கேட்கவே எட்டிப் பார்த்தார்.

''யாரது?'' என்ற தேவதத்தனின் மிரட்டலுக்கு இருவரும் பதிலளித்தனர்.

தேவதத்தன் தன் கைவசமிருந்த மாந்திரீகப் பொடியை அவர்களது காயங்களின் மீது தடவினார். அத்துடன் அவர்களது முனகல் ஓய்ந்தது. அவர்கள் கதையை விவரித்தனர்.

''ஓகோ... உள்ளே இருக்கிறானா? அது போதும், மற்ற வற்றை நான் பார்த்துக் கொள்கிறேன்!'' என்ற தேவதத்தன் பாறையிடுக்கில் புகுந்தார்.

**சி**லையின் கிரீடத்தில் ரத்தினத்தை வைத்தவுடனேயே குகையின் உட்புறம் வெளிச்சத்தால் நிறைந்தது.

அந்த வெளிச்சத்தில் குகைக்குள் இருந்த பொருள்கள் தெளிவாகத் தெரிந்தன. பலப்பல அளவுகளில் பல்வேறு விதமான சிலைகள் குகையின் சுவர்ப்பகுதிகளில் சாய்த்து வைக்கப்பட் டிருந்தன.

ஜகதீஷ் எல்லாவற்றையும் ஒரு தடவை பார்த்தார். அதில் மிகவும் அழகான ஒரு பெண் சிலை அவரைக் கவர்ந்தது. அந்தச் சிலையும் பெரிய சிலையின் அதே வடிவத்தில்தான் இருந்தது.

ஜகதீஷ் அந்தச் சிறிய சிலையை எடுத்துத் தனது தோள்பையில் போட்டுக் கொண்டார். குகைக்குள் தனது வேலை முடிந்து விட்டது. இனிப் புறப்பட வேண்டியதுதான் என்று நினைத்துக் கிளம்பியபோது சட்டென்று காலடியோசை கேட்டது. ஜகதீஷ் துருத்திக் கொண்டிருந்த பாறைப் பகுதிக்குள் ஒதுங்கி, ஒளிந்து கொண்டார்.

தேவதத்தன்! ரத்தினக் கல்லை எடுத்துப் போவதற்காக தேவதத்தன் வந்திருக்கிறார் என்பது ஜகதீஷுக்குப் புரிந்தது.

ஜகதீஷ் சுற்றுமுற்றும் பார்த்தார். பெரிய சிலையின் கையிலிருந்த சூலம் நழுவுவதைப் போல் ஜகதீஷை நோக்கி வந்தது. ஜகதீஷ் அதைப் பாய்ந்து பிடித்தார்.

சிலையை நெருங்கிய தேவதத்தன் அதன் கிரீடத்திலிருந்து ரத்தினக் கல்லை எடுக்க முயன்றபோது ஜகதீஷ் சூலத்தை, தேவதத்தனின் மார்பைக் குறி வைத்து முதுகுப்புறமாக எறிந்தார்.

சூலம் சரியாகப் பாய்ந்தது. நெஞ்சை நோக்கி வைத்த குறி சற்றுக் கீழிறங்கி வயிற்றுப் பகுதியில் முன்புறமாக வெளியே வந்தது. தேவதத்தன் சுருண்டு, அலறியபடி விழுந்தார். அந்த உடல் சற்று நேரம் துடிதுடித்துவிட்டுப் பின்னர் அசைவற்றுப் போனது.

ஜகதீஷ் சற்று நேரம் தேவதத்தன் உடலை உற்றுப் பார்த்த பிறகு அங்கிருந்து புறப்பட்டார்.

சாரட்டை நெருங்கிய ஜகதீஷ், அதற்குள் கிடந்த இருவரையும் கொண்டுபோய் குகைக்குள் போட்டுவிட்டு குதிரை வண்டியில் ஏறிப் புறப்பட்டார்.

குதிரை விரைந்து பாயத் தொடங்கியது.

இந்திராபாயின் பங்களாவை நோக்கி குதிரை திரும்பிய போது, அதன் கடிவாளத்தைப் பிடித்து திசை மாற்றினார் ஜகதீஷ். குதிரையும் அதற்கு இணங்கியது போல் ஜகதீஷின் வீட்டை நோக்கிச் சென்றது.

தன்னுடைய படுக்கை அறைக்கு வந்த ஜகதீஷ் பையிலிருந்த சிறிய சிலையை எடுத்து மேஜை மேல் வைத்தார்.

அது அச்சாக இந்திராபாயின் மற்றொரு சிறுவடிவமாக இருந்தது.

அழகே வடிவெடுத்து வந்தது போல் இருந்த அந்த வடிவத்தையே உற்றுப் பார்த்தார் ஜகதீஷ். சட்டென்று நிலைக்கண்ணாடியில் தெளிவற்ற ஓர் உருவம் தென்பட்டது.

''ஜகதீஷ் இங்கே வாருங்கள்!'' அந்த உருவம் பேசியது.

ஜகதீஷ் கண்ணாடியை நெருங்கினார்.

''இதுவரை நீங்கள் செய்தது சரிதான். நான் அழிந்துவிட்டதாகவே அவர்கள் நம்புவார்கள். ஆனால், நான் இன்னும் என்னுடைய முழுசக்தியையும் திரும்பப் பெறவில்லை. அதற்கு வாரங்கள் சில தேவைப்படும்.''

''நான் எந்த வகையில் உங்களுக்கு உதவ முடியுமென்று சொல்லுங்கள்!'' ஜகதீஷ் கேட்டார்.

''இன்னும் ஒருசில நாட்கள் என்னைப் பொறுத்தவரை சிக்கலானவை. ஒரு நல்ல மாந்திரீகனால் மட்டுமே என்னை இந்தக் கட்டத்திலிருந்து காப்பாற்ற முடியம்!''

''அதற்குத் தகுதியான நபரைச் சொல்லுங்கள். நான் தேவையான ஏற்பாடு செய்கிறேன்.''

''அது சுலபமென்று தோன்றவில்லை. பெரும்பாலான மந்திரவாதிகள் பணத்தாசை கொண்டவர்கள். எனவே, பணத்திற்காக அவர்கள் எதையும் செய்வார்கள். உண்மையான சிரத்தையுடன் முறைப்படி செய்வார்கள் என்றும் எதிர்பார்க்க முடியாது.''

''அதனால்...''

''நீங்கள் ஒரு மாந்திரீகனாவதுதான் ஒரே வழி. நல்ல வழி!''

''ஐயோ... என்னால் அது முடியுமா? நான் ஒரு போலீஸ் அதிகாரியல்லவா?''

''அதனால் என்ன? மூன்று மாத விடுமுறைக்கு விண்ணப்பம் செய்யுங்கள். நான் முதலில் குடியிருந்த பங்களாவை ஒட்டிய பகுதியில், வடக்குப் புறத்தில் என்னுடைய வீடு ஒன்று உள்ளது. அங்கு உங்களுக்குத் தேவையான எல்லா மந்திரச் சுவடிகளும் உள்ளன!''

ஜகதீஷ் யோசித்துப் பார்த்தார். தான் ஒரு சிக்கலில் சிக்கியிருப்பதை உணர்ந்தார். 'இதிலிருந்து விடுபட வேண்டுமானால் ஒன்று, இந்திராபாயை மறந்துவிட வேண்டும். அல்லது அவருக்கு முழுமையாக உதவ வேண்டும்.

ஒதுங்குவது சுலபம்; எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. ஆனால், அதற்கு மனம் ஒப்புக் கொள்ளவில்லை. என்ன செய்யலாம்?' ஜகதீஷ் தடுமாறினார்.

''நீங்கள், உங்கள் விருப்பப்படி ஒரு முடிவுக்கு வாருங்கள்!'' கண்ணாடி உருவம் கூறியது.

தான் இந்திராபாயை சந்தித்த காட்சிகள் ஒவ்வொன்றாக ஜகதீஷுக்கு நினைவு வந்தன.

''எனக்கு உதவக்கூடிய நபராக நான் நம்பும் ஒரே மனிதர் நீங்கள்தான் ஜகதீஷ். எனவே நான் உங்களிடம் இந்தக் கோரிக்கையை முன்வைக்கிறேன்'' இந்திராபாயின் வார்த்தைகள் ஜகதீஷின் மனத்தில் ஆழமாகப் பதிந்தன.

''அப்படியானால் உங்கள் திட்டத்துக்கு நான் சம்மதிக்கிறேன். நீங்கள் சொன்னபடியே செய்கிறேன்!''

கண்ணாடியில் தெரிந்த நிழல் உருவம் மறைந்தது.

உடல்நலம் சரியில்லாததால் சிகிச்சை பெறுவதற்காக மூன்று மாத விடுமுறை வேண்டுமென்று விண்ணப்பித்தார் ஜகதீஷ். தாயிடமும், சகோதரியிடமும் தான் போகும் இடத்தைக் குறித்த உண்மையைக் கூறினாலும், சிகிச்சை பெறுவதற்காக அங்கு செல்வதாகவே கூறினார். அவர்களும் நம்பினர்.

சாதாரணமான ஒரு பயணி போல, வேட்டி - சட்டை, தோள் பை ஆகியவற்றுடன் அங்கிருந்து புறப்பட்டார்.

முதலில் பஸ் பயணம். பிறகு கிராமத்தைச் சேர்ந்த ஒருவரின் மாட்டு வண்டி.

''நீங்கள் எங்கே போக வேண்டும்?'' வண்டிக்காரர் கேட்டார்.

''காஞ்ஞிரங்காட்டு மனைக்குப் போக வேண்டும். அதாவது அவர்களது பரம்பரையான பழைய வீட்டுக்கு.''

வண்டிக்காரன் வியப்புடன் திரும்பிப் பார்த்தான். மேற்குத் திசையிலிருந்து பாய்ந்துவந்த மஞ்சள் நிற வெயிலில் வண்டிக்காரன் முகத்தில் ஏதேதோ உணர்வுகள் தோன்றி மறைவது தெரிந்தது.

''என்ன காரியமாகப் போகிறீர்கள் சார்?''

''குறிப்பாக எந்தக் காரணமும் கிடையாது. அந்த வீட்டை ஒரு தடவை பார்த்துவிட்டு வரவேண்டும். அவ்வளவுதான்.''

''இல்லை ஏதாவது வேலை நிமித்தமாகப் போகிறீர்களோ என்பதால் கேட்டேன்.''

''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை!''

''உங்களுக்கு உறவுக்காரர்கள் இருக்கிறார்கள் இல்லையா?''

''கல்யாணம் ஆகவில்லை. அம்மாவும் ஒரு தங்கையும் இருக்கிறார்கள். ஆமாம்... எதற்காக இதையெல்லாம் விசாரிக்கிறீர்கள்?''

''நீங்கள் குறிப்பிட்ட காஞ்ஞிரங்காட்டு மனை ஒரு காலத்தில் மிகவும் பிரபலமாகவும் செழிப்பாகவும் இருந்த வீடு. ஆனால், இப்போது அங்கு யாரும் இருப்பதாகத் தெரிய வில்லை. வம்சமே பூண்டற்றுப் போய்விட்டதாகத் தோன்றுகிறது.''

''அதற்குப் பக்கத்தில் சாப்பாட்டு வசதிக்குக் கடைகளோ, வீடுகளோ ஏதாவது உண்டா?''

''அங்கு எப்படி சார் கடை, வீடு எல்லாம் இருக்க முடியும்? ஏறத்தாழ நாற்பது ஏக்கருக்கு மேல் பரப்பளவுள்ள இடம் அது. காடு மண்டிக் கிடக்கும். அதன் நடுவில்தான் நீங்கள் குறிப்பிடுகிற வீடு உள்ளது. யாரும் அந்தப் பக்கமே போகமாட்டார்கள். அதைப் பற்றி நினைத்தாலே மற்றவர்களுக்கு பயம்தான்!''

''ஏன் அப்படி?''

''பெரிய மாந்திரீகர்களும், சாத்தான்களும் குடியிருக்கிற இடம் அது. இறந்துபோன மாந்திரீகர்களின் ஆவிகள் பகிரங்க உருவத்துடன் அதற்குள் உலாவுவதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். பகலில்கூட யாரும் அந்தப் பக்கம் போகாதது அதனால்தான்.''

ஜகதீஷ் தர்மசங்கடத்தில் ஆழ்ந்தார். இருப்பினும் அங்கு செல்வது என்று ஜகதீஷ் தீர்மானித்தார்.

கிழக்குத் திசையிலிருந்த மலையின் உச்சியில் மாலை நேரச் சூரியனின் மங்கிய சூரிய வெளிச்சம் தெரிந்தது. விரைவிலேயே இருள் கவியப் போவதை உணர்ந்தார்.

ஓர் ஆலமரத்தடியை நெருங்கிபோது காளை மாடுகள் தானாகவே நின்றுவிட்டன.

"நீங்கள் இறங்கவேண்டிய இடம் இதுதான். இறங்கிக் கொள்ளுங்கள்!" வண்டிக்காரன் கூறினான்.

ஜகதீஷ் வண்டியிலிருந்து இறங்கினார்.

"அதோ தெரிகிறது பாருங்கள். அந்தக் காட்டு வழிதான் நீங்கள் போகவேண்டிய பாதை. நான் வடக்குத் திசையில் போக வேண்டும் வரட்டுமா?" வண்டிக்காரன் எதிரிலிருந்த பாதை யைச் சுட்டிக்காட்டிவிட்டு, அதற்கு எதிர்த்திசையில் வண்டியை ஓட்டிக் கொண்டு போனான்.

மிகவும் குறுகலான ஒரு பாதை. கிழக்குப்புற மலை அடிவாரத்தை ஒட்டியபடி அந்தப் பாதை நீண்டது. காளை மாட்டின் கழுத்து மணியோசை மெதுவாகத் தேய்ந்து தேய்ந்து மறைந்தது.

ஜகதீஷ் தோள் பையில் 'டார்ச் லைட் இருக்கிறதா' என்று ஒரு தடவை சோதித்துப் பார்த்தார். நடக்கத் தொடங்கினார்.

குறுஞ்செடிகளும் புதர்களும் மண்டிக் கிடந்த பாதையைக் கால்களால் தட்டி விலக்கியபடி ஜகதீஷ் நடந்தார். சில இடங்களில் பாறைகள் கிடந்ததால் புல் வளராமலிருந்தது.

நேரம் இருண்டு வந்தது.

எந்தவிதமான அசைவும் தெரியவில்லை.

பறவைகள்கூடக் குரலெழுப்பவில்லை.

அமைதி நிரம்பிய சுற்றுப்புறம். ஒரேயொரு பாதையாக இருந்ததால் வழியைக் குறித்தும் சந்தேகம் எழவில்லை.

சற்று நேரத்திற்குள் நன்றாக இருட்டிவிட்டது. இருபுறமும் வளர்ந்து சீர்செய்யப்படாமலிருந்த மரங்களை விலக்கிக் கொண்டு குகைக்குள் பயணம் செய்வதைப் போல் ஜகதீஷ் நடந்தார். சற்றுத் தொலைவில் ஏதோ ஒரு வெளிச்சம் தெரிந்தது.

வெளிச்சத்தை நோக்கி நடந்தார். அது விளக்கு வெளிச்ச மாகத் தெரியவில்லை. அடிவான வெளிச்சம் அப்படி ஊடுருவித் தெரிந்தது.

நடந்து கொண்டிருந்த ஜகதீஷ் ஓர் ஆலமரத்தை நெருங்கி னார். அதுவரை நடந்துவந்த வழி அத்துடன் முடிவடைந்து விட்டது. மேற்கொண்டு எந்த திசையில் போவது என்று புரியாமல் ஜகதீஷ் அங்கேயே நின்றார்.

வலதுபுறத்தில் புதர்போல் மண்டியிருந்த மரக்கூட்டங் களுக்கு நடுவே ஒரு சுற்றுச்சுவரின் வெளிப்புறம் தெரிந்தது.

டார்ச்லைட்டை எரியவிட்டுக் கவனித்தார். உற்றுப் பார்த்த போது செடிகளுக்கு நடுவே ஒரு படிக்கட்டு தெரிந்தது.

''காஞ்ஞிரங்காட்டுமனை!'' ஜகதீஷ் மந்திரிப்பது போல் முணுமுணுத்தார்.

செடிகளை விலக்கியபடி ஜகதீஷ் உள்ளே நுழைந்தார்.

திறந்து கிடந்த கதவை நெருங்கியவர், அங்கே ஒரு காட்சியைக் கண்டார்.

ஆட்கள் யாரும் வசிக்காத வீடு என்று ஜகதீஷ் நினைத் திருந்த அந்த மனையின் நிலைப்படியருகே ஒரு திரியுடன் நில விளக்கு ஒன்று எரிகிறது.

விளக்கு வெளிச்சத்தில் அந்த வீட்டின் ஒரு சில பகுதிகள் தெரிந்தன.

அந்த வீட்டின் நிலைக்கதவில் பொருத்தப்பட்டிருந்த பித்தளைக்குமிழ்கள் பச்சை நிறத்தில் களிம்பு பிடித்திருப்பினும் அவற்றின் அடையாளங்கள் தெளிவாக தெரிந்தன.

எப்படி இருப்பினும் எரியும் விளக்கைப் பார்த்த ஜகதீஷுக்குச் சற்று ஆறுதலாக இருந்தது. மனம் சற்று லேசானது போல் தெரிந்தது.

டார்ச் லைட்டின் ஸ்விட்சை அழுத்தினார். வீட்டின் வெளி வாசலில் வழியை அடைத்துக் கொண்டு செடிகள் வளர்ந் திருந்தன.

'அப்படியானால் உள்ளே எப்படி விளக்கு எரிகிறது?' எவ்வளவு யோசித்தும் ஜகதீஷுக்கு விடை கிடைக்கவில்லை.

என்ன இருந்தாலும் இவ்வளவு தொலைவு வந்த பிறகு திரும்பிச் செல்வதும் முறையல்ல. இந்திராபாயின் சொற்படியே நடக்க வேண்டியதுதான்! தனக்கு எந்தவிதமான இடையூறும் ஏற்படாமல் இந்திராபாய் கவனித்துக் கொள்வார் என்ற நம்பிக்கையும் அதற்குக் காரணமாக இருந்தது.

செடி கொடிகளைக் கைகளால் விலக்கி, டார்ச் லைட்டைப் பிடித்துக் கொண்டு நடந்தார். எங்கும் ஜீவராசிகள் இருப்பதற்கான சுவடே தெரியவில்லை. வெளிவாசலைக் கறையான்கள் முற்றிலுமாகத் தின்றுவிட்டிருந்தன!

முற்றத்தில் ஓரடி உயரத்திற்குப் புல் முளைத்திருந்தது. காலை வைத்தபோது பட்டின் மீது நடப்பது போலிருந்தது.

வராந்தாவை அடைந்த ஜகதீஷ் சுற்றுமுற்றும் பார்த்தார். நிலவிளக்கின் திரி அணையப் போவது போல் தோன்றவே விரலால் திரியைச் சற்று உயர்த்தினார். திரி முன்னை விடப் பிரகாசத்துடன் எரியத் தொடங்கியது. விளக்கில் அப்போது தான் ஊற்றி வைத்தது போல் எண்ணெய் நிறைந்திருந்தது. இங்கு மனிதர்கள் எவரும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், நிச்சயம் யாராவது இருந்துதானாக வேண்டும்!

விளக்கு எரிவதே அதற்குச் சாட்சி!

வாட்சைப் பார்த்தார். மணி பத்துக்கு மேலாகியிருந்தது. அதுவரை நேரத்தைப் பற்றிய நினைவே எழவில்லை என்பது ஜகதீஷுக்கு வியப்பாக இருந்தது.

'இரவை எப்படிக் கழிப்பது!' என்கிற சிந்தனை ஜகதீஷின் மனத்தில் எழுந்தது. அப்போது அந்த மனையின் உட்புறத்தில் எங்கோ கால்சலங்கை ஒலிக்கும் சன்னமான சத்தம் கேட்டது. வரவர அந்தச் சத்தம் தன்னை நெருங்குவதாகவும் தோன்றியது.

சற்று நேரத்தில் வராந்தாவின் வடக்குப் புறத்திலிருந்து ஒரு குரல் கேட்டது: ''யாரது ஜகதீஷ்தானே வந்திருப்பது?''

''ஆமாம்... நான்தான்...'' ஜகதீஷ் வியப்புடன் பதிலளித்தவராக குரல் வந்த திசையைப் பார்த்தார்.

விளக்கு வெளிச்சம் அந்தப் பகுதிவரை பாயவில்லை. இருப்பினும் வந்திருப்பது வெள்ளை உடை உடுத்துள்ள ஒரு பெண்மணி என்பது மட்டும் புரிந்தது.

அந்த உருவம் அவரை நெருங்கியது.

கம்பீரமான ஒரு பெண்ணுருவம்!

முப்பத்தைந்து வயது மதிக்கலாம்.

மனோரஞ்சிதப் பூவின் மணம் மூக்கைத் துளைத்தது.

அந்தப் பெண்மணி நிலவிளக்கின் இடது புறத்தில் அமர்ந்தாள்.

உட்காரும்போது ஜகதீஷுக்கு முன்னால் ஒரு தாம்பாளத் தட்டை வைத்தாள். வெண்கலச் சொம்பு ஒன்றும் அதில் இருந்தது.

தாம்பாளத்தில் பழுத்த ரஸ்தாளிப் பழச்சீப்பு ஒன்றும், கற்கண்டுத் துண்டுகள் சிலவும், இளநீரிலிருந்து சுரண்டியெடுத்த மிருதுவான தேங்காயும் இருந்தன.

சொம்பில் துளசியிலை போட்ட தண்ணீர் இருந்தது.

ரவிக்கை அணியாமல், சரிகை வேட்டியால் மார்பின் மேற்புறத்திலிருந்து தொங்கிய உடை, முழங்கால் வரை நீண்டிருந்தது.

மிகவும் கவனத்துடன், நளினமாக அமர்ந்தாள். அதாவது ஒரு கையைத் தரையில் ஊன்றி ஒருபுறமாகச் சற்றுச் சரிந்தபடி!

கருமையான தலைமுடி பின்புறம் அடர்த்தியாகத் தெரிந்தது.

நெற்றியில் சந்தனப் பொட்டு.

அழகாக வளைந்த புருவங்கள்.

கம்பீரமான மூக்கு.

வரைந்து வைத்தது போன்ற பளபளப்பான உதடுகள்.

''இதைச் சாப்பிடுங்கள்! வெகு தூரத்திலிருந்து வருகிறீர்கள் இல்லையா?'' அந்தக் குரல் வித்தியாசமாக ஒலித்தது.

ஜகதீஷ் அவற்றைச் சாப்பிட்டார். கடைசியாகத் தண்ணீரைக் குடித்தபோது பயணக் களைப்பு மறைந்து உற்சாகம் தோன்றியது.

''இப்போது உங்களது களைப்பு அகன்றிருக்க வேண் டுமே?'' அந்தப் பெண்மணி கேட்டாள்.

''உண்மைதான்! ஆனால், இங்கு வந்தபோது இப்படிப்பட்ட உபசரிப்பு கிடைக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை!'' ஜகதீஷ் பேசினார்.

''எப்படி இருந்தாலும் நீங்கள் இதுவரை வந்து விட்டீர்களே, சந்தோஷம். ஒருவேளை நீங்கள் பாதி வழியிலேயே திரும்பி விடுவீர்கள் என்று நினைத்தேன்!'' அவள் கூறினாள்.

''இதெல்லாம் அதிசயமாகத் தோன்றுகிறது.''

''வராந்தாவில் யாரோ வந்திருக்கிறார்கள் என்று பல்லி குரல் கொடுத்தபோது, எவ்வளவு சந்தோஷமாக இருந்தது தெரியுமா எனக்கு!'' வெட்கம் அவள் கண்களில் மின்னி மறைவதை ஜகதீஷ் கவனித்தார்.

''இந்திராபாய் எனக்குச் செய்தி அனுப்பியிருந்தார். நீங்கள் வருவீர்கள் என்று... ஆனால், அப்போது எனக்கே அதில் நம்பிக்கை இல்லாமல் இருந்தது...'' காற்றில் மேற்புறமாக உயரும் உடையைக் கீழ்ப்புறமாக அழுத்தி நீவியபடி பேசினாள்.

''நீங்கள் நம்பாததற்குக் காரணம்?'' ஜகதீஷ் கேட்டார்.

''இந்த மனையின் பெயரைக் கேட்டாலே பெரும்பாலான வர்கள் நெற்றியைச் சுளிப்பது வழக்கம். இரண்டாவதாக இந்த வீட்டில் யாரும் இருக்க மாட்டார்கள் என்று தோன்றும். எல்லாவற்றுக்கும் மேலாக இந்த மனைக்கு வரும் வழியைப் பார்த்தாலே அப்படியே ஓடிவிடத் தோன்றும்!''

''ஆனால், நான் அப்படிப்பட்ட ஒருவனல்ல... ஏனோ இந்திராபாய் மீது எனக்கு அப்படி ஓர் ஈடுபாடு. அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. அவர் ஏதோ ஆபத்தில் சிக்கியுள்ளார் என்பதைத் தெரிந்துகொண்டதும் நான் மிகவும் வருத்தப்பட்டேன்.''

''சொல்வது அத்தனையும் உண்மை என்பது நீங்கள் சொல்லாமலே எனக்குத் தெரியும்!''

''என்றைக்கு அவரது பழைய சக்தி அவருக்குத் திரும்பக் கிடைக்கப் போகிறதோ?'' ஜகதீஷ் யாரிடம் என்றில்லாமல் பொதுவாகப் பேசினார்.

ஜகதீஷ் பேசுவதை உற்று கவனித்த அந்தப் பெண்மணி தான் யார் என்பதைச் சொல்லவே இல்லை. அதே போல் ஜகதீஷைப் பற்றியும் விசாரிக்கவில்லை.

''உங்களுக்கு இப்போது இருபத்தியெட்டு வயதாகிறது இல்லையா?'' அந்தப் பெண்மணி கேட்டாள்.

''எப்படி இவ்வளவு துல்லியமாகச் சொல்கிறீர்கள்?''

''பார்த்தாலே தெரியாதா? போகட்டும்... உங்களுக்கு இந்த இடத்தைப் பற்றி நான் எதுவும் சொல்லவில்லையே. சொல் கிறேன்!''

அந்த வார்த்தைகள் ஜகதீஷுக்கு மிகுந்த ஆறுதலாக இருந்தது. தான் கேட்க நினைத்தை அவளாகவே சொல்லப் போகிறாள்.

''இந்த மனையின் பெயர்தான் உங்களுக்குத் தெரியுமே காஞ்ஞிரங்காட்டுமனை. எங்களுடைய தாத்தாக்கள் பெரிய மாந்திரீகர்களாக இருந்தனர். எனவே, புகழ்பெற்ற பல ராஜகுடும்பங்களுடன் அவர்களுக்குத் தொடர்பு இருந்தது. இந்திராபாயின் வீட்டாருடனும் இந்த வீட்டைச் சேர்ந்த முன்னோர்களுக்கு நெருங்கிய பழக்கமிருந்தது.''

''இந்த பங்களா மிகவும் பழைய காலத்தைச் சேர்ந்தகூஷி என்று நினைக்கிறேன், அப்படித்தானே?'' ஜகதீஷ் கேட்டார்.

''ஆமாம்... இதற்கு நூற்றாண்டுக் கணக்கில் வயதிருக்கும். நான் சொல்ல வந்தது இந்த வீட்டின் நிலையைப் பற்றி. இங்கிருந்த தாத்தா விஷ்ணு நாராயணன் நம்பூதிரி பெரிய மாந்திரீகர். அவர் கற்றுத் தேர்ந்த மந்திரங்களுடன் அவர் சேகரித்து வைத்த பல

மந்திரச் சுவடிகளும் இந்த வீட்டின் நிலவறைக்குள் பத்திரமாக இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அதில் ஏராளமானதை இந்திராபாயும் படித்திருக்கிறார். அதனால்தான் அவர் இத்தனை காலமாக உயிர்வாழ முடிந்திருக்கிறது!''

அவளது வார்த்தையின் பொருளைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியாத ஜகதீஷ், அவள் முகத்தையே பார்த்தார்.

அது அவளுக்கும் புரிந்திருக்க வேண்டும். இருப்பினும் பேச்சை வளர்த்த விரும்பாதவளாகக் கூறினாள்.

''நேரம் அதிகமாகிவிட்டது. நீங்கள் உறங்கவேண்டும் இல்லையா? தெற்குப் பகுதியில் உள்ள அறையொன்றை உங்களுக்காகச் சுத்தம் செய்து ஒதுக்கி வைத்திருக்கிறேன்...'' என்றபடி எழுந்தாள்.

ஜகதீஷ் அவளைப் பின்தொடர்ந்தார்.

''மனையின் பின்புறம் குளம் உள்ளது. நீங்கள் விரும்பினால் இப்போதுகூட அதில் குளிக்கலாம். மூலிகை களின் சக்தி வாய்ந்த நீருள்ள குளம் அது. ஒரு தடவை மூழ்கியெழுந்தால் உங்களது களைப்பெல்லாம் பறந்துவிடும்!''

ஜகதீஷும் குளிக்க வேண்டுமென்று விரும்பினார்.

''நான் குளித்துவிட்டு வருகிறேன்!'' என்ற ஜகதீஷ் தமது தோள்பையிலிருந்து துண்டு ஒன்றையும் லுங்கியையும் வெளியே எடுத்தார்.

அவருடன் வெளியே வந்த அவள், குளம் இருந்த திசையைச் சுட்டிக் காட்டினாள்.

''இது இந்த வீட்டுப் பெண்கள் குளிப்பதற்காக அமைக்கப் பட்ட குளம். இந்த வீட்டுப் பெண்கள் பொதுவாக வீட்டை விட்டு வெளியேற மாட்டார்கள்!''

ஜகதீஷ் குளத்தின் படிக்கட்டுகளில்; இறங்கினார். எட்டுப் படிகள் தாண்டியதும் நீர்மட்டத்தை அடைந்தார்.

துண்டைக் கட்டிக் கொண்டு குளத்துள் இறங்கினார்.

ஆகாயத்தில் நிலா மிதந்து கொண்டிருந்தது. அதன் குளிர்ந்த நிலவொளி தண்ணீருடன் கலப்பதை ஜகதீஷ் கவனித்தார். அந்தப் பெண்மணி சொன்னது உண்மையாகவே தோன்றியது. தண்ணீருக்குத் துளசியின் நல்ல வாசனை!

குளித்துவிட்டுக் கரையேறிய ஜகதீஷுக்கு இதுவரை இல்லாத அளவுக்குப் புத்துணர்ச்சி தோன்றியது.

''நீங்கள் சொன்னபடியேதான் இருந்தது தண்ணீர். குளித்ததும் நான் ஒரு புது மனிதனாகிவிட்டது போல் உள்ளது!'' அவளிடம் ஜகதீஷ் கூறினார்.

''அது மட்டும்தானா?'' அந்தப் பெண்மணி கேட்டாள்.

''என்னவென்றே சொல்லத் தெரியாத ஏதோ ஒரு சுகம் தோன்றுகிறது.''

ஜகதீஷுக்காக ஒதுக்கப்பட்ட அறையில் படுக்கை விரிக்கப் பட்டிருந்தது. ஆள் புழக்கமே இல்லாத இந்த வீட்டில் இதையெல் லாம் யார் செய்கிறார்கள் என்கிற வியப்பு ஜகதீஷுக்குத் தோன்றவே செய்தது.

சங்கிலிவிளக்குடன் அவள் அறைவாசலில் நின்றிருந்தாள். சாவகாசமாக விளக்கை மேஜை மீது வைத்த அந்தப் பெண், ஜகதீஷின் அருகே கட்டிலில் வந்து அமர்ந்தாள்.

விநாடிக்கு விநாடி அவள் மூச்சுக் காற்று வேகம் பெறுவதை ஜகதீஷ் உணர்ந்தார்.

## 36

''இவ்வளவு நேரமாகியும் உங்கள் பெயரைச் சொல்ல வில்லையே நீங்கள்?'' ஜகதீஷ் கேட்டார்.

''என் பெயர் பார்வதிபாய்.''

''இந்த மனையில் வேறு யாரும் குடியிருப்பதாகத் தெரியவில்லை!''

''ஒரு வகையில் அது உண்மைதான்! இப்படி ஓர் உயிர் இந்த வீட்டில் வசிப்பதை யாரும் தெரிந்து கொண்டிருக்க மாட்டார்கள்!'' பார்வதிபாயின் வார்த்தைகளைக் கேட்டதும் ஜகதீஷ் சந்தேகத்துடன் தலையை உயர்த்திப் பார்த்தார்.

'இவள் சொன்னதன் பொருள் என்ன? இவள் இங்கு வசிப்பது கூட எவருக்கும் தெரியாதா?'

'சிறு வயதில் படித்திருந்த மோகினி கதைகள் உயிர்பெற்று வருகிறதா என்ன?' ஜகதீஷ் யோசித்தார்.

சட்டென்று யாரோ தீபத்தை விரலால் அழுத்தி அணைத்தது போல் தோன்றியது. விளக்கு அணைந்தது. ஜகதீஷ் தீப்பெட்டியை எடுக்க முற்பட்டபோது உடையற்ற பார்வதியின் கைப்பகுதி அவர் மார்பில் பதிந்தது. அவருக்கு அருகில் கிடந்த பார்வதி பாயின் உடம்பிலிருந்த உடைகள் நழுவியிருந்தன.

அவளின் மென்மையான பூவுடல் அவர் உடம்பில் சன்னமான வெப்பத்தைப் பரப்பியபடி அசைந்தபோது, தான் இந்தப் பிரபஞ்சத்தின் சூன்யமான அண்டவெளிக்குள் வழுக்கி விழுவதாக ஜகதீஷ் உணர்ந்தார்.

தூரத்தில் எங்கேயோ ராக்கோழியொன்று கூவியது. சட்டென்று விழித்த ஜகதீஷ், அவள் படுத்திருக்கும் இடத்தைக் கையால் துழாவினார். அந்த இடம் வெறுமையாக இருந்தது. ஒரு விநாடி திடுக்கிட்ட அவர் சட்டென்று தலை யணைக்கு அடியிலிருந்து தீப்பெட்டியை எடுத்து விளக்கை ஏற்றினார்.

ஒருமுறை அணைவது போல் தாழ்ந்த தீபம் மறுவிநாடி பிரகாசமாக எரியத் தொடங்கியது. அறைக்குள் எங்குமே அவளைக் காணவில்லை. கதவு மூடியிருந்தது. ஆனால், அறைக்குள் ஏதோ ஒரு நறுமணம் நிறைந்திருந்தது. அந்த மணம் படுக்கையிலும் அவர் உடம்பிலும் அதிகமாகப் பரவியிருந்தது.

கதவை நோக்கி நடந்தார். அது தாழிடப்படவில்லை. அப்படியானால், சற்று நேரத்திற்கு முன்புவரை என்னுடன் இருந்தவள் பார்வதிபாய்தான். அவளும் சாதாரணப் பெண்ணாகத் தெரியவில்லை.

அதன் பிறகு அவரால் உறங்க முடியவில்லை.

மனத்தில் ஏதேதோ சிந்தனைகள் பிறப்பெடுத்தன.

சிகரெட் ஒன்றைப் பற்றவைத்து ஆழ்ந்து புகையை உள்ளுக்கு வாங்கி மெதுவாக வெளிவிட்டார்.

'எதற்காக இந்திராபாய் தன்னை இங்கு அனுப்பி வைத்தார்? இங்கு நடப்பதெல்லாம் என்ன? அவர் சொல்லி அனுப்பிய நோக்கம் பார்வதிபாய்க்குத் தெரியுமா, தெரியாதா?'

தனக்கு அலுப்பு தோன்றாதிருக்கவும், இந்திராபாயைக் காப்பாற்ற வேண்டியிருப்பதை மறக்காதிருக்கவுமே பார்வதிபாய் தன்னிடம் வந்து போனாளோ என்று தோன்றியது.

சிகரெட் நெருப்பு விரலைச் சுட்டதும் தரையில் போட்டுக் காலால் அழுத்தி அணைத்தார். மீண்டும் படுக்கையில் சரிந்தார்.

பொழுது விடிந்தது.

கண்விழித்தவர் வீட்டின் பின்புறத்தை அடைந்தார். அங்கு வராந்தாவில் -கதவை ஒட்டிய பகுதியில் பளபளப்பாகத் தேய்த்த கிண்டியில் தண்ணீரும், பல் தேய்ப்பதற்கான உமிக்கரியும் நாக்கு வழிப்பதற்கான ஈர்க்கிலியும் தயாராக இருந்தன.

இதையெல்லாம் பார்த்தபோது வீட்டுக்குள் அவள் இருக்கிறாள் என்று உறுதியாகத் தெரிந்தது. பல் தேய்த்து முகம் கழுவி விட்டு வந்தார்.

''காபி சாப்பிடுங்கள்!'' ஒரு புதிய குரல் கேட்டது.

ஜகதீஷ் குரல் வந்த திசையைப் பார்த்தார்.

பதினேழு வயது மதிக்கத்தக்க இளம்பெண் ஒருத்தி கையில் காபித் தம்ளருடன் நின்றிருந்தாள்.

வெள்ளை உடையணிந்திருந்தாள். ஒரு பொட்டு நகைகூட அந்த உடம்பில் இல்லை. அவளது அழகுக்கு நகையெதுவும் தேவையில்லையென்று தோன்றியது.

ஜகதீஷ் காபியை வாங்கினார். எதிர்பாராமல் அவர் விரல்கள், அவள் கை விரல்களில் பட்டன.

வெண்ணெயைத் தொட்டது போன்ற ஓர் அனுபவம்!

காபியைக் குடித்தார். ஏலக்காய் மணக்கும் அருமையான காபி. அம்மா போட்டுத் தருவதும் இதே காபிதான்!

'எனக்கு இப்படிப்பட்ட காபிதான் பிடிக்குமென்பது இவளுக்கு எப்படித் தெரியும்?' ஜகதீஷின் மனத்துள் கேள்வி எழுந்தபோதும் அதை வாய்விட்டுக் கேட்கவில்லை.

''நீ யாரம்மா புதிய நபராகத் தெரிகிறாய். பார்வதிபாய் எங்கே போனார்?'' ஜகதீஷ் கேட்டார்.

''தம்புராட்டி வெளியே போயிருக்கிறார். சற்று நேரத்தில் வந்து விடுவார். உங்களை கவனித்துக் கொள்ளும்படி என்னிடம் சொல்லியிருக்கிறார்.''

''நேற்று நான் உன்னை இங்கே பார்க்கவில்லையே?''

''இல்லை... விடியற்காலையில்தான் தம்புராட்டி என்னை அழைத்து வந்தார்.''

''உன் ஊர் எது?''

''பக்கத்து ஊர்தான்!'' என்றவள் முகத்தைத் திருப்பிக் காட்டினாள்.

ஜகதீஷ் அந்த திசையில் பார்த்தார். பிரமாண்டமான காஞ்ஞிர மரம் ஒன்று அங்கு நின்றிருந்தது.

''ஓகோ... இதனால்தான் இந்த வீட்டுக்குக் 'காஞ்ஞிரங்காட்டு மனை' என்ற பெயர் வந்திருக்குமோ?'' ஜகதீஷ் கேட்டார்.

''இருக்கலாம்.''

''உனக்கு சொந்தக்காரர்கள் யாரும் இல்லையா?''

''இல்லை, தம்புராட்டிதான் எனக்கு எல்லாம்!''

''ஓகோ!''

''குளிக்கப் போகிறீர்களா?'' அவள் கேட்டாள்.

''புறப்படுகிறேன்!'' என்ற ஜகதீஷ் துண்டுடன் குளத்தை நோக்கிப் புறப்பட்டார்.

குளித்துக் கரையேறியதும் நேற்று போலவே நல்ல புத்துணர்ச்சி தோன்றியது.

''பலகாரம் எடுத்து வைக்கட்டுமா?'' அவர் வருவதைப் பார்த்தபடி கேட்டாள்.

சமையல்கட்டை ஒட்டிய சாப்பாட்டு அறையில் அப்போது தான் அறுத்து வந்த வாழையிலை துடிப்புடன் கிடந்தது. ஜகதீஷ் இலையைத் தண்ணீரால் துடைத்தார்.

சூடான இட்லிகளும், நெய்யும் மிளகாய்ப் பொடியும் இலையில் இடம் பிடித்தன. பக்கத்திலேயே ஒரு சொம்பில் பால்.

''இதையெல்லாம் எப்படி இவ்வளவு விரைவாகத் தயாரிக்க முடிந்தது?'' ஜகதீஷ் கேட்டார்.

''தம்புராட்டி சொல்லிவிட்டால் செய்யாமல் இருக்க முடியுமா?'' அவளது சிரிப்பு மனத்தைக் கவருவதாக இருந்தது.

''உன் பெயர் என்ன?'' ஜகதீஷ் கேட்டார்.

''லதிகா!'' மெதுவாகச் சொன்னாள்.

''நீ எப்படி இங்கு வந்து சேர்ந்தாய்?''

''தம்புராட்டி அழைக்கும்போது வரமாட்டேன் என்றா மறுக்க முடியும்?''

''இந்தத் தம்புராட்டி யார்?'' ஜகதீஷ் சட்டென்று கேட்டார்.

''இதையெல்லாம் கேட்டால் நான் என்ன பதில் சொல்ல? அவர்களிடமே கேட்கலாமே?'' சிரித்தபடி பேசினாள்.

''உண்மைதான்! நான் அவரிடமே இதைப்பற்றிக் கேட்க லாமே! மதியம், இரவுக்கு இங்கேயே சாப்பாடு தயாராகும் இல்லையா?''

''அதற்கெல்லாம் ஏற்பாடு செய்துவிட்டுத்தான் போயி ருக்கிறார் தம்புராட்டி.''

''வேறு ஏதாவது சொன்னாரா?''

''சொல்லியிருக்கிறார். நீங்கள் முதலில் பலகாரத்தைச் சாப்பிடுங்கள். அதன் பிறகு சொல்கிறேன்.''

சாப்பிட்டு முடித்த ஜகதீஷ் இட்லியும் மிளகாய்ப் பொடியும் அருமையாக உள்ளது என்றார். அந்த வார்த்தை அவளை எந்த விதத்திலும் பாதித்ததாகத் தெரியவில்லை!

ஜகதீஷ் கைகழுவிவிட்டு வந்தபோது லதிகா கூறினாள்: ''அதோ பாருங்கள் ஒரு சாவி வைத்திருக்கிறேன். அந்த அறையைத் திறந்து பாருங்கள். உங்களுக்காகத் தம்புராட்டி அதற்குள் எதையோ வைத்திருக்கிறார்.''

ஜகதீஷ் சாவியை எடுத்துச் சென்று கதவைத் திறந்தார்.

அறைக்குள் ஏராளமான மின்மினிப் பூச்சிகள் பறப்பது போல் தோன்றியது. உள்ளேயும் ஒரு விளக்கு எரிந்தது. ஜகதீஷ் அந்த அறையை ஒருமுறை நோட்டமிட்டார்.

ஒரு தங்கத் தாம்பாளத்தில் செப்புத் தகடுகளாலான சுவடியொன்று இருந்தது.

ஜகதீஷ் அறைக்குள் நுழைந்ததும் மின்மினிப் பூச்சிகள் ஒன்றாகத் திரண்டு அந்தத் தாம்பாளத்தின் மேற்புறமாக வட்டமிட்டுக் கூடின. அது ஏதோ ஒருவிதமான சங்கேத மொழியாக இருக்கக்கூடும் என்று நினைத்த ஜகதீஷ், அந்தச் செப்புச்சுவடியைக் கையில் எடுத்தார். அவர் கைபட்டதும் மின்மினிகள் சட்டென்று மறைந்தன.

வெளியே வந்த ஜகதீஷ், வராந்தாவில் அமர்ந்து அதைப் புரட்டத் தொடங்கினார். வட்டெழுத்து, கோலெழுத்து முறையில் அதில் எழுத்துகள் தெரிந்தன. ஒரு காலத்தில் புழக்கத்தில் இருந்த 'இந்த எழுத்து முறைகளைப் பற்றிக் கேள்விப்பட்டது உண்டு. ஆனால், இதனால் என்ன பயன்?' யோசித்த ஜகதீஷ் லதிகாவை அழைத்தார்.

''இதிலிருப்பது எதுவும் எனக்குப் புரியவில்லையே? எனக்குத் தெரியாத மொழியில் அல்லவா இருக்கிறது இந்தச் சுவடி!''

''உற்றுப் பாருங்கள். உங்களுக்குப் புரியும்!'' - லதிகா கூறினாள்.

சுவடியைப் பார்த்தார். ''ம்ருத சஞ்சீவினி மந்திரம்'' - ஜகதீஷ் வாசித்தார்.

தனக்குப் புரியாத எழுத்துகளின் மேற்புறத்தில் தமிழ் எழுத்துகள் தெளிவாகத் தெரிந்தன.

''இப்போது வாசித்தது போலவே தொடருங்கள். எல்லாம் புரிந்துவிடும். மேற்கொண்டு உங்களுக்கு சந்தேகம் ஏதாவது தோன்றினால் தம்புராட்டியிடம்தான் கேட்க வேண்டும்!'' அவள் நகர்ந்தாள்.

மாலை நேரமானது.

இருள் பூமியின் மீது விநாடிக்கு விநாடி படிந்தது.

மதியம், இரவு எல்லா நேரங்களிலும் தான் வழக்கமாக விரும்பிச் சாப்பிடும் பதார்த்தங்களே இருந்தன. இதையெல்லாம் யாரோ அருகிலிருந்து ஒவ்வொன்றாகச் சொல்லிக் கொடுத்தது போலவே லதிகா சமைத்திருந்தாள்.

தன்னுடைய படுக்கை அறைக்கு வந்த ஜகதீஷ் சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்தபடி வெளிப்புற வராந்தாவுக்கு வந்தார்.

அப்போது -

லதிகா காஞ்ஞிர மரத்தை நோக்கியபடி இருட்டில் நகர்வது தெளிவாகத் தெரிந்தது.

''லதிகா?'' ஜகதீஷ் உரத்த குரலில் அழைத்தார்.

அது அவள் காதில் கேட்டதாகவே தெரியவில்லை.

ஜகதீஷ் திரும்பவும் அழைத்தார். ''லதிகா!''

ஆனால், லதிகா அதைக் காதில் வாங்கிக் கொள்ளாதவளைப் போல நடந்தாள்.

ஒருகணம் தயங்கிய ஜகதீஷ் அவளை நோக்கி ஓடத் தொடங்கினார். சட்டென்று ஜகதீஷ் காஞ்ஞிர மரத்தின் வேர்

தடுக்கியதால் தரையில் விழுந்தார். அங்கிருந்து சுதாரித்து எழுந்து பார்ப்பதற்குள் லதிகா கண்ணிலிருந்து மறைந்து விட்டிருந்தாள்.

இந்த மனைக்கு வந்த பிறகு நடைபெற்ற ஒவ்வொரு சம்பவமும் நம்ப முடியாததாக உள்ளன - பாட்டி சொன்ன கதைகளில் இடம்பெறும் சம்பவங்கள் மாதிரி...

திரும்பவும் வீட்டிற்கு வந்தபோது வெளிப்புறத் திண்ணையி லிருந்த விளக்கின் திரியைத் தூண்டிவிட்டுக் கொண்டிருந்தாள் பார்வதிபாய்.

''இந்த நேரத்தில் எங்கே போய்விட்டு வருகிறீர்கள்?'' பார்வதி கேட்டாள்.

''வேலைக்காரப் பெண்... லதிகா அந்தக் காஞ்ஞிர மரத்தை ஒட்டியபடி இருட்டில் தனியாகப் போய்க் கொண்டிருந்தாள். அவளுக்கு உதவுவதற்காகப் போனேன். ஆனால், நான் அவளை நெருங்குவதற்குள் மறைந்து விட்டாள்...'' ஜகதீஷ் தடுமாறியபடி பேசினார்.

''ஓ... அதுதானா விஷயம். அவளது வீடு அந்தப் பக்கம் தான். அவள் தனியாகப் போய்விடுவாள். அதைப்பற்றி நீங்கள் கவலையே படவேண்டாம். போகட்டும், நீங்கள் அந்தச் சுவடியை வாசித்தீர்களா?'' பார்வதிபாய் கேட்டாள்.

''வாசித்தேன். ஆனால், இதெல்லாம் எனக்கு சாத்தியம்தானா என்கிற மலைப்பு தோன்றுகிறது. ஒரு போலீஸ் அதிகாரியான நான் இதையெல்லாம் எதற்காகக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று புரியவில்லை!''

''வாழ்க்கையில் நாம் எல்லாவற்றையும் விரும்பித்தான் செய்கிறோமா? அவசியம் நேரும்போது சிலவற்றை நம் விருப்பத்திற்கு மாறாகவே கற்றுக் கொள்ளவும் வேண்டி யுள்ளதே! அப்படி இல்லாவிட்டால் இந்த வாழ்க்கையில் நாம் எதையும் சொந்தமாக்கிக் கொள்ள முடியாது... இல்லையா?''

''உங்களைப் பகல் முழுவதும் பார்க்க முடியவில்லையே?'' - ஜகதீஷ் கேட்டார்.

''இந்த மனையைச் சேர்ந்த வேறு சில வீடுகளும், தோட்டங்களும் இதைச் சுற்றி நிறைய உள்ளன. அவற்றையும் நான் கவனிக்க வேண்டியுள்ளது. பகல் பொழுது முழுவதும் அதற்கே சரியாகப் போய்விடும்!'' - பார்வதிபாய் திண்ணையின் இடது புறத்தை நோக்கி நடந்தாள். விளக்கைக் கையில் எடுத்தவள் ''வாருங்கள்'' என்றாள்.

பத்து எட்டுகள் எடுத்து வைத்தவுடன் பார்வதி இடது புறமாகத் திரும்பினாள். அது சற்றுக் குறுகிய வழியாக இருந்தது. சற்றுத் தூரம் அந்த வழியில் சென்றவள் மீண்டும் இடது புறமாகத் திரும்பினாள்.

அப்போது, தாங்கள் காலை வைத்திருப்பது பலகை போன்ற ஒரு தளம் என்று தெரிந்தது. அப்படியானால், அதற்குக் கீழே நிச்சயம் ஒரு நிலவறை இருக்க வேண்டும் என்று ஜகதீஷ் யூகித்தார்.

''இந்த விளக்கைக் கொஞ்சம் பிடியுங்கள்!'' பார்வதிபாய் கையிலிருந்த விளக்கை ஜகதீஷிடம் கொடுத்தாள்.

ஜகதீஷ் அதைக் கையில் வாங்கினார்.

பார்வதி மரச்சுவரிலிருந்த ஒரு சாவியை ஆணியிலிருந்து எடுத்தாள். அந்த ஆணியில் வளையங்களில் கோத்த சாவிகள் பல தொங்கிக் கொண்டிருந்தன.

பாம்புத்தலை போன்ற வடிவத்திலிருந்த சாவியை நிலவறையின் மேற்புறமுள்ள சாவித் துவாரத்தில் பொருத்தித் திருகினாள்.

''இந்தக் கதவைத் திறந்து எத்தனையோ நாட்களாகி விட்டன. இந்தப் பலகையைக் கொஞ்சம் தூக்கி விடுங்கள்...'' என்ற பார்வதிபாய் ஜகதீஷிடமிருந்து விளக்கைத் திரும்பவும் வாங்கிக் கொண்டாள்.

ஜகதீஷ் அந்த நிலவறையின் கதவை மேற்புறமாக இழுத்து, அதன் உள் பக்கமாகச் சரித்து வைத்தார்.

விளக்கு வெளிச்சத்தில் நிலவறைக்குள் செல்லும் படிக் கட்டுகள் தென்பட்டன.

''நீங்கள் இறங்குங்கள். பெண்கள் இதற்குள் போகக் கூடாது!''

ஜகதீஷ் அவள் கையிலிருந்து விளக்கை வாங்கிக் கொண்டு படிகளில் இறங்கினார்.

''ஜாக்கிரதையாக இறங்குங்கள்...'' பார்வதி எச்சரித்தாள்.

பன்னிரண்டு படிகள் இறங்கிய பின் தளம் ஒன்று தென் பட்டது.

மிகப்பெரிதாக இருந்த அந்த நிலவறைக்குள் என்னென் னவோ பொருள்கள் குவித்து வைக்கப்பட்டிருந்தன. அங்கு வந்த ஜகதீஷுக்கு அறைக்குள் தனக்கு என்ன வேலை உள்ளது என்று புரியவில்லை.

''உள்ளே ஒரு பெரிய வாணலி போன்ற ஒரு செப்புப் பாத்திரம் இருக்கிறது அல்லவா, அதை நேராகத் திருப்பி வையுங்கள்...'' பார்வதிபாய் கூறினாள்.

இடது கையால் விளக்கைப் பிடித்தபடி வலது கையால் தனது சக்தி முழுவதையும் பயன்படுத்தி, அவர் அந்த வாணலியைப் புரட்டிப் போட்டார்.

வாணலி புரண்டதும் சட்டென்று பின்புறமாக நகர்ந்தார் ஜகதீஷ். அதற்குள் அந்த அறையே ஒளியால் நிறைந்தது. கண்ணைக் கூசும் ஒளி.

அந்த ஒளி எங்கிருந்து வருகிறது என்பதைக் கண்டுபிடிக்க முடியாத ஜகதீஷ் தடுமாறினார் ஒரு கணம். ஒரு வகையாக கண்ணுக்கு வலது கையை அண்டக் கொடுத்தபடி மேற்புறமிருந்த பார்வதிபாயைப் பார்த்தார்.

''அதை எடுத்துக் கொள்ளுங்கள்!'' பார்வதிபாய் கூறினாள்.

''எதை?'' ஜகதீஷ் ஒன்றும் புரியாதவராகக் கேட்டார்.

''அந்த ஒளி புறப்படுகிற பொருளைத்தான்!''

ஜகதீஷ் அந்த ஒளி எங்கிருந்து புறப்படுகிறது என்று கண்டுபிடிக்க முயன்றார். அப்போதுதானே அதைக் கையில் எடுக்க முடியும்?

நடுமதியத்தில் சூரியனைப் பார்ப்பது போல் அந்த ஒளிவட்டத்தையே உற்று கவனித்த ஜகதீஷுக்குச் சற்று நேரத்திற்குப் பிறகு கோழிமுட்டையின் வடிவத்தில் ஏதோ ஒன்று தெரிந்தது. அதைக் கையால் தொடுவதற்கே ஜகதீஷ் பயந்தார்.

''பயப்படாதீர்கள். உங்கள் கண்களுக்குத் தெரிகிற அளவு அது பெரியதல்ல, தைரியமாக எடுங்கள்...'' பார்வதிபாய் வற்புறுத்தினாள்.

இது ஏதோ 'ஆயிரத்தோரு இரவுகள்' அரபுக்கதைகளில் இடம்பெற்ற சம்பவத்தைப் போல இருக்கிறதே என்று நினைத்தபடி ஜகதீஷ் அதைக் கையில் எடுத்தார்.

''ஆ!...'' என்ற குரல் ஜகதீஷின் தொண்டையிலிருந்து அவரறியாமலே புறப்பட்டது.

அவரது கைத்தலத்தின் மீது ஏதோ ஒன்று இழைந்து ஊர்வது போலத் தெரிந்தது. அத்துடன் அந்த நிலவறையிலிருந்த வெளிச்சம் மறையவும் செய்தது.

அவர் கண்ட காட்சி, எப்படிப்பட்டவரையும் திடுக்கிட வைப்பதாக இருந்தது.

மிகப்பெரிதான பாம்பு ஒன்று மெதுவாகப் படத்தைச் சுருக்கித் தாழ்த்தி அடங்குவதைக் கண்டார்.

'அப்படியானால் தான் எடுத்த பொருள் என்ன?' ஜகதீஷால் அதை நம்பவே முடியவில்லை.

''இனி மேலேறி வந்து விடுங்கள்!'' பார்வதிபாய் கூறினாள்.

தனக்குக் கிடைத்துள்ள அபூர்வப் பொருளைக் கையால் வலுவாக இறுக்கிப் பிடித்த ஜகதீஷ் படியேறத் தொடங்கினார்.

அவர் படிகளைக் கடந்து மேலேறுவதற்கு முன்பாகவே பார்வதி விளக்கைத் தன் கையில் வாங்கிக் கொண்டு, வழி காட்டினாள்.

''இனி நிலவறைக் கதவை மூடிவிட வேண்டியதுதான்!'' பார்வதிபாய் கூறினாள்.

தன் கையிலிருந்த பொருளைப் பார்வதிபாயிடம் கொடுக்க முயன்றபோது அவள் திடுக்கிட்டுப் பின்வாங்கினாள்.

''ஐயோ, நான் தொடக் கூடாது. அது உங்கள் கையிலேயே இருக்கட்டும்!''

நிலவறையைப் பூட்டுவிட்டு அவர்கள் திரும்பி நடக்கத் தொடங்கினர். திரும்பும்போது வந்த வழியில் வராமல் வேறு பாதையில் நடந்தனர்.

''இந்த அறைக் கதவைத் திறக்க வேண்டும்.'' பார்வதி மற்றோர் அறையைச் சுட்டிக் காட்டிக் கூறினாள்.

கதவைத் திறந்தவுடன் மனோரஞ்சிதப் பூவின் மணம் மூக்கைத் துளைத்தது.

முதலில் பார்வதிபாய் அதற்குள் நுழைந்தாள். ஜகதீஷும் அவளைப் பின்தொடர்ந்தார்.

விளக்கு வெளிச்சத்தின் உதவியால் ஜகதீஷ் அந்த அறைக்குள் எதிர்பாராத ஒரு காட்சியைக் கண்டார்.

தாம் குகைக் கோயிலில் பார்த்த அதே சிலை! எந்த ஒரு வேறுபாடும் இல்லாத அதே சிலை. ஆனால், கிரீடத்தில் மட்டும் அந்தச் சிவப்பு ரத்தினக் கல் கிடையாது!

பித்தளைச் சங்கிலி பிணைக்கப்பட்ட ஓர் ஊஞ்சல் அங்கு இருந்தது.

''ஜகதீஷ் உங்கள் கையிலுள்ள மாணிக்கக் கல்லை அந்தக் கிரீடத்தின் மீது வையுங்கள்!'' பார்வதி கூறினாள்.

ஜகதீஷ் அப்படியே செய்தார்.

கையிலிருந்து அதை விடுவித்தவுடனே அந்த அறை ஒளியால் நிறைந்தது.

''நாம் புறப்படலாம். இந்தக் கல் அப்படியே இருக்கட்டும்.''

இருவரும் அங்கிருந்து கிளம்பினர்.

ஜகதீஷுக்கு ஒதுக்கப்பட்டிருந்த அறைக்கு அவர்கள் வந்து சேர்ந்தனர்.

''அந்த மாணிக்கக்கல் நிலவறைக்குள் இருந்த நாகத்தின் வாயில் இருந்தது. உங்களிடம் நான் அதைச் சொன்னால் பயப்படுவீர்கள் என்பதால்தான் சொல்லவில்லை'' பார்வதிபாய் கூறினாள்.

ஜகதீஷ் அதைக் கேட்டதும் துணுக்குற்றார்.

'ஒரு பாம்பின் வாயிலிருந்து மாணிக்கத்தை எடுப்பதா?' இந்த மாதிரிச் செய்திகளை இதுவரை கேள்விப்பட்டிருக்கிறோம். வாழ்க்கையில் முதன்முறையாக இப்போதுதான் இப்படிப்பட்ட அதிசய நிகழ்ச்சியில் பங்குகொள்ள நேர்ந்திருக்கிறது. இப்படி யெல்லாம் செயல்பட நேருமென்று ஒரு போதும் தான் நினைத்த தில்லை.

வியப்படைந்த விழிகளுடன் பார்வதிபாயையே உற்றுப் பார்த்தார் ஜகதீஷ்.

## 37

**ஹோ**ட்டல் பேலஸின் அறைக்குள் உண்ணி மேனோனும், ராமசாமியும், டாக்டர் வில்லியமும் அமர்ந்து பேசிக் கொண் டிருந்தனர்.

''சப் இன்ஸ்பெக்டர் ஜகதீஷுக்கு நான் பல தடவை போன் செய்தேன். எந்தவிதமான பதிலும் இல்லை. அவர் எங்கே போயிருக்கிறார் என்று யாருக்குமே தெரியவில்லை!'' மேனோன் கூறினார்.

''நீங்கள் எதற்காக வீணாகக் கவலைப்படுகிறீர்கள்? அந்தத் தனிமனிதன் நம்மை என்ன செய்துவிட முடியும்?'' டாக்டர் வில்லியம் விஸ்கி கிளாஸைக் கையில் எடுத்தபடி பேசினார்.

''இருந்தாலும் அவருக்கு நம்மீது சந்தேகம் ஏற்பட்டுள்ளது. நம்மைப் பற்றி ஓரளவுக்குத் தெரிந்திருப்பதாகவும் தோன்றுகிறது. எனவே, நாம் அவரைக் கண்டுபிடித்தே தீரவேண்டும். இந்திரா பாய் ஒரு மனிதப் பெண்ணாகத் தெரியவில்லை. இப்போது அந்தப் பெண்மணி எங்கே இருக்கிறாள் என்று நமக்குத் தெரியவில்லை. அவளை அடிமைப்படுத்தி விடுகிறேன் என்று புறப்பட்டுப் போன தேவதத்தனையும் காணோம்!'' மேனோன் தமது கைக்கடிகாரத்தைப் பார்த்தபடி பேசினார்.

மணி பதினொன்றைத் தாண்டியிருந்தது.

அந்த அறையிலிருந்து பார்த்தால், நகரின் ஒரு பகுதி முழுமையாகத் தெரிந்தது. ரோடுகளில் மட்டும் விளக்குகள் எரிந்தன. அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒரு சில ஹோட்டல் களிலும் விளக்குகள் எரிந்தன.

ஹோட்டல் பேலஸில் இருந்தவர்களில் பெரும்பாலான வர்கள் உறங்கியிருந்தனர். இரவு பத்தரை மணிக்கு மேல் நண்பர்கள் மூவரும் இந்த அறையில் ஒன்று கூடுவது வழக்கம். அந்த இடம்தான் அவர்களது திட்டங்களுக்கு உகந்ததாக இருந்தது.

பங்களாவை அவர்கள் கைப்பற்றியிருந்த போதிலும் அதிலுள்ள அறைகள் சிலவற்றை அவர்கள் இன்று வரை திறந்து பார்த்ததில்லை. அதனால் புதிதாக ஏதாவது பிரச்சினை கிளம்புமோ என்கிற மேனோனின் பயம்தான் காரணம்.

மேனோனது மனத்தில் இந்திராபாய் அப்போதும் சிம்மசொப்பனமாகவே விளங்கினாள். ஒருவேளை அவள் எதிர்பாராத சமயத்தில், எதிர்பாராத விதமாகத் திரும்பி வரவும் செய்யலாம் என்கிற சந்தேகம் மேனோனுக்கு இருந்தது.

மூவரும் விஸ்கியில் மூழ்கியபோது வில்லியம் ஒரு திட்டத்தைக் கூறினார்.

''நாம் இதுவரை திறக்காமலிருக்கும் அறைகளைத் திறந்து பார்த்தால் என்ன? ஒருவேளை அதற்குள் பணமோ, நகைகளோ இருக்கலாம்!''

அந்த வார்த்தைகள் மற்றவர்களது முகங்களைப் பிரகாசப் படுத்தியது. உள்ளே போயிருந்த விஸ்கி வேறு அவர்களை ஏகத்துக்கு உற்சாகப்படுத்தியது.

''டாக்டர் சொல்வதுதான் சரி. நாம் உடனே அதைச் செய்து விட வேண்டியதுதான்!'' ராமசாமி எழுந்தார்.

மேஜையைத் திறந்து ஒரு பெரிய சாவிக் கொத்தைக் கையில் எடுத்தார்.

''இதில் உள்ள மூன்று சாவிகளை நாம் இதுவரை பயன் படுத்தவில்லை!'' ராமசாமி மூன்று பெரிய சாவிகளை எடுத்துக் காட்டினார்.

''இந்தச் சாவி கீழ்த்தளத்தில் உள்ள நடுவறையினுடையது அல்லவா?'' மூன்று சாவிகளில் ஒன்றைத் தொட்டபடி பேசினார்.

''ஆமாம்!''

''அப்படியானால் மீதியுள்ள இரண்டு?''

''இந்தச் சாவிகள் பொருந்தும்படியான வேறு அறைகள் கிடையாது. ஒருவேளை அந்த அறைக்குள்ளேயே இந்தச் சாவிகளைப் பயன்படுத்த நேரிடலாம்.''

மணி பதினொன்றரையைத் தாண்டியது.

''இதுதான் இதையெல்லாம் செய்வதற்கேற்ற நல்ல நேரம். வேறு யாரும் நம்மை கவனிக்கவும் மாட்டார்கள்.'' டாக்டர் வில்லியம் தமது கைக்கடிகாரத்தைப் பார்த்தபடி பேசினார்.

மூவரும் வெளியே வந்தனர்.

மூவருக்கும் விஸ்கிபோதை அளவுக்கதிகமாக ஏறியிருந்தது. வளைந்து வளைந்து கீழ்ப்புறமாகச் சென்ற படிகளில் இறங்கினர்.

தரைப் பகுதியை அடைந்தவுடன் வலது புறமாகத் திரும்பி பூட்டிய ஓர் அறையின் முன்பு வந்து நின்றனர்.

''இந்தச் சாவிகள் இந்த அறையினுடையது!'' ராமசாமி சொல்லியபடி அதை, சாவித் துவாரத்திற்குள் செலுத்தினார்.

கதவு திறந்து கொண்டது.

உள்ளே ஒரே இருட்டாக இருந்தது.

டாக்டர் வில்லியம் சுவரில் ஸ்விட்சுகள் ஏதாவது தட்டுப் படுகிறதா என்று தடவிப் பார்த்தார். அப்படி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

மேனோன் தனது பாக்கெட்டிலிருந்து சிகார் லைட்டை வெளியே எடுத்தார்.

''இது பூஜையறை போல் தெரிகிறதே?'' லைட்டை எரியவிட்ட மேனோன் கூறினார்.

அந்த அறைக்குள் செப்புச் சிலைகள் நிறைய இருந்தன. அவற்றில் சிறியதாக இருந்த ஒரு சிலை அவர்களது கவனத்தைக் கவர்ந்தது.

அது இந்திராபாயின் வடிவச் சிலை.

ராமசாமி அதைக் கையில் எடுத்தார்.

சிகார்லைட்டின் வெளிச்சத்தில் அதை உற்றுப் பார்த்தார்.

''அவளைப் போலவே இருக்கிற சிலை!'' ராமசாமி வியப்புடன் கூறினார்.

''எங்கே பார்க்கலாம்... இப்படித் தாருங்கள்!'' மேனோன் கையை நீட்டினார்.

ராமசாமி சிலையை மேனோனிடம் கொடுத்தபோது கைதவறிக் கீழே விழுந்தது.

அந்தச் சிலையை எடுப்பதற்காக மேனோன் குனிந்தார்.

''சிகார்லைட்டை இந்தப் பக்கமாகக் காட்டுங்கள்!'' மேனோன் கேட்டுக் கொண்டார்.

ராமசாமி லைட்டரை அந்தப் பக்கமாகத் திருப்பினார் ஆனால், அந்தச் சிலை அங்கு இல்லை!

''என்னய்யா இது! இங்கே விழுந்த சிலை அதற்குள் எங்கே போனது? மண்ணுக்குள்ளேயா புதைந்துவிட்டது?'' மேனோன் தரையைத் தடவியபடி கேட்டார்.

''ஓகோ அப்படியா சேதி!'' மேனோன் எதையோ கண்டுபிடித்ததைப் போல் பேசினார்.

''என்ன பார்த்தீர்கள்?'' மற்ற இருவரும் ஏககாலத்தில் கேட்டனர்.

''கவனியுங்கள், இங்கே ஒரு சாவித் துவாரம்!''

அது நிச்சயமாக ரகசிய அறைதான் என்று மூவருக்குமே புரிந்தது.

''என்ன யோசிக்கிறீர்கள். திறந்து பார்க்க வேண்டியதுதான்!'' மேனோன், ராமசாமியை விரைவுபடுத்தினார்.

''நாம் எதிர்பார்த்த பொருள்கள் அதற்குள்தான் இருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. உடனே திறக்க வேண்டியது தான்!'' டாக்டர் வில்லியம் கூறினார்.

மீதிமிருந்த இரண்டு சாவிகளில் ஒன்று அதில் பொருந்தியது.

ராமசாமி சாவியை பொருத்தித் திருகிய பிறகு அந்தக் கதவை மேற்புறமாக உயர்த்தினார்.

அது ஓர் அறைதான் என்பதில் மூவருக்கும் சந்தேகமே இல்லை. ஆனால், வெறும் சிகார் லைட்டின் உதவியுடன் அதற்குள் இறங்குவது உசிதமான செயலாக அவர்களுக்குத் தோன்றவில்லை.

''நான் போய் டார்ச் லைட்டை எடுத்து வருகிறேன்!'' மேனோன் நிமிர்ந்தார்.

''நானும் வருகிறேன். கொஞ்சம் விஸ்கி போட்டால் உடம் பில் இன்னும் கொஞ்சம் தைரியத்தை நிறைக்கலாம்...'' டாக்டர், மேனோனைப் பின்தொடர்ந்தார்.

ராமசாமி மட்டும் அறையில் தனியாக இருந்தார்.

வில்லியம் அறைக்குள் வந்தவுடன் முதலில் விஸ்கியை கிளாஸில் ஊற்றி அதை வயிற்றுக்குள் மாற்றினார். சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்தபடி கட்டிலிலிருந்த தலையணையில் சற்றுச் சாய்ந்த மாதிரி உட்கார்ந்தார்.

டார்ச் லைட்டைக் கையில் எடுத்த மேனோன் ஒரு தடவை ஸ்விட்சை அழுத்திச் சோதித்தார்.

''என்ன அதிகமாகிவிட்டதா... வருகிறீர்களா இல்லையா?'' மேனோன் கேட்டார்.

''இல்லை... கொஞ்ச நேரம் ஓய்வெடுக்கிறேன். என்னுடைய பங்கை அங்கேயே வைத்து விடுங்கள்!'' டாக்டர் வில்லியத்தின் வார்த்தைகள் குழறலாக வெளிவந்தன.

''சரி நான் புறப்படுகிறேன்!'' மேனோன் லைட்டுடன் புறப் பட்டார். மேனோனது நடையும் போதையில் தள்ளாடியபடி இருந்தது.

''ராமசாமி...'' பூஜையறைக்குள் வந்த மேனோன் குரல் கொடுத்தார்.

ஆனால், பதில் இல்லை.

மேனோன் சந்தேகத்துடன் ராமசாமியைப் பார்த்தார்.

விழித்த கண்கள் வெறித்தபடியே ராமசாமி தரையில் விழுந்துகிடந்தார்.

கண்ணிமைகள் அசையவில்லை.

''ராமசாமி... ராமசாமி...'' மேனோன் பயப்பிராந்தியில் குரல் கொடுத்தார்.

''... ... ...''

ராமசாமியின் மார்பைத் தொட்டுப் பார்த்தார்.

''ஐயோ!'' - மேனோனின் உதடுகள் அலறலை வெளிப் படுத்தின.

ஒருகணம் தடுமாறிய மேனோன், சட்டென்று ராமசாமியைத் தோள்மீது போட்டுக் கொண்டு வெளியே வந்தார். ராமசாமியின் உயிரற்ற உடலை காரின் பின்ஸீட்டில் படுக்க வைத்தார்.

மேனோன் குடித்திருந்த விஸ்கி முழுவதும் அதற்குள் ஆவியாகிக் காற்றில் கரைந்திருந்தது.

அவசர சிகிச்சைப் பிரிவு போர்டை நோக்கி, ஆஸ்பத்திரிக்குள் விரைந்தார் மேனோன்.

டாக்டர்கள் அவசரமாக ராமசாமியை நெருங்கிச் சோதித்தனர். அவரது இதயத்துடிப்பு நின்றுவிட்டதை டாக்டர்கள் புரிந்து கொண்டனர்.

அறைக்கு வெளியே இருந்த டெலிபோனைக் கையில் எடுத்த மேனோன் ஹோட்டலிலிருந்த டாக்டர் வில்லியத்துடன் தொடர்பு கொண்டு செய்தி சொல்லத் துடித்தார். வில்லியம் போனை எடுக்கவே இல்லை. அது மணியடித்துக் கொண்டே இருந்தது.

''எதையோ பார்த்து பயந்தால் அவரது இதயத்துடிப்பு சட்டென்று நின்றுவிட்டது.'' சீஃப் டாக்டர் மேனோனைப் பார்த்துக் கூறினார்.

'அப்படியானால் ராமசாமி அப்படிப்பட்ட எதைப் பார்த்திருப்பார்?'' மேனோ மனம் சிந்தனையில் ஆழ்ந்தது.

டாக்டரின் பதில் மேனோனை நிலைகொள்ளாமல் தவிக்க வைத்தது. ராமசாமியைப் பயப்பட வைத்தது யார் அல்லது எதுவாக இருக்குமென்ற சிந்தனை, மேனோனை வேறெதையும் யோசிக்க விடவில்லை!

ராமசாமியின் திடீர் மரணம் மேனோனையும் டாக்டர் வில்லியத்தையும் பெருமளவு நிலைகுலைய வைத்தது.

தங்கள் இருவருக்கும் எப்போது வேண்டுமானாலும் எதுவும் நடக்கலாம் என்ற பயம் தோன்றியது.

''இந்திராபாய் இனிமேல் வர முடியுமா என்ன? இத்தனை நாட்களாக எந்த ஓர் அடையாளமும் இல்லையே? பிறகு எதற்காக

நாம் வீணாக பயப்பட வேண்டும்?'' மேனோன் தைரியத்தை வரவழைத்துக் கொண் பேசினார்.

''எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. ஆனால், அந்தப் பெண்மணியைப் பற்றி நாம் எதையும் உறுதியாகச் சொல்வதற்கு இல்லை. ஒருவேளை திடுமென்று இந்த இடத்திலேயே கூட வெளிப்படலாம். யார் கண்டது?'' டாக்டர் வில்லியம் ஒப்புக்கு பதிலளித்தார்.

''ராமசாமி அந்த நிலவறைக்குள்தானே இறந்து கிடந்தார்? நாம் அங்கு போய் ஏதாவது தெரிகிறதா என்று பார்த்து விடலாமா?'' மேனோன் கேட்டார்.

''தற்சமயம் நாம் அங்கு போகாமல் இருப்பதே நல்லதென்று தோன்றுகிறது.'' டாக்டர் மறுத்துக் கூறினார்.

ராமசாமியின் மரணம், டாக்டரை அந்த அறைக்குள் நுழைய விடாமல் தடுத்தது.

## 38

இரவு நேரம்.

மணி பன்னிரண்டைத் தாண்டியிருந்தது.

''உங்களுக்குத் தூக்கம் வருகிறதா?'' பார்வதிபாய் கேட்டாள்.

''இதுபோன்ற சம்பவங்கள் அடுக்கடுக்காகத் தொடர்ந்து வரும்போது ஒரு மனிதனால் எப்படித் தூங்க முடியும்?''

''உங்கள் மனதில் இது போன்ற உணர்வுகள் மேலெழும்பக் கூடாது என்பதற்காகத்தான் நான் உங்களுக்குத் துணையாக இருக்கிறேன். ஓர் ஆணின் மன உணர்ச்சிகளைச் சமனப்படுத்த ஒரு பெண்ணால் மட்டுமே முடியும்!'' பார்வதிபாயின் குரல் ரகசியம் போல் ஒலித்தது. ''ஜகதீஷ், நீங்கள் சிலதையெல்லாம் தெரிந்து கொண்டால் திடுக்கிட்டுப் போவீர்கள்!''

''பரவாயில்லை சொல்லுங்கள்!'' ஜகதீஷ் அவளுடைய உடலழகை ரசித்தபடி கூறினார்.

''சொல்லுகிறேன். கடந்த இரண்டு பிறவிகளிலும் இந்திரா பாய் மாந்திரீகத்திலும், தேவி பூஜையிலும் கவனம் செலுத்தி வந்தார். ஆனால், இந்த ஜன்மத்தில் அந்த வழக்கத்தை மாற்ற விரும்பினார்.''

''நான் ஒன்று கேட்கட்டுமா? உங்களால் எப்படி இதையெல்லாம் இவ்வளவு துல்லியமாகச் சொல்ல முடிகிறது?'' ஜகதீஷ் குறுக்கிட்டார்.

''உங்கள் கேள்வி நியாயம்தான்! இதை இதற்கு முன்பே நீங்கள் கேட்பீர்கள் என்று நினைத்தேன். பரவாயில்லை, இப்போதாவது கேட்டீர்களே... போன பிறவியில் அவர் இங்கேதான் இருந்தார். அவர் எனக்கு அத்தை முறையும்கூட''

ஜகதீஷ் வியப்புடன் கவனித்தார்.

''என்ன இதற்கே இப்படி அசந்து போய்விட்டீர்கள்! முழுவதையும் கேளுங்கள். அத்தையின் பெயர் சின்னக்காவுத்தாய். அவர்தான் உண்மையில் இந்திராபாய். பாம்புக்கடியேற்று பன்னிரண்டாவது வயதில் இறந்துபோன சின்னக்காவுத்தாயின் உடம்பில் இந்திராபாய் புகுந்து கொண்டார். சின்னக்காவுத்தாய் நூற்றியிருபது வயதுவரை வாழ்ந்தார். அதுவரை அவரது அழகுக்கு எந்தவிதமான குறைவும் ஏற்படவில்லை.''

மோகினி கதையைக் கேட்கும் குழந்தையைப் போல் ஜகதீஷ், பார்வதிபாயின் முகத்தையே பார்த்தார்.

ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான கதையைச் சொல்கிறார்கள். கொச்சு உண்ணித் தம்புரான் இதைவிடச் சற்று வித்தியாசமான கதையை கூறினார்.

இருப்பினும் இந்தக் கதையில் ஒருவித ஒற்றுமையும் கோவையும் உள்ளது என்பதையும் மறுக்க முடியாது. இருந்தாலும் இந்திராபாயைப் பலரும் பலவிதமாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்பதும் விளங்கியது.

''சின்னக்காவுத்தாயின் உடலிலிருந்துதான் அவர் இந்திரா பாயின் உடம்பில் புகுந்தார். அதுதான் அவருடைய இப் போதைய பிறவி. அதாவது, அந்த அரண்மனையில் வளர்ந்த இந்திராபாய் என்ற பெண் குழந்தை, பாம்புக் கடியேற்று இறந்தபோது அந்த உடம்பில் இவர் பிரவேசித்துள்ளார்.''

''உண்மையிலேயே நம்ப முடியாத ஒரு மாந்திரீகக் கதைதான்...'' ஜகதீஷ் கூறினார்.

''மறுபிறவியைக் குறித்தும், மற்றொரு உடலில் புகுந்து கொள்வதைக் குறித்தும் மனிதர்களிடம் பெரிய ஞானமிருப்ப தாகக் கூறமுடியாது. பத்து வயதில் ஐம்பது வயதின் அறிவுத் திறன் கொண்டவர்களாக இருக்கிறார்களே... அவர்களைப் பற்றி யாருமே நினைத்துப் பார்ப்பதில்லை. நமக்குத் தெரியாத விஷயங் களை நாம் மூர்க்கமாக மறுத்துப் பிடிவாதமாகப் பேசுகிறோம்.''

''நீங்கள் சொல்வது ஒரு வேளை சரியாகவும் இருக்கலாம்.''

''இந்திராபாயாக மாறி வெகுகாலமாகவிட்டது. முதுமையை வென்று விட்டார். அந்த அரண்மனையில் இருந்த எல்லாரும் காலமாகியும்கூட அவர் மட்டும் மீதமானார். யாருக்கும் தெரியாமல் அங்கேயே வாழ்ந்திருந்தார்...'' பார்வதிபாய் விளக்குத் திரியை மேலும் உயர்த்தினாள். பின்பு தொடர்ந்தாள்:

''இந்தப் பிறவியில்தான் கெட்ட காலம் அவரைப் பீடித்தது. இப்போது அந்தக் கிரக நிலை மாறிவிட்டது. நீங்கள் நிலவறையி லிருந்து எடுத்து வந்த கல் அவரைக் காப்பாற்றி இருக்கிறது. அந்த நாகமாணிக்கம், அவரது சனி தசையையே மாற்றியமைத்து விட்டது.''

''அப்படியானால் இப்போது அவர் விடுதலையடைந்து, இழந்த சக்தியைத் திரும்பப் பெற்றிருப்பாரா?'' ஜகதீஷ் ஆவலுடன் கேட்டார்.

''அப்படித்தான் இருக்கவேண்டும்!'' பார்வதிபாய் கூறினாள்.

தன்னுடைய லட்சியம் வெற்றியடைந்து விட்டது என்கிற மகிழ்ச்சி ஜகதீஷின் முகத்தில் தெரிந்தது.

''எனக்கு இன்னொரு சந்தேகம்... பார்வதிபாய்! உங்களுடைய போன பிறவி அத்தைதானே இந்திராபாய்... அதுதான் சின்னக்காவுத்தாய்... நீங்கள் எப்படி... ஒரே குழப்பமாக உள்ளதே!''

பார்வதிபாய் உடனேயே விளக்குத் திரியை விரலால் அழுத்தி அணைத்தாள். அறையுள் இருள் நிறைந்தது.

அவளின் திண்மையான மார்பகங்கள் ஜகதீஷின் மார்பைத் தழுவின.

அவளின் ஈரமான உதடுகள் அவர் உதடுகளில் பதிந்தன.

ஜகதீஷ் ஒரு பஞ்சுத் துணுக்கு போல் அண்டவெளியில் பறந்தார்.

நீண்டநேரத்திற்குப் பிறகு, தான் தன்னுடைய கட்டிலில் படுத்திருப்பதை உணர்ந்தார் ஜகதீஷ். பார்வதிபாய் எழுந்திருக்க முயன்றாள்.

''அந்த விளக்கைக் கொஞ்சம் ஏற்றுங்கள்!'' ஜகதீஷ் கேட்டார்.

''துளசியிலை போட்ட குளிர்ந்த நீரை சொம்பில் ஊற்றி வைத்திருக்கிறேன். நான் போன பிறகு நீங்கள் விளக்கை ஏற்றுங்கள். விடிந்த பிறகு லதிகா வருவாள். காலைப் பலகாரத்தைச் சாப்பிட்ட பிறகு புறப்பட்டால் போதும்.''

''என்ன... என்ன சொல்கிறீர்கள்? எனக்கு எதுவும் புரியவில்லை...'' ஜகதீஷ் தடுமாறியபடி கேட்டார்.

''நான் சொல்லட்டுமா?'' பார்வதி கட்டிலிலிருந்து எழுந்து துளசியிலைத் தண்ணீர்ச் சொம்பை ஜகதீஷின் கையில் கொடுத்தாள்.

அவ்வளவு தண்ணீரையும் ஒரே மூச்சில் குடித்தார் ஜகதீஷ்.

''நான் நாளைக்கே புறப்பட வேண்டுமா?''

ஜகதீஷை ஒரு கணம் உற்றுப் பார்த்த பார்வதி சட்டென்று அவர் கன்னத்தில் முத்தமிட்டாள்.

''இப்படிப்பட்ட ஒருவர் இங்கு வருவார் என்பதும், நான் சந்திக்க வேண்டுமென்பதும் எனக்கு ஏற்கெனவே தெரியும். இம்மாதிரியான நெருக்கமான சந்தர்ப்பங்கள் இல்லாமல் நான் இந்த இடத்தைவிட்டு வெளியேற முடியாது. என் அப்பா மகாமாந்திரீகரான நம்பூதிரி. அம்மாவும் ஒரு மாந்திரீகரான நம்பூதிரியின் மகள். இந்த நிலைமையில் ஒரு கன்னிப் பெண்ணாகவே இறந்து விட்ட நான் ஒரு ரக்ஷஸாக அலைய முடியாது. எனவேதான் இப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்தேன். அது நிறைவேறவும் செய்தது. நம்மிடையே இந்தத் தொடர்பு மட்டும் இல்லாமலிருந்தால், நில வறைக்குள் இருந்த பாம்பு உங்களைத் தீண்டித் தொல்லைப் படுத்தியிருக்கும். நான் இப்போது புறப்படுவது உங்களுக்குப் பிடிக்காவிட்டால், நீங்கள் உறங்கிய பிறகு புறப்படுகிறேன், சம்மதமா?'' என்றபடி ஜகதீஷை இறுக அணைத்தாள் பார்வதிபாய்.

அவள் உடம்பு வியர்வையால் நனைந்திருந்தது. அந்த வியர்வைத் துளிகள் ஜகதீஷின் உடம்பிலும் படிந்து வழிந் தோடியது. மேற்குப் புறமாகத் திறந்து கிடந்த ஜன்னல் வழியாக உள்ளே நுழைந்த காற்று குளிரை ஏற்படுத்தியது.

ஜகதீஷ் உறங்கினார்.

லதிகா வந்து எழுப்பியபோதுதான் எழுந்தார்.

எழும்போது கழுத்தில் ஏதோ இழுத்துப் பிடிப்பதுபோல் தோன்றியது. இடது கையால் இழுத்தெடுத்தார். இரண்டு நீண்ட தலை முடியிழைகள்.

என்ன!

அந்த முடியிழைகள் வெள்ளிக் கம்பிகளைப் போல் நரைத் திருந்தன. இது பார்வதிபாயினுடையதா? அப்படியானால்... அவள் அவ்வளவு வயதான பெண்ணா?

ஓர் ஆடவனுடன் சேர்வதற்காக இதுவரை காத்திருந்தாளா?

'ஒரு பிரம்மரக்ஷஸாக மாறி அலையாமல் இருப்பதற்காக ஓர் ஆடவனுடன் சேர வேண்டி இருந்தது என்று சொன்னதே

இதற்காகத்தானா? இனிமேல் வரமாட்டாளா? அப்படித்தான் தோன்றுகிறது. அதன் அர்த்தம் அவளுடைய லௌகிக வாழ்க்கை பூர்த்தியடைந்து விட்டதா? லதிகாவிடமே கேட்டுவிட்டால் என்ன?'

''என்ன இன்றைக்கு இவ்வளவு தாமதமாக எழுந்திருக் கிறீர்கள்?'' காபித் தம்ளரை மேஜை மீது வைத்தபடி கேட்டாள் லதிகா.

''இரவு முழுவதும் பார்வதி என்னுடன் தங்கியிருந்தார். எனவே, உறங்குவதற்கு நேரமாகிவிட்டது...'' லதிகாவின் கண்களைப் பார்த்தபடி ஜகதீஷ் பேசினார்.

''இனிமேல் தம்புராட்டி வர மாட்டார்கள் இல்லையா?'' லதிகா கேட்டாள்.

''வரமாட்டார் என்றுதான் தோன்றுகிறது!''

''அப்படியானால், நீங்களும் உடனே புறப்பட்டு விடுவீர்கள் இல்லையா?''

''ஆமாம்... நான் எதிர்பார்த்த காரியங்கள் பாதிக்கு மேல் நடந்து விட்டதாகத் தோன்றுகிறது.''

''இந்திராபாயை விடுதலை செய்வதற்குரியதெல்லாம் முடிந்து விட்டதா?''

''சொன்னதையெல்லாம் செய்தேன்... அவ்வளவுதான். எனக்கு வேறு எதுவும் தெரியவில்லை!'' ஜகதீஷ் கூறினார்.

''நீங்கள் இதுவரை மூன்று இடத்துக்குப் போனீர்கள் இல்லையா? இதுதான் கடைசி இடம். அந்த நாகமாணிக்கம் மட்டும் உங்கள் கையிலிருந்தால் போதும்... பிறகு எதற்கும் பயப்பட வேண்டியதில்லை!''

''நான் முதலில் குளித்துவிட்டு வருகிறேன்!'' தம்ளரை மேஜை மீது வைத்துவிட்டு குளத்தை நோக்கி நடந்தார் ஜகதீஷ்.

லதிகா ஒரு நிமிடம் யோசித்தாள். தனக்கும் இதுவரை விமோசனம் கிடைக்கவில்லை.

கோயில் பூசாரியாக இருந்த நம்பூதிரி ஒருவர் மூலம் பிறந்தவள் லதிகா. அம்மாவோ வாரிசற்றுப் போன குடும்பம் ஒன்றின் கடைசி வாரிசு! அனாதையான தாய் பதினேழு வயதில் பருவம் பொங்கச் செழித்து வளர்ந்திருந்தாள்.

பூசாரி அந்த ஊரைவிட்டுச் சென்ற சில மாதங்களில் லதிகா பிறந்தாள்.

ஒரு தடவை ஆடு மேய்க்கக் கோயில் மைதானத் திற்குப் போனாள். அந்த சமயம் சட்டென்று ஒரு மாற்றத்தை உணர்ந்தாள்... வயதுக்கு வந்துவிட்டிருந்தாள். உடனே வீட்டுக்கு ஓடிவந்தாள். அம்மாவிடம் விஷயத்தைக் கூறினாள்.

''கடவுளே... கோயிலிலா இது நடந்தது! லதிகா நாம் பயப்பட வேண்டிய விஷயம். சர்ப்பக் கோபம் பொல்லாதது!'' அம்மா பரிதவிப்புடன் திணறினாள்.

''அம்மா நான் வேண்டுமென்று அப்படி நடந்து கொள்ள வில்லையே?'' லதிகா கேட்டாள்.

''என்ன இருந்தாலும் கோயில் மைதானத்தை அசுத்தப்படுத் தியதற்கான தண்டனை கிடைத்தே தீரும். நாலாவது நாளுக்குப் பிறகு கோயில் ஆலமரத்திற்கு அடியில் உள்ள நாகதேவதைக்கு மஞ்சளையும், பாலையும் ஊற்றி வா...'' அம்மா கூறினாள்.

ஆனால், அசுத்தமடைந்த கோயில் மைதானத்திற்குப் பரிகாரம் எதுவும் செய்யாததால் ஏற்பட்ட சர்ப்பக்கோபம் லதிகாவைப் பழி வாங்கிவிட்டது.

லதிகா இறந்தது இப்படித்தான்.

அதன்பிறகு வருடங்கள் எத்தனையோ கடந்துவிட்டன. ஒரு பிரம்மரக்ஷஸாக மாறிய லதிகாவை பார்வதிபாய் தான் காஞ்சிர மரத்தில் ஆணி அறைந்து கட்டுப்படுத்தி வைத்தாள்.

ஜகதீஷ் வந்தபோதுதான் பார்வதி பாய்க்கு விடுதலை கிடைத்தது. ஆனால், லதிகாவைப்பற்றி நினைக்காமல் பார்வதிபாய் தன்னுடைய வழியை மட்டும் பார்த்துக் கொண்டு போய்விட்டாள்.

ஜகதீஷ் குளித்துவிட்டு வந்ததும் லதிகா சூடான இட்லி-சாம்பாரும், காபியும் கொடுத்தாள்.

''உங்களது அடுத்த நடவடிக்கை என்ன?'' லதிகா கேட்டாள்.

''புறப்படவேண்டியதுதான். நான் வந்த நோக்கம் நிறைவேறிவிட்டது. இந்நேரம் இந்திராபாய் தன்னுடைய எல்லாத் தடைகளிலிருந்தும் விடுபட்டிருப்பார்.''

''இன்று செவ்வாய்க்கிழமை அல்லவா, நீங்கள் நாளைக்குப் போகலாமே!''

ஜகதீஷ் சம்மதித்தார்.

அன்று இரவு ஜகதீஷ் படுத்திருந்த அறைக்கு வந்தாள் லதிகா.

''இன்று நான் விடுதலையடையும் நாள்!'' லதிகா, ஜகதீஷின் காதில் மந்திரித்தாள்.

ஜகதீஷுக்கு எதுவும் புரிய்வில்லை.

அவள், அவருடன் ஒன்றிக் கலந்தாள்.

விடியற்கருக்கலில் கோழி கூவியது.

லதிகா, அவர் உடம்பிலிருந்து பிரிந்து எழுந்தாள்.

''நான் வரட்டுமா, இனிமேல் நாம் ஒருபோதும் சந்திக்க முடியாது.''

''ஒருபோதுமா?''

''ஆமாம்... எங்களுடையது ஒரு பிரத்தியேகமான உலகம். அங்கு நீங்கள் வரமுடியாது. நான் வரட்டுமா?'' மீண்டும் நெருங்கி அவரை முத்தமிட்ட பிறகு அவள் காஞ்ஞிரமரத்தை நோக்கி நடந்தாள்.

ஜகதீஷ் டார்ச் லைட் ஒளியை அவள் மீது வீசியவாறே பார்த்தார். மரத்தை நெருங்கிய லதிகா சட்டென்று மறைந்தாள். உற்று கவனித்தபோது அந்த மரத்திலிருந்து ஓர் ஆணி உதிர்ந்து கீழே விழுந்தது.

மரத்தை நெருங்கிய ஜகதீஷ் அந்த ஆணியைக் கையில் எடுத்துப் பார்த்தார். அந்த ஆணி அடித்திருந்த இடம் அதற்குள் அடைபட்டிருந்தது.

ஜகதீஷ் குளத்தில் இறங்கிக் குளித்தார்.

நாகமாணிக்கத்தை அங்கிருந்து எடுத்து பத்திரமாக முடிந்து தனது பைக்குள் வைத்தார். புறப்பட்டார்.

வெளிவாசலைத் தாண்டுவதற்கு முன் ஒருமுறை வீட்டைத் திரும்பிப் பார்த்தார். அந்த வீடு ஆழ்ந்த அமைதியில் மூழ்கியிருந்தது.

நாகமாணிக்கத்துடன் ஜகதீஷ் தமது வீட்டை அடைந்தார்.

வீட்டிற்கு வந்தபிறகு அந்த நாகமாணிக்கத்தை எப்படிப் பயன்படுத்துவது என்று யோசித்தபடியே இரவைக் கழித்தார்.

## 39

**ஹோ**ட்டல் பேலஸின் அறைக்குள் அவர்கள் மூவரும் ஆலோசனையில் மூழ்கியிருந்தனர். உண்ணி மேனோனுடன் டாக்டர் வில்லியமும், பாம்புப் பண்ணை ஒன்றில் பணிபுரியும் ராஜன் என்பவரும் இருந்தார்.

''இதை இப்படியே அடைத்து வைத்திருந்தால் சரிப்படாது. இது காட்டில் சுதந்திரமாக உலவும் ஜீவன்!'' ராஜன் பேசினான்.

''அதற்கு என்ன செய்ய வேண்டும்?'' மேனோன் கேட்டார்.

''ஏதாவது ஒரு அறைக்குள் அதை விட்டு வைப்போம்.''

''அறைக்குள் போட்டு வைப்பதா, அது மேலும் சிக்கலாகி விடாதா?''

''அதெல்லாம் ஒன்றுமில்லை. நமக்குத் தேவைப்படும்போது நானே மறுபடியும் பிடித்துக் கூடைக்குள் போட்டுக் கொள்வேன்.''

மற்ற இருவரும் இதைப்பற்றி ஆலோசித்தனர்.

''வெளியே போவதற்கு வேறு வழி எதுவும் இருக்கக் கூடாது அவ்வளவுதான்.''

''அப்படியானால் ஏ.ஸி. ரூமுக்குள் விட்டுவிடலாமா?'' மேனோன் கேட்டார்.

அவர்களது ஆலோசனையின் முடிவாக அந்த ராஜநாகத்தை ஏர்கண்டிஷன் அறைக்குள் விட்டனர். கூண்டுக்குள்ளிருந்து விடுதலை அளித்த உடனே இறக்கைகள் நீக்கிச் சுத்தம் செய்யப்பட்ட ஒரு கோழியை அதற்கு உணவாகக் கொடுத்தனர்.

ஜகதீஷ் செப்புச் சுவடிகளை ஒவ்வொன்றாகப் படிக்கத் தொடங்கினார். அந்த செப்புத் தகடுகளைப் படிக்கப் படிக்க எதிர்பார்க்காத பலவற்றைத் தெரிந்து கொள்ள முடிந்தது.

தன் கைவசமிருந்த மாணிக்கக் கல்லை இந்திராபாயின் பங்களாவில் நிலவறைக்குள் கொண்டுபோய் வைக்க வேண்டும். அப்போதுதான் இந்திராபாயின் நிலை பழையபடி சக்தி பெறும்.

இப்போது ஹோட்டல் பேலஸாக மாறியுள்ள இந்திரா பாயின் பங்களாவிலுள்ள நிலவறையில் எப்படி நுழைவது என்பதைப் பற்றி யோசித்தார்.

தான் அந்த ஹோட்டலுக்குச் சென்றால், எதிராளிகள் தன்னை உயிருடன் விட்டுவைக்க மாட்டார்கள். ஆனால், அங்கு போகாமலும் இருக்க முடியாது.

என்ன செய்வது!

ஹோட்டலில் வேலை செய்யும் ஏதாவது ஒரு நபரைப் பழக்கப்படுத்திக் கொண்டு நமது காரியத்தைச் சாதிக்க வேண்டியதுதான். ஒரு தீர்மானத்துக்கு வந்தார்.

உடனே போலீஸ் ஸ்டேஷனுக்கு போன் செய்து தனது நம்பிக்கைக்குப் பாத்திரமான கான்ஸ்டபிள் மோகனை வரவழைத்தார்.

மோகன் வந்து சேர்ந்தார்.

முப்பது வயதான மோகனைப் பார்த்தால் சட்டென்று ஒரு போலீஸ்காரர் என்று சொல்ல முடியாது. டான்ஸ் ட்ரூப்பு ஒன்றுடன் தொடர்பு கொண்ட மோகன் கிரைம் பிராஞ்சில் பணிபுரிபவர். எனவே, மேலதிகாரிகள் மோகனுக்கு மட்டும் முடிவளர்க்கும் சலுகையை வழங்கியிருந்தனர்.

''உங்களை ஒரு முக்கியமான விஷயத்திற்காக அழைத்திருக்கிறேன்...'' மோகனைக் கண்டவுடன் ஜகதீஷ் கூறினார்.

''சொல்லுங்கள் சார். நீங்கள் என்ன சொன்னாலும் செய்யத் தயாராக இருக்கிறேன்!'' மோகன் பதிலளித்தார்.

''முதல்ல ஹோட்டல் பேலஸில் வேலை செய்யும் ஒருவரை - அவர் நடனம், நாடகத்தில் ஆர்வமுள்ளவராக இருப்பது நல்லது. அப்படிப்பட்டவருடன் நட்பை ஏற்படுத்திக் கொண்டு இங்கு அழைத்து வரவேண்டும்.''

''அதற்கென்ன சார்... தாராளமாகச் செய்கிறேனே!'' என்றபடி விடைபெற்றார் மோகன்.

அன்று மாலை நேரத்திலேயே பேரர் ஒருவரை அழைத்து வந்தார் மோகன். வந்த பேரர் 'சினிமாப் பித்து' பிடித்தவர். பெயர் ஜார்ஜ்.

''மிஸ்டர் ஜார்ஜ், நான் உங்களுக்கு சினிமாவில் ஒரு சந்தர்ப்பம் வாங்கித் தரலாமென்று நினைக்கிறேன். என் நெருங்கிய நண்பர் ஒருவர் ஒரு படம் எடுக்க விரும்புகிறார். என்ன சொல்கிறீர்கள்?'' ஜகதீஷ் கேட்டதும் ஜார்ஜின் முகம் பிரகாசமடைந்தது.

தான் கனவிலும் எதிர்பார்க்காத ஒரு சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. அதுவும் இன்ஸ்பெக்டர் ஜகதீஷ் உறுதி அளிக்கிறார்.

''சரி, நான் என்ன செய்ய வேண்டும்... சொல்லுங்கள்!'' ஜார்ஜ் கேட்டார்.

''ஹோட்டல் பேலஸில் தரை மட்டத்திற்குக் கீழே ஒரு நிலவறை உள்ளது. அதை முதலில் கண்டுபிடிக்க வேண்டும். அது மட்டுமின்றி, உண்ணி மேனோனும் டாக்டர் வில்லியமும் இல்லாத நேரத்தில் என்னை நீங்கள் அங்கு அழைத்துச் செல்லவும் வேண்டும்!'' ஜகதீஷ் தனது தேவையைத் தெரிவித்தார்.

ஜார்ஜ் சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்த பிறகு பேசினார்: ''சார் நீங்கள் குறிப்பிடும் நிலவறையை இதுவரை நான் பார்த்ததில்லை. சில அறைகளுக்குள் நுழைந்து விட்டால் எப்படி வெளியேறுவது என்பதே தெரியாமல் குழப்பமாக இருக்கும்.''

''அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. நானே அந்த இடத்தைக் குறிப்பாகச் சொல்லி விடுகிறேன்...'' ஜகதீஷ் செப்புச் சுவடியை எடுத்து பார்த்தார்.

அதன் ஒரு பகுதியில் அந்தக் கட்டடத்தின் மாதிரி வரைபடம் இருந்தது.

''இதோ தெரிகிறதே. இதுதான் பூஜையறை. இப்படி ஒரு அறையை நீ அங்கு பார்த்திருக்கிறாயா?''

''இல்லை சார்... பார்த்தில்லை!''

''இந்த அறை நிலவறைப் பகுதியில் உள்ளது. நான் சொன்ன விவரங்களைத் தெளிவாகத் தெரிந்து கொண்டு, விரைவில் எனக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும். அதற்குப் பிறகு செய்ய வேண்டியதை அப்புறம் சொல்கிறேன்.''

''நீங்கள் சொல்லியபடி எல்லாவற்றையும் கண்டுபிடிக்க முயல்கிறேன்!'' ஜார்ஜ் ஒப்புக் கொண்டார்.

ஜார்ஜ் அங்கிருந்து விடைபெற்றார்.

''மோகன் நீங்கள் புறப்படலாம். ஜார்ஜ் கொண்டுவரும் விவரங்களின் அடிப்படையில்தான் நாம் அடுத்த திட்டத்தை வகுக்க முடியும்!'' ஜகதீஷ் கூறினார்.

மோகனும் விடை பெற்றார்.

இரவு மணி பதினொன்றைத் தாண்டிய பிறகும் ஜகதீஷ் செப்புத் தகடுகளை வாசித்துக் கொண்டிருந்தார். நிலவறைக்குள் நுழைந்த பிறகு செய்ய வேண்டிய வேலைகள் என்னென்ன வென்று அந்தத் தகடுகளில் குறிப்பிடப்பட்டிருந்தன.

டாக்டர் வில்லியமும், உண்ணி மேனோனும், ராஜனும் குவார்ட்டர்ஸை நெருங்கியிருந்தனர்.

ஜகதீஷ் அறைக்குள் அமர்ந்து படிப்பதை அவர்கள் ஜன்னல் வழியாகப் பார்த்தனர்.

''என்ன கூடையைத் திறந்து விடட்டுமா?'' ராஜன் ரகசியமான குரலில் கேட்டார்.

''ம்... அதோ உள்ளே இருக்கும் சப்-இன்ஸ்பெக்டர்தான் நம்முடைய குறி!'' மேனோன் எச்சரித்தார்.

ராஜன் கூடையைத் திறந்து பாம்பை அந்த அறைக்குள் விட்டார்.

ராஜநாகம் ஜகதீஷின் அறைக்குள் நுழைந்ததும் தனது பிரமாண்டமான படத்தை விரித்தபடி ஜகதீஷின் தலைப்பகுதியை நெருங்கியது.

அடுத்த விநாடி அந்தப் பாம்பு ''ஸ்...ஸ்...ஸ்'' என்று சீறியபடி ஜகதீஷை ஒட்டி நின்றது. சட்டென்று செப்புச் சுவடியிலிருந்து தலையை உயர்த்திய ஜகதீஷுக்கு நேராக இரண்டு சிவப்புநிறக் கண்கள் தெரிந்தன.

ஜகதீஷ் என்ன செய்வது என்று புரியாமல் துப்பாக்கியை எடுப்பதற்காக மேஜையின் டிராயரைத் திறந்தார்.

என்ன அதிசயம்!

அந்த அறை முழுவதும் ஒளிமயமானது. நாகமாணிக்கத்தின் ஒளி கண்களைக் கூசச் செய்வதாக இருந்தது.

பாம்புகளின் மன்னனான ராஜநாகம் அந்த ஒளியின் முன்னால் தாக்குப்பிடித்து நிற்க முடியாமல் தத்தளித்தது.

கண்மூடித் திறப்பதற்குள் படத்தை தாழ்த்தி வந்த வழியே அது திரும்பியது.

வந்த வழியே ஜன்னலைக் கடக்க முற்பட்டபோது டாக்டர் வில்லியத்தின் தலைதான்; முதலில் தெரிந்தது. ராஜநாகம் அந்தத் தலையின் மீது ஓங்கிக் கொத்தியது.

''ஐயோ!'' என்று அலறிய டாக்டர் வில்லியம் பின்புறமாக மல்லாந்து விழுந்தார். ராஜநாகம் இருளில் கலந்து மறைந்தது.

டாக்டரின் உடலை வாரியெடுத்த மேனோன் காரில் ஏறிப் பறந்தார். மருத்துவமனையை நெருங்குவதற்குள் டாக்டர் வில்லியத்தின் நிலை மிகவும் மோசமானது. எவ்வளவு முயன்று போராடியும் டாக்டர்களால் டாக்டர் வில்லியத்தைக் காப்பாற்ற முடியவில்லை.

மறுநாள் மதியம் பன்னிரண்டு மணியளவில் ஹோட்டல் பேலஸின் பேரர் ஜார்ஜ், ஜகதீஷை சந்திப்பதற்காக வந்தார்.

''சார்... நான் நிலவறையிலுள்ள பூஜையறையைக் கண்டு பிடித்து விட்டேன். ஆனால், அதுதானா என்பது உறுதியாகத் தெரியவில்லை!'' ஜார்ஜ் கூறினார்.

''இருந்தாலும் நீங்கள் கண்டுபிடித்ததை முதலில் சொல்லுங்கள்.''

''ஏறத்தாழ ஹோட்டலின் மையப்பகுதியில் ஓர் அறை இருக்கிறது. அதை எப்போதும் பூட்டியே வைத்திருக்கிறார்கள். பூட்டும் பழைய காலப் பூட்டாகத் தெரிகிறது. கொக்கிகளும், தாழ்களும்கூடப் பழங்காலத்தைச் சேர்ந்தவை போலவே உள்ளன. அந்த அறையுடன் பங்களாவின் வேறு எந்த அறைக்குமோ, சுவர்களுக்குமோ எந்தவிதமான தொடர்பும் கிடையாது. அதன் பின்புறமாக ஒரு கதவு உள்ளது. ஏறத்தாழ ஒன்றரையடி அகலமும், இரண்டடி உயரமும் உள்ள கதவு அது. அதையும் ஒரு பழங்காலப் பூட்டால் பூட்டி வைத்துள்ளனர். அதைத் திறக்க முடியுமா என்பதும் சந்தேகமாக உள்ளது.''

''நீங்கள் சொல்வதைப் பார்த்தால், அதுதான் நான் குறிப்பிட்ட பூஜையறை என்று தெரிகிறது. அங்கு செல்வதற்கு என்ன வழி?'' ஜகதீஷ் கேட்டார்.

''அது கொஞ்சம் கடினமான காரியமாகத் தெரிகிறது.''

''ஏன்?''

''அந்தப் பகுதியில் ஆயுதம் தாங்கிய நான்கு பேர் காவல் இருக்கிறார்கள். பார்வைக்கு அவர்களும் பேரர்கள் மாதிரியே இருப்பார்கள். யாருக்கும் அந்தப் பக்கம் போக அனுமதியில்லை. அவர்களிடம் துப்பாக்கிகள் உள்ளன.''

''நீங்கள் கூடவா?''

''நான் அங்கே போனது அவர்களுக்குச் சாப்பாடு கொடுப்பதற்காக. என்னிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்து இருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த இடத்தைக் காவல் காப்பதைத் தவிர வேறு வேலை கொடுக்கப்படுவதில்லை!''

''நான்கு பேர்தானே இருக்கிறார்கள்?'' ஜகதீஷ் கேட்டார்.

''ஆமாம் சார்!''

''இரவு பகல் அங்கு காவலுண்டா?''

''உண்டு.''

''எப்போது ஆட்களை டியூட்டி மாற்றுவார்கள்?''

''நான்கு மணி நேரத்துக்கு ஒரு தடவை!''

ஜகதீஷ் யோசனையில் ஆழ்ந்தார்.

'என்ன செய்வது? ஆயுதம் தாங்கி நிற்கும் அவர்களைத் தாண்டி நிலவறைக்குள் போவது சுலபமல்ல.'

''ஜார்ஜ், நிலவறைக்குள் போக உங்களுக்கு ஏதாவது ஐடியா தோன்றுகிறதா?'' ஜகதீஷ் கேட்டார்.

''தற்சமயம் என்னால் எதையும் சொல்ல முடியவில்லை, சார்!'' ஜார்ஜ் ஒப்புக் கொண்டார்.

சட்டென்று ஜகதீஷின் மனத்தில் ஒரு திட்டம் உதயமானது.

''ஜார்ஜ், எனக்கு ஒரு ஐடியா தோன்றுகிறது.''

''சொல்லுங்கள் சார்!''

''அந்தக் காவல்காரர்கள் நான்கு பேரில் நான் ஒருவனாக இடம் பெற முடியுமா?''

ஜார்ஜ் யோசனையில் ஆழ்ந்தார்.

''அது எப்படி சாத்தியம்?''

''இந்த நான்கு பேரும் எப்படி டியூட்டி மாறுவார்கள்?''

''இரண்டாவது மாடியில் பதினேழாம் நம்பர் அறை அவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.''

''மாறும் நேரங்கள் எவை?''

''இரவு எட்டு மணி, பன்னிரண்டு, பிறகு நான்கு மணி...''

''இதில் நமக்கு ஏற்ற நேரம் எது?''

''எனக்குத் தெரிந்தவரை விடியற்காலை நான்கு மணிதான் நல்லது!''

''அதைவிட இரவு பன்னிரண்டு மணிதானே நல்லது?''

''இல்லை சார்... இரவு பன்னிரண்டு மணிக்கு வருபவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருப்பார்கள். சந்தேகம் ஏற்பட்டால் உடனே துப்பாக்கியை எடுத்து விடுவார்கள்.''

''சரி... நான் இன்று இரவு பதினோரு மணிக்கு அங்கு வருகிறேன்...'' ஜகதீஷ் கூறினார்.

ஜார்ஜ் விடை பெற்றார்.

சுருட்டையான தலைமுடியுள்ள விக்கைப் பொருத்திக் கொண்டு, கண்ணில் டே அன்ட் நைட் கண்ணாடியை அணிந்து மெடிகல் ரெப்ரசென்டேட்டிவ்களின் ஒரு பேகுடன் ஜகதீஷ் தனது பைக்கில் ஏறினார்.

பைக்கை இருண்ட பார்க்கிங் பிளேஸில் நிறுத்தினார்.

நேராக விசாரணை கௌண்டரை அணுகினார்.

''வாடகைக்கு ஒரு அறை வேண்டும்!''

கௌண்டரில் இருந்தவர் சாவிக் கொத்துகள் தொங்கும் போர்டைப் பார்த்தார். பிறகு ரிஜிஸ்டரை நகர்த்தி வைத்தார்.

''சார் ரூம் நம்பர் பதினெட்டு மட்டும் காலியாக உள்ளது. டபுள் ரூம்... நாளொன்றுக்கு வாடகை நூற்றுப்பத்து ரூபாய்!''

''இரவில் என்னுடன் மற்றொரு நண்பர் வந்து கலந்து கொள்வார்..''

ரிசப்ஷனில் இருந்தவர் ரூம்பாய் ஒருவனை அழைத்து சாவியைக் கொடுத்து, ''சாருக்கு ரூமைக் காட்டு!'' என்றார்.

ஜகதீஷ் அறைக்குள் வந்து கதவை மூடினார்.

மணி பதினொன்றைத் தாண்டியிருந்தது.

ஜார்ஜ் வந்தார்.

''அடுத்த ஷிஃப்ட் டியூட்டிக்குப் போக வேண்டியவர்கள் இன்னும் கொஞ்ச நேரத்தில் புறப்பட்டு விடுவார்கள். என்ன செய்யலாம்?''

''சொல்கிறேன்! நீங்கள் ஓர் உதவி செய்ய வேண்டும். விடியற்காலை மூன்று மணிக்கு இங்கு வாருங்கள்...'' ஜகதீஷ் கூறினார்.

ஹோட்டல் பேலஸ் ஏறத்தாழ உறங்கி விட்டிருந்தது.

அன்று அங்கு காபரே நடனம் இருந்தது.

அன்று காபரே நடனமாடும் நடிகை காபரே மற்றும் கதக் நடனங்கள் தெரிந்தவர்.

காபரே நடனக்காரி ரிசப்ஷனிஸ்ட்டின் அருகே வந்தாள்.

''ரூம் நம்பர் பதினெட்டில் இருப்பவரை நான் பார்க்க வேண்டும்!'' அவள் குரல் இனிமையாக இருந்தது.

ரிசப்ஷனிஸ்ட் அவளை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தார். பிறகு அவளுடன் ரூம் நம்பர் பதினெட்டை நோக்கிப் படிகளில் ஏறினார்.

## 40

**ப**தினெட்டாம் நம்பர் அறையில் தங்கியிருந்தவர் ஜகதீஷ்.

அவரை சந்திக்க விரும்புகிறாள் இந்த காபரே நடனப் பெண்மணி. பொதுவாக இந்த மாதிரியெல்லாம் நடப்பதில்லை. காபரே பெண்களைத் தேடி பெரும் புள்ளிகள்தான் வந்து சேர்வார்கள். இங்கு அந்த வழக்கம் தலைகீழாகி விட்டிருக்கிறது.

அவர்கள் படியேறியபோது, பின்புறத்தில் இருந்து யாரோ கைதட்டி அழைப்பது போல் இருந்தது. ரிசப்ஷனிஸ்ட் திரும்பிப் பார்த்தார்.

நகரத்தின் பெரும் புள்ளி மிஸ்டர் சங்கர். கள்ளக் கடத்தல் மன்னர். படிக்கட்டின் கீழே நின்றிருந்தார். எத்தனையோ கோடிகளின் சொந்தக்காரர்.

''ஹலோ நில்லுங்கள்!'' ரிசப்ஷனிஸ்ட் அந்தப் பெண்மணியிடம் கூறினார்.

''யார் அவர்?'' அலட்சியமாகக் கேட்டாள்.

''அவரைத் தெரியாதா உங்களுக்கு? மிஸ்டர் சங்கர். கோடீஸ்வரர். கள்ளக்கடத்தல் பேர்வழி. அவர் யாரையாவது அழைத்தால், அவர்கள் வாழ்க்கையில் கரையேறி விட்டதாக அர்த்தம். நீங்களும் கரையேறி விட்டீர்கள்!'' என்றபடி படியிறங்கினார் ரிசப்ஷனிஸ்ட்.

சங்கர் அவரை நெருங்கிய பிறகு கேட்டார். ''என்ன சார்?''

''நான் சொல்லாமலே உங்களுக்குப் புரிந்திருக்க வேண்டுமே...'' சங்கர் தடித்த குரலில் கேட்டார்.

''இதற்கெல்லாம் நீங்கள் சொல்லவோ, இந்த இடம் வரை வர வேண்டியதோ இல்லையே சார். என்னிடம் போனில் சொல்லியிருந்தாலே போதும்!''

''வேறு யாரையாவது சந்தித்துவிட்டு வருவதானால், அவள் எனக்கு வேண்டாம்.''

''அதை நான் ஏற்பாடு செய்கிறேன் சார். இப்போது அவள் பதினெட்டாம் நம்பர் அறையிலுள்ள ஒருவரை சந்திக்கப் போகிறாள்.''

''அது யார் அப்படிப்பட்ட நபர்!''

''ஆள் சற்று சிக்கலானவராகத் தெரிகிறார். அதையெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் கேட்டுக் கொண்டபடி அவளை அழைத்து வருகிறேன். நீங்கள் உங்களது அறையில் காத்திருங்கள் சார்... இதோ வந்து விடுகிறேன்.''

சங்கர் திரும்பி நடந்தார்.

''அந்த மனிதர் உங்களிடம் என்ன கேட்டார்?'' நடனப் பெண்மணி கேட்டாள்.

''அவர் உங்களை உங்களை மிகவும் விரும்புகிறார். அறைக்கு அழைத்து வரச் சொன்னார். நீங்கள் கெட்டிக்காரத் தனமாக நடந்து கொண்டால்... லட்சங்களைக் கூட அவரிடமிருந்து கறக்கலாம்.''

''ஓகோ... அதுதான் விஷயமா? உண்மையிலேயே இது ஒரு நல்ல வாய்ப்புதான். ஆனால், நான் ஓர் ஒழுங்கு முறையைக் கடைப்பிடிப்பவள். முதலில் அழைத்தவரை முதலில் சந்திப் பேன்.''

''ஐயோ நீங்கள் இப்படிச் சொல்லிவிட்டால்... அது இருவருக்குமே நல்லதல்ல.''

''யார் அந்த இருவர்?''

''நாம் இருவர்தான்!''

''அவ்வளவுதானே! அதை நான் பார்த்துக் கொள்கிறேன். முதலில் நான் அவரை சந்தித்துவிட்டு வருகிறேன். அவரிடம் சொல்லுங்கள், நான் மூன்று நிமிடத்தில் வந்து விடுகிறேன் என்று. பதினெட்டாம் நம்பர் அறையில் இருப்பவரிடம் இரண்டொரு வார்த்தை பேச வேண்டி உள்ளது, அவ்வளவுதான்!''

ரிசப்ஷனிஸ்ட் இந்த பதிலால் ஆறுதலடைந்தது போல் தெரிந்தார்.

பதினெட்டாம் நம்பர் அறையை அடைந்தனர்.

அவள் கதவைத் தட்டுவதற்காகக் கையை உயர்த்துவதற்குள் ஜகதீஷ் கதவைத் திறந்தார்.

எதுவும் பேசாமல் உள்ளே நுழைந்தவள், தானே கதவை மூடினாள்.

''நீங்கள் ஜகதீஷ்தானே!''

அந்தக் கேள்வி அவரை வியப்படைய வைத்தது.

''ஆமாம்!''

அவள் கட்டிலில் அமர்ந்தாள்.

''என்னை உங்களுக்குத் தெரிகிறதா?''

''இல்லையே?''

''நல்லது! காபரே பார்க்க வந்திருந்தீர்கள்... இல்லையா? நான் கவனித்தேன்!'' சிரித்தபடியே பேசினாள்.

மனத்தைக் கொள்ளை கொள்ளும் சிரிப்பு!

ஜகதீஷ் வியப்பு மாறாதவராக அவளைப் பார்த்தார்.

''நான் இப்போது மற்றொருவரை சந்திக்க வேண்டி உள்ளது. எனவே, அதற்குள் நீங்கள் ஒரு வேலை செய்ய வேண்டும்...''

அவள் பேசி முடிக்கும் முன்பே கதவு தட்டப்பட்டது.

அவளே எழுந்து கதவைத் திறந்தாள்.

வெளியே ஜார்ஜ் நின்றிருந்தார்.

''ஹலோ ஜார்ஜ்!'' ஜகதீஷ் அழைத்தார்.

''கண்டுபிடித்து விட்டேன்...'' ஜார்ஜ் கூறினார்.

''அப்படியானால் தயங்காதீர்கள். ஜார்ஜ் சொல்வது போலவே நடந்து கொள்ளுங்கள்...'' நடனப் பெண்மணி கூறினாள்.

''நீங்கள் எதை மனத்தில் வைத்துக் கொண்டு பேசுகிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை!'' ஜகதீஷ் அவளிடம் கேட்டார்.

''இப்போதைய நிலையில் நான் மிஸ்டர் சங்கரை நழுவவிட முடியாது. நானே எதிர்பார்க்காத ஒரு வாய்ப்பு அது. இந்த ஹோட்டலில் பாதி ஷேர் அவருடையது. எனவே, அப்படிப் பட்டவரை ஏமாற்றக் கூடாது இல்லையா?'' அந்தப் பெண்மணி வெளியேறினாள்.

ஜார்ஜ், ஜகதீஷைக் கீழ்த்தளத்திற்குக் கொண்டு வந்தார்.

அந்த பங்களாவின் - ஹோட்டலின் நடுப்பகுதிக்கு வந்த ஜார்ஜ் கூறினார்: ''இந்த அறையைச் சாதாரணமாகத் திறப்பதில்லை. இந்த அறைக்குள்தான் ராமசாமி மரணம் அடைந்தார்.''

''இந்த அறையை நான் பார்க்கலாமா?'' ஜகதீஷ் கேட்டார்.

''சாவிகளைத் தந்திரமாக எடுத்து வந்திருக்கிறேன். தாராளமாகப் பார்க்கலாம்!'' ஜார்ஜின் கையில் ஒரு கொத்துச் சாவி இருந்தது.

அந்த அறையைத் திறந்தார்கள்.

உள்ளே ஏராளமான சிலைகள் இருந்தன. ஜகதீஷ் ஒவ்வொரு சிலையாகப் பார்த்தார். ஒரு சிலையின் மீது உயிருள்ள பாம்பு ஒன்று ஊர்ந்து கொண்டிருந்தது. அதன் கீழ்ப்புறத்தில் அழகான பெண் சிலை ஒன்று இருந்தது. ஜகதீஷ் அதை உற்றுப் பார்த்தார். இந்திராபாயின் வடிவம் கொண்ட சிலை அது.

ஜகதீஷ் அதைக் கையில் எடுத்தார்.

''வாருங்கள் ஜார்ஜ்... மற்றவற்றை நான் பார்த்துக் கொள்கிறேன்.'' ஜகதீஷ் அந்தச் சிலையை மறைத்துப் பிடித்தபடி வெளியே வந்தார்.

''இனி நீங்கள் கதவைப் பூட்டிக் கொள்ளலாம். நான் அவசரமாக ஒரு வேலை செய்ய வேண்டி உள்ளது!'' ஜகதீஷ், ஜார்ஜிடமிருந்து பிரிந்தார்.

காபரே பெண்மணி, சங்கரின் அறைக்குள் வந்து சேர்ந்தாள்.

''நீங்கள் வரத் தாமதமாகுமென்று நினைத்தேன்...'' சங்கர் பேசினார்.

''நீங்கள் காபரே பார்க்க வந்திருந்தீர்கள் இல்லையா?''

''ஆமாம் வந்திருந்தேன். கடைசி நேரத்தில் அந்தப் பாவிகள் சீக்கிரமாக விளக்கை அணைத்துவிட்டார்கள்!'' சங்கர் ஏமாற்றத்துடன் பேசினார்.

''உங்களுக்கு இந்த ஹோட்டலில் பாதிப் பங்கு இருக்கிறது இல்லையா?''

''பாதியென்ன, முக்கால் பங்கும் என்னுடையதுதான். உண்மையைச் சொன்னால் நான்தான் இதன் முழு உரிமையாளன். உண்ணி மேனோன் அரசாங்க அதிகாரியாயிற்றே. எனவே, அவர் வெளியில் அப்படிச் சொல்லிக் கொள்ள முடியாது!'' சங்கர் சிரித்தார்.

**அ**தே நேரத்தில் ஜார்ஜ் பூஜையறையின் பின்புறமிருந்த நிலவறையின் கதவைத் திறந்து கொண்டிருந்தார். தாழ்ப்பாளைத் திறந்து அகற்றிய பின், ஜகதீஷ் டார்ச் லைட்டுடன் படிகளில் இறங்கினார்.

ஜார்ஜ் மேலேயே நின்றிருந்தார். ஜகதீஷ் அறைக்குள் எதையோ தேடினார். அவர் கைவசமிருந்த சிலை போன்ற மற்றொரு சிலை அங்கும் ஒன்று இருந்தது. அது தங்கத்தால் ஆன சிலையென்று தெரிந்தது.

ஜகதீஷ் தன்னிடமிருந்த சிலையை அதன் அருகே வைத்தார். அதன் பிறகு பத்திரமாக மடித்து வைத்திருந்த நாகமாணிக்கத்தை எடுத்தார். அந்த வெளிச்சத்தில் அந்த நிலவறையே மின்னலில் குளித்த மாதிரி ஜொலித்தது.

தங்கத்தாலான சிலை விநாடிக்கு விநாடி பிரகாசமடைந்தது.

''நீங்கள் புறப்படுங்கள்!'' அந்த நிலவறையிலிருந்து ஒரு குரல் எழுந்தது.

சற்று நேரம் சந்தேகத்துடன் நின்றிருந்த ஜகதீஷ், அங்கிருந்து எழுந்து விடுவிடென்று படியேறினார்.

**ச**ங்கர் நடனப் பெண்ணின் முழு அழகையும் ரசிக்கும் ஆவலுடன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார்.

ஏறத்தாழ முக்கால்வாசி, பிறந்தமேனியில் அவள் அவருக்கு எதிரே நின்றிருந்தாள்.

சங்கர் அவளை நெருங்கினார்.

புகையும் சிகரெட் முனையால் அவள் மார்பைத் தொட்டார்.

அடுத்த விநாடி-

அவர் எதிர்பாராமல் பின்வாங்கி நகர்ந்தார்.

கனியும் சிகரெட் துண்டை வலுவுடன் வீசியெறிந்தார்.

காபரே டான்ஸரின் மீது சிகரெட்டை வைத்தவுடன் அது பெட்ரோல் ஊற்றியது போல் குபுக்கென்று எரிந்தது.

சங்கர் சட்டென்று தீயைப் பிடித்தது போல் கையை உதறவும் செய்தார்.

''என்ன இது!'' சங்கர் அலறினார்.

''இங்கே பாருங்கள்!'' டான்சர் பேசினாள்.

அவள் உடல் வெப்பத்தால் சிவந்த தாமிரம் போல் தகதகத்தது. விநாடிக்கு விநாடி அதன் வெப்பம் அதிகரித்தது.

கண்மூடித் திறப்பதற்குள் அந்த உடலிலிருந்து புறப்பட்ட வெப்பம் சங்கரது மார்பு ரோமங்களைக் கருக வைத்தது. தான் உடுத்தியிருந்த லுங்கியும் தீப்பிடித்து எரியுமோ என்று பயந்த சங்கர் பின்புறமாக நகர்ந்தார்.

காபரே டான்ஸரின் உடல் மெதுவாக மாற்றமடைந்தது.

முகம் மாறத் தொடங்கியபோது, அந்த அறையிலிருந்த விளக்கு சட்டென்று அணைந்தது.

இருளில் தனக்கு முன்பாக நின்றிருந்த உருவம் அந்த இருளிலும் தெளிவாகத் தெரிந்தது.

''என்னைத் தெரிகிறதா?'' அந்த உருவம் கேட்டது.

சங்கர் அந்த உருவத்தை உற்றுப் பார்த்தார்.

அது -

இந்திராபாய்!

முதன்முதலாக அந்த பங்களாவின் கிரகப்பிரவேசத்தன்று சங்கர் பார்த்த அதே உருவம். ஒரு மூலையில் அமர்ந்திருந்த சங்கரை, இந்திராபாயும் கவனித்திருந்தாள்.

அடுத்த விநாடி இந்திராபாயின் வலது கை சங்கரின் கன்னத்தில் பதிந்து விலகியது.

இரும்புத் தண்டால் அடித்தது போலிருந்தது. அந்த அடியால் தாடையெலும்புகள் நொறுங்கிவிட்டனவோ என்று பயந்தார் சங்கர். அடி விழுந்த அடுத்த விநாடி அந்த அறையின் மூலைச் சுவரில் மோதி விழுந்தார்.

சங்கர் கண் திறந்து பார்த்தபோது அந்த அறையில் எவரையும் காணவில்லை. நடந்ததெல்லாம் கனவா, அல்லது உண்மைதானா என்கிற குழப்பம் சங்கருக்குள் எழுந்தது. ஒருவிதமாக எழுந்து மின்சார விளக்கின் ஸ்விட்சை அழுத்த முயன்றார். ஸ்விட்ச் ஆன் செய்தபடியே இருந்தது.

தலையணைப் பகுதியிலிருந்து தீப்பெட்டியை எடுத்து உரசினார். இன்டர்காம் இருந்த இடத்தைக் கண்டுபிடித்து

ரிசப்ஷனிஸ்டை அழைத்து, உடனடியாக அறைக்குள் லைட் போடச் சொன்னார்.

டார்ச் லைட்டுடன் அந்த ரிசப்ஷனிஸ்ட் ஸ்விட்சைப் பார்த்தார். அது போடப்பட்டிருந்தது. சந்தேகத்துடன் பல்பைப் பார்த்தார். அது கறுப்பாகப் புகையை நிறைத்ததுபோல் இருந்தது.

''பல்பு ஃபீஸாகிவிட்டது. உள்ளே வந்த டான்ஸர் எங்கே சார்?''

''எனக்கு எதுவும் புரியவில்லை. சீக்கிரமாக வேறொரு அறையை ஏற்பாடு செய்யுங்கள். ஆமாம் உண்ணி மேனோன் எங்கே?'' சங்கர் பரபரத்தார்.

''அவர் வீட்டிற்குப் போய்விட்டார். உங்கள் பழைய நண்பரான வாசுதேவன் வந்திருக்கிறார்.''

''ஓகோ... வாசுதேவனா? மந்திரியாகப் போவதாகப் பேச்சு அடிபட்டதே அவர்தானே? போகட்டும்... நீங்கள் வேறொரு அறையை முதலில் ஏற்பாடு செய்யுங்கள்!'' சங்கர் தனது தாடைப் பகுதியைத் தடவியபடி பேசினார்.

''சார் அந்த டான்ஸர்...''

''அவள் டான்ஸரெல்லாம் கிடையாது. இந்த பங்களாவின் பழைய சொந்தக்காரியான தம்புராட்டி!'' சங்கர் பெருமூச்சுடன் கூறினார்.

''நீங்கள் கனவு ஏதாவது கண்டிருப்பீர்கள் சார்!''

''அதெல்லாமில்லை. நான் நேரிலேயே பார்த்தேனே, இதோ என் கன்னத்தைப் பார்!'' சங்கர் முகத்தைத் திருப்பிக் காட்டினார்.

''ஐயையோ என்ன சார் இது? கன்னம் கரிந்து போனது போல் இருக்கிறதே!''

''நான் உடனடியாக உண்ணி மேனோனைப் பார்க்க வேண்டும். இங்கு எனக்குத் தெரியாமல் என்னவென்னவோ நடந்துவிட்டிருக்கிறது...'' சங்கர் நிதானமாகப் பேசினார்.

எழுந்து உடைமாற்றிய சங்கர் ஹோட்டல் சிப்பந்தி ஒருவரை அழைத்துக் கொண்டு காருக்குப் போனார். சங்கருக்குக் காரோட்டத் தெரியாது.

உண்ணி மேனோனது வீட்டை அடைந்த சங்கர் நடந்ததை அவரிடம் கூறினார்.

## 41

ஜகதீஷ் நிலவறையை அடைந்து நாகமாணிக்கத்தைச் சின்னஞ் சிறிய சிலையின் மீது வைத்தவுடனே அது பிரகாச மானது. சிலை ஜொலிக்கத் தொடங்கியது.

சில விநாடிகளுக்குள் நாகமாணிக்கத்தின் ஒளிப்பெருக்கு, சிலையே ஜகதீஷின் கண்களிலிருந்து மறைத்தது.

அடுத்த ஒரு சில நிமிடங்களுக்குள் மாணிக்கத்தின் ஒளி சின்னச் சிலையில் கலந்து ஒன்றுவதாகத் தோன்றியது.

''ஜகதீஷ் உங்களது கடமையை நிறைவேற்றி விட்டீர்கள். இனி நீங்கள் உங்களது அறைக்குச் செல்லுங்கள்!'' ஜகதீஷுக்குப் பழக்கமான குரல்.

சந்தேகமே இல்லை. அது இந்திராபாயின் குரல்தான்!

ஜகதீஷ் நீண்ட நாட்களாகப் பார்க்கத் துடித்த இந்திராபாயை ஒரு தடவை கண்ணாரப் பார்க்க விரும்பினார்.

ஆனால், இந்திராபாயின் கட்டளை வேறு விதமாக இருந்தது.

வெளியேறிய ஜகதீஷ் நிலவறையின் கதவை மூடவில்லை.

'இனிமேல் எதற்காக மூடவேண்டும்?' என்ற சிந்தனையில் ஆழ்ந்தபடி தங்கியிருந்த அறையை அடைந்தார்.

அறைக்குள் கட்டிலில் இந்திராபாய் அமர்ந்திருந்தாள்.

எல்லாவிதமான ஆபரணங்களையும் அணிந்து...

கழுத்தில் காசுமாலை...

நாகபடம்...

காதுகளில் நட்சத்திரங்களைத் தோற்றுவிக்கும் குண்டலங்கள்.

கைவிரல்களில் மோதிரங்கள்.

அன்று வீணை வாசித்தபோது உடுத்தியிருந்த அதே உடை!

ஜகதீஷ் அவளைக் கண்ணிமைக்காமல் பார்த்தார்.

''ஜகதீஷ், எப்படி இருக்கிறீர்கள்?'' புன்னகைத்தபடியே கேட்டாள்.

''உங்களுக்குத் தெரியாத எதை நான் சொல்ல? உங்களிடம் இப்படியெல்லாம் பேச எனக்கு என்ன தகுதி இருக்கிறது?''

''உங்களுக்கு அந்தத் தகுதி உண்டு. உங்களுக்கு மட்டுமே அதற்கான தகுதி உள்ளது! என் பொருட்டு மரணத்தின் விளிம்பு வரை சென்று வந்திருக்கிறீர்கள். அதனால் எனக்கு உண்மையிலேயே புதிய உயிர் கிடைத்திருக்கிறது!'' - பேசியபடி கழுத்தில் கிடந்த காசு மாலையைக் கழற்றினாள்.

''அந்த அளவுக்கு என்னைப் புகழாதீர்கள்! நான் உதவா விட்டால்கூட, உங்களது மோசமான நேரம் கடந்து விட்டால் இதே சக்தியைப் பெற்றிருப்பீர்கள்!''

''அது சாத்தியமல்ல! மற்றொருவரின் உதவியுடன் மட்டுமே நான் இந்த நிலையை அடைய முடியும். இதில் ஈடுபடுபவர் எந்த இடத்தில் தவறினாலும் நான் திரும்பவும் வடிவமோ, உயிரோ பெற முடியாமல் போயிருக்கும்!'' உடலிலிருந்த நகைகளை ஒவ்வொன்றாகக் கழற்றியபடி பேசினாள்.

ஜகதீஷ் அவள் முகத்தையே பார்த்தார்.

''என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்?'' இந்திராபாய் கேட்டாள்.

''எனக்கு ஒன்றுமே புரியவில்லை!'' ஜகதீஷ் கூறினார்.

''எல்லாவற்றையும் புரிய வைக்கிறேன். முதலில் நான் விடுதலையடைந்து கொள்கிறேன்.''

அவள் நகைகளைக் குறித்துத்தான் கூறுகிறாள் என்று ஜகதீஷுக்குப் புரிந்தது.

நாம் அந்தச் சிலையில் பார்த்த அதே நகைகளைத்தான் அணிந்திருக்கிறார்!

அதற்குள் இந்திரா கையிலிருந்த வளையல்களைக் கழற்றி விட்டிருந்தாள்.

''ஜகதீஷ், இப்போது நான் முழுவதுமாகப் பழைய சக்தியைப் பெற்றுவிட்டேன்!'' எழுந்த இந்திராபாய் ஜகதீஷை நெருங்கினாள்.

''எனக்கு உயிர் கொடுத்தவர் நீங்கள். உங்களை நான் ஒருபோதும் மறக்க முடியாது. இல்லாவிட்டால், இப்போது நான் நில்வறைக்குள் அடைபட்டு மூச்சுத் திணறிக் கொண்டிருப்பேன். இப்போது நான் மட்டும் தனியாக இருக்கிறேன். எந்த ஆபரணங்களும் நமக்குத் தடையாக இல்லை'' அவள் ஜகதீஷின் தோள்களில் கை வைத்தாள்.

அவள் அதரங்கள் ஈரத்தால் பளபளத்தன.

அவள் உடம்பிலிருந்து தாமரைப்பூவின் மணம் கமழ்ந்தது.

இளமையின் சுகந்தம்... உணர்வுகளைக் கிளர்ந்தெழச் செய்யும் மணம்!

ஜகதீஷின் கைகள் அவள் உடலைச் சுற்றி வளைத்தபோது அவர் உடலிலிருந்த உடைகள் நழுவி விடை பெற்றன.

ஜகதீஷின் கரங்களில் இந்திராபாய் முழுமையாக சிறைப்பட்டிருந்தாள்.

வானகத்துத் தேவதையைப் போல் கட்டிலில் அமர்ந் திருக்கும் இந்திராபாயையே பார்த்தார் ஜகதீஷ். தனக்கு இப்படியொரு அதிர்ஷ்டம் வாய்க்குமென்று ஜகதீஷ் கற்பனை கூடச் செய்த தில்லை!

அவள் தளிர்மேனி, மெல்லிய வாகைப் பூவைவிட மென்மையாக இருந்தது.

''ஏன் விழிக்கிறீர்கள்?'' இந்திராபாய் கேட்டாள்.

''நிஜம்தானா என்ற மலைப்பில் தவிக்கிறேன்...'' ஜகதீஷ் அவள் கை விரல்களை வருடியபடி பேசினார்.

''நிரூபணமாகிவிட்டதா!'' இந்திராபாய் ஜகதீஷின் ரோமம் அடர்ந்த மார்பை அளைந்தபடி கேட்டாள்.

''சந்தேகமில்லாமல் நிரூபணமாகிவிட்டது. இனி சொல்லுங்கள்... எதற்காக இந்தப் பிறவி நாடகங்கள்?''

ஒருமுறை சுற்றுமுற்றும் பார்த்தாள்.

உடைகளைச் சரிசெய்து ஒரே ஒரு காசு மாலையை மட்டும் எடுத்துக் கழுத்தில் போட்டுக் கொண்டு, தலைமுடியைச் சரிசெய்தபடி பேசத் தொடங்கினாள்:

''மிகவும் புகழ்பெற்ற ஓர் அரண்மனையில் நான் பிறந்தேன். அன்று முன்னோர் மன்னர்களாக இருந்தனர். இந்த இடம் முழுவதும் எங்களது ஆளுகையில் இருந்தது. கோயில் உட்பட இந்தப் பகுதி எல்லாமே அதில் அடங்கும். எனக்கு அப்போது வயது பதினேழு. கோயில் பூஜை நடத்தும் பொறுப்பை என் தாய்மாமா என்னிடம் ஒப்படைத்திருந்தார். அவருக்கு வேறு வாரிசுகள் எவரும் கிடையாது!'' அவள் கண்கள் பழைய காலத்துக்குள் ஆழ்ந்து இறங்கின.

அன்றைய அரண்மனையின் புகழும் கம்பீரமும் அவள் மனத்தை நிறைத்திருந்தது.

''ஒரு தடவை பூஜை செய்வதற்காக நான் கோயிலை நெருங்கியபோது ஏதோ சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். மூன்று இளைஞர்கள் நின்றிருந்தனர். நான் பூஜையை முடித்துக் கொண்டு திரும்பும்போது, அவர்கள் முரட்டுத்தனமாக என்னைப் பிடித்துக் குண்டுக்கட்டாகத் தூக்கிப் போனார்கள். அந்த மூவரின் வெறியடங்குவது வரை என்னை நாசப்படுத்தினார்கள். அவர்களை மீறி எதுவும் செய்ய முடியாத நான், வாயில் துணி அடைக்கப்பட்ட நிலையில் மௌனமாக மனமுருகிக் கடவுளை

வேண்டினேன். கடைசியில் நான் இறந்து விட்டதாக நினைத்த அவர்கள் என்னை அங்கேயே போட்டுவிட்டுப் போனார்கள்.

''அவர்கள் என்னை நாசப்படுத்தத் தொடங்கியபோது, நானே என் உடம்பிலிருந்து விலகுவதாக எனக்குத் தோன்றியது. என் ஆத்மா அந்த உடலிலிருந்து பிரிந்து விட்டது. வேறொரு பூதப் பெண்ணின் உடலில் புகுந்து கொள்ள நேர்ந்தது. கடவுளின் கருணையினால் எனக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படவில்லை.

''மறுநாள் நான் கோயிலுக்கு வரவில்லை. ஆறு நாட்களுக்குப் பிறகுதான் வந்தேன். அவர்களைப் பழிவாங்க வேண்டுமென்ற வெறி என்னுள் எழுந்தது. அதற்கான வழிமுறைகளைப் பற்றி யோசித்தேன். அரண்மனையில் இந்த சம்பவத்தைக் கூறியிருந்தால், என்னை ஒதுக்கி வைத்து அல்லது அரண்மனையிலிருந்து வெளியேற்றவோ செய்திருப்பார்கள். எனவே, நான் அவர்களிடம் நடந்ததை மறைத்து விட்டேன். அந்தப் பிறவியில் நான் திருமணமே செய்து கொள்ளாமல் மந்திரதந்திரப் பிரயோகங்களில் தேர்ந்தேன். இரண்டாவது பிறவி எடுத்தபோதும் அவர்களைத் தேடினேன் அகப்படவில்லை. மூன்றாவது பிறவியான இந்த ஜன்மத்தில்தான் அவர்கள் இந்த நகரத்தில் இருப்பதைக் கண்டுபிடித்தேன். அவர்கள் மூவருமே நல்ல நிலைமையில் இருந்தனர்.

''நான் எல்லாவித மந்திரங்களையும் பிரயோகிப்பதில் போதுமான தேர்ச்சி பெற்றிருந்தேன். மூன்றாவதான இந்தப் பிறவியில் சனிக்கோள் என்னைப் பிடிக்கும் என்பதை நானறிவேன். எனவே, மூன்று சிலைகளையும் ஒன்று சேர்த்து வைத்து, அவற்றின் மீது நாகமாணிக்கத்தின் ஒளியைப் பாய்ச்சினால் நான் பழையபடி சக்திபெற்று விடுவேன் என்பதும் எனக்கு தெரியும்.

''என் இரண்டாவது ஜன்மத்தின்போது இந்தக் கோயிலையும் இடத்தையும் என் மாமா மற்றொரு நம்பூதிரியிடம் கொடுத்து விட்டார். அதாவது பூஜை தடையின்றி நடைபெற வேண்டும் என்பதற்காக!

''மூன்றாவது புதிய பிறவி எடுத்தவுடன் காண்டிராக்டர் அச்சுதன் நாயரிடம் அரண்மனையைப் பெயர்த்து புதிதாக இங்கு பொருத்த ஏற்பாடு செய்தேன். அந்த நோக்கத்துடன்தான் இந்த ஊருக்கு வந்தேன்.

''என்னை நாசமாக்கிய இரண்டு பேர் அழிந்து விட்டனர். மூன்றாவது நபர் உண்ணி மேனோன். அவருடன் கூட்டுச் சேர்ந்துள்ள இருவரும் புதியவர்கள்.

''இந்தப் பிறவியில் அந்தத் தீயவர்களைப் பழிவாங்கியே தீருவதென்று விரதம் பூண்டேன். என் பழைய பிறவியில் நான் தினமும் குகைக்கோயிலுக்குச் சென்று பூஜை செய்வது வழக்கம். அந்தப் பிறவியின் இறுதியில் நான் மலைவாசிகளின் தேவதையாகி விட்டேன்!''

ஒரு குழந்தை பாட்டியிடம் கதை கேட்பது போல் ஜகதீஷ் ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருந்தார்.

அதே நேரத்தில் உண்ணி மேனோனது பங்களாவில் சங்கரும், வாசுதேவனும்கூட இருந்தார்கள். சங்கரை மற்ற இருவரும் கேலி செய்தனர். சங்கர் சொன்ன கதையை மற்ற இருவரும் நம்பவே இல்லை!

கிளாஸுகளில் மதுபானம் நிறைவதும் குறைவதுமாக நேரம் கடந்தது.

''சங்கர் நன்றாகக் குடியுங்கள். நீங்கள் சொன்னதெல்லாம் உங்கள் மனத்தின் பிரமையாக இருக்கலாம். காபரே டான்ஸர் களிடம் பல்வேறு விதமான வித்தைகளும் இருக்கும்!'' உண்ணி மேனோன் விஸ்கி நிறைந்த தம்ளரை கையில் உயர்த்தியபடி கூறினார்.

சங்கரின் வார்த்தைகளை இருவரும் மறுத்ததுடன் கேலி பேசியதுபோது, அவருக்கே அதெல்லாம் கனவா, நினைவா என்கிற குழப்பம் ஏற்பட்டது.

''இந்திராபாயாவது இனிமேல் வருவதாவது! இதென்ன துவாரபர யுகமா? எனக்கென்னவோ அதெல்லாம் நடக்கக்

கூடியதாகத் தெரியவில்லை!'' மேனோன் பீர்பாட்டிலில் மூடியைப் பல்லால் கடித்தபடி பேசினார்.

திடுமென்று கதவு விரியத் திறந்தது. யாரோ வீசியெறிந்தது போல் தேவதத்தனின் உடல் பொத்தென்று அந்த அறைக்குள் வந்து விழுந்தது.

மாந்திரீகனான தேவதத்தன்!

''நீர் எப்படி ஐயா இப்படிப் பொத்தென்று வந்து விழுகிறீர்?'' மேனோன் கேட்டார்.

தேவதத்தன் பதில் பேசாமல் பின்புறமாகத் திரும்பினார். அங்கே-

இந்திராபாய் நின்றிருந்தாள்.

முதன்முதலாக வீணை வாசித்தபோது அணிந்திருந்த அதே உடையில்... கம்பீரத்துடன் தெரிந்தாள்.

யாராலும் நம்பவே முடியவில்லை!

''என்ன தேவதத்தா... இன்னும் ஏதாவது வித்தைகள் கைவசம் உள்ளதா?'' இந்திராபாய் கேட்டாள்.

தேவதத்தன் மெதுவாகப் பின்னுக்கு நகர்ந்தார்.

உண்ணி மேனோனது வீட்டு வரவேற்பறையில் பதப் படுத்தப்பட்டிருந்த புலி உருவம் ஒன்று அழகுக்காக நிறுத்தி வைக்கப் பட்டிருந்தது. அந்தப் புலியின் பின்னால் இருந்த சூலத்தை எடுத்தார். அரையடி நீளமுள்ள மெல்லிய சூலம் அது. அதை உதட்டுடன் சேர்த்து வைத்து மந்திரம் ஜபித்தார்.

சூலம் விநாடி நேரத்திற்குள் ஆறடி நீளத்திற்கு வளர்ந்தது.

அதைக் கண்டவுடன் மேனோனுக்கும் அவர் நண்பர் களுக்கும் மீண்டும் உற்சாகம் பிறந்தது. 'தேவதத்தன் கெட்டிக் காரர்தான். அவரது மந்திரசக்தி இன்னும் உயிருடன் உள்ளது. நல்லவேளை... தப்பித்தோம்!' என்கிற நிம்மதி அவள் கண்களில் தெரிந்தது.

தேவதத்தன் இந்திராபாயைக் குறிபார்த்து சூலத்தை எறிந்தார்.

இந்திராபாயின் உள்ளங்கையை நெருங்கி வந்த சூலம் கைக்குள் ஊடுருவாமல் நின்றது.

ஒரு ரப்பர் சூலம் அந்தக் கையில் மோதியதுபோல், விசையுடன் சூலம் மீண்டும் தேவதத்தனை நோக்கித் திரும்பி வந்தபோது அதன் உருவம் பழையபடி சிறிதானது.

'மேற்கொண்டு என்ன செய்யலாம்?' தேவதத்தன் யோசித்தார். பிறகு தன் கழுத்தில் கிடந்த ருத்ராக்ஷ மாலையைக் கழற்றி, கையில் வைத்தபடி மந்திரம் ஜபித்தார்.

ருத்ராக்ஷம் கருநாகப் பாம்பாக மாறியது. கையிலிருந்தபடி நெளிந்த பாம்பைச் சுழற்றி இந்திராபாயை நோக்கி வீசி எறிந்தார்.

இந்திராபாய் அதைக் கையில் பிடித்தாள், ஒருகணம் யோசித்த இந்திராபாய் அதை தேவதத்தனை நோக்கி மறுபடி வீசி எறிந்தாள்.

பாம்பு மீண்டும் ருத்ராக்ஷ மாலையாக மாறாமலேயே தேவதத்தனின் கழுத்தில் விழுந்தது. கழுத்தைச்சுற்றி நெரிக்கத் தொடங்கியது.

தேவதத்தன் பாம்பைக் கழுத்திலிருந்து விடுவிக்கப் பாடுபட்டார். முடியவில்லை. மூச்சுத் திணறத் தொடங்கவே தேவதத்தன் தரையில் சாய்ந்து துடித்தார்.

''தேவதத்தா, இன்னும் ஏதாவது மீதமிருக்கிறதா?'' இந்திராபாய் கேட்டாள்.

எந்தவித பதிலும் கிடைக்கவில்லை.

தேவதத்தனின் உடல் அசைவுகளை இழந்துவிட்டது.

''இனி உங்களது முறையாயிற்றே, நீங்களும் கொஞ்சம் விளையாடிப் பார்க்கிறீர்களா உண்ணி மேனோன்!'' இந்திராபாய் நிதானமாகக் கேட்டாள்.

கோபத்துடன் எழுந்த மேனோன், சுவரில் மாட்டியிருந்த இரட்டைக் குழல் துப்பாக்கியை எடுத்தார்.

''இதனிடம் உன் வித்தைகள் எதுவும் செல்லுபடியாகாது தெரியுமா!'' மேனோன் துப்பாக்கியை இந்திராபாயின் நெஞ்சுக்கு நேராகக் குறி வைத்தார்.

இந்திராபாய் புன்னகைத்தபடி அசையாமல் நின்றாள்.

''சிரித்துக் கொள்... நன்றாகச் சிரித்துக் கொள்... இனிமேல் உனக்குச் சிரிக்கச் சந்தர்ப்பமே கிடைக்கப் போவதில்லை. உன் கடைசிச் சிரிப்பை நன்றாகவே சிரித்துக் கொள்!'' மேனோன் உறுமியபடி துப்பாக்கியின் விசையை இழுத்தார்.

குண்டு பாய்ந்தது.

இந்திராபாயின் முதுகுப் பக்கம் மாட்டியிருந்த உண்ணி மேனோனது கல்யாண போட்டோவின் மீது பாய்ந்த குண்டு. அதை உடைத்துக் கீழே தள்ளியது. மேனோன் எதுவும் புரியாமல் துப்பாக்கியைப் பார்த்தார். இரட்டைக் குழல் வளைந்து குறியை மாற்றி விட்டிருந்தது!

இந்தக் காட்சியைக் கண்ட மற்ற இருவரும் திடுக்கிட்டனர்.

கண்ணிமைப்பதற்குள் நீண்டுவந்த இந்திராபாயின் இடது கை உண்ணி மேனோனை எட்டிப் பிடித்தது. கழுத்தில் அழுத்திப் பிடித்த கை மேற்புறமாக உயர்ந்தது.

மேனோன் அந்தரத்தில் உயர்ந்தார். விசையாக மேலெழும்பிய மேனோனது தலை மேற்புறத் தளத்தில் பெருத்த ஓசையுடன் இடித்தது. தலை சுக்கல் சுக்கலாக உடைந்தது. இந்திரா சட்டென்று கையை விட்டபோது சவமாகியிருந்த மேனோன் விஸ்கி பாட்டில்களின் மேல் பொத்தென்று கவிழ்ந்தடித்து விழுந்தார்.

''உங்களை நான் எதுவும் செய்யப் போவதில்லை மிஸ்டர் வாசுதேவன். வேலை வாங்கித் தருவதாகக் கூறி அந்த ஏழைக் குடும்பத்தினரிடம் நீங்கள் வாங்கிய பணத்தை வட்டியுடன்

உடனடியாக திருப்பிக் கொடுக்க வேண்டும். கொடுப்பீர்கள் என்று நம்புகிறேன். மிஸ்டர் சங்கர். நீங்கள் எந்த வகையிலும் என்னைத் தொல்லைப்படுத்தாததால் உங்களை மன்னித்து விடுகிறேன்!''

40244

இந்திராபாயின் உருவம் சட்டென்று அங்கிருந்து மறைந்தது.

இந்திராபாய் தனது பங்களாவை அடைந்தாள்.

ரிசப்ஷனிஸ்டை தொலைபேசி மூலம் அழைத்தாள்.

''நாளை காலைக்குள் இந்த இடம் காலியாக வேண்டும். இது நான் வசிக்கும் வீடு. புரிகிறதா?'' கட்டளையிட்டாள்.

இந்திராபாய் நிதானமாக நடந்து ஜகதீஷின் அறைக்கு வந்தாள்.

''ஜகதீஷ், என் எதிரிகளை எல்லாம் பழி வாங்கி விட்டேன். இனிமேல் நிம்மதியான வாழ்க்கைதான் என் லட்சியம். என் வாழ்க்கைத் துணை நீங்கள்தான்!'' அவள், கட்டிலில் ஜகதீஷை நெருங்கி அமர்ந்தாள்.

**ம**றுநாள் மாலை நேரத்தில் அந்தப் பங்களா மீண்டும் கிரகப் பிரவேசம் நடந்த அன்றைய தினம் போலவே தீபாலங்காரங் களால் ஜொலித்தது.

ooo